padippakam

# இருப்பும் விருப்பும்

கி.பி. அரவிந்தன்



படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

# இருப்பும் விருப்பும்

கி.பி.அரவிந்தன்

படிப்பகம்

padippakam

ஆனால் நான் அகதி நிலையை மாற்றிக் கொள்வதில்லை என்றே உள்ளேன். ஈழத்தமிழ்ச் சமூகத்தின் அகதி நிலைக்கு ஒரு முக்கிய காரணம் போராட்டம் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கையில் எப்படி எனது அகதிநிலையில் மாற்றம் ஏற்படும். குடியுரிமை என்பது அந்த நாடுகள் தாங்களாக தருபவை அல்ல. நாம் விண்ணப்பிக்க வேண்டும். நான் விண்ணப்பிக்கவில்லை. அவ்வளவுதான். குடியுரிமையை ஏற்கும்-போது இந்த போராட்டம் முடிவடைந்து விட்டதாகவும் கொள்ளலாமல்லவா? இரண்டாவது குடியுரிமை பெறும்போது இந்த நாட்டு வரலாற்றினை இரத்தமும் சதையுமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த நாட்டுக் கொடியின் மீதான இரத்தக்கறைகளுக்கும் நான் சாட்சியமாக வேண்டும். இவற்றைவிட ஈழக்குடியுரிமைக்கு விண்ணப்பிக்கும்போதே எனது அகதி நிலையை மாற்ற விரும்புகிறேன். அப்படி நிலை தோன்றும் என்றே நம்புகிறேன். அதுவரை சில சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி உள்ளதுதான் பரவாயில்லை, அகதியாகவே வாழ்ந்து விட்டு போகிறேன். அல்லது அகதியாகவே செத்துப்போகிறேன்.

படிப்பகம்

padippakam

# இருப்பும் விருப்பும்

**கி.பி.அரவிந்தன்**

**சாளரம்**
2/1758, சாரதி நகர், என்ஃபீல்டு அவன்யு,
மடிப்பாக்கம், சென்னை-600 091.

படிப்பகம்

padippakam

இருப்பும் விருப்பும்

© கி.பி.அரவிந்தன்

முதல் பதிப்பு: ஜூன் 2009

விலை: ரூ. 70

அட்டை வடிவமைப்பு:
கிரியேட்டிவ் ஸ்டுடியோ

ஒளி அச்சு:
சா. ஐசக்

நூலாக்கவிவரம்:
1x8 டம்மி
144 பக்கங்கள்
10.5 புள்ளி எழுத்துகள்
சாதா கட்டு

வெளியீடு:
சாளரம்
2/1758, சாரதி நகர்,
என்ஃபீல்டு அவன்யு,
மடிப்பாக்கம்,
சென்னை-600 091

அச்சு: பொன்னி, சென்னை

படிப்பகம்

padippakam

வீரத்தின் விளைநிலம்

**கு. முத்துக்குமாருக்கு**

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

# பொருளடக்கம்


| | |
|---|---|
| தமிழகம் இந்நூலை கைகளில் ஏந்தட்டும் | 9 |
| இது அணிந்துரை அல்ல தோழர்களே... | 13 |
| அப்படித்தானா, அரவிந்தன்? | 19 |
| இருப்பும் விருப்பும் | 27 |
| ஒற்றுமையை ஓதுவோருக்கு.... | 39 |
| காலம் அரித்திடாது எம் இணைப்பை | 50 |
| எங்கள் நினைவுகளை உங்களிடம் கையளித்துள்ளோம் | 60 |
| இலங்கையில் இன்னொரு போரை நாங்கள் விரும்பவில்லை | 67 |
| சாத்வீகப் பாதையில் சந்தி பிரித்தவன்: பொன்.சிவகுமாரன் | 86 |
| யாசர் அரபாத்: ஒரு முடிவுறாத வரலாறு | 93 |
| ஓர் அகதியின் தாயும் தாயகமும் | 100 |
| ஒரு பயணமும் சில நினைவுகளும்... | 110 |
| அகதியாகவே வாழ்ந்துவிட்டு போகிறேன் | 119 |


படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

# தமிழகம் இந்நூலை கைகளில் ஏந்தட்டும்

முப்பது ஆண்டு தோழமைக்கும் நட்புக்கும் உரியவர் தோழர் சுந்தர் அவர்கள். ‘சுந்தர்’ என்ற பெயரை, இயற்பெயர் என்றுதான் பல ஆண்டுகள் நினைத்துக்கொண்டிருந்தேன். ‘கி.பி.அரவிந்தன்’ என்ற பெயரில் பாலத்தில் எழுதிய போது அதை எழுத்துக்கான புனைபெயர் என்று நினைத்தேன். ‘கனவின் மீதி. கவிதைத் தொகுப்பு வெளியிட முனைந்த போதுதான் கி.பி. என்பது கிறிஸ்தோபர் பிரான்ஸிஸ் என்பதும் அதுவே அவரது இயற்பெயர் என்பதும் தெரிய வந்தது. பெயரில்தான். கிறித்தவ அடையாளம். வாழ்முறையில் ஒரு சமத்துவச் சிந்தனையாளர். செயற்பாட்டாளர்.

எனக்கும் சுந்தருக்குமான நெருக்கம் என்பது சமத்துவக் கண்ணோட்டம் சார்ந்தது. அதனால்தான் ‘முகில்கள் மீது நெருப்பு’ ‘வீரத் தெலங்கானா’ ஆகிய நூல்கள் வெளிவரவேண்டிய தேவைகுறித்து வலியுறுத்தினேன். அதை ஏற்று அந்நூல்கள் வெளிவர முழு ஒத்துழைப்பை நல்கினார். சுந்தரும் அவர் சார்ந்த இயக்க நண்பர்களும்தான் தாயகம் திரும்பியோர்க்கும் அகதிகளுக்கும் உள்ள வேறுபாட்டைப் புரியவைத்தனர்; மலையகத் தமிழர்களைப் போராட்டக் குணம் வாய்ந்த பாட்டாளிகளாய் வடிவமைக்க விரும்பிய



படிப்பகம்

padippakam

அவர்களுடைய விருப்பமும் புரிந்தது. ஈழம் என்ற கருத்தாக்கத்திற்கு இடதுசாரித் தத்துவ முகம் தந்தவர்களும் அவர்கள்தான்.

முப்பது ஆண்டு என்ன முப்பதாண்டு?. உலகப் போராட்ட வரலாற்றைப் பேசிக் கிழித்த அளவுக்கு உள்ளூர் போராட்ட வரலாற்றை ஊன்றிப் பயிலவில்லை. கி.பி. அரவிந்தனுடைய போராட்ட வரலாறு என்பதே அவர் ஐரோப்பா போன பின்னர்தான் தெரிகிறது!. ஒரே அறையிலிருந்த போது ஒரே தட்டில் சாப்பிட்டப்போது அவர் வரலாற்றை நானும் கேட்கவில்லை அவரும் சொல்லவில்லை. எழுபதுகளில் அவர்கள் தமிழகத்திலிருந்தபோது இங்கேயும் ஏறக்குறைய தலைமறைவு வாழ்க்கைதான். ஈழத்துப் போராட்டத் தொடர்புகளையும் இயக்க வரலாற்றையும் இங்கேயும் புதைத்துதான் வைத்திருந்தார்கள். இந்நூலைப்படிக்கும்போதுதான் நெருக்கமாக இருந்த நானே எவ்வளவு அறியாமையில் மூழ்கியிருந்திருக்கிறேன் என்பது தெரிகிறது. இந்நூல் கி.பி.அரவிந்தனின் அனுபவம் சார்ந்த தன் வரலாறு என்ற வகையில் மட்டுமல்ல ஈழப் போராட்டத்தின் ஆழத்தையும் வரலாற்றுத் தொடர்ச்சியையும் உலகப் போராட்ட இயக்கத் தொடர்பையும் சொல்கிறது. அதோடு கூட நம்முடைய பக்குவமின்மையையும் போதாமையையும் தலைமைப்பண்பு இன்மையும் செயல் தளத்தை விரிவடைய வைக்காமையையும் சுட்டிக்காட்டுகிறது. ஈழத் தமிழர்கள், புலம் பெயர்ந்த தமிழர்கள், தமிழகத்தவர்கள் என உலகம் தழுவி வாழுகின்ற நம்முடைய இருப்பை எடைபோட்டு பார்த்து விமர்சிக்கிறார். தரை மேலிருந்து கீழே குனிந்து பார்க்கிறோம் இவ்வளவு ஆழமானதா ஈழப் போராட்ட வரலாறு என்று கால் நடுங்குகிறது! ஆனாலும் தோழர்களே. நம் அச்சத்தையும் அறவே துடைத்து எறிகிறது இந்நூல்.

**கி**.பி. அரவிந்தனைப் பற்றி இன்னும் பேசலாம். எனினும், வெளியீட்டு நிகழ்விற்கான அரிய வாய்ப்பை வழங்கிய தோழர் இரா.திரவியம் அவர்களைப் பற்றி பேசவேண்டியிருக்கிறது.

திராவிடஇயக்க குடும்பப் பின்னணியோடு மதுரை தமிழ்ச்சங்கத்திலுள்ள செந்தமிழ்க் கல்லூரியில் தமிழ் இலக்கியம் பயின்றவர்; படிப்பு முடிவடையும் முன்னரே தமிழக அரசின் வேளாண் துறையில் பணிக்குச் சேர்ந்தவர்; ஈழ விடுதலைப் போராட்டத்துக்கான ஆதரவாளர் என்ற தீவிர உணர்வு வெளிப்பாட்டில் பதவியைத் துறந்து முழு நேரச் செயற்பாட்டாளர் ஆனவர்.

எண்பதுகளில், ஈழ நண்பர்கள் கழகத்தின் மாநிலத் தலைவர் என்ற முறையில் தமிழகம் முழுக்கப் பயணம் செய்து ஈழப்போராட்ட ஆதரவாளர்களைச் சந்தித்தவர். இடதுசாரிச் சிந்தனை வயப்பட்டவர்



படிப்பகம்

padippakam

களை, ஈழ நண்பர்கள் கழகத்தில் நிறைத்தவர். 'நட்புறவு பாலம்' இதழின் அதிகாரப்பூர்வ ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர்.

இவருடைய தோழமை வட்டத்தில் ஜெயம் ஜூலியஸ், ச.மா.பன்னீர்செல்வம், க.சந்திரசேகரன் பொன்.இளங்கோவன், மு.இராசேந்திரன். அ.தனசேகரன். பி.பெரியசாமி, ஏ.ஆர்.மணி, சீ.சுந்தரம், தமிழ்ப்பித்தன் மெய்.இரெ.பொற்கொடி, வண்ணமதி, எழிற்கோ, கி.வீரமணி, இராசகோபால், எஸ்.எம்.அமல்ராஜ், நா.இராகுநாதன். பூவுலகின் நண்பர்கள் நெடுஞ்செழியன். குமாரசாமி. நீலகண்டன் மற்றும் எழில் இளங்கோவன், தேவதாஸ் என்று ஒரு பெரும் அணிவகுப்பே இடம்பெறும். இவர்களுள் பெரும்பாலோர் இன்றும் சமூக அர்ப்பணிப்போடு செயல்பட்டு வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இலட்சிய தாகம் மிக்கவர்களை ஒன்று கூட்டுவதை ஒரு மகிழ்ச்சி மிகுந்த வாய்ப்பாக, தம் புதல்வி புவனா - பிரேம்குமார் திருமணத்தைக் கருதுகிறார். இம்மகிழ்வைப் பதிவு செய்கிற முயற்சியாக 'இருப்பும் விருப்பும்' நூல் வெளிவருகிறது.

திரவியம் உழைத்துச் சேர்த்த, பரப்புரை செய்து சேர்த்த, பலரின் அன்பை வென்று சேர்த்த ஓர் இலட்சிய அடையாளத்தைப் பாதுகாக்கும் முயற்சியின் தொடர்ச்சி தான் இந்த நூல் வெளியீட்டுவிழா.

ஈழத்தமிழ் மக்கள் மீது ஏவப்பட்ட இராணுவம் புரிந்த போர்க்குற்றங்களை, மனித உரிமை மீறல்களை விசாரிக்க வேண்டும் என்ற மேற்குலக நாடுகளின் கோரிக்கையை சீனா, கியூபா போன்ற நாடுகள் நிராகரிப்பதுதான் வேதனை தருகிறது. ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைக்காக குரல் கொடுக்கின்ற தத்துவ மரபில் வந்தவர்கள் ஒடுக்குகின்ற சிங்களஅரசின் ஆதரவாளர்களாக மாறிப்போய் விட்டார்கள். அந்நாட்டவர்களுக்குத் தமிழ் மக்களின் போராட்ட நியாயத்தை விளங்கவைக்க முடியவில்லையோ என்ற ஆதங்கத்தைக் குறைத்து மதிப்பிட முடியாது.

ஈழத் தமிழ் மக்கள் இழந்ததை யாராலும் ஈடுசெய்ய இயலாது. ஆனாலும் அழுகுரலை நிறுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. சொல்லொணாச் சோகத்தைத் தூக்கி எறிந்துவிட்டு செயல்படவேண்டிய தேவை இருக்கிறது. ஈழத்தமிழின உரிமைப் போராட்டத்திற்கு எந்தச் சக்தியாலும் முற்றுப்புள்ளி வைக்க முடியாது. அதே சமயத்தில் நமக்கு நாமே முற்றுப்புள்ளி வைத்துக்கொண்டு ஒடுங்கிவிடக் கூடிய அவலமும் நேரக் கூடாது.

'தமிழினம் பல்லாயிரம் ஆண்டு தொடர்ச்சி உள்ள பேராறு. அதன் தொடர் ஓட்டத்தில் எத்தனை தலைவர்கள், எத்தனை தத்துவ விற்பன்னர்கள், எத்தனை கலைஞர்கள், எத்தனை ஆட்சியாளர்கள் என வாழ்ந்து மறைந்துள்ளார்கள் அதன் தொடர்பில், இழப்புகளைக் கண்டு



படிப்பகம்

padippakam

அஞ்சமாட்டோம்; இழப்புகளை வென்றெடுக்கும் நெஞ்சுரம் படைத்தவர்கள் நாம்' என்பதையும் நம் கவலைகளோடும் துயரங்களோடும் எதிர்காலம் பற்றி திட்டமிட வேண்டிய தேவையையும் வலியுறுத்துவது தான் கி.பி. அரவிந்தனுடைய 'இருப்பும் விருப்பும்' நூல்.

கைகால்களை இழந்து ஊனமுற்றோர், படுகாயம்பட்டு துன்புறுவோர், உற்றார், உறவுகளை இழந்து துடிப்போர் என பாதிக்கப்பட்ட மக்களுக்கான மறுவாழ்வுப் பணிகளை முன்னடுக்க வேண்டிய கடப்பாடும் தமிழகத்துக்கு உண்டு.

எதார்த்த நிலைகளைப் பரிசீலிப்போம் அடுத்த கட்டப் பாய்ச்சலுக்கு அணியபடுத்துவோம். என்ற போராட்ட அனுபவச் செறிவோடு ஒளி யேற்றுகிறது இந்நூல். இந்நூலை வெளியிட வாய்ப்பளித்த நூலாசிரியர் கி.பி. அரவிந்தன் அவர்களுக்கும் இந்நூலுக்குக் கருத்துரைகள் வழங்கிய கே.எம். வேணுகோபால் அவர்களுக்கும் எழுத்தாளர் பாமரன் அவர்களுக்கும் இந்நூல் வெளியீட்டு விழாவுக்கான நிகழ்வை முன்நின்று நடத்துகிற இரா.திரவியம் அவர்களுக்கும் நெஞ்சு நிறைந்த நன்றி.

**வைகறை**
சாளரம்
27.6.2009



படிப்பகம்

padippakam

# இது அணிந்துரை அல்லதோழர்களே...

ஈழத்து உறவுகளோடு நகர்ந்த என் நாட்களைப் பற்றிய நினைவுகள். உண்மையைச் சொன்னால்..... அப்போது கி.பி.அரவிந்தனைத் தெரியாது எமக்கு. அதைப் போலவே அவருக்கு பாமரனையும்.

இருபத்தி நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் எமக்குத் தெரிந்ததெல்லாம் தோழர் சுந்தரைத்தான். பூவுலகின் நண்பர்கள் நெடுஞ்செழியன்தான் ஈரோஸ் அமைப்பை எனக்கு அறிமுகம் செய்து வைத்தவர்.

அந்த அறிமுகம் மட்டும் நிகழாமல் இருந்திருந்தால் இன்றைக்கும் நான் ஒரு தறுதலையாக..... உதவாக்கரையாக..... இருந்திருப்பேன். அல்லது குறைந்தபட்சம் ஒரு எம்.எல்.ஏ.வாகவோ அல்லது எம்.பி.ஆகவோ ஆகியிருப்பேன். தமிழ் மக்களை அந்தத் துயரில் இருந்து காப்பாற்றிய பெருமை ஈரோசையும், நெடுஞ்செழியனையுமே சாரும்.

அப்போது சென்னையில் எனக்குத் தெரிந்த தெல்லாம் கோடம்பாக்கத்தில் பெஸ்ட் மருத்துவமனை அருகில் இருந்த ஈ.என்.எல்.எப் (ஈழத் தேசிய விடுதலை முன்னணி) அலுவலகம்..... யுனைடெட் காலனியில் இருந்த ஈரோஸ் நண்பர்களது அறை..... அண்ணாநகரில் இருந்த



படிப்பகம்

padippakam

செல்..... இதுதான் எனது உலகம். சுந்தரைக் கண்டாலேயே பாலஸ்தீன இயக்க பயிற்சி பெற்றவர் என்கிற பெரிய பிரமிப்பு எமக்கு. ஆனால் மனுசன் ஒரு நாள் கூட அதை சொல்லிக் கொண்டதில்லை. தோழர்..... இப்ப பிரச்னை எப்படி இருக்கு? என்றால்.....

பிரச்ச்ச்ச்ச்சனை இருக்கு என்பார்

பிரச்னையையே பிரச்ச்ச்ச்சனையாகச் சொல்லக்கூடியவர் தோழர் சுந்தர்தான் என நக்கலடிப்பார் செழியன்.

தோழர்களோடு உணவு உண்ணும்போது ஈழப் பிரச்சனையை நினைத்துக் கண்ணீர் விடுகிறோமா இல்லையோ..... ஆனால் ஒரு கவளம் வாயில் வைத்ததுமே கண்களில் நீர் தழும்பி நிற்கும். அவ்வளவு காரம். தோழர் உங்களுக்காக இன்னைக்கு உறைப்பு கொஞ்சம் குறைவா போட்டிருக்கு என்கிற விளக்கம் வேறு தருவார்கள். சென்னையில் தங்கி இருக்கும் பொழுதுகள் தோழர்கள் பாலகுமார்..... சுந்தர்..... ராஜா..... பார்த்திபன்.... அன்னலிங்கம்.... என எண்ணற்றவர்களோடு நகரும். ஈழம் குறித்த கனவுகளோடு..... எதிர்ப்படும் எதார்த்தங்களை எவ்விதம் எதிர்கொள்வது என்கிற விவாதங்களோடு பொழுதுகள் விடியும். இத்தனைக்கும் கத்துக்குட்டி நான். இவனுக்கெல்லாம் என்ன தெரியும் என்று தோழர். சுந்தரோ, பாலாவோ ஒருபோதும் எண்ணியதில்லை. அபத்தமாக என்னால் கேட்கப்படும் கேள்விகளுக்கெல்லாம் மிக நிதானத்துடன் விளக்கிச் சொல்வார்கள். அந்தப் சகிப்புத்தன்மையும், பண்பும், அன்பும் இன்றைய வரைக்கும் எனக்குள் முளைவிடாத ஒன்று. ஈரோசின் நிறுவனர்களில் ஒருவரான தோழர்.ரத்னாவும் அவ்வப்போது எம்முன் பல கேள்விகளைக் கிளப்பி விட்டுவிட்டு கிளம்பிச் செல்வார்... என்று செய்தித்தாளில் முந்தைய நாள்தான் பார்த்திருப்போம். ஆனால் மறுநாளே தோழர் எனக் கை அசைத்தவாறு தனது சைக்கிளில் கோடம்பாக்கம் மேம்பாலத்தில் இருந்து இறங்கிக் கொண்டிருப்பார் பாலா. அநியாயத்துக்கு எளிமையானது ஈரோஸ் என்கிற மொச்சைக்கொட்டை பட்டாளம்.

சுந்தர் சென்னைப் பொறுப்பாளராக இருந்தபோது வெளிக்கொண்டு வந்த இந்த மண்ணும் எங்கள் நாட்களும் நூலையும், பொதுமை இதழ்களையும் இன்னமும் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன். சென்னையில்தான் இப்படிப்பட்ட உறவுகள் என்றால்..... கோவைக்கு திரும்பினாலோ ஈரோஸின் கோவைப் பொறுப்பாளர்களோடுதான் போகும் பொழுது. கோவையை சுற்றியுள்ள குக்கிராமங்களுக்கெல்லாம் தோழர்களைக் கூட்டிக் கொண்டு போகவேண்டும். கரும்பலகைகளை வைத்து வகுப்பெடுப்பார்கள் தோழர்கள். சித்திரையில் ஈழம் மலரும்..... தையில் கொடியேற்றுவோம்..... என்றெல்லாம் உங்களை ஏமாற்றத் தயாராயில்லை நாங்கள். இந்த விடுதலைப் போராட்டத்திற்கு காலக்கெடுவெல்லாம் விதிக்க முடியாது. உங்கள் அடுத்த தலை முறை



படிப்பகம்

padippakam

கூட போராட வேண்டி வரலாம் என்று தொடரும் வகுப்பு. மக்கள் ஆழமாக அவதானித்துக் கொண்டிருப்பார்கள் அதை. பல நாட்கள் விடிந்தும் தூங்கிக் கொண்டிருப்பேன். என்னை எழுப்பிவிட வேண்டும் என்றால் தோழர் ஈழம் கிடைச்சுடுச்சு தோழர். எழும்புங்க..... என்றுதான் எழுப்புவார்கள் குட்டியும், மெல்ட்டசும். அவர்களுக்கு வழிகாட்ட அனுப்பி வைக்கப்பட்டிருந்தார் சுந்தரின் மச்சான் முகிலன். 1986 ஜூலை 23 ஆம் தேதி ஈழ நண்பர்கள் கழகத்தின் சார்பாக சுந்தரின் கருத்தரங்கம் கோவையில். ஜூலைப் படுகொலைகள் நினைவு தினத்திற்காக. எதிர்பாராத கூட்டம் அன்று. ஜெ.ஆர்.ஜெயவர்த்தனா ஆட்சியின் அவலங்களையும், திம்பு பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்ததற்கான காரணங்களையும், ஈழத்தின் தேவைகளையும் எடுத்துரைக்கிறார் சுந்தர். இரவு நெடுநேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு மறுநாள் ரயில் ஏற்றி அனுப்பி வைக்கிறோம். அதற்கிடையில் ஈழ இயக்கங்களை அணுகும் போக்கில் இந்திய அரசிடம் எண்ணற்ற மாற்றங்கள். இலங்கை அரசுக்கு இந்தியா எச்சரிக்கை, இந்திய விமானங்கள் வடக்கில் உணவுப் பொட்டலங்கள் வீச்சு போன்ற அநேக நாடகங்கள். அதை அடுத்து வந்த ஒப்பந்தக் காட்சிகள். ஒவ்வாத ஒப்பந்தத்தை ஒப்புக்கொள்ளச் சொல்லி இந்திய அரசின் வற்புறுத்தல்கள்..... இல்லையில்லை அச்சுறுத்தல்கள். உங்களுக்காக சோறெல்லாம் போட்டோமே.... ஏன் ஒத்துக் கொள்ளக்கூடாது ஒப்பந்தத்தை? என்கிற அரைவேக்காட்டுத்தனமான உளறல்கள். மனம் நொறுங்கிப் போயினர் போராளிகள். எரிச்சலும்,அவமானமும் தாள முடியாமல் அப்போது சுந்தர்தான் ஒரு மேடையில் கேட்டார்: சொல்லிக்காட்டவா சோறு போட்டீர்கள்? என்று. அதைத்தான் நான் 21 ஆண்டுகள் கழித்து ஈழ இன்னல்கள் குறித்து ஒரு வார இதழுக்கு எழுதும்போது தலைப்பாக்கினேன். உண்மையில் அந்தத் தலைப்புக்குச் சொந்தக்காரர் சுந்தர்தான்.

ஒப்பந்தத்தை ஏற்காத போராளிகளை ஒப்புக்கொள்ளுமா மத்திய அரசு?. அந்த வேளையில் அவர்கள் வேண்டா விருந்தாளிகள். மனம் நொந்து கப்பல் ஏறுகிறார் சுந்தர். கப்பல் ஏறும் முன் அவர் கி.பி.அரவிந்தனாக பாலம் இதழுக்கு அனுப்பிருந்த எங்கள் நினைவுகளை உங்களிடம் கையளித்துள்ளோம் என்கிற கடிதம் ஈழத்தை நேசித்த ஒவ்வொரு உயிரையும் என்ன பாடுபடுத்தி இருக்கும் என்பதை வரிகளால் வர்ணித்து விட முடியாது. இன்னமும் தோழர்களும் நானும் தோன்றும்போதெல்லாம் எடுத்து வாசிக்கும் ஒரு உன்னதம் அது. அதில் உள்ள வரிகளை வாசித்தால் புரியாது. அவர்களுடன் வாழ்ந்திருந்தால் மட்டுமே புரியும்.

எல்லாம் முடிந்தது. காலை தொடங்கி நடுச்சாமம் வரைக்கும் எனது உலகமாக இருந்த தோழர்கள் எல்லாம் புறப்பட்டாயிற்று. பாலா, சுந்தர் தொடங்கி..... குட்டி மெல்ட்டஸ் வரையிலும் எல்லோரும்



படிப்பகம்

கிளம்பியாயிற்று. நான் மட்டும் தனியே கரையில் நின்றபடி. எனக்கு இங்கு எவரைத் தெரியும்? தெரிந்தாலும் அவர்களோடு என்ன பேசுவது? குறைந்தபட்சம் ஏதாவது கட்சியில் இருந்திருந்தாலாவது நேரத்தை ஓட்டி விடலாம். ஏதாவது ரசிகர் மன்றத்தில் இருந்திருந்தாலாவது எங்காவது மன்றத்தில் உட்கார்ந்து கேரம் போர்டு விளையாடிக் கொண்டிருந்திருக்கலாம்.

என்ன செய்யப்போகிறேன் இனி?

ஈழம் கிடைச்சிடுச்சு தோழர்..... எழும்புங்க. என எவர் எழுப்பப் போகிறார்கள் என்னை?

எங்கிருந்தோ வந்தான்.... இடைச்சாதி நான் என்றான். என்பதைப் போல எங்கிருந்தோ வந்தார்கள். அரைவேக்காடாய்த் திரிந்த என்னைப் போன்றவர்களுக்கு மானுடத்தை நேசிக்கக் கற்றுக் கொடுத்தார்கள். மனிதனாக்கினார்கள். திடுதிப்பென ஒரு பொழுதில் புறப்பட்டு விட்டார்கள். எனது உலகம் தொலைந்து போயிற்று.

இனி நான் இந்த மண்ணில் வாழப் பழக வேண்டும். ஓடம் நதியினிலே.... என்கிற பாடல் வரிகள் என்னுள்ளே கேட்கிறது.

முதலிலேயே சொன்னதைப் போல இது அணிந்துரை அல்ல நண்பர்களே. எப்படி எழுத முடியும் என்னால்? ஈழத்தின் முதல் தற்கொடைப் போராளி சிவகுமாரனோடு எழுபதுகளில் களமாடிய தோழனின் நூலுக்கு.....

ஈழத்தின் விடிவுக்காய் பாலஸ்தீனப் பயிற்சி பெற்று போராளியாய்ப் படைக்கருவிகளை பாவித்தவன் படைப்புக்கு.....

விண்ணப்பித்தால் ஈழக் குடியுரிமைக்கே விண்ணப்பிப்பேன். அதுவரை அகதியாகவே வாழ்ந்துவிட்டுப் போகிறேன். அல்லது அகதியாகவே செத்துப் போகிறேன்..... என்று பிரான்ஸ் குடியுரிமைக்கு விண்ணப்பிக்காது நிற்கும் ஒரு சுயமரியாதைக்காரனின் நினைவலைகளுக்கு.....

எப்படி எழுத முடியும் என்னால்.

இதில் இருப்பவையெல்லாம் வெறும் எழுத்துக்கள்... வார்த்தைகள்.... வாக்கியங்களாகப் படவில்லையே எனக்கு. வலிகளாக இருக்கிறதே. என்ன செய்வேன் நான்?

அம்மாவின் இறுதிப் பயணத்தைப் பற்றி வாசிக்க வாசிக்கவே கண்ணீரைக் கட்டுப்படுத்த இயலவில்லை. என்ன செய்வதென்று புரிபடாமல் இணையதளத்தைத் திறந்து இப்படி ஒரு மின்னஞ்சலை அனுப்பி வைத்தேன் பிரான்ஸிஸ் ஆகவும்.... சுந்தராகவும்.... அறியப்பட்ட கி.பி.அரவிந்தனுக்கு :

சுந்தர்......""இப்போது நான் உங்களுடன் இருக்கிறேன்."" அம்மாவின் தலைமாட்டிற்கு அருகே ஐயா, தம்பியரோடு நானும்....""உங்கள்,"எழிற்கோ.

padippakam

இதை வாசிக்க வாசிக்க யாழ்

லெபனான்

கொழும்பு

வெலிக்கடை சிறை

தமிழகம்

பிரான்ஸ் என இப்படி ஒவ்வொரு இடமும் நீங்களும் அரவிந்தனோடுதான் இருந்து கொண்டு இருப்பீர்கள்.

இனி, அவருடனான உங்கள் பயணம் தொடங்க நான் விடைபெறுகிறேன் இப்போதைக்கு.

தோழமையுடன்,
**பாமரன்**



படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

# அப்படித்தானா, அரவிந்தன்?

எனக்கு அவரை யார் அறிமுகப்படுத்தி வைத்தார் என்பதெல்லாம்கூட மறந்துபோய்விட்டது. பெரும்பாலும் வைகறைதான் அறிமுகப்படுத்தியிருப்பார் என நினைக்கிறேன். எழுபதுகளின் கடைசியிலோ எண்பதுகளின் தொடக்கத்திலோ நான் அவரைச் சந்தித்திருக்கக் கூடும். அவருடைய வார்த்தைகளிலேயே சொல்வதானால் 'வாழத் துடித்த ஒரு மானுடக் கூட்டத்தின் பிரதிநிதியாய்' அவர் எனக்கு அறிமுகமானார். தோழர் சுந்தர் என அறியப்பட்ட அவரைக் கண்டதும் 'சொலல்வல்லன், சோர்விலன், அஞ்சான்-அவனை இகல்வெல்லல் யார்க்கும் அரிது' என மனதில் பதிந்த சித்திரம் மட்டும் இன்னும் என் நெஞ்சில் அழியாமல் இருக்கிறது.

தோழர் சுந்தரின் மென்மையான குரலும் வெடிச்சிரிப்பும் கேட்டுப் பதிற்றாண்டுகள் கடந்துவிட்டன. ஆயினும் எம் தோழர் வட்டப் பேச்சின்போதெல்லாம் அவர் வந்து போகத் தவறுவதே இல்லை. தொடக்க நாட்களில் ஓர் அரசியல்வாதியாகத் தெரிந்த அவருக்குள் ஓர் இலக்கியவாதியும் இருந்ததை நான் அப்போது அறிந்திருக்கவில்லை. அவர் அவ்வப்போது எழுதும் அரசியல் கட்டுரைகளில் இலக்கியத்தின் மணத்தை நான்



படிப்பகம்

padippakam

முகர்ந்திருக்கிறேன். நண்பர் வைகறை அவருடைய கவிதைகளைத் திரட்டி 'இனி ஒரு வைகறை' என ஒரு கையடக்கக் கவிதைத் தொகுப்பாகக் கொண்டுவந்த நேரம், தோழர் சுந்தர் கவிஞர் கி.பி. அரவிந்தனாக இன்னொரு பரிமாணம் எய்தினார். அந்தப் புத்தகத்தின் பின்னட்டை வாசகங்களைக் கூட ஆர்வப்பெருக்கோடு நான் எழுதிக் கொடுத்தது நினைவிலிருக்கிறது. அடுத்து 'முகங்கொள்' என்ற கவிதைத்தொகுதி வெளியானது. மூன்றாவது கவிதைத்தொகுதி 'கனவின் மீதி' மீண்டும் வைகறையால் வெளியிடப்பட்டது. அந்தத் தொகுப்பின் பதிப்புரையில் 'தமிழகத்தில் கி.பி. அரவிந்தனின் கவிமனதைக் கண்டுகொண்டவர்களில் கே.எம். வேணுகோபால் முக்கியமானவர்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது கண்டு நான் மகிழ்ச்சி அடைந்ததுமுண்டு.

***

எந்தத் திக்கில் செல்வது என்று தெரியாமல் இன்று திகைத்து நிற்கிறது ஈழத் தமிழினம். இந்தச் சூழ்நிலையில் - பெருமிதம் பொசுங்கிக் கழிவிரக்கம் மேலோங்கியிருக்கும் இந்தச் சூழ்நிலையில் - கி.பி. அரவிந்தனின் கட்டுரைகள் தொகுக்கப்பட்டு வெளிவருவது மிகுந்த அரசியல் முக்கியத்துவம் கொண்டதாக ஆகியுள்ளது.

'இது விடைபெறும் நேரம்தானா என்பதும் தீர்மானமாகவில்லை.' என்றபடியே நம்மிடமிருந்து விடைபெற்றுச் சென்ற சுந்தரின் 'எங்கள் நினைவுகளை உங்களிடம் கையளித்துள்ளோம்' என்ற கடிதம் இந்தத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

தமிழ்நாட்டில் அவர் வாழ்ந்தபோது அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அனைத்துத் தரப்பு மக்களிடமும் அரசியல்பணி ஆற்றியுள்ளார். அதனை மிகக் கவித்துவமான நடையில் அரவிந்தன் அந்தக் கடித வடிவிலான கட்டுரையில் பதிவு செய்திருக்கிறார்.

அதைப்போலவே, தமிழகத்திலிருந்து விடைபெற்றுச் சென்ற அரவிந்தன் பதினேழு ஆண்டுகளுக்குப் பின்னர் மீளவும் இங்கு வந்து அலைந்து திரிந்த இடங்களை, பழகிக் களித்த தோழர்களைச் சந்தித்ததைப் பற்றி பரவசத்துடன் எழுதிய கட்டுரை 'ஒரு பயணமும் சில நினைவுகளும்...'. அதில் அவர் சொல்கிற இடங்கள், நபர்கள் எல்லாமும் அரவிந்தனின் 'மலரும் நினைவுகள்' மட்டுமல்ல, ஈழப் போராட்டத்தின் இறந்தகாலச் சரித்திரமும் கூட. அதை இறந்தகால நினைவுகள் என்று சொல்வதுகூட அத்தனை சரியாக இருக்காது. 'வாழ்ந்த காலத்தின் நினைவுகள்' என்பதே சரி.

மேலும், வெளிச்சம் நூறாவது இதழுக்காக ஐங்கரநேசன் கி.பி. அரவிந்தனுடன் மின்னஞ்சல் மூலம் நிகழ்த்திய நீண்ட நேர்காணல் இந்தத் தொகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறது. மூத்த தலைவர்களிடமிருந்து ஈழப்போராட்டம் இளைய தலைமுறையின் கைக்கு மாறிய காலகட்டத்தில் முன்னோடிய போராளிகளில் சிவகுமாரன்



படிப்பகம்

padippakam

முக்கியமானவர். அரவிந்தன் அவருடன் இணைந்து களப்பணி ஆற்றியவர். 1974ஆம் ஆண்டு சிவகுமாரனின் மறைவிற்குப் பிறகு தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தது, தமிழகம் வந்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டது, ஈரோஸ் இயக்கத்தில் இணைந்தது, கவிஞனாகத் தன்னை உருவாக்கிக்கொண்டது என அரவிந்தனின் வாழ்க்கையை மிகச் சிறப்பாக அந்த நேர்காணல் வெளிப்படுத்தியிருக்கிறது.

போராடுவதற்காக நிமிர்ந்த ஓர் இளந்தலைமுறை வாழ்வதற்கு உரிமையற்று தம் தாய்நாட்டில் சாவதற்கு மட்டுமே உரிமை படைத்தவர் களாகவும் அல்லது ஏதிலிகளாய் உலகின் தெருவெங்கும் வீசி எறியப்பட்டவர்களாகவும் சிதறடிக்கப்பட்ட ஒரு காலகட்டத்தில் கி.பி. அரவிந்தன் இன்று அகதிகளில் ஓர் அகதியாய் பிரான்சில் விருப்பின்றி இருக்கின்றார்.

அரவிந்தன் பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்து வந்தாலும் அந்த நாட்டின் குடியுரிமை பெறாமல் ஓர் அகதியாகவே இன்னும் வாழ்ந்துவருகிறார். ஓர் அகதியாக இருப்பதன் அரசியல் அவருடைய வார்த்தைகளாக அந்த நேர்காணலை நிறைவு செய்திருக்கிறது.

"..நான் அகதிநிலையை மாற்றிக்கொள்வதில்லை என்றே உள்ளேன். ஈழத்தமிழ்ச் சமூகத்தின் அகதிநிலைக்கு ஒரு முக்கியக் காரணம் போராட்டம் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. போராட்டம் தொடர்ந்துகொண்டிருக்கையில் எப்படி எனது அகதி நிலையில் மாற்றம் ஏற்படும்? குடியுரிமை என்பது அந்த நாடுகள் தாங்களாகத் தருபவை அல்ல. நாம் விண்ணப்பிக்க வேண்டும். நான் விண்ணப்பிக்கவில்லை, அவ்வளவுதான். குடியுரிமையை ஏற்கும்பொழுது இந்தப் போராட்டம் முடிவடைந்துவிட்டதாகவும் கொள்ளலாமல்லவா? இரண்டாவது, குடியுரிமை பெறும்போது இந்த நாட்டு வரலாற்றினை இரத்தமும் சதையுமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த நாட்டுக் கொடியின் மீதான இரத்தக் கறைகளுக்கும் நான் சாட்சியாக வேண்டும். இவற்றைவிட ஈழக்குடியுரிமைக்கு விண்ணப்பிக்கும்போதே எனது அகதிநிலையை மாற்ற விரும்புகிறேன். அப்படி நிலை தோன்றும் என்றே நம்புகிறேன். அதுவரை சில சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி உள்ளதுதான். பரவாயில்லை. அகதியாகவே வாழ்ந்துவிட்டுப் போகிறேன் அல்லது அகதியாகவே செத்துப்போகிறேன்."

ஏறத்தாழ இந்தக் கட்டுரைகளின் தொகுப்பு அரவிந்தனின் தன்வரலாறு என்பதான தன்மை கொண்டிருந்தாலும் உற்றுப் படித்தால் அது அவருடைய வரலாறாக மட்டுமல்லாமல், அவரோரன்ன இளைஞர்களின் வரலாறாகவும் இன்னும் போரிடும் இளைய தலைமுறையின் வரலாறாகவும் விரிவதை நாம் அவதானிக்க முடிகிறது.

"புலம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கையில் நானும் ஒரு தலையாக இணைந்துவிட்டேன். ஆனால் என்னுள்ளான நெருப்பை என்றும் நான்



படிப்பகம்

padippakam

ய விட்டதுமில்லை. எனக்கான தேசியப் பணிகளைக் —டதுமில்லை. அப்பணியாக இக் கட்டுரையையும் எழுதுகின்றேன்" று ஒரு கட்டுரையில் அவர் குறிப்பிட்டுள்ளார். ஒரு போராளியின் பச்சும் எழுத்தும் கூட போராட்டத்தின் ஒரு பகுதிதான் என்பதை அவருடைய அந்த வரிகள் நமக்கு உணர்த்துகின்றன.

சிங்களப் பேரினவாதத்திற்கும் தமிழ்த்தேசியத்திற்குமான போர் என்பதையும் மீறி தலைமுறைகளாக இலங்கையில் போர் நீடிப்பதற்கு என்ன காரணம்?

"இந்தியாவின் எல்லைகளைத் தொட்டு நிற்கும் இந்துமாக் கடலிடையேயான இலங்கைத்தீவின் அமைவிடமே அதன் பலமும் பலவீனமுமாகும். அவ்வமைவிடம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகப் புவிசார் அரசியலில் சர்வதேச நலன்களுடன் பின்னிப் பிணைந்துள்ளதே அதன் பலவீனம். அதனாலேயே ஈழப்போராட்டம் நீண்டு செல்ல வேண்டியதாக உள்ளது" என இலங்கை இனப் பிரச்சினையின் ஆணிவேரை அந்த நேர்காணலில் அசைத்துக் காட்டுகிறார் அரவிந்தன்.

"ஈழத்தமிழரை அழிக்கும் சிறிலங்கா அரசிற்கு அமெரிக்காவும் ஆதரவு. அதே வேளையில் அமெரிக்காவை கிலி கொள்ள வைத்திருக்கும் எதிரியான சீனாவும் ஆதரவு. தமிழ்மொழி பேசும் மக்களை ஒரு மாநிலமாகக் கொண்டிருக்கும் இந்தியாவும் ஆதரவு. நாள்தோறும் இந்தியா மீது யுத்தப் பிரகடனம் செய்துகொண்டிருக்கும் பாகிஸ்தானும் ஆதரவு. என்ன வேடிக்கை பாருங்கள்" என்று அவர் கூறுவதுதான் இன்று ஐக்கிய நாடுகள் மன்றம் வரையில் அம்பலப்பட்டுப்போன சர்வதேச 'முற்போக்கு' நாடுகளின் நிலை. பாதிக்கப்படுகின்ற ஓர் இனத்துக்கு காவலரணாக இருக்க வேண்டிய சக்திகள் பச்சைப் படுகொலைகளை நிகழ்த்தும் ஒரு பாசிச அரசிற்குத் துணைபோகிற நிலையைக் காண நேர்கிற ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். என்ன கொடுமை இது!

அரவிந்தனின் வழிகாட்டியும் சரிநிகர்த் தோழனுமான சிவகுமாரன் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தில் அவருடன் இருந்த மூன்று பேரில் அரவிந்தனும் ஒருவர். அரவிந்தன் போலீசாரின் தோட்டாவுக்குத் தப்பித்தவர். 'ஈழப்போராட்டத்தின் முதல் வித்தாய், முன்னறிவித்தவனாய், மாணவர் எழுச்சியின் குறியீடாய் மாறிப்போனார் சிவகுமாரன்'. 34 ஆண்டுகளுக்குப் பிறகு அவரை நினைவுகூர்ந்து அரவிந்தனால் எழுதப்பட்ட கட்டுரையும் இந்தத் தொகுப்பில் உள்ளது. இந்தக் கட்டுரை இன்றைய தலைமுறையினருக்குத் தன் முன்னோடிகளைக் குறித்துச் சொல்லித்தரும் வல்லமையுடன் எழுதப்பட்டுள்ளது.

அரவிந்தன் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசர் அராபத் மறைவின்போது எழுதிய கட்டுரையின் வாயிலாக வெளிப்பட்டுள்ள



படிப்பகம்

padippakam

செய்திகள் அரவிந்தனுக்குச் சிறப்பு சேர்ப்பவை. அரவிந்தன் 1978இல் லெபனானுக்குச் சென்ற குழுவில் இடம்பெற்றதும், பாலஸ்தீன மக்களாலும் போராளிகளாலும் 'அபு அம்மார்' என்று அன்புடன் அழைக்கப்பட்ட யாசர் அராபத்தைத் தரிசிக்க அவருக்கு வாய்ப்பு கிடைத்ததும் அந்தப் புகழ்மிக்க போராளியின் பெயரின் ஈர்ப்பினால் பின்னர் சிறிது காலம் தனது பெயரின் முன்னால் 'அபு' என்று இணைத்துக் கொண்டதும் நமக்கெல்லாம் புதிய செய்திகள். அரவிந்தனே சொல்வதுபோல 'தற்போது இதனை வாசித்துக்கொண்டிருக்கும் பலருக்கும் இவை ஆச்சரியத்தை அளிக்கக் கூடும்.'

அரவிந்தன் போராட்டத்தைத் தனது வாழ்க்கையாகத் தரித்துக் கொண்டதால் ஏற்பட்ட இழப்புகள் பல; பற்பல. தாயகத்தை இழந்து ஓர் அகதியாக வாழ நேரிட்டதைப் போன்றே, தாயைப் பிரிந்தும் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டார். தாயின் மரணத்திற்குப் பிறகு தாயகம் திரும்பியவர் தன் அம்மாவைப் பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு உயிரற்ற உடலாகவே தரிசிக்கிறார். 'நான் மூத்த மகனானதாலும் அதற்கும் மேலாக 'மந்தையில் இருந்து காணாமல் போன ஆடு' என்பதாலும் என்னிடத்தே மிகுந்த வாஞ்சை கொண்டிருந்தார்' என்பது அரவிந்தனின் அம்மாவைப் பற்றிய சித்திரம். அவரது அன்னையின் இறுதிநாட்களில் அரவிந்தன் மட்டுமல்ல, அம்மாவின் ஏழு பிள்ளைகளில் ஒருவர் கூட அருகில் இல்லாமல் போனது இன்றைய ஈழத்தமிழர் வாழ்வின் அவல நிலையைப் படம் பிடித்துக் காட்டக் கூடியது.

புலம்பெயர் வாழ்வில் ஈழத்தமிழர் கண்ணியமான வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருக்கவில்லை. 'புதிய பார்வை' இதழுக்கு அரவிந்தன் அளித்த நேர்காணலில் புகல்நாட்டு வாழ்வின் அவலங்கள் அவரால் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன. "ஒரே அறையில் பதினைந்து பேர் தங்கியிருப்பார்கள். நீங்கள் நம்ப மாட்டீர்கள். 'டேர்ன்' வைத்துப் படுப்பார்கள். அப்படியான வாழ்க்கையெல்லாம் உண்டு. அதுவொரு பெரிய நெருக்கடி. அதை எப்படிச் சொல்வதென்றே புரியவில்லை" என்கிறார் அரவிந்தன். பெரும்பாலான ஈழத்தமிழர் - பெண்கள் உட்பட - பிரான்ஸ் போன்ற, நாம் அண்ணாந்து பார்க்கிற நாடுகளில் 'கிளினீங்' வேலைகளைச் செய்கிறார்களாம் - கார்பெட் சுத்தம் செய்வது, டாய்லெட் கழுவுவது, மேசை துடைப்பது, ஆஸ்ட்ரே துடைப்பது... இப்படி...

அரவிந்தன் ஓர் இலக்கியவாதியாக, அரசியல்வாதியாகப் புலம்பெயர் வாழ்வின் அவலங்களை அந்த நேர்காணலில் அலசுகிறார். அவருடைய சமூக விஞ்ஞான மனோபாவம், புலம்பெயர் வாழ்வின் சாதகமான அம்சங்களையும் நுண்ணோக்கி அறிகிறது. "எங்கள் புலம்பெயர் வாழ்வின் சாதகமான அம்சங்களில் முக்கியமானது மொழி அறிவு. பொதுவாக, தமிழ்ச் சமூகத்திற்குப் பலமொழி அறிவு கிடையாது. இன்றைக்குப் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்திற்குப் பதினைந்து மொழிகள் தெரியும்.



படிப்பகம்

padippakam

70,000 பேர் பிரான்சில். 40,000 பேர் யேர்மெனியில். இரண்டரை லட்சம் பேர் இலண்டனில். 15,000 பேர் டச்சில். 10,000 பேர் நோர்வேயில். 15,000 பேர் டென்மார்க்கில் என ஐரோப்பிய நாடுகளில் அண்ணளவாக ஐந்து லட்சம் பேர் வாழ்கிறார்கள். அத்துடன் சுவீடன், சுவிஸ், பெல்ஜியம், இத்தாலி, ஸ்பெயின் நாடுகளில் எல்லாம் வாழ்கிறார்கள். அந்தந்தக் குழந்தைகள் எல்லாம் அந்தந்த மொழியைப் பேசுகிறார்கள். தமிழ்ச்சமூகத்தின் அறிவு பலமொழி அறிவாக விரிவடைந்திருக்கிறது. இந்திய சமூகங்களில் எந்தச் சமூகத்திற்கும் இந்த வாய்ப்பு கிடைக்காது. ஐரோப்பிய நாடுகளில் உள்ள அனைத்து உயர் தொழில்நுட்பங்களும் நம்மவர்கள் சிலருக்குக் கிடைத்திருக்கின்றன. இது ஒரு முக்கியமான அம்சம். யுத்தங்களும் கலவரங்களும் நிகழ்ந்த நிலையில் அதற்கு நேர் எதிராகக் கிடைத்த பலன்கள் இவை. சிங்கள அரசு, தமிழ் மக்கள் சின்னாபின்னப்பட்டு அழியட்டும் என்றுதான் எங்களை அனுப்பியது, அந்தச் சூழலை உருவாக்கியது. அதுதான் போராட்டத்திற்குப் பலமாகவும் மாறி அதற்குப் பன்முகத்தன்மையை அளித்திருக்கிறது. இந்த நுண்ணிய மாற்றம் இன்றைக்கு அறியப்படாமல் இருக்கலாம். ஆனால் எதிர்காலத்தில் இது தமிழ்ச் சமூகத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்தும்" என்கிறார் அரவிந்தன்.

ஈழத்தில் என்னதான் நடக்கிறது என்றே தெரியாத நிலை இன்று நிலவுகிறது. இந்நிலையில் ஈழ நிலவரங்களை இற்றைப்படுத்தி மீண்டும் ஒரு கடிதத்தை நமக்கு எழுதியுள்ளார் அரவிந்தன். 'இருப்பும் விருப்பும்' என்கிற அந்தக் கடிதம் இந்நூலின் தலைப்புக் கட்டுரையாகத் தோற்றம் கொண்டிருக்கிறது.

"அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளேன். உங்கள் நிலையும் அதுவாகத்தான் இருக்கும். யாராலும் எதிர்வு கூறப்படாத வெளிக்குள் ஈழப்போராட்டம் தள்ளப்பட்டுள்ளது" எனத் தொடங்கும் இந்தக் கடிதம் பல புதிய வெளிச்சங்களை ஈழப்போராட்டத்தின் மீது பாய்ச்சுவதாக அமைந்துள்ளது.

"ஆயுத பலம் மிக்கவர்களே தோற்றுவிட்டார்களே என்பதற்காக நாமும் வாளாவிருக்க முடியுமா?

அறவியல் போராட்டத்திற்கு ஆயுதம் அல்லாத வழிமுறைகளும் உண்டல்லவா?

மூன்றாம் கட்டத்துக்குள் நுழைந்திருக்கும் ஈழப்போராட்டம் நிச்சயம் ஆயுதத்தை முன்னிறுத்திச் செல்லாது என்றே நம்புகிறேன்" என்கிறார் அரவிந்தன்.

அறப்போர் வழியில் தொடங்கிய ஈழப்போராட்டத்தை ஆயுதப் போராட்டமாக மாற்றியது யார்? ஈழமக்கள் எந்த ஆயுதத்தைப் பயன்படுத்த வேண்டும் என்பதைத் தீர்மானித்தவர்கள் யார்?



படிப்பகம்

padippakam

பேரினவாதத்தின் கொடுங்கரங்களில் ஆயுதம் இருக்கும்போது - ஆயுதத்தாலேயே அதைச் சந்திக்க முடியாவிட்டால் - ஆயுதம் அல்லாத வழிமுறைகள் எந்த அளவுக்கு உதவும் என்பது புரியவில்லை. 'அறத்திற்கு மட்டும் அன்பு சார்பல்ல. மறத்திற்கும் அஃதே துணை' என்று அன்பின் நிமித்தம் அல்லவா ஆயுதம் முன்னிறுத்தப்பட்டது?

“இப்போது தமிழ்நாட்டுச் சட்டசபையில் ஈழத்தவரின் அரசியல் விருப்பமான சுயநிர்ணயத்தை ஆதரித்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற முடியும். இது நிறைவேற்றப்பட்டால் ஈழத்தமிழருக்கான சர்வதேசங்களின் அரசியல் தீர்வு முன்னெடுப்புக்கு மிகப்பெரிய அளவில் வலு சேர்ப்பதாக அமையும்” என்று கூறுகிறார் அரவிந்தன்.

இன்றுள்ள சூழ்நிலையில், “சிறிலங்காவின் வெற்றியை அங்கீகரித்து முகமிழந்து போகாமல்,

நம்முள் மாற்றம் எதையும் நிகழ்த்தாதவர்களாய் அழிந்து போகாமல்,

இருப்பைக் கணக்கெடுத்து மாற்றுத் தெரிவுகளுக்கு ஊடாகப் புதிய பரிணாமத்திற்கு அதாவது சர்வதேசச் சமூகத்திற்கான மொழியூடாகப் போராட்டத்தை நகர்த்துதல், இலக்கை எட்டுதல்தான் நம்முன் உள்ள தெரிவு” என்கிறார் அரவிந்தன்.

அப்படித்தானா, அரவிந்தன்?

முன்னோக்கிப் போய்க்கொண்டே இருந்த நாம், ஆரம்பித்த இடத்துக்கே வந்துவிட்டோமா? இதற்கு நீங்களும் நானும் அல்ல. காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

**- கே.எம். வேணுகோபால்**
**சென்னை - 14**
**19.06.2009**



படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

# இருப்பும் விருப்பும்

**01** நண்பர்களே!

அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளேன். உங்கள் நிலையும் அதுவாகத்தான் இருக்கும்.

யாராலும் எதிர்வு கூறப்படாத வெளிக்குள் ஈழப்போராட்டம் தள்ளப்பட்டுள்ளது.

நமது வண்ணக் கனவு வாலறுந்த பட்டமாகக் காற்றில் அலைவது போன்ற தோற்றம். போராட்டத்தில் சரிவுகள், பின்னடைவுகள், தோல்விகள் எதிர்பார்க்க கூடியவையே. எதிர்பார்க்கப்பட்டவையே.

ஆனால் நாம் எதிர்கொண்டிருப்பது சரிவோ பின்னடைவோ அல்லவே. இவையெல்லாவற்றையும் தாண்டியதல்லவா அது.

ஆழிப்பேரலை அல்லது சூறைக்காற்றில் அகப்பட்ட தேசம்போல் நாமும் அதன் இருப்பும் உருக்குலைந்து போயுள்ளன.

அசாத்தியங்கள் பலவற்றைச் சாத்தியமாக்கி காட்டிய நம்மவர்கள் எங்கே சறுக்கினார்கள்.



படிப்பகம்

padippakam

எதிரிகளால் கூட நம்பமுடியவில்லை. போராட்டத்தை விமர்சித்த பலரும் கூட தவிப்புடன்தான் உள்ளனர்.

நண்பர்களே உங்கள் உள்ளத்து உணர்வு எவ்வகையானது என்பதை எழுதிக்காட்டவா முடியும்.

தொலைபேசி வழியான உங்கள் கண்ணீரில் எனது வீடே நனைந்தது.

யாரை யார் ஆற்றுப்படுத்துவது.

ஏன் எப்படி இது நிகழ்ந்தது?

நண்பர்களே அதற்கான காரணங்கள் எனக்கு இன்னமும் துல்லியமாகப் பிடிபட மறுக்கின்றன.

சிந்தனையோட்டம் தடைப்பட்டது போன்ற உணர்வு.

இப்படியாகும் என்பதற்கான எந்தவொரு சிறு துடயத்தையும் நமது போராட்டத்தின் போக்கு வெளிப்படுத்தியதில்லை. தேசிய போராட்டத்தின் பலவீனமான அம்சங்கள் பற்றி தொடக்க காலங்களிலேயே நம்மால் முன்வைக்கப்பட்டவைதான். சில குறைபாடுகளைக் கொண்டிருக்கும் என்பதும் எதிர்பார்க்கப் பட்டவைதான்

இப்பலவீனங்கள் காலநீட்சியில் சரிசெய்யப்படும் என்றே நீங்களும் நானும் நம்பியிருந்தோம்.

பலவேளைகளில் தவறுகளில் இருந்து பாடம் கற்று முன்னகர்ந்து செல்கின்ற தோற்றத்தையே 90 ஆம் ஆண்டுக்கும் பின்னாக போராட்டம் போக்குக் காட்டி நின்றது.

நம்மைப்போல் பலரும் இதனையே நம்பினர். அதனால் விமர்சனங்களை ஓரம்கட்டி போராட்டத்தை முன்னெடுக்க தம்மால் இயன்ற பங்களிப்பை வழங்கினர்.

நாம் அவர்கள் அருகிலேயே இருந்தபோதும் எம்கருத்துகளை அவர்கள் பொருட்படுத்தியதில்லை உள்வாங்கியதில்லை என்பது இப்போது நிரூபணமாகி உள்ளது. கருத்து மக்களைப் பற்றிக்கொண்டால் சக்தியாக உருவெடுக்கும் என்பதில்தானே நாம் நம்பிக்கை கொண்டிருந்தோம்.

நாம் சந்திக்கும் நேரங்கள் தோறும் அரசியல் தத்துவார்த்த விவாதங்களில் ஈடுபட்டது நினைவிருக்கும் என்று நம்புகின்றேன்.

'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதும்.' என்ற பட்டறிவைச் சிலப்பதிகாரப் புலவன் காலத்தது எனத் தள்ளிவிட முடியுமா?

வரலாறு சுழல்கின்றது.



படிப்பகம்

padippakam

**02** ***1992***ல் வெளிவந்த எனது முகம் கொள் கவிதைத்தொகுதி நினைவுண்டா? நண்பர்களே நீங்கள் படித்திருப்பீர்கள் என்றே நம்புகிறேன்.

அதில் நான் நண்பனுக்கு எனத் தலைப்பில் ஒரு கவிதை எழுதியிருந்தேன். சற்றே நீளமான அக்கவிதையின் நறுக்கொன்றைத் தருகிறேன் படித்துப்பாருங்கள்.

**'.. நீயும் நானும் மரித்துப் போனவனும்**
**மரக்கலத்தில்**
**பயணித்த நதி**

**சேருமிடம் கடலென்று**
**நான் சேர்ந்தது**
**குழம்பிய குட்டை.**

**அது தெரிந்தாயிற்று.**

**வழிகாட்டியாய்த்**
**துப்பாக்கிகள்**
**வெள்ளி முளைக்காத**
**இருட்திசையில்..**
**மீன்களும் உன்பறியில்**
**துடுப்பும் உன்கையில்**
**வலித்தபடி நீ...**

**நதி ஒதுக்கிய உயிர் ஜீவிகள் காத்திருக்கின்றன.**
**உந்தன் கனவிடம்**
**கடலிடந்தானா குளங்குட்டையா என...'**

இப்படியே நீண்டு செல்லும் அக்கவிதை. யாரந்த நண்பனாக இருக்கும்?

மீளவும் ஒருதடவை அக்கவிதையை முழுமையாகப் படித்துப் பாருங்கள். நமது இருப்பு குளம், குட்டையாக இருந்தால்கூட அரசியல் உயிர் வாழ்க்கைக்குப் போதுமானதாக இருந்திருக்கலாம்.

ஆனால் நமது தற்போதைய இருப்பு என்பதே சுடுமணலில் வீசப்பட்ட மீன்கள் போலல்லவா ஆகிவிட்டது.

இன்னுயிர் ஈந்தோரின், படுகொலையானோரின், உறவுகள் இழந்தோரின், உடலுறுப்புகள் ஊனமுற்றோரின், முகாம்களுக்குள் முடக்கப்பட்டு கையேந்தி நிற்போரின், சோகத்தை, சுமையை எவ்வாறு ஈடுசெய்வது.



படிப்பகம்

padippakam

அங்கே மனித குலத்திற்கு எதிராக நடக்க கூடாத எல்லாமே நடந்தேறின நண்பர்களே.

நவீன வரலாற்றில் இப்படி எங்குமே நிகழ்ந்திருக்குமா?

பாருங்கள் தமிழர்கள் தலையில் வந்து எப்படி விடிந்திருக்கின்றதென்று.

நமது நண்பர் தேழர் பாலகுமார் காயமடைந்துள்ளார். விசாரணையின்போது அவரை எப்படி நடத்தியிருக்கும் சிறிலங்கா இராணுவம்.

அவரது மகள் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றார். ஒருவரை ஒருவர் பார்க்கமுடியாத இடங்களில் அவர்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றனர்.

குடும்பம் மட்டுமல்ல வாழ்வும் குலைந்து போயுள்ளது.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைக் காட்டவே பலராலும் அறியப்பட்ட முகமான பாலகுமார் குடும்பத்தை இங்கே சுட்டினேன். இப்படியே ஒரு சமூகம் முழந்தாளில் இருத்தப்பட்டுள்ளது. எமது இருப்பு இன்னும் பல கசப்பான உண்மைகளைக் கொண்டிருக்கின்றது என்பதை நாம் ஏற்றாக வேண்டும். எதிர்கொண்டாக வேண்டும்.

அதற்காக எந்தக் கனவிற்காக, எந்த நம்பிக்கைக்காக, எந்த உரிமைக்காக, இத்தகைய பேரவலத்தை இந்தச் சமூகம் சந்தித்ததோ அவற்றை நாம் கைவிட்டுவிட முடியுமா?

பற்றற்று, வேதாந்தம் பேசி ஒதுங்கித்தான் செல்ல முடியுமா? ஆயுதபலம் மிக்கவர்களே தோற்றுவிட்டார்களே என்பதற்காக நாமும் வாளாவிருக்க முடியுமா?.

அரசியல் போராட்டத்திற்கு ஆயுதம் அல்லாத வழிமுறைகளும் உண்டல்லவா?

மூன்றாம் கட்டத்துள் நுழைந்திருக்கும் ஈழப்போராட்டம் நிச்சயம் ஆயுதத்தை முன்னிறுத்திச் செல்லாது என்றே நம்புகிறேன்.



படிப்பகம்

padippakam

# 03 நண்பர்களே!

ஈழத் தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கை விடுதலைப் புலிகளுடன் தோன்றியதொன்றல்ல, அவர்களுடனேயே அழிந்து போவதற்கு. அஞ்சலோட்ட தொடரொன்றில் அவர்களும் அந்த நெருப்பேந்தி ஓடினார்கள். இனியும் அந்த அஞ்சலோட்டம் தொடரும். நம்பணி அதுவாகத்தான் இருக்க வேண்டும். நண்பர்களே அண்மையில் ஆழி இதழிற்கு மின்னஞ்சல் வழியாக நான் வழங்கிய நேர்காணலை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

"சிறிலங்காவுடன் உலகமும் ஒன்றாகத் திரண்டுதான் முறியடித்தன என்பதை மறந்துவிடாதீர்கள்" என்ற தலைப்பில் வெளிவந்த அந்த நேர்காணல் எனது இருப்பையும் விருப்பையும் கோடிட்டு காட்டும் என்று நம்புகின்றேன்.

**01. நினைத்துக்கூட பார்க்கமுடியாத சோகத்தாலும் துயரத்தாலும் தமிழர்கள் மூழ்கியிருக்கும் தருணம் இது. நாமறிந்த வரலாற்றில் தமிழ்இனம் இப்படியொரு கடும்சிக்கலில் சிக்கிக்கொண்டதாகத் தோன்ற வில்லை. கறுப்பு யூலைக்கு எவ்விதத்திலும் குறையாத, அதனினும் கொடூரமான இனப்படுகொலையை நாம் சந்தித்திருக் கிறோம். ஆனால் உலகம் கிட்டத்தட்ட நமக்கு எதிராக, நம்மை அலட்சியப்படுத்திச் சென்று கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. ஈழமக்கள் இதை – ஈழத்திலும் சரி, புலம்பெயர்ந்த தேசங்களிலும் சரி– எவ்வாறு எதிர்கொண்டிருக்கிறார்கள்?**

எல்லோருமே அதிர்ச்சியிலும் திகைப்பிலும் உறைந்து போயுள் ளார்கள். ஈழத்தில் இருந்து சிறுமுனகல் கூட வெளிவர வாய்ப்பில்லை. அவர்களது குரல்வளை முற்றாக நசுக்கப்பட்ட நிலையில் முழந்தாளில் இருத்தப்பட்டுள்ளார்கள். ஈழத்தமிழர் என்னும் ஒரு தரப்பே இல்லையென்ற அரசியல் இராணுவ நிகழ்ச்சி நிரலை செயல்படுத்துவதில் சிறிலங்கா வேகமான அக்கறை செலுத்துகின்றது. படுகொலைகளை விடவும் அபாயகரமான கட்டத்தை நாம் எதிர்கொள்ள வேண்டியவர் களாக உள்ளோம். வென்றவர்களின் வல்லாட்சிகள் எங்கும் இப்படித்தானே. புலம்பெயர்ந்த தேசங்களில் வாழ்வோர் இன்னமும் மண்ணில் கால்பதிக்க அதாவது தற்போதைய கசப்பான உண்மையைத் தரிசிக்க தயாரில்லை. அவர்கள் உண்மைகளுக்கு அருகே செல்ல விருப் பமின்றி சர்ச்சைகளில் மூழ்கிக் கிடக்கிறார்கள். அவர்கள் தெளிவுபெற நாளெடுக்கும் என்றே நம்புகிறேன். ஆனால் அவர்கள் தெளிவு பெறும்போது களநிலை இவர்கள் கைக்கெட்டாத தொலைவில் சென்றுவிடவும் கூடும்.



படிப்பகம்

padippakam

**02. எத்தகைய உலக அரசியலில் ஈழப் பிரச்சினை சிக்கிக் கொண்டிருக்கிறது? மேற்குலகமோ சர்வதேச சமூகமோ ஈழம் தொடர்பாக என்ன நிலையைத்தான் மேற்கொண்டிருக்கிறது?**

ஈழப்பிரச்சனை என்பது இந்துமாக்கடலின் கேந்திரமைய பிரச்சனைக்குள் சிக்குண்டிருக்கின்றது. இலங்கைத் தீவு இந்திய துணைக்கண்டத்தின் கீழ் முனையில் அமைந்துள்ளதும், இந்துமாக்கடலின் கடல்பாதையில் தனித்திலங்குவதும், விழித்தெழுந்த பூதமாக சீனாவின் கரங்கள் இந்துமாக்கடலுள் விரிந்து வருவதும் ஈழப்பிரச்சனையைச் சிக்கலாக்கி உள்ளது. மேற்குலகத்திற்கோ அல்லது சர்வதேச சமூகத்திற்கோ ஈழப் போராட்டத்தினை ஆயுதவழியில் முன்னெடுத்தவர்களின் சில வழிமுறைகள் ஏற்புடையதொன்றாக இருக்கவில்லை. அதாவது உலகின் தேசிய இனப்பிரச்சனைக்கான முன்மாதிரியாக இவை அமைந்துவிடக்கூடாது என்பதில் இவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். இவர்கள் அனைவரும் சேர்ந்தே ஈழத்திற்கான இந்த ஆயுதப்போராட்டத்தை முறியடித்தார்கள். ஈழத்தமிழர்களின் இனப்படுகொலையில் இவர்களின் கைகளும் நனைந்துள்ளன. ஆனால் இவர்களின் தேசங்களில் ஈழத்தமிழர் புலம்பெயர் சமூகமாக வாழ்வதால் தங்களது 'மனிதஉரிமை' முகத்தை அவர்கள் கண்டுவிடுவார்களே என சற்று நெளியவைத்துள்ளது அவ்வளவுதான். இப்போது தாங்கள் மனித உரிமையை மதிப்பவர்கள் என நிரூபிக்க முயல்கிறார்கள்.

**03. ஸ்ரீலங்கா அரசுக்கு ஆதரவான ஐ.நா மனித உரிமை கவுன்சில் தீர்மானம் எதை நிரூபிக்கிறது?**

நீதி நியாயம் கிலோவுக்கு என்ன விலையென கூறுபோட்டு விற்கப்படும் பொருளாகிவிட்டதே என்ற சந்தேகத்தையே ஏற்படுத்துகின்றது. வேறெந்த போராட்டத்தையும்விட ஈழப்போராட்டம் சர்வதேசத்தின் முகமூடியைக் கிழித்துவிட்டுள்ளது. கிழக்கு மேற்கு என்ற பிரிப்பில் மேலைத்தேசம் பலவீனமுற்றிருப்பதைக் காட்டுகின்றது. அதாவது உலக ஒழுங்கின் மாற்றத்தைக் குறித்து நிற்கின்றது.

**04. விடுதலைப்புலிகள் கடந்த காலங்களில் மேற்கொண்டிருந்த சர்வதேச அரசியற் செயற்பாடுகளும் ஈழ மக்கள் மேற்கொண்டிருந்த சர்வதேச அரசியல் செயற்பாடுகளும் என்ன ஆயின?**

சர்வதேச அரசியல் செயல்பாடுகள் என்பது பல்வகைப்பட்டது. இராஜதந்திரச் செயற்பாடு அவற்றில் முக்கியமானது.

சர்வதேச செயற்பாடுகளில் இராஜதந்திர முன்னெடுப்புகள் அன்ரன் பாலசிங்கத்தின் மறைவுக்குப் பின்னால் வெற்றிடத்தைத் தோற்றுவித்திருந்தது. அதனை நிரப்ப வேண்டுமென்ற கவலை எங்களிடம் இருக்கவில்லை. புலம்பெயர் தமிழர்கள் சர்வதேச செயற்பாடுகளில்



படிப்பகம்

padippakam

பங்கேற்கும் வழிவகையைப் போராடும் அமைப்பின் பிரதிநிதிகள் சரிவர ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. பரந்த தளத்தையும் கட்டியமைக்கவில்லை. அதனால் புலம்பெயர் தமிழர்கள் உரிய காலத்தில் தம் கடமைகளை மேற்கொள்ள முடியவில்லை என்பது வருத்தத்திற்குரியது.

**05. மகிந்த அரசு ஆட்சிக்கு வந்த போதிலிருந்தே நிலைமை மாறிக்கொண்டிருக்கிறது என்பதை புலிகளோ பிற ஈழ விடுதலை ஆதரவாளர்களோ புரிந்துகொண்டிருந்தார்களா?**

மகிந்த குழுவினர் மிகப்பெரிய இராஜதந்திர வெற்றியை ஓரிரு மாதங்களில் பெற்றிருப்பார்கள் என்று சொல்லமுடியவில்லை. அது மிக நீண்டகாலமாக வகுக்கப்பட்ட ராஜதந்திர, ராணுவபுலனாய்வு திட்டங்களின் வெற்றியாகத்தான் தெரிகிறது.

**06. இதில் சிங்கள சக்திகளின் வியூகத்தை உலகெங்கும் உள்ள தமிழர்களால் ஏன் முன்னறிந்திருக்கவோ, அறிந்திருந்தால் முறியடிக் கவோ முடியவில்லை? எட்டுத்திக்கும் மதயானைகள் என்று ஒரு முறை நீங்கள் ஈழத்தமிழர்களின் உலகப்பரவலை வர்ணித்தீர்கள். புரிந்து கொண்டிருந்தால் இன்றைய இந்நிலைமை வேறு முடிவுகளைக் காட்டியிருக்கும்.**

ஈழத்தமிழர்கள், கடந்தகால வெற்றிக்களிப்பில் மூழ்கிக்கிடக்க சிறிலங்காவோ தனது வெற்றிக்காக மிகநுட்பமாக திட்டமிட்டது. உலக நாடுகளிடையேயான முரண்பாடுகளைத் திறமையுடன் கையாண்டார்கள். குறிப்பாக தமது இராஜதந்திர காய்நகர்த்தலில் தங்களது 2500 ஆண்டுகால முதிர்ச்சியை அவர்கள் பெற்றிருந்தார்கள். எங்களிடம் இராஜதந்திர பாரம்பரியம் முதிர்ச்சி பெற்றிருக்கவில்லை. போராட்ட வழிமுறைக்குள் அரசியலையும் நாம் சரிவிகிதத்தில் இணைக்கவில்லை. அதாவது ஒற்றைச் சக்கர வண்டியையே ஓட்டிக்கொண்டிருந்தோம்.

எட்டுத்திக்கும் மதயானைகள் என்பது உண்மைதான். ஆனால் அடம்பன் கொடியும் திரண்டால்தானே மிடுக்கு.

**07.இந்தியாவின் பங்கு எதிர்பார்த்ததைவிட எதிர்மறை யாகவே இருந்திருக்கிறது? புலம்பெயர் ஈழ மக்கள் மத்தியில் இது எப்படிப்பட்ட எதிர்வினையை ஆற்றியிருக்கிறது? தமிழகத்தின் எதிர்வினை குறித்தும் அவர்கள் கருதுவதென்ன?**

இந்திய ஆளும் வர்க்கம் ஒரு பழிவாங்கும் அரசியலையே அரங்கேற்றியது. இது உலகத் தமிழ்ச்சமூகத்தின் கூட்டுநினைவில் பதிவாகி விட்ட ஒன்று. பழிவாங்குதலுக்கு ஒரு இனப்படுகொலையையே இந்திய ஆளும் வர்க்கம் நிகழ்த்தியிருக்கின்றது என்ற குற்றச்சாட்டையே எம்மால் முன்வைக்க முடியும். இந்திய குடிமக்களாகிய தமிழ்நாட்டு மக்களையும்கூட இந்திய ஆளும் வர்க்கம் புறக்கணித்துள்ளது. வஞ்சித்துள்ளது.



படிப்பகம்

padippakam

உண்மையில் தமிழ்நாடு தனது பங்களிப்பைச் சிறப்பாகவே வழங்கியது. ஆனால் எப்போதும் தமிழர்கள் கோட்டைவிடுவது மூலோபாயத்திலும் இராஜதந்திரத்திலுமே. தமிழ்நாட்டு எழுச்சியிலும் அது வெளிப்பட்டது. உணர்ச்சிக் கொந்தளிப்பு செயற்பாட்டு திறனைக் கொண்டிருப்பதில்லை.உ

**08. கடந்த சில மாதங்களில் அமெரிக்காவின் பங்கு இதில் எவ்வாறு இருந்தது? ஒபாமா-ஹில்லாரி ஆகியோர் இந்தப் பிரச்னையைப் புரிந்துகொண்டிருந்தார்களா?**

அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலில் அவர்களது உள்ளகப் பிரச்சனைகள் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தன. அவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் எமது போராடும் அமைப்பும் புலம்பெயர் தமிழர்களும் செய்திப்பரிமாற்றம் எதனையும் சரிவர வழங்கியிருக்க வில்லை என்றே கருதுகிறேன். நாங்கள் பெருந்திரளாக தெருவில் இறங்கியிருந்தோம் ஆனால் உள்ளகமாக அவர்களை நாங்கள் நெருங்கவில்லை. முதலே சொல்லியுள்ளேன் இராஜதந்திர செயற்பாட்டில் நாம் குறைபாடுகளைக் கொண்டிருந்தோம்.

**09. சீனா, ரஷ்யா, க்யூபா போன்ற முன்னாள், இன்னாள் சோஷலிச நாடுகள் ஏன் ஒரு இனவாத அரசுக்காக சர்வதேச அளவில் வரிந்து கட்டிக்கொண்டு நின்றன? இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள மையநீரோட்ட இடதுசாரிகளும் அவர்களது மேட்டிமை நண்பர்களும் எவ்வாறு மகிந்தவின் எடுபிடிகளானார்கள்?**

இது மகிந்தவின் சாதுரியம்தான். அவர் அரசியலின் தொடக்காலத்தில் சோசலிசவாதி மனிதஉரிமைவாதி என்ற முகம் கெண்டவராகத்தான் தன்னை அறிமுகப்படுத்தியிருந்தார். அத்துடன் தனது அரசின் தூதுவர்களாக ஆலோசகர்களாக சிங்களத்தின் சிறந்த இராஜதந்திரிகளை, புலமையாளர்களைப் பயன்படுத்தினார். இலங்கையின் அமைவிடம் காரணமாகவும், அத்துடன் தமது உள்ளகச் சிக்கல்கள் காரணமாகவும் (சீனாவுக்கு தீபெத், இரஷ்யாவிற்கு சேர்ச்சினியா) இந்த நாடுகள் சிறிலங்கா அரசிற்கு ஆதரவாக இருந்தன. இந்திய இடதுசாரிகள் எல்லோரையும் நான் அப்படி சொல்ல மாட்டேன். அதுவும் கூட பணிகளை விரிவுபடுத்தாத ஈழபோராளிகளதும் தமிழ்நாட்டு கூட்டாளிகளதும் குறைபாடாகவே கொள்வேன்.

**10. பாலஸ்தீனம், காஷ்மீர், திபெத், கொசாவா என்று வரும் போதெல்லாம் மனித உரிமைகளுக்காக நிற்கும் உலகளாவிய அறிவுஜீவி வர்க்கம் இப்போது எங்கே போனது?**

உலகளாவிய அறிவுஜீவிகளை விட எமது தமிழ் அறிவுஜீவிகள் என்னவானார்கள் என்ற கேள்வியைத்தான் நாம் எழுப்ப வேண்டும். ஈழப்போராட்டம் அவர்களை வென்றெடுக்க தவறிவிட்டது. அறிந்தவர்களும் மௌனம் காத்தார்கள்.



படிப்பகம்

padippakam

**11. தேசிய இனப்பிரச்னை என்றாலே இனி அவ்வளவுதானா? தமக்கு மிகப்பெரிய பின்புலமில்லாத தேசிய இனங்கள் அடிமைவாழ்வுக்குப் பழக்கப்பட்டுப்போவதுதானா?**

ஈழப்போராட்டம் பல அசாத்தியங்களைச் சாத்தியமாக்கி காட்டியிருக்கின்றது என்றே நம்புகிறேன். தற்போதைய நிலையை போராட்டத்தின் முடிவு என நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். இலங்கைத்தீவு சுதந்திரமடைந்த 1948இல் இருந்து 1976ஆம் ஆண்டு திரு. சா.ஜே.வே செல்வநாயகம் தலைமையில் வெளியிடப்பட்ட வட்டுக்கோட்டை பிரகடனம் வரை ஒரு கட்டமும், எங்கள் ஆயுதங்கள் மௌனிக்கப்படுகின்றன என்ற செல்வராசா பத்தமநாதனின் அறிக்கை வெளிவந்த 2009 மேமாதம் வரையானது இரண்டாம் கட்டமுமாகும். தற்போது மூன்றாம் கட்டத்திற்கான நுழைவாயிலில் நிற்கின்றோம் என்றே நான் கருதுகின்றேன். இன்னமும் திறக்கப்படாத பல வெளிகள் இருக்கின்றன என்றும் நம்புகிறேன். சின்னஞ்சிறு தேசிய சமூகமான எங்களை சிறிலங்காவுடன் அசுரபலம்கொண்ட உலகமும் ஒன்றாக திரண்டுதான் முறியடித்தன என்பதை மறந்துவிடாதீர்கள். நமக்கு நண்பர்களும் இல்லாமல் போனார்கள். ஆம் நமக்கான பின்புலத்தைக் கட்டவில்லை என்பது உண்மைதான். உலகத் தமிழ்ச் சமூகம் தனது பலத்தைச் சரியாகப் பயன்படுத்தவில்லை என்பதும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டியதே.

**12. முற்றிலும் புதியதொரு அத்தியாயத்தை நோக்கி நாம் செல்கிறோம். இனி ஈழ விடுதலைப்போராட்டத்தின் எதிர்காலம் என்ன? அதன் முன்னுரிமைகள் என்ன? அரசியல் வழிமுறை என்ன?**

நாங்கள் குறுகிய காலத்தில் எமது இலக்கை எட்ட முயற்சித்தோம். அதற்காக செங்குத்தான ஏணியில் ஏறினோம். அதேவேளையில் ஏணியின் அடித்தளமும் அகப்புறக் காரணிகளும் பலமானதா என்பதை கவனத்தில் கெள்ளவில்லை. ஆதலால் இன்றைய முடிவை நாம் அடைய வேண்டியதாயிற்று. இப்போது தஞ்சாவூர் கோயில் கோபுரத்தின் உச்சிக்கு அந்த வட்டக்கல்லை கொண்டு சேர்த்த சாய்வக உத்தியைப் பயன்படுத்த வேண்டும் என்ற பட்டறிவு எமக்கு கிடைத்துள்ளது. காலம் சற்று நீண்டு செல்லும்தான். இருந்தாலும் இலக்கை நாம் அடையலாம். பொதுத் திட்டம் ஒன்றின்கீழ் அனைவரும் இணைவதும் பங்கேற்பதுமே இதனைச் சாத்தியப்படுத்தும்.

மீட்டெடுத்தல் என்பதே தற்போது முன்னுரிமை பிரச்சினையாக உள்ளது. எல்லாவகையான மீட்டெடுத்தலையும் நான் குறிக்கிறேன். உடலியல் உளவியல் வாழ்வியல் பொருளியல் அரசியல் என பல முனை கொண்ட மீட்டெடுப்பு இப்போது தேவை.



படிப்பகம்

padippakam

நம்பகம், ஜனநாயகம், வெளிப்படை, இராஜதந்திரம் என்பவையே எமது எதிர்கால அரசியல் போராட்ட வழிமுறைகளாக இருக்க முடியும்.

**13. மகிந்த ராசபக்சேவும் அவரது கூட்டாளிகளையும் போர் குற்றவாளிகளாக நிலைநிறுத்துவதற்கான போராட்டத்தை எவ்வாறு தொடரமுடியும்?**

புலம்பெயர் தமிழ்ச் சமூகம் தம்மை ஒரு தரப்பாக நிறுவும்போது ஒரே நிகழ்ச்சி நிரலில் பணிகளைத் தொடங்கும் போது இப்படி இன்னும் பல போராட்டங்களை முன்னெடுக்க முடியும். எல்லாம் திட்டமிடலிலும் ஒருங்கிணைப்பிலும் தங்கியுள்ளது.

**14. தமிழக தமிழர்கள் இனி என்ன செய்யவேண்டும்? இந்தியா எத்தகைய நிலைப்பாட்டை எடுக்கும்படி அவர்கள் வற்புறுத்தவேண்டும்?**

தமிழ்நாட்டு தமிழர்கள் முதலில் வடவேங்கடம் தென்குமரியாயிடை தமிழ்கூறு நல்லுலகம் என்னும் கருத்தாக்கத்தில் இருந்து வெளிவர வேண்டும். அப்போதுதான் தங்கள் வகிபாகத்தை அவர்கள் அறிய முடியும். தமிழ்நாட்டு மக்கள் தங்கள் பலத்தை அறியாதிருக்கிறார்கள். தமிழ்கூறு நல்லுலகின் எல்லை விரிவையும், பரப்பையும் காணத் தவறியுள்ளார்கள். பூகோளப் பார்வையையும், தலைமைப் பண்பினையும் அவர்கள் இழந்து நிற்கிறார்கள். நம்பகமும் நேர்மையும் அரசியல் சாணக்கியமும் விரிந்த பார்வையும் தன்னல மறுப்பும் கொண்ட தலைமை ஒன்று அவசியம் தமிழ்நாட்டில் கட்டியெழுப்பப்பட்டாக வேண்டும். அது அமைந்தால் மிகுதியெல்லாம் நலமே.

இந்தத் தேர்தலின்போது தமிழ்நாட்டின் பிரதான எதிர்க்கட்சிகள் ஈழத்தமிழர் பிரச்சனையில் ஒரே புள்ளியில் இணைந்துள்ளதைக் காணமுடிந்தது. இது ஒரு நல்ல அறிகுறி. இப்போது தமிழ்நாட்டு சட்ட சபையில் ஈழத்தமிழரின் அரசியல் விருப்பான சுயநிர்ணயத்தை ஆதரித்து ஒரு தீமானத்தை நிறைவேற்ற முடியும். இது நிறைவேற்றப்பட்டால் ஈழத்தமிழருக்கான சர்வதேசங்களின் அரசியல் தீர்வு முன்னெடுப்புக்கு மிகப்பெரிய அளவில் வலுச்சேர்ப்பதாக அமையும்.

இந்நேர்காணலில் உள்ளவற்றில் பலதும் நமக்குள்ளான உரை யாடலை தொடக்கி வைக்க உதவும் என்றே நம்புகிறேன்.

ஜனநாயகம் வெளிப்படை என்பவையே நமது அடிப்படைகளாக மாறவேண்டும்.

ஜனநாயகம் என இங்கு நான் குறிப்பது வெறும் தேர்தல் ஜனநாயகத்தை அல்ல.

நமது உளப் பண்பாட்டையே ஜனநாயகமாக்குதல்.



படிப்பகம்

padippakam

## 04 நண்பர்களே!

நமது விருப்பு புதியதொன்றல்ல. நாம் சந்தித்துக்கொண்ட நாள்முதல் அந்த விருப்புக்கான வழிமுறைகளைப் பற்றியே உரையாடி வந்துள்ளோம். இன்றும் நம் நெஞ்சில் அதுவே எரிந்த வண்ணம் உள்ளது. முத்துக்குமார் உள்ளிட்டோர் எரிந்ததும் அதற்காகத்தான்.

முத்துக்குமாரிடம் அது தெளிவாகவே வெளிப்பட்டது.

அதே வேளையில் இன்றைய இருப்புக்கும் விருப்புக்குமான இடை வெளியை எப்படி நிரப்புவது என்பதே தற்போது நம்முன்னே உள்ள சவால்.

அதாவது நம்முன்னுள்ள சவால்கள் அல்லது அசாத்தியங்கள் என்ன என்பதை அடையாளம் காணவேண்டும். அப்போதுதான் நாம் மீள்வதற்கான தெரிவுகளைக் கண்டடையலாம்.

அவற்றைக் கண்டடைய நாம் அவசரப்படத் தேவையில்லை. நின்று நிதானித்து முடிவெடுக்கலாம். முன்னேறிச் செல்லலாம்.

அந்தவகையில் மூன்று தெரிவுகள் நம்முன்னுள்ளன.

முதலாவது சரணடைதலை ஏற்றுக்கெண்டு அதாவது சிறிலங்காவின் வெற்றியை அங்கீகரித்து அப்படியே முகமிழந்து போதல்.

இரண்டாவது எல்லோர் மேலும் வெறுப்புக்கொண்ட அடிப்படைவாதிகளாய், அந்நியப்பட்டவர்களாய் அதாவது நம்முள் மாற்றம் எதனையும் நிகழ்த்தாதவர்களாய் அழிந்து போதல்.

மூன்றாவது இருப்பை கணக்கெடுத்து மாற்றுத் தெரிவுகளுக்கு ஊடாக புதிய பரிமாணத்திற்கு அதாவது சர்வதேசச் சமூகத்திற்கான மொழியூடாக போராட்டத்தை நகர்த்துதல். இலக்கை எட்டுதல்.

நண்பர்களே முதலிரண்டையும் நாம் எப்படி ஏற்றுக்கெள்வது? மூன்றாம் வழியைத்தான் நாம் தேர்ந்தெடுக்க முடியும்.

இதில் மாற்றுக் கருத்து நமக்குள் இருக்காது என்று நினைக்கிறேன்.

நமக்குப் பொருத்தமான ஒரு உதாரணத்தையும் கவனத்தில் கொள்ளலாம்.

அதாவது நாம் யப்பானை கவனத்தில் கொள்ளலாம். இரண்டாம் உலகப்போரில் மேலைத்தேச இராணுவக் கூட்டுப்படைகளினால் யப்பான் தண்டிக்கப்பட்டது. அத்துடன் ஐம்பது ஆண்டுகளுக்கு இராணுவக் கட்டமைப்பு எதனையும் கொண்டிருக்கக் கூடாது என்றும் நிர்ப்பந்திக்கப்பட்டது. ஆனால் இன்றைய யப்பானை ஒரு தடவை பாருங்கள். உலகின் எட்டு பணக்கார நாடுகளில் யப்பானும் ஒன்று.

ஆனால் அவர்களிடம் நாடு இருந்தது. எம்மிடம் இல்லை. உண்மைதான்.



படிப்பகம்

padippakam

ஆனால் புலம்பெயர்ந்த ஒரு மில்லியன் ஈழத்தமிழ் மக்கள் சர்வதேசமெங்கும் வாழ்கிறார்கள். ஈழப்போராட்டம் இன்று ஈழத்தமிழர்களின் கைகளில் இருந்து புலம்பெயர் தமிழர்களின் குறிப்பாக உங்களையும் உள்ளிட்டதான உலகத் தமிழர்களின் கைகளுக்கு மாற்றப்பட்டுள்ளது.

இதற்கு முன்னான ஈழத்தமிழர் அவலங்கள் அதாவது 1958, 1977,1983, போன்றதான இனப்படுகொலைகள் ஊடகத் தெழில்நுட்பம் வளராத காலங்களில் இடம்பெற்றவை. அவைபற்றிய வெறும் செய்திகள்தான் நம்மிடம் வந்து சேர்ந்தன. ஆனால் 2009ல் நிகழ்ந்த இனவழிப்பானது காட்சி வடிவில் நம்மிடம் வந்து சேர்ந்துள்ளது. இளந்தலை முறையினரின் கூட்டு நினைவில் அது வடுவாக படிந்துவிட்டுள்ளது. ஆம் அல்லலுற்று ஆற்றாது அழுத மக்களின் அவலக்குரல் தலைமுறை தலைமுறையாக எம்மெல்லோரையும் துரத்திக்கெண்டே இருக்கப் போகின்றது.

அதிக இடைவெளி கொண்ட நம் இருப்பையும் விருப்பையும் எந்த புள்ளியில் இணைப்பது என்பதிலேயே நமது போராட்டத்தின் வெற்றி உள்ளது.

அசாத்தியங்களைச் சாத்தியமாக்குவதுதான் போராட்டம்.

இனி நீங்களும் நாமும் வேறுவேறல்ல..

நட்புடனும் தோழமையுடனும்

**கி.பி.அரவிந்தன்**

05-06-2009



படிப்பகம்

padippakam

# ஒற்றுமையை ஓதுவோருக்கு....

**01** *நண்பர்களே!*

'நான் எதையெல்லாம்
உங்களில் தொற்ற வைத்தேன்?
நீங்கள் எவற்றையெல்லாம்
எடுத்துக் கொண்டீர்?'
நான் அறியேன்.

இப்போதெல்லாம் உங்களிடமிருந்து வரும் தொலைபேசி அழைப்புகள், மின்னஞ்சல்கள் கொஞ்சம் அதிகம்தான். என்றன் நினைவரங்கில் நிழல்களாய் உறைந்து கிடந்த உங்களில் பலரின் முகங்களெல்லாம் ஒளிபெற்றிருப்பதும் மகிழ்ச்சியாக இருக்கின்றது.

அதேவேளையில் உங்கள் உரையாடல்களில் நம்பிக்கைத் தொனி இழையோர்டி இருந்ததையும் நான் கவனித்தேன்.

அதனை விடவும் உங்கள் குழந்தைகள் வாஞ்சையுடன் என்னை உறவு சொல்லி அழைத்து விளக்கம் கேட்பதையும்,



படிப்பகம்

என்னுடன் நட்பு கொள்ள விரும்புவதையும், நான் அங்கிருந்த அப்போதைய காலத்தில் தாங்களும் என்னுடன் நட்புகொள்ளும் வயதினராக இல்லையே என ஏக்கம் தெரிவித்தையும் நம் தோழமைப் பணிகளுக்குக் கிடைத்த மரியாதையாகவே கருதுகின்றேன்.

அந்நாட்களில், 'காவிரிப் படுகையிலும்

வைகைக்கரை நெடுகிலும்

கரிசல் மண் காட்டிலும்

என்னுடன் அலைகையில்

எதை நீர் விதைத்தீர்?'

மீளவும் ஒருதடவை இப்போது நினைத்துப் பார்க்கிறேன்.

நாம் விதைத்தது நட்பும் தோழமையும் மட்டும்தானா?

இன்றைக்கும் இத்தனை தெளிவாக எழுச்சியாக நீங்கள் ஓங்கி குரலெழுப்புவது அவற்றின் வலிமையைத்தான் வெளிப்படுத்துகின்றது.

'சொல்லிக்காட்டவா நீங்கள் சோறு போட்டீர்கள்?' என்று எனது தோழன் பாமரன் கேள்வி எழுப்பி ஈழத்தமிழர்களுக்கு உகந்தது எதுவென்றும் விளக்கம் அளிக்கிறான்.

'தொடரும் தனிமையும் நூற்றாண்டு துயரமும்' என்று இன்னுமொரு தோழன் பொன்னிலா தமிழ்நாட்டு அரசியல் தலைமையின் நாணயத்தை அக்குவேறு ஆணிவேறாக அலசுகிறான்.

ஈழப்பிரச்சனையை யாரும் திசைதிருப்பி விடமுடியாது என்பதற்கு இவை சாட்சியமாகின்றன. தமிழ்நாட்டை இனியும் எந்தக் கொம்பனாலும் ஏமாற்ற முடியாது என்ற நம்பிக்கையையும் அளிக்கின்றன.

நண்பர்களே!

உங்களுடனான உரையாடலை தொடரவே நான் விரும்புகிறேன்.

நம் நட்பை தோழமையை அறுத்துவிட வேண்டுமென்பதில் திரைமறைவு முயற்சிகள் நடைபெறுகின்றனவோ என நான் சந்தேகிக்கிறேன். அதற்குத் தமிழ்நாட்டு அரசியல் தலைமையும் துணைபோகின்றதோ என்ற சந்தேகமும் கூடவே என்னுள் எழுவதையும் தடுக்க முடியவில்லை.

உங்களுக்கே விளக்கம் அளிக்கும் வகையில் ஈழத்தமிழர்கள் ஒற்றுமையாக இல்லை என்று ஆட்சி அதிகாரத்தில் இருந்து ஒலித்த குரல் கேட்டு அதிர்ச்சி அடைந்தேன்.

இதுதான் முதல் தடவை என்றால் நான் பொருட்படுத்தி இருக்க

padippakam

மாட்டேன். ஆனால் இதற்கு முன்னரும் இப்படி நஞ்சு தடவிய இக்குரலைக் கேட்டிருக்கிறேன். இதனை மேலும் அனுமதித்தால் பொய்யுரைகளும், சாணக்கிய உத்திகளும், அடுக்குமொழி அலங்காரங்களும் உண்மைபோல் ஆகிவிடும். வரலாற்றிலும் பதிவாகிவிடும்.

இப்படி வரலாறானவை பல.

இந்தக் குரல் கேட்டு நீங்களும் கொதித்திருப்பீர்கள்.

பின்னர் சாத்தான் ஓதும் வேதம் போன்றே ஒற்றுமை பற்றிய இவ்வகை உரைகளுக்கும் பதிலிறுக்க தேவையில்லை என்று ஒதுக்கியிருப்பீர்கள்.

எந்த நேரத்தில் எதைக்கதைப்பது என்ற நாகரிகம் தெரியாத சாணக்கியம், குயுக்தி, அரசியல் ஒரு தலைமைக்கு ஏற்றதொன்றல்ல.

வரலாறு இக்குணம் கொண்டோரை இத்தனை காலம் ஏன் வாழ்ந்தார்கள் என்றே பதிவு செய்யும்.

தமக்கான நெஞ்சுக்கு நீதியை அவரவரே எழுதிக்கொள்வர்.

நண்பர்களே! 'பருத்தி வெடித்தால் தறியினில் நெய்யலாம்

கரும்பு விளைந்தால் ஆலையில் பிழியலாம்

கம்பு பயிரானால் கூழ்காய்ச்சிக் குடிக்கலாம்

கூட்டு நினைவினில் பயிராகி வளர்ந்தவை

ஆறாத் துயரென்றால்...?

கருத்துக்கள் பற்றிக் கொள்ளும்.'

ஆம் நம் நட்பின் தோழமையின் கூட்டு நினைவுகளில் வளர்பவை பற்றி அதிகார வர்க்கத்தால், ஆட்சிக் கதிரைகளில் அமர்ந்திருப் பவர்களால் அறிய முடியாது.

துரோகங்களால் அவற்றை முறியடிக்கவும் முடியாது.

## 02 ஒற்றுமை வேறு, ஒன்றுபடுதல் வேறு.

ஒற்றுமை என்பது ஒன்றுபோல் மற்றொன்றும் இருத்தல்.

ஒன்றுபடுதல் என்பது வேற்றுமையிலும் ஒரு இலக்குக்காய் இணைதல்.

உலகில் எங்கும் எந்தச் சமூகமும் ஒற்றுமையாக இருப்பதில்லை.

அது இயங்கியலுமில்லை.



படிப்பகம்

padippakam

உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்றுதான் மார்க்சியம் அறைகூவல் விடுத்தது.

இந்தியாவின் சிந்தனையாளர் அம்பேத்கரும் 'ஒன்றுபடு கற்பி போராடு' என்றே முழக்கமிட்டார்.

ஒன்றுபடுதல் என்பதுதான் சாத்தியமானது.

ஈழப்போராட்டத்தின் கோரிக்கைகள் அனைத்தும் ஒன்றுபட்டே முன்வைக்கப்பட்ட வரலாற்றைச் சிலர் தம் வசதிக்காக மறைத்து விடுகின்றனர்.

பிரித்தானிய சட்டவரைவாளர் சோல்பரியின் அரசியல் யாப்புத்தான் 1948இல் இருந்து 1972 வரையில் இலங்கையில் அமுலில் இருந்தது.

1972 மே 22இல் கொல்வின் ஆர் டி சில்வா வரைந்த புதிய அரசியல் யாப்புப் பிரகடனம் செய்யப்பட்டது.

இவர் இலங்கையின் புகழ்மிக்க இடதுசாரித் தலைவர் என்பதையும் மறந்துவிடாதீர்கள்.

இப்படி பல இடதுசாரித் தலைவர்கள் இனவாத அலையால் அள்ளுண்டு போனதும் ஒரு சோகக் கதைதான்.

இந்த அரசியல் யாப்பு ஈழத்தமிழரின் அரசியல் அவாவினை உள்வாங்காத ஜனநாயக விரோதமான யாப்பு என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

அதாவது அதனைப் பெரும்பான்மையோரின் சர்வாதிகாரம் என்றால் மிகையில்லை.

சிறிலங்கா குடியரசென பிரகடனம் செய்த அந்த அரசியல் யாப்பினை வரைவதற்கு கொல்வின்ஆர்டி சில்வாவின் தலைமையிலான அரசியல் நிர்ணயசபை உருவாக்கப்பட்டிருந்தது.

அதில் ஈழத்தமிழர்களின் ஒன்றுபட்ட குறைந்தபட்ச அரசியல் அவாவான ஆறு வரைவுகள் கொண்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டன. இந்த ஆறினையும் கோரிக்கைகளாக வரைந்து அரசியல் நிர்ணய சபையில் முன்வைத்தது தமிழர் ஐக்கிய முன்ணியாகும்.

தமிழர் ஐக்கிய முன்னணி என்பது சா.ஜே.வே.செல்வநாயகம் தலைமையிலான இலங்கைத் தமிழரசுக்கட்சி (இலங்கை இணைப்பாட்சிக் கட்சி என்பதே அதன் பதிவுப் பெயர்), ஜீ.ஜி. பொன்னம்பலம் தலைமையிலான இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ், சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவையாகும். (பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக் காலத்தில் இலங்கையில் தேயிலை, இறப்பர் போன்ற பெருந்தோட்ட



படிப்பகம்

padippakam

பயிர்ச்செய்கைக்காக தமிழ்நாட்டில் இருந்து ஏமாற்றி அழைத்துவரப்பட்ட மக்களினை அங்கத்தவர்களாக கொண்ட தென்கிழக்காசியாவிலேயே மிகப் பெரிய தொழிற்சங்கம்)

தமிழர் ஐக்கிய முன்னணி என்று ஒன்றுபட்டு வரைந்த அந்த ஆறு அம்சக் கோரிக்கைகளை ஒருதடவை படித்துப் பாருங்கள்:

அ). அரசியல் சாசனத்தில் சிங்களமொழிக்கு வழங்கப்படும் இடத்திற்குச் சமானமாக தமிழ்மொழிக்கும் இடமளித்தல்.

(a) The tamil Language should be given the same status in the Constitution as the Sinhala Language.

ஆ). இந்தநாட்டினை வாழ்விடமாக கொண்ட சகல தமிழ்பேசும் மக்களும் முழுமையான குடியுரிமை உடையவர் என்பதனை அரசியல் சாசனத்தினூடாக உறுதிப்படுத்தல். இலங்கையின் குடிமக்களுக்கிடையில் எந்தவிதமான குடியுரிமைத் தரவேறுபாடுகளோ பாரபட்சங்களோ காட்டப்படக்கூடாது என்பதுடன் மக்களின் குடியுரிமையினைப் பறிப்பதற்கான அதிகாரவலு அரசாங்கத்திற்கு வழங்கப்படக்கூடாது.

(b) There should be constitutional guarantee of full citizenship rights to all Tamil - speaking people who have made this country their home. There should be no different categories of citizens and no discrimination between them, and also no power to the state to deprive citizen of his citizenship

இ). அரசு மதசார்பற்றதாக இருப்பதுடன் எல்லா மதங்களினையும் சமமாக பாதுகாக்கக்கூடியதாக இருக்கவேண்டும்.

(c) The State shall be secular, while equal protection is afforded to all religions.

ஈ). அரசியல் சாசனத்தினூடாக உத்தரவாதப்படுத்தப்படும் அடிப்படை உரிமைகள் சகல மக்களினையும் அவர்களின் இனக்கலாசார அடையாளங்களுக்கு அப்பால் சமமானவர்களாக உறுதிப்படுத்த வேண்டும்.

(d). The constitution should provide for valid fundamental rights guaranteeing the equality of all persons on ethnocultural grounds.

உ). அரசியல் சாசனத்தினூடாக சாதியமும் தீண்டாமையும் ஒழிக்கப்படவேண்டும்.

(e). The Constitution shall provide for the abolition of caste and untouchabilitty.

ஊ). சனநாயக பண்புகொண்ட சமவுடைமைச் சமுதாயத்தில் அதிகாரம் அரசிடமல்லாமல் மக்களிடம் இருப்பதனைப்



படிப்பகம்

padippakam

பன்முகப்படுத்தப்பட்ட அரசாங்கக்கட்டமைப்பின் ஊடாக உறுதிப் படுத்துதல்.

(f) In a democratic and socialist society, a decentralized structure of government alone will make it possible for a participatory democracy where power will be peoples power rather than state power.

ஈழத்தமிழரின் மிகக்குறைந்த அவாவினைக் கொண்ட அரசியல் நாகரிகமான கோரிக்கைகளே நிராகரிக்கப்பட்டபோது ஈழத்தமிழரின் பிரதிநிதிகள் அரசியல் நிர்ணயசபையில் இருந்து வெளியேறினர்.

புதிய அரசியல் அமைப்புப் பிரகடனம் செய்யப்பட்ட நாளான 1972 மே 22ஐ கறுப்புநாளாக, துக்கநாளாக பிரகடனம் செய்தனர்.

இது ஈழத்தமிழர்களின் ஒன்றுபட்ட குரல் அல்லாமல் வேறென்ன?

இன்றைய இன்னல்கள் துன்பங்களுக்குக் காரணமான சிறிலங்கா குடியரசு யாப்பினை வரைந்த அதே கொல்வின் ஆர் டி சில்வா 1992இல் கூறியதுதான் இன்னும் வேடிக்கையானது.

'நாட்டில் ஏற்பட்டிருக்கும் இன்றைய அபாய நிலையிலிருந்து நாட்டைப் பாதுகாக்கவும், ஐக்கியத்தை உறுதி செய்யவும் இணைப் பாட்சியே சிறந்த வழி என்பதை உறுதியாகச் சொல்வேன். சிறுசிறு இராச்சியங்கள் இணைப்பாட்சி மூலம் ஐக்கியமாகவும் பலமாகவும் இருப்பதை வரலாறு உறுதி செய்கின்றது'.

கண்கெட்ட பிறகான சூரிய வணக்கம் எனலாமா இதனை?

இந்த கொல்வின் ஆர்டி சில்வாதான் 'ஒரு மொழியானால் இருநாடு, இரு மொழியானால் ஒரு நாடு' என 1956இல் தனிச் சிங்களச் சட்டம் அமுலுக்கு வந்தபோது முழக்கமிட்டவர்.

அது தனிக்கதை. அவரின் கதையல்ல இங்கு முக்கியம்.

ஒன்றுபட்ட ஈழத்தமிழரின் குரல் எப்படி ஒலித்தது என்பதே முக்கியமானது.

**03** திம்புப் பிரகடனம் உங்களுக்கு நினைவிருக்கும்.

1985இல் இரண்டு கட்டங்களாக (யூலை, ஆகஸ்ட் மாதங்களில்) பூட்டான் தலைநகர் திம்புவில் ஈழப்போராளிகளுக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் ஈழப்போராளிகளால் முன்வைக்கப்பட்ட நான்கு அம்சக் கோரிக்கைகள்தான் திம்புப் பிரகடனம் எனப்படுகின்றது.



படிப்பகம்

padippakam

இதில் ஈழப்போராளிகள் என்பது ஈழத்தேசிய விடுதலை முன்னணி (தமிழீழ விடுதலைப் புலிகள், ஈழப் புரட்சி அமைப்பு, ஈழப் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம்) மற்றும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் என்னும் ஈழப்போராட்ட இயக்கங்களும் அரசியல் கட்சிகள் இணைந்த தமிழர் விடுதலைக் கூட்டணியுமாகும். ஈழத்தமிழர்களின் அரசியல் அவாவினை அனைத்துலக அரங்கில் வெளிப்படுத்த வேண்டிய நேரம் வந்தபோது இவ்வகையில் ஈழத்தமிழர் தலைமைகள் ஒன்றிணைந்துதான் நாலு அம்சக் கோரிக்கையை வடிவமைத்தனர்.

01. ஈழத்தமிழ் மக்கள் ஒரு தனித்துமான தேசிய இனம். தேசியம்

02. ஈழத்தமிழ் மக்களுக்குத் தனித்துவமான வாழ்விடம் உண்டு தாயகம்.

03. ஈழத்தமிழர் தங்கள் அரசியல் எதிர்காலத்தினைத் தீர்மானிப்பதற்கான முழுமையான சுய நிர்ணய உரிமை அவர்களுக்கு உண்டு சுயநிர்ணயம்

04. ஈழத்தமிழ் மக்கள் சகலரும் தங்களுக்கிடையில் சமமானவர்கள் என்பதுடன் முழுமையான குடியுரிமை கொண்டவர்கள். இக்கோட்பாடுகளில் இருந்து விலகாதவர் எவராயினும் அவர்கள் ஈழப்போராட்டத்தில் ஒன்றுபட்டவர்களே.

இப்பிரகடனங்களில் இருந்து இன்றைக்கும் யாரும் விலகிச் செல்ல முடியாது.

ஏனெனில் இவை 77இல் வாக்களித்த மக்கள் ஆணையால் பெறப் பட்டவையாகும்.

அதாவது 77ஆம் ஆண்டு இலங்கைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வைத்த தேர்தல் அறிக்கையின் முன்மொழிவு கீழ்வரும் வாசகங்களாலானது.

The Tamil Nation must take the decision to establish its sovereignty in its homeland on the basis of its self-determination. The only way to announce this decision to the Sinhalese government and to the world is to vote for the Tamil United Liberation Front. The Tamil speaking representative who get elected through these votes, while being members of the National State Assembly of Ceylon, will also from themselves in to the NATIONAL ASSEMBLY OF TAMIL EELAM" which will draft a constitution for the State of Tamil Eelam and to establish the independence of the Tamil Eelam by bringing that constitution into operation either by peaceful means or by direct action or struggle."

'தமிழ்த்தேசிய இனம் தான் கொண்டுள்ள சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இறைமையுடன் கூடிய தாயகத்தினைக் கட்டியெழுப்புவதற்கான தீர்மானத்தினை மேற்கொள்ளவேண்டியுள்ளது.



படிப்பகம்

padippakam

இந்த முடிவினைச் . சிங்கள ஆட்சியாளர்களுக்கும் உலகிற்கும் எடுத்துரைக்கக்கூடிய ஒரேவழி தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு உங்கள் வாக்குகளினை அளிப்பதுதான். உங்கள் வாக்குகளின் மூலம் தெரிந்தெடுக்கப்படும் தமிழ்பேசும் பிரதிநிதிகள் இலங்கைத் தேசிய அரசுப்பேரவையில் அங்கத்தவராக இருக்கும் அதேவேளையில் தாங்கள் சகலருமிணைந்து தமிழீழத்திற்கான தேசியபேரவையினை உருவாக்கி தமிழீழத்திற்காக அரசியல்சாசனத்தினை வரைவதுடன் அவ் அரசியல்சாசனத்தின் அடிப்படையில் தமிழீழத்தினைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான செயற்பாடுகளினைச் சமாதான வழிமுறையின் மூலமோ அல்லது நேரடியான போராட்ட செயற்பாடுகள் மூலமோ முன்னெடுப்பர்.

இதற்குத்தான் 80வீதமான ஈழத்தமிழர்கள் வாக்களித்து அதனை மக்கள் ஆணையாக மாற்றினர்.

ஆனால் இவற்றை ஏற்காதவர்களையும் இணைத்தல்தான் ஒற்றுமை என்று கதையளப்பவர்கள் வேறு யாருக்கோ சேவகம் செய்கிறார்கள். சொற்சிலம்பம் ஆடுகிறார்கள்.

தமிழ்நாட்டில் ஒன்றுபட்டு எழுந்த குரலை உடைத்துவிட்டு ஒற்றுமை பற்றி ஓதுகிறார்கள்.

நண்பர்களே இதனை, இவர்களைப் புரிந்துகொள்வதில் நமக்கிடையே ஏதும் இடர்ப்பாடு இருக்குமா என்ன?

ஏன் இன்றைக்கு சிறிலங்கா பாராளுமன்றத்தில் ஈழத்தமிழர் பிரதிநிகளாக உள்ள தமிழ்தேசிய கூட்டமைப்பு என்பது பல கட்சிகளின் கூட்டுத்தானே.

அதில் தமிழரசுக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம், ஈழப் புரட்சிகர விடுதலை முன்னணி, சுயாட்சிக்கழகம் என்பனவெல்லாம்தானே இணைந்துள்ளன.

அந்தத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் இந்தியப் பிரதமரை சந்திக்க எடுத்த முயற்சியின் போது தமிழ்நாட்டு ஆட்சித் தலைமை காட்டிய ஒற்றுமை ஊர் அறிந்தது.

நண்பர்களே அவ்வேளையில் நாம் எத்தகைய வேதனைக்கு உள்ளானோம்?

இவர்களின் ஒற்றுமை பற்றிய குதர்க்கங்களுக்குப் பின்னால் சமரசங்களும், அரைகுறைத் தீர்வுகளும்கூட ஒளிந்துள்ளன.

நாம்தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.



படிப்பகம்

padippakam

**04** 'வங்கம் தந்த பாடம்' என்றதுடன் வங்கதேச விடுதலைக்கு இந்திய அரசு வழங்கிய பங்களிப்பு என்றே பலரும் அர்த்தம் கொள்வதுண்டு.

திருமதி.இந்திராகாந்தி பிரதமராக இருந்த வேளையில் 1971இல் இந்தியத் தலையீடாக மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை மூலம் 'பங்களாதேஷ்' என்னும் ஒரு தேசம் உதயமாகியது.

இந்த 'பங்களாதேஷ்' என்னும் தேச உருவாக்கம் ஈழ விடுதலை போராட்ட முகிழ்ப்பின் போது உத்வேகம் அளித்த காரணிகளில் ஒன்று என்பது மறுக்க முடியாதது.

ஆனால் வங்கம் தந்த பாடம் என்பது ஒரு தேச உருவாக்கத்திற்கு உதவியது என்பதை விடவும் வங்கதேச விடுதலைக்காக ஆயுதம் தாங்கி போராடிய முக்தி பாஹினி இயக்கத்தை இந்திய அரசு அழித்த கதைதான் என்பது பலரும் அறியாததாகும்.

இந்தப் பட்டறிவை ஈழப்போராட்டம் தன்கூட்டு நினைவில் பதித்து வைத்திருந்தது.

அந்தப் பட்டறிவின் உத்வேகம்தான் 87இல் இந்திய அமைதிப்படை என்ற போர்வையிலான ஆக்கிரமிப்புப் படையை எதிர்கொள்ள வைத்தது, விரட்டி அடித்தது என்றால் மிகையில்லை.

83இல் இலங்கை தீவில் நிகழ்ந்த வன்கொடுமைகளுக்கு எதிராக ஈழத்தமிழர்கள் இந்திய அரசிடம் ஆதரவினைக் கோரியிருந்தனர்.

83ஆம் ஆண்டு இலங்கை வன்கொடுமை கண்டு உலகமே அதிர்ந்து போயிருந்தது.

அவ்வேளையில் நண்பர்களே நாமும் இணைந்தே அந்த கோரிக்கையை முன்னெடுத்திருந்தோம்.

உலகம் அறிய குரல் கொடுத்தோம்.

'ஈழம் எங்களின் தாகம்<br>
எரிந்து போயிற்று எங்களின் நாடு<br>
அழிந்து போயின எங்கள் முகங்கள்<br>
எஞ்சியிருப்பவை கரங்கள் மட்டுமே<br>
கரங்களுக்கு இப்போது உதவிகள் தேவை'

என்று 83இல் நாம் தயாரித்த அந்தச் சுவரொட்டி வாசகங்கள் நினைவுக்கு வருகின்றன.

நாம் ஒருவர் தோளில் ஒருவர் ஏறிநின்று சென்னை நகரெங்கும் சுவரொட்டி ஒட்டியதை எப்படி மறப்பது?

ஆம். ஈழத்தமிழர்களின் அரசியல் கட்சித் தலைவர்களும் பாராளுமன்ற பிரதிநிதிகளும், தமிழ்நாட்டுத் தலைவர்களும் மக்களும் இணைந்தே குரல் எழுப்பினர்.



படிப்பகம்

padippakam

இந்திய அரசு ஈழத்தமிழர்களுக்கான அரசியல் நியாயத்தை வழங்க உதவும் என்றே பலரும் நம்பியிருந்தனர்.

இந்திய அரசு இராணுவப் பயிற்சியை ஈழப்போராளிகளுக்கு வழங்கி இருந்தது.

இது எல்லாரும் அறிந்ததே.

ஆனால் வழங்கப்பட்ட பயிற்சி ஈழப்போராட்டத்திற்கு அல்லாமல் இந்திய ஆளும் வர்க்க நலன்களின் பொம்மலாட்டத்திற்கானது என்பதை அறிய ஈழப்போராளிகளுக்கு அதிக காலம் எடுக்கவில்லை.

இப்பொம்மலாட்ட சூழ்ச்சிக்கு துணைபோனதுடன் சூத்திரதாரியாய் செயல்பட்டவர், இலங்கையில் ஈழத்தமிழர்களுக்கான இணைப்பாட்சியையும், அறவழிப்போராட்டத்தையும் வலியுறுத்திப் போராடிய தந்தை செல்வாவின் தனயன் என்பதுதான் வரலாற்றின் முரண்நகை.

இன்றைக்கும் அந்தத் தனயன் நீர் வழிய நாக்கை தொங்கபோட்டபடி இந்திய ஆளும் வர்க்கத்தின் சூழ்சிகளின் வெற்றியில் தனது பங்கான எலும்புத் துண்டுக்காக காத்திருக்கிறான் என்பதும் ஆச்சரியம் தரவல்லது.

இந்திய ஆளும் வர்க்கத்தின் உள்நோக்கம் புரிந்தபோது அவர்கள் ஆட்டுவிக்கும் பொம்மைகளின் கையோங்கவிடாது தடுக்க வேண்டியது ஈழப்போராளிகளுக்குத் தவிர்க்க முடியாததாகியது.

வங்கதேசத்தில் ஆயுதம் தாங்கிய முக்தி பாஹினிகள் ஏமாந்தனர். ஆனால் தமிழீழ விடுதலைப் போராளிகள் ஏமாறவில்லை.

இந்திய ஆளும் வர்க்கத்தின் சூழ்ச்சிகள் பல முளையிலேயே கிள்ளியெறியப்பட்டன.

ஈழப்போராட்டத்தின் வீரியத்தை, ஓர்மத்தைச் சிதைத்துவிட வேண்டுமென்ற இவர்களின் முயற்சிகள் விக்கிரமாதித்தன் கதைபோன்று முடிவற்றவாறே நீள்கின்றன.

ஆனால் சிறிலங்கா அரசு இந்தியாவைத் தொடர்ந்தும் ஏமாற்றி வருவதையோ அல்லது இந்திய பாதுகாப்புக்கு யார் அச்சுறுத்தலாளர்களோ அவர்களுடன் உறவை வலுப்படுத்துவதை பற்றிய கவலையின்றி இந்திய ஆளும் வர்க்கம் இருப்பது ஆச்சரியம் அளிக்கின்றது.

இது குறித்து ஈழத்தின் புகழ்மிக்க அரசறிவியலாளர் மு.திருநாவுக்கரசு எழுதிய



படிப்பகம்

padippakam

'தனது விரலால் தனது கண்ணையே குத்திக்கொள்கின்றதா இந்தியா' என்னும் ஆய்வு விரிவான புரிதலை உங்களுக்கு அளிக்கும் என்றே நம்புகிறேன்.

**05** இன்னுமொரு விந்தையான கதையும் இணைய வெளியிலும் காற்றலையிலும் உலா வருகின்றது.

உங்கள் காதுகளிலும் விழுந்திருக்கும்.

'கிடைக்கிறதை பெற்றுக்கொண்டு மற்றதற்குப் போராடுவது.'

'கிடைப்பதை தள்ளிவிடுவது முட்டாள்தனம்.'

இவையிலும் நஞ்சுதான் தடவப்பட்டிருக்கின்றது.

அதாவது அரைகுறைத்தீர்வை முதலில் ஏற்றுக்கொள்ளுமாறு நயமாக இவர்கள் கூற முயல்கின்றனர்.

அதற்கு ஏராளமான சான்றுகளையும் அடுக்க முனைகின்றனர்.

ஆம் இச்சொற்களை உதிர்ப்போர் மக்கள் ஆணையை மறந்துவிடுங்கள் என்றே உபதேசம் செய்கின்றனர்.

அத்துடன் இவர்கள் 1919ஆம் ஆண்டிலிருந்து 1985ஆம் ஆண்டுத் திம்பு பிரகடனம் வரையான ஏழு பேச்சுவார்த்தைகள், உடன்படிக்கைகள் பற்றியும், அவை முறிவடைந்த கதைகளையும் மூடி மறைக்க முயல்கின்றனர்.

ஒன்றுபட்ட குரலில் ஈழத்தமிழர் எவற்றை முன்வைத்தனர் என்று மேலே நான் குறிப்பிட்டிருக்கிறேன் அல்லவா. அவற்றை மறுபடியுமாக யோசிப்பீர்களாயின் எந்தஅளவு குறைந்த அளவான கோரிக்கையில் இருந்து திம்பு பிரகடனங்களுக்கு வந்தடைந்தார்கள் என்ற செய்தியும் உள்ளடங்கி இருப்பதையும் கவனிப்பீர்கள்.

ஆறுகள் பின்னோக்கி பாய்வதில்லை நண்பர்களே!

அவற்றின் விபரங்களை முடிந்தால் இன்னொரு உரையாடலில் நான் தெரிவிக்கிறேன்.

நட்புடனும்

தோழமையுடனும்

**கி.பி.அரவிந்தன்**

17- 11- 2008



படிப்பகம்

padippakam

# காலம் அரித்திடாது எம் இணைப்பை

**01.** 1987ஆம் ஆண்டு சிறிலங்கா இந்திய ஒப்பந்தம் ஏற்பட்ட வேளையில் சில ஈழப்போராளிகள் உட்பட பலரிடமும் அரசியல் தீர்வு பற்றிய ஒரு மயக்கநிலை தோற்றம் பெற்றிருந்தது.

ஈழப்போராட்டத்தின் பின்தளமாக இருந்த தமிழ்நாட்டை விட்டு பணியகங்களையும் மூடிவிட்டு ஈழப்போராளிகள் தாயகத்திற்குத் திரும்ப நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

அப்போது நான் ஈழ நண்பர் கழகத்தின் வெளியீடாக வந்துகொண்டிருந்த நட்புறவுபாலம் இதழில் விடைபெறும் நேரம்.. என ஒரு கடிதம் எழுதினேன்.

அக்கடிதத்தின் இறுதி வரிகளாக நண்பர்களே இது விடைபெறும் நேரம்தானா என்பது தீர்மானமாகவில்லை. ஆனாலும் எங்கள் நினைவுகள் உங்களின் அன்பு நட்பு தோழமை இவற்றையே தாங்கியுள்ளன. உங்களிடமும் இவற்றையே கையளித்துள்ளோம். என எழுதி ஒக். 87 என கையெழுத்திட்டிருந்தேன்.

காலம் இருபது ஆண்டுகளைத் தின்று முடித்து விட்டது. துன்பியல் நிகழ்வுகள் பலவற்றுக்கு நாம் சாட்சியமாகியும் விட்டோம்.



படிப்பகம்

padippakam

இப்போதெல்லாம் அன்றைய நாட்களைப்போல் ஊடும்பாவுமாக நாம் வாழ்வதற்கு இந்திய நாட்டின் சட்டங்கள் இடம்கொடுக்குமா தெரியவில்லை. தற்போது உங்களிடம் இருந்து பல்லாயிரம் மைல் தொலைவில் அலைந்து உழன்று கொண்டிருக்கிறேன்.

புலம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கையில் நானும் ஒரு தலையாக இணைந்துவிட்டேன். ஆனால் என்னுள்ளான நெருப்பை என்றும் நான் அணைய விட்டதுமில்லை, எனக்கான தேசியப் பணிகளைக் கைவிட்டதுமில்லை.

அப்பணியாக இக்கட்டுரையையும் எழுதுகின்றேன்.

நண்பர்களே,

எத்தனையோ துயர துன்பியல் நிகழ்வுகளையும் தாண்டி ஈழப் போராட்டம் விரைவுபெற்று சில எல்லைகளைத் தொட்டு நிற்கின்றது. அதேபோல் மரணத்துள்ளான வாழ்வும் மாற்றமின்றித் தொடர்கின்றது.

இனப்படுகொலை முன்னெப்போதையும் விட சிறிலங்கா அரசால் சர்வதேச அங்கீகாரத்துடன் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றது.

இதற்குக் காந்தியை மகாத்மாவாகக்; கொண்டாடும் உங்கள் தேசமும் உடந்தையாக இருக்கின்றது என்பதற்கு வவுனியா படைத்தளம் சாட்சியமாகி உள்ளது.

பல்லுக்குப் பல், கண்ணுக்குக் கண் என்ற முடிவிலேயே இந்திய தேசம் ஈழத்தமிழர்கள் மீதான தனது நகர்வுகளை மேற்கொள்கின்றது.

இந்திய தேசம் அரசியல் இராஜதந்திரத்துடன் நடக்கின்றதா அல்லது வர்ணாச்சிரம தர்மத்தை முன்னிறுத்துகின்றதா என்பதே இன்றைய கேள்வி.

இந்தச் சூழலே நாம் விடைபெற முடியாதவர்கள், இன்னும் நெருக்கமாக இணைந்திருந்து பணியாற்ற வேண்டியவர்கள் என்பதை உணர்த்தி நிற்கின்றது.

முன்னெப்போதையும் விட அயல் தேசமான இந்தியா உள்ளிட்ட சர்வதேசத்தார் தமது கண் காதுகளைச் சின்னஞ்சிறிய இலங்கைத்தீவின் சந்து பொந்துகளில் எல்லாம் விதைத்து வைத்திருக்கின்றனர்.

சர்வதேசம் துயருறும் மக்களுக்காகப் போராடும் சமூகத்திற்கு நியாயம் வழங்கும் என்றுதானே நீங்கள் எண்ணுவீர்கள். ஆனால் நான் உங்களுடன் தமிழ்நாட்டில் 1978 முதல் 1988 வரை இருந்த காலத்தில் சர்வதேசத்தைப் புரிந்துகொண்டதைவிடவும் புலம்பெயர்ந்த வாழ்வியலின் பின்னணியில் மிகத் துல்லியமாக அதனைப் புரிந்துகொள்ள முடிந்துள்ளது.



படிப்பகம்

padippakam

எல்லாமும் திருப்பப்பட்டாயிற்று
வட அத்திலாந்திக் கரைகளுக்கு
கரை தொட்ட தேசங்களுக்கு.
வந்து வந்து சேர்கின்றன பார்
அறுத்தெடுத்த ஈரல் குலைகள்
துடிதுடிக்கும் இதயங்கள்
உருவி எடுக்கப்பட்ட நாடி நரம்புகள்
பதனமான முகங்கள்
கனிமச் சத்தும்
எண்ணெய்க் கொழுப்பும்
ஊறின தேறல்
ருசி என்ற ருசி..

இதுதான் சர்வதேசம். புலம்பெயர்ந்ததனால்தான் இப்படிப் புரிந்து என்னால் கவிதை எழுத முடிந்தது.

சர்வதேசம் விடுதலை அவாவும் சமூகங்களுக்கு தன் நலன்களுக்கு அப்பால் எங்கும் ஒத்தாசை புரிந்ததோ அமைதியை ஏற்படுத்தியதோ தீர்வை வழங்கியதோ கிடையாது. அது கிழக்குத் திமோராக இருக்கலாம் கொசொவோவாக இருக்கலாம். எல்லா இடத்திலும் தன் நலன்களையே இந்தச் சர்வதேசத்தார் முன்னிறுத்தி உள்ளனர் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். கனிமச் சத்தும் எண்ணெய்க் கொழுப்பும் ஊறின தேறலுக்காகவே அவர்கள் அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தச் சின்னஞ்சிறு தீவில் சர்வதேசத்திற்கு என்ன நலன்கள் இருக்க முடியுமென நீங்கள் சிந்திப்பது நியாயமானதொன்றே. அதுவும் துணைக்கண்டமான இந்தியா போன்ற பெரிய சந்தை வாய்ப்பும், பெருமளவான மூலவளமும் இல்லாத இலங்கைத் தீவிற்குச் சர்வதேசம் ஏன் இத்தனை முக்கியத்துவம் கொடுக்கின்றது என்பது பலருக்கும் புரியக்கூடியதொன்றல்ல.

இந்தியாவின் எல்லைகளைத் தொட்டு நிற்கும் இந்துமாக் கடலிடையேயான இலங்கைத்தீவின் அமைவிடமே அதன் பலமும் பலவீனமுமாகும்.

அவ்வமைவிடம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக புவிசார் அரசியலில் சர்வதேச நலன்களுடன் பின்னிப் பிணைந்துள்ளதே அதன் பலவீனம்.

அதனாலேயே ஈழப் போராட்டம் நீண்டு செல்ல வேண்டியதாக உள்ளது.

இந்து சமுத்திர நாடுகளின் நிலை, இவ்வல்லரசுகளின் போட்டிக்குள் ஏதோ ஒரு வகையில் சிக்குண்டு, தமது சுயாதிபத்தியத்தை இழந்து, அமைதியை இழந்து வாழவேண்டிய துர்ப்பாக்கியம் உள்ளதாய்



படிப்பகம்

padippakam

இருக்கின்றது என 70 ஆம் ஆண்டில் முகிழ்த்த இளந்தலைமுறையைச் சேர்ந்த இரு அரசியல் அறிஞர்கள் 1987 ஆம் ஆண்டில் எழுதி வெளியிட்ட ஆய்வு நூலான இந்து சமுத்திரமும் இலங்கை இனப்பிரச் சனையும் எனும் நூலில் தெரிவித்திருக்கின்றனர்.

அதாவது, ஈழத்தமிழரை அழிக்கும் சிறிலங்கா அரசிற்கு அமெரிக் காவும் ஆதரவு அதேவேளையில் அமெரிக்காவை கிலிகொள்ள வைத் திருக்கும் எதிரியான சீனாவும் ஆதரவு. தமிழ்மொழி பேசும் மக்களை ஒரு மாநிலமாக கொண்டிருக்கும் இந்தியாவும் ஆதரவு. நாள்தோறும் இந்தியா மீது யுத்தப்பிரகடனம் செய்து கொண்டிருக்கும் பாகிஸ்தானும் ஆதரவு. என்ன வேடிக்கை பாருங்கள்.

இதில் ஈழப்போராட்டம் எவர் நலனையும் சார்ந்திருக்காததே சட்டாம்பிள்ளையான சர்வதேசத்திற்கான சிக்கலாகும்.

உலகின் பல்வேறு தேசிய இனச் சிக்கல்களில் சர்வதேசம் புகுந்து விளையாடி அவ்வினங்களின் விடுதலை அவாவைக் கருவறுத்ததை வெற்றியாகக் கொண்டாடி வருகின்றது. அவர்கள் கருவறுத்ததின் சாட்சிய மாக நாம் பாலஸ்தீனத்தைக் கொள்ளலாம். அதன் சோகக்கதையை நான் விரிவாகக் கூறவேண்டியதில்லை.

ஈழப்போராட்டத்தின் தொடக்க காலத்தில் பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் முன்னுதாரணமாகக் கொள்ளப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் இன்று என்ன நிலையில் உள்ளது பாலஸ்தீனம்?

அதேபோல் ஈழப்போராட்டத்தை நீர்த்துப்போகச் செய்வதும் அதன் வீரியத்தை மங்கச் செய்து முழங்காலில் இருக்க வைப்பதுமே இந்தியா உள்ளிட்ட சர்வதேசத்தின் முயற்சியாகும்.

சர்வதேசம் வழங்கும் ஆதரவும் துணிச்சலும்தான் சிறிலங்கா அரசு ஈழத்தமிழர்களை அழிக்கும் இனச்சுத்திகரிப்பிற்குத் தூண்டுகோலாக அமைந்துள்ளது.

இன்றைய ஈழப்போராட்டமானது சிறிலங்காவிற்கு எதிராக மட்டுமல்ல சர்வதேசத்திற்கும் எதிர்முகம் கொடுக்க வேண்டி உள்ளது என்பதை மறந்துவிடாதீர்கள்.

இந்நிலையில்தான் உங்கள் அன்பும் நட்பும் தோளணைவும் எமக்குத் தேவையாக இருக்கின்றது.

1983 ஆம் ஆண்டு யூலைப் படுகொலை நிகழ்வுகள் யாராலும் மறக்கக் கூடியதொன்றல்ல. நீங்களும் மறந்திருக்க மாட்டீர்கள். இந்த ஆண்டு அதன் 25 ஆம் நினைவாண்டு.

1983 ஆம் ஆண்டு இந்நிகழ்வின் போது நான் உங்களுடன் இருந்தேன். அந்த நிகழ்வு தமிழ்நாட்டில் ஏற்படுத்திய எதிர்வினைகள்



படிப்பகம்

padippakam

இன்றும் பசுமையாக நினைவில் உள்ளன. கம்யூனிஸ்ட் கட்சியின் பணியகமான பாலன் இல்லம் வந்ததும் அங்கு கட்சியின் பொறுப்பாளர்களான தோழர்கள் பலரைச் சந்தித்து நிலமையை விளக்கியதும் நன்கு நினைவில் இருக்கின்றது.

இடதுசாரிக் கட்சிகளின் மாணவர் அமைப்பினர் (ASFI -SFI) அன்று பலம் பொருந்தியவர்களாக செயல் வேகம் கொண்டவர்களாக இருந்தனர். அவ்வேளையில் சென்னை சட்டக்கல்லூரி, மாநிலக் கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, அரசினர் கலைக் கல்லூரி, தாம்பரம் கிறிஸ்தவக் கல்லூரி ஆகியவற்றின் விடுதிகளில் கூட்டங்கள் நடாத்தியதும், அக்கல்லூரிகளின் மாணவப் பிரதிநிதிகளைச் சந்தித்ததும் பின்னர் அவர்கள் எல்லோரும் தெருக்களில் இறங்கி ஊர்வலம் போனதும் ஒரு மக்கள் எழுச்சியாக மாறியதும் அரிய தருணங்கள் அவை.

அக்காலகட்டம் மீள உருவாகின்றதோ என்பதைத்தான் உங்கள் நடவடிக்கைகள் எமக்கு உணர்த்துகின்றன. கட்சிகளுக்கு வெளியேயான தமிழ்ப் படைப்பாளிகள் முன்னணியும், திருச்சி சட்டக்கல்லூரி மாணவர்களும் எமக்காகக் களமிறங்கி குரல் கொடுத்ததைப் பார்த்தபோது 1983 அரிய தருணங்கள்தான் நினைவில் எழுந்தன.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினராகிய நீங்களும் ஏறத்தாழ அனைத்துக் கட்சியினரையும் இணைத்து நடத்தும் இந்த உண்ணாவிரதமும் அதற்குச் சான்றாக அமைகின்றது. அதுவும் காந்தியைக் குறியீடாக்கி அவரது பிறந்த நாளில் போராட்டத்தை நடாத்துகிறீர்கள். ஈழப்போராட்டமும் காந்திய சிந்தனையிலேயே வளர்ந்தது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**02.** இலங்கைத்தீவின் அரசியல் வரலாற்றில் 1930 ஆம் ஆண்டினை மையமிட்ட காலகட்டம் கவனத்தில் கொள்ளவேண்டியது ஒன்றாகும்.

1948 ஆம் ஆண்டில் இலங்கைத் தீவுக்குச் சுதந்திரம் வழங்கிய சோல்பரி அரசியல் யாப்புக்கு முன்னரான டொனமூர் சீர்திருத்தம் அக்காலகட்டத்தில்தான் நடைமுறைக்கு வந்திருந்தது.

டொனமூர் சீர்திருத்தத்தின்படி இனவாரி பிரதிநிதித்துவம் கைவிடப்பட்டு பிரதேசவாரி பிரதிநித்துவம் அறிமுகப்படுத்தப்பட்டது. அத்துடன் கல்வி கற்ற உயர்மட்ட மக்களுக்கு மட்டும் வழங்கப்பட்டிருந்த வாக்குரிமையை மாற்றி 21 வயதிற்கு மேற்பட்ட ஆண் பெண் இருபாலாருக்குமான சர்வசன வாக்குரிமை அறிமுகமானது.



படிப்பகம்

padippakam

டொனமூரின் இந்தச் சீர்திருத்தம் தமிழர்களால் ஏற்றுக்கொள்ளப் படவில்லை. குறிப்பாக பிரதேசவாரி பிரதிநித்துவம். இதனை எதிர்ப்பதில் யாழ்ப்பாண இளைஞர் பேரவை (Jafna Youth Congress) முக்கிய பங்காற்றியது.

இந்த யாழ்ப்பாண இளைஞர் பேரவைத் (Jafna Youth Congress) தலைவர்களாக அறியப்பட்ட ஒறேற்றர் சுப்பிரமணியம், ஹண்டி பேரின்பநாயகம், கு.நேசையா போன்றவர்கள் காந்திய சிந்தனையின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்தனர். தங்கள் வாழ்வியலில், செயல்பாடு களில் காந்திய வழிமுறையையே கடைப்பிடித்தனர்.

அத்தலைவர்கள் தங்கள் காந்தியப் பற்றை வெளிப்படுத்தும் வகையில் மகாத்மா காந்தியை இலங்கைக்கு குறிப்பாக யாழ்ப் பாணத்திற்கு அழைத்துச் சிறப்பித்தனர்.

1970களில் நான் இளைஞனாக அரசியலில் ஈடுபடத் தொடங்கிய காலத்தில் திரு.கு.நேசையா அவர்களை பொதுநிகழ்வுகளில் பல தடவைகள் பார்க்கும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன.

அவ்வேளைகளில் எல்லாம் அவரை நான் வெள்ளைக் கதராடையுடனேயே பார்த்திருக்கிறேன். அவரது ஆடை அவரை ஒரு காந்தியவாதியாகவே எங்களுக்கு அறிமுகப்படுத்தியிருந்தது. அவரது பேச்சுகளிலும் காந்தியமே மிகுந்திருந்தது.

1949 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரான சா.ஜே.வே.செல்வநாயகம் ஈழத்துக் காந்தியென்ற அடைமொழியுடன் ஊடகங்களாலும் மக்களாலும் புகழப்பட்டார்.

சாத்வீக வழியிலான போராட்டத்தையே அவர் அரசியல் வாழ்வில் முன்மொழிந்தார். அதன் வழியையே கடைப்பிடித்தார். தனது தலைமை யில் தனிச்சிங்களச் சட்டத்திற்கு எதிராக 1956 ஆம் ஆண்டில் நடாத்திய போராட்டத்தையும், 1961 ஆம் ஆண்டில் நடாத்திய சத்தியாகிரகப் போராட்டத்தையும், சாத்வீகப் போராட்டம் என்ற காந்திய வழிப்போராட்டம் என்றே அறிவித்தார்.

அதில் அவரும் அவரது சகாக்களும் வன்முறையாளர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டனர். அவர் இறக்கும் வரையில் தனது கொள்கை வழிப்போராட்டத்தை அவர் கைவிடவே இல்லை. ஆனால் அவர் இறப்பதற்கு முன்னால் தனது சாத்வீக நடவடிக்கைகள் எதும் வெற்றியளிக்காத நிலையில் கடவுள்தான் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும் எனக் கூறிச்சென்றார்.



படிப்பகம்

padippakam

1972இல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய அரசியல் , அமைப்புக்கு எதிராக தமிழர்களின் கட்சிகளை ஒருங்கிணைத்து தமிழர் ஐக்கிய முன்னணியை உருவாக்கிய திரு.ச.ஞானமூர்த்தி அவர்கள் காந்திய நெறிமுறையிலேயே வாழ்ந்து பணியாற்றினார்.

ஏறத்தாழ 1930களில் செயல்பட்ட தலைவர்களில் இருந்து ஈழத்துக் காந்தியெனப் புகழப்பட்ட சா.ஜே.வே. செல்வநாயகம் அவர்கள் காலமான 1977 வரையில் இலங்கைத்தீவின் அரசியலரங்கில் செயற்பட்ட தமிழர் தலைவர்கள் அனைவரும் காந்திய நடைமுறைகளையே கடைப்பிடித்தனர்.

இன்னும் சிறப்பாக கூறுவதானால் 1987 ஆம் ஆண்டில் சிறிலங்கா இந்திய உடன்படிக்கையின் அடிப்படையில் அமைதிப்படை என்ற பெயரில் இந்திய இராணுவம் நுழையும் வரையில் காந்தியும் காந்திய சிந்தனையும் செல்வாக்கும் நம்பிக்கையும் மிக்கதாகவே இலங்கைத் தமிழர்களிடம் காணப்பட்டது.

ஈகைச்சுடர் திலீபன் அந்த நம்பிக்கையிலேயே உண்ணா நோன்பை முன்னெடுத்தான்.

ஆனால் அவன் இறக்க நேரிட்டது காந்தியின் பிம்பத்தை காந்திய நம்பிக்கையை இலங்கைத் தமிழ் மக்களின் நினைவுகளில் இருந்து உடைத்தெறிய வழிவகுத்து விட்டது என்பதே உண்மையாகும்.

அபயக்கரம் கேட்டோர் மேலே
அகண்ட காலால் மிதிக்கலாச்சா
பஞ்சசீலமும் மறந்து போச்சா
காந்தி கைத்தடி துவக்குமாச்சா..

என ஈழத்துக் கவிஞர்கள் தங்கள் ஏமாற்றத்தைப் பதிவு செய்தனர்.

1970களில் முகிழ்ந்த புதிய தலைமுறையினரே காந்திய வழியின் போதாமையைக் கவனத்தில் கொண்டு மாற்றுவழிகளைக் கண்டடைந்தனர். அம்மாற்று வழியும் பட்டறிவும்கூட வெளியில் இருந்து யாரும் கற்பித்தவை அல்ல.

1965களின் பின்னால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் எழுச்சி பெற்ற சாதிய எதிர்ப்புப் போராட்டங்களிலும் அதன் பட்டறிவிலும் இருந்தே மாற்றுவழி உருவாக்கம் பெற்றது.

1974 ஆம் ஆண்டில் களப்பலியான பொ.சிவகுமாரன் அம்மாற்று வழியின் முதல் பயணியாவான். மாற்று வழி கண்டறியப்பட்டபோதும் காந்தியம் என்னும் அமைப்பும், அறவழிப்போராட்டக் குழுவும் காந்தியச் சிந்தனையில் செயற்பட்டு வந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.



படிப்பகம்

padippakam

**03.** 1983 ஆம் ஆண்டில் நடந்த இனப்படுகொலைதான் ஈழப்போராட்டத்தின் தொடக்கம் என்னும் கருத்து இன்றும் உங்களில் சிலருக்கு இருக்கின்றதோ என்று ஐயுறுகின்றேன்.

அண்மையில் இளம் படைப்பாளி சோமீதரனின் இயக்கத்தில் வெளிவந்த எரியும் நினைவுகள் என்னும் ஆவணப்படம் 1981 ஆம் ஆண்டு நிகழ்வுகள் பற்றிப் பேசுகின்றது. அதனை நீங்கள் பார்த்திருப்பீர்கள் என்றே நம்புகின்றேன். யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்ட கதையைப் பேசும் அந்த ஆவணப்படம் அந்த ஆண்டைச் சுற்றியதான வேறு விடயங்களையும் பேசுகின்றது.

1983 ஆம் ஆண்டுக்கு நிகரான வன்கொடுமை இரண்டாண்டுகளுக்கு முன்னர் 1981 ஆம் ஆண்டில் நிகழ்ந்தது பற்றி காட்சி விபரணத்துடன் பேசுகின்றது. கட்டாயம் பாருங்கள்.

அதற்கும் மூன்றாண்டுகளுக்கு முன்னர் 1977 ஆம் ஆண்டு இடம்பெற்ற வன்கொடுமை பற்றி நீங்கள் அறியாதிருக்கக்கூடும். தமிழ்நாட்டில் எங்களால் வெளியிடப்பட்ட லங்காராணி நாவல் அந்தக் காலகட்டப் பின்னணியில் விரிகின்றது.

தற்போது அது மூன்றாவது பதிப்பாகத் தமிழ்நாட்டில் வெளியிடப்பட்டுள்ளது. இப்படியே பின்னுக்குப் பின்னுக்குச் செல்லச்செல்ல இந்த ஈழப்பிரச்சனையின் வேர்களை நீங்கள் நன்கு அறிய முடியும். அப்போதுதான் உங்களால் இவை வெறும் அதிகாரப் பரவலாக்கல் பிரச்சனை அல்லவென உணரமுடியும்.

ஆதலால் பின்நோக்கிய சில வரலாற்று விடயங்களை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

வெள்ளையரின் ஆட்சிக்காலத்தில் காலத்திற்குக் காலம் இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்ட அறிஞர்களைக் கொண்ட குழுக்கள் இலங்கைக்குத் தேவையான அரசியல் சீர்திருத்தங்களைப் பரிந்துரை செய்தன. இதன்படி 1927 ஆம் ஆண்டில் டொனமூர் என்பவரால் பரிந்துரைக்கப்பட்ட சீர்திருத்தத்தின்படி, இனவாரி பிரதிநித்துவம் ஒழிக்கப்பட்டு பிரதேசவாரி பிரதிநித்துவம் அறிமுகமானது. அதன்பயனாக 1936 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட மந்திரிசபை தனிச் சிங்கள மந்திரி சபையாக பரண் ஜெயதிலகாவால் அமைக்கப்பட்டது.

அப்போது பரண் ஜெயதிலகா கூறிய கூற்று, கடந்த நூற்றாண்டில் தமிழர்களுக்கெதிராக வெளியிடப்பட்ட இனவெறிக் கருத்துக்களில் மிகவும் மோசமானதும் முதன்மையானதுமாகும். அவர் இவ்வமைச்சரவை ஏன் அமைக்கப்படுகிறதென்றால் சிறுபான்மையினராகிய உங்களின் (தமிழர்களின்) தயவின்றி எங்களால் (சிங்களவர்களால்) ஆட்சியமைக்க முடியும்; எங்களுக்கும் திறமையுண்டு; உங்களுக்கு உரிமை வேண்டுமானால் எங்களைக் கேட்டுத்தான் பெறவேண்டும் எனக் காட்டுவதற்குத்தான் எனும் கருத்துப்படக் கூறியுள்ளார்.



படிப்பகம்

padippakam

பின்னாட்களில் சிறிலங்காவின் பல தலைவர்களும் இத்தொனியில் கருத்துரைத்துள்ளனர். அண்மையில் காலமான சிறிலங்காவின் அதிபராக இருந்த டி.பி.விஜயதுங்கா, சந்திரிகா குமாரதுங்கா போன்றவர்கள் இக்கருத் துக்களை மறுவுருவாக்கம் செய்துள்ளனர்.

கடந்த வாரத்தில் சிறிலங்காவின் இராணுவத்தளபதியும் அவற்றைப் பின்பற்றி திருவாய் மலர்ந்தருளி உள்ளார்.

இலங்கைத் தீவு சுதந்திரம் பெற்ற பத்து மாதத்திற்குள் 19.11.1948 ஆம் ஆண்டில் பெரும்பான்மை அரசால் (சிறிலங்கா) கொண்டு வரப்பட்ட குடியுரிமைச் சட்டத்தின் மூலம் தமிழருள் ஒரு பகுதியினரின் குடியுரிமை மறுக்கப்பட்டது. இதன் மூலம் அவர்கள் நாடற்றவர் களானார்கள். 1947 ஆம் ஆண்டுத் தேர்தலில் 8 உறுப்பினரைப் பாராளுமன்றத்திற்கனுப்பிய மக்கள் இச்சட்டம் கொண்டு வந்ததின்பின் எந்த ஒரு உறுப்பினரையும் அனுப்ப இயலாத நிலை ஏற்பட்டது.

1956 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் நாங்கள் வந்தால் 24 மணி நேரத்தில் சிங்களத்தை மட்டும் ஆட்சிமொழியாக்கு வோம் என அறிவித்தனர். அறிவித்ததின் மூலம் பண்டாரநாயக்கா தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு சிங்களப் பெரும்பான்மை மக்கள் வாக்களித்ததின் மூலம் ஆட்சிக்குக் கொண்டு வந்தனர்;.

1956 ஆம் ஆண்டு மே மாதம் ஆட்சிக்கு வந்தவர்கள் சூன் மாதம் தாங்கள் அறிவித்தபடி சிங்களம் மட்டும் எனும் சட்டத்தைக் கொண்டு வந்தனர்.

1958 ஆம் ஆண்டு சனவரியில் இன்னொரு சட்டம் இதே ஆட்சியினரால் கொண்டு வரப்பட்டது. அச்சட்டத்தின்படி வண்டிகளில் பொறிக்கப்படும் எண்ணின் முதலெழுத்து ஸ்ரீ எனச் சிங்களத்தில் குறிப்பிடப்பட்டது.

1949 ஆம் ஆண்டில் ஈழ நிலப்பகுதியான கிழக்குப்பகுதியில் கல்லோயா அபிவிருத்தித் திட்டம் எனும் பெயரில் சிங்களவர் குடியேற்றப்பட்டனர். இதன் மூலம் தமிழரின் நிலப்பகுதியைப் பறிக்கும் படுபாதகமான திட்டம் தொடங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஈழப்பகுதிகளில் அரசு உதவியுடன் சிங்களவர் குடியேற்றப்பட்டனர்.

மேற்படி நடவடிக்கைகள் காரணமாகத் தமிழருக்கும் சிங்கள வருக்கும் ஏற்பட்ட மனக்கசப்பு 1958 ஆம் ஆண்டில் மிகப்பெரும் கலவர மாக உருவானது. பல தமிழர்கள் கொல்லப்பட்டனர். தமிழ்ப் பெண் களின் மார்புகளில், தொடைகளில் சிங்கள சிறி (ஸ்ரீ) குத்தப்பட்டது. சொத்துக்கள் சூறையாடப்பட்டன.

சிறிலங்காவிலிருந்து தமிழர்கள் ஈழத்தை நோக்கி ஓடி வந்தார்கள். சிறிலங்காவின் தலைநகரான கொழும்பிலிருந்து தமிழர்கள் கப்பலில் அனுப்பப்பட்டனர்.



படிப்பகம்

padippakam

நீங்கள் அறிந்திருக்கும் 1983 ஆம் ஆண்டில் மட்டுமல்ல 1977 இல், 1958 இல் எல்லாம் தமிழர்கள் கப்பலில் ஏற்றப்பட்டு யாழ்ப்பாணம் திருகோணமலை ஆகிய நகரங்களுக்கு அனுப்பப்பட்டனர். அப்போது ஈழத்தமிழர்களின் தாயகம் எதுவாக இருக்க முடியும். இலங்கைத்தீவின் வடக்கு கிழக்கு பிரதேசங்கள்தானே.

இன்றைக்கு ஈழப் போராட்டம் ஆயுதப்போராட்டமாக உள்ள தற்கும், அதன் விடுதலை அவாவாக தமிழீழம் தனியரசாக வேண்டு மென்பதற்கும் 1983 ஆம் ஆண்டுதான் காரணம் என்பதல்ல.

ஈழத்தமிழர்களுக்கான தாயகக் கோட்பாடு 1920களில் இருந்தே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. 1977 ஆம் ஆண்டு தேர்தலில் மக்கள் வாக்களித்ததன் மூலம் தமிழர்க்கான தாயக விடுதலைக் கோட்பாடு மக்கள் ஆணை பெற்ற அரசியல் கோரிக்கையாக மாற்றப்பட்டது.

அதுவே இன்றைய தலைமுறையினரிடம் அது கைமாற்றப் பட்டிருக்கின்றது என்பதே உண்மையாகும். அதனையே 1984 ஆம் ஆண்டு திம்புவில் நடந்த பேச்சுவார்த்தையின் போது போராளிகளும் மிதவாத தலைவர்களும் இணைந்து நான்கு அம்சம் கொண்ட கோரிக்கையாக முன்வைத்தனர்.

1970களின் பின்னால் முகிழ்ந்த இப்போராளித் தலைமுறை காந்தியத்தில் நம்பிக்கை இழந்து ஆயுத வழிப் போராட்டத்தில் தங்கள் முன்னோரின் கோரிக்கைக்காக போராடி வருகின்றார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அப்போராட்டத்திற்குத் தலைமை அளித்து போராட்டத்தை நெறிப்படுத்தி வருகிறார்கள். ஈழப் போராட்டத்தின் வெற்றியிலேயே உலகத் தமிழினத்தின் வாழ்வும் வரலாறும் தங்கியுள்ளது. ஏனெனில் வரலாறு என்பதே வெற்றி பெற்றவர்களுக்குத்தான்.

நண்பர்களே,

ஈழப்போராட்டத்திற்கு முன்னுதாரணங்கள் எதுவுமில்லை. உலகின் எந்த வல்லாண்மையாளரின் நலன்களுக்காகவும் இப்போராட்டம் முன்னெடுக்கப்படவில்லை.

எங்கள் கால்களில் எங்கள் பலத்திலேயே நாங்கள் தங்கி இருக் கிறோம். நாங்கள் விடுதலை அவாவும், மனித நேயத்தை முன்னிறுத்தும், மற்றவர்கள் உரிமையை மதிக்கும், நட்பை தோழமையையே தேடுகின்றோம். உங்களிடமும் அதனையே எதிர்பார்க்கிறோம். உங்களின் தோளணைவு வெற்றிக்கு இட்டுச் செல்லும்.

நட்புடனும் தோழமையுடனும்

**கி.பி.அரவிந்தன்**

02 ஒக். 2008



படிப்பகம்

padippakam

# எங்கள் நினைவுகளை உங்களிடம் கையளித்துள்ளோம்

**ஈழத்திலிருந்து**

தமிழக மக்களுக்கு ஈழப்புரட்சி அமைப்பின்
தோழர் சுந்தர் எழுதிய கடிதம்

வாழத் துடித்த ஒரு மானுடக் கூட்டத்தின் பிரதிநிதிகளாய் நாங்கள் உங்களுக்கு அறிமுகமானோம். 77 ஆம் ஆண்டு ஆகஸ்டு கலவரம், தமிழகத் தேசிய சக்திகளை எம்மீது அனுதாபம் கொள்ளச் செய்தது. இந்திய உபகண்டப் பிரச்சினைகளில் ஈழப் பிரச்சனையும் பின்னிப் பிணைந்திருப்பதனால், இந்தியாவின் முக்கியத்துவத்தை உணர்ந்து எமது போராட்டத்திற்குப் பின் தளமாய் இந்தியாவைக் கொள்ள நாம் எண்ணம் கொண்டோம். இந்தியாவின் உள்ளாம்ச முரண்பாடுகள் எம்மைப் பாதிக்காவண்ணம் அவர்களின் உதவியை, ஆதரவை வகையாகப் பயன்படுத்தத் திட்டமிட்டோம். '77 இன் இலங்கைக் கலவரம் எம்மை இத்தீர்மானத்திற்கு உந்தித் தள்ளியது. அவ்வேளையில் தொடக்கக் கால ஈழப்போராளிகள், தேசிய சக்திகளுடன் தம்மை அடையாளப்படுத்தியிருந்தனர். பரவலான அபிப்பிராயத்தை



படிப்பகம்

padippakam

அவ்வேளையில் ஈழப்போராட்டம் பெற்றிருக்கவில்லை. '77 இன் பின்னால் ஈழத் தேசிய இனப் போராட்டத்தின் தீர்மான சக்தியாய் தமிழீழ விடுதலைப் புலிகள் தம்மை அடையாளப் படுத்தி, உருப்பெறத் தொடங்கியிருந்தனர். இவ்வேளையிலேயே நாங்கள் இங்கு அறிவுஜீவிகள் மத்தியில் எம்மை அறிமுகப் படுத்திக்கொண்டோம். ஈழப் போராட்டத்தின் தத்துவ வேறுபாட்டை, உள் முரண்பாடுகளை, சிக்கல்களை, சரியான திசையை நாம் புரியவைத்தோம். தமிழக அறிவு ஜீவிகளில் சிலர் எம்மைப் புரிந்து கொண்டனர். 'தமிழக ஈழ நட்புறவுக் கழகமாய்' 1977 இல் தம்மை அமைப்பு வடிவத்திற்கு உட்படுத்திக் கொண்டனர். கழகமே ஈழப் போராட்டத்தின் ஆதரவாளர்களை அமைப்பு வடிவமாகக் கொண்ட முதல் ஆதரவாளர் அமைப்பாகும். இவ்வமைப்பு மாதாந்தக் கூட்டங்களை நடத்தியது. எம்முடன் அரசியல் உறவுடன் அல்லாது, எமது இலக்கியம், கலை, சமூக இயல், வரலாறு இவற்றுடனும் உறவு கொண்டது. சிறு வெளியீடுகளை வெளிக்கொணர்ந்தது. 'இலங்கையில் ஈழம்' என்னும் சிறு நூல் அவ்வேளையில் ஈழப் போராட்டத்தை, அதன் வரலாற்றைப் புதிய கோணத்தில் அறிமுகப்படுத்தியது. இதனைக் கண்டு தமிழீழத் தேசிய சக்திகள் தம்மை தமிழகத் தேசிய சக்திகளுடன், அவற்றைப் பிரதிபலித்த கட்சிகளுடன் தம்மை நெருக்கமாய் அடையாளப்படுத்திக் கொண்டன. ஒவ்வொரு தமிழக கட்சிகளும், ஒவ்வொரு தமிழீழ இயக்கங்களை ஞானக் குழந்தைகளாக சுவீகரித்துக்கொண்டன. நாம் இவற்றில் இருந்து ஒதுங்கி, பார்வையாளர்களாய் இருந்ததுடன் தமிழகத்தின் முற்போக்காளர்களிடம் எம்மை அடையாளப்படுத்தினோம். அவர்களிடம் நண்பர்களாய் உறவு கொண்டோம்; தோழமையை வளர்த்துக்கொண்டோம்; கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டோம். விவாதித்தோம்; தாயகத் தமிழன், சேயகத் தமிழன் என்ற மனப்பாங்குடன் நாம் உறவு கொள்ளவில்லை. நாம் இருவரும் மனித நேயத்தையே உயர்த்திப் பிடித்தோம். மனித குலத்தைத் துன்பங்களும், துயரங்களும் சூழுகையில் துன்பப்பட்டோம்; எதிர்கொள்ளும் பக்குவம் பெற்றோம்; ஆற்றலை வளர்த்தோம். உலகெங்கும் ஆன அடக்குமுறைகளை எதிர்கொள்ளும் ஒவ்வொரு போராளியையும், தோழனையும் நினைவு கொண்டோம். அவர்கள் உணர்வுகளுடன் இறுக்கமானோம். அப்போராளிகளின் வெற்றிகள் எமக்கு உற்சாகமூட்டின. அவர்களுடைய அனுபவங்களை நாம் உள் வாங்கிக்கொண்டோம். எங்களுக்கும் இந்தியாவிற்குமான, குறிப்பாகத் தமிழகத்திற்குமான உறவு இப்படித்தான் இருந்தது. அறிவுஜீவிகளுடன் ஆரம்பித்த எமது உறவு, இலக்கிய அமைப்புகள், பெரியாரின் கருத்துக்களை ஏற்றுக் கொண்டவர்கள் என விரிவடையத் தொடங்கியது. அப்போது நாம் 'லங்கா ராணி' என்ற நாவலை வெளியிட்டோம். இந் நூல் எமக்குப் பரவலான தொடர்புகளைப் பெற்றுத் தந்தது. எமது வெளியீடுகளை அனுப்பிக் கொண்டிருந்தோம். கருத்துக்களில் இணைந்



படிப்பகம்

padippakam

தோம். ஆசிரியர்கள், பேராசிரியர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலை இலக்கியவாதிகள், டாக்டர்கள், இளம் வக்கில்கள், முற்போக்கு எண்ணம் கொண்ட இளைஞர்கள், பல்லவன் பேருந்து ஊழியர்கள், பேச்சாளர்கள், மாணவர் அமைப்பினர், இளைஞர் அணியினர், சிற்றூழியர்கள், ஆலைத் தொழிலாளிகள், இப்படிப்பட்ட பல மட்டங்களில் தொடர்புகள் இறுக்கமாகின. இவற்றை விடவும் கிராமப்புறத்து விவசாயிகள், இளைஞர்கள், கரையோர மீன்பிடித் தொழிலாளர்களும் எம்மீது அன்பு கொண்டிருந்தனர். இவர்களுடன் கழிந்த எமது பொழுதுகள் இனிமையானவை. சென்னை நகரில், கூவம் நதிக் கரை ஓரமும், பக்கிங்காம் கால்வாய்க் கரை ஓரமும் நாம் வாழ்ந்த பகுதிகளாய் இருந்தன. குடிசை மாற்று வாரியக் குடியிருப்புக்களே எமது வதிவிடங்களாய் இருந்தன. இந்த மக்களிடம்தான் நாம் தமிழகத்தின் ஆத்மாவை, மனிதத்துவத்தைத் தரிசித்தோம். நாங்கள் அழுகையில் அவர்களும் அழுதார்கள்; நாங்கள் சிரிக்கையில் அவர்களும் சிரித்தார்கள்; எம்முடன் அவர்கள் பட்டினி கிடந்தனர். எமது பெரும்பாலான சாப்பாட்டுப் பொழுதுகள் இவர்களது இல்லங்களிலேயே நிகழ்ந்தன. ஒருவர் முதுகின் மேல் ஒருவர் ஏறி நின்று சுவரொட்டி ஒட்டினாம். எங்களுக்கு அவசியமான நேரங்களில் இவர்கள் கடன் பட்டனர். நாம் முன்னேறிச் செல்வதில் இவர்கள் ஆர்வம் காட்டினர்; உற்சாகம் தந்தனர். சிறந்த நண்பர்களை நாம் இங்கு பெற்றிருக்கிறோம். எம்மைப் புரிந்து கொள்ளாமல் முரண்பட்டுப்போன "தமிழக ஈழ நட்புறவுக் கழகம்" தற்போது எதார்த்தங்கள் புரிகையில் குற்ற உணர்வுடன் எம்முடன் மீண்டும் உறவு கொள்ள கூச்சம் கொள்கின்றனர். ஆனாலும் "ஈழ நண்பர் கழகம்" மூலம் நாம் இன்று பரந்த உறவைப் பெற்றிருக்கிறோம். கொடிய பசி வேளைகளில், வெயிலின் கொடுமையில் அலைந்து திரிகையில், எத்தனைக் குடும்பங்கள் எங்களை அரவணைத்தன! முகமலர்ச்சியுடன், விருந்தோம்பும் உணர்வுடன் எங்கள் கவலைகளை, சோகங்களை, கோபங்களை வருடிக்கொடுத்தனர்; நாங்கள் அவர்களைத் தாயாய், தந்தையாய், தோழராய், உறவினர்களாய் மதித்தோம்.

இன்னும் புலராத எங்களின் இந்தப் பொழுதிலும், எத்தனையோ நினைவுகள் குமிழிடுகின்றன. தமிழகத்தின் மாவட்டம் தோறும் நடைபெறும் மாநாடுகளின் பந்தல்களில் கீழ் நாங்கள் உங்களைச் சந்தித்தோம். சந்திப்புகள் அனைத்திலும் விவாதங்கள், கருத்துப் பரிமாற்றங்கள், சந்தேக விளக்கங்கள், சண்டைகள், உறவுகள். தமிழகத்தின் இயற்கையை ரசித்தோம். இந்தியாவின் சிறப்புக்களை வியந்தோம். இந்தியாவில் ஒரு மானுடம், உழைக்கும் மானுடம் வீழ்ந்து கிடக்கிறது, அதன் ஆன்மாவை எம்மால் தரிசிக்க முடிந்தது. இந்தியாவில் உள்ளக முரண்பாட்டின் விளைவுகளாய், சோகமும், வேதனையும், வேலையில்லாமையும், பட்டினிச் சாவும், தெருவோர வாழ்வும்; அந்த வாழ்விலும் அவர்களின் களங்கமற்ற சிரிப்பும் மகிழ்வும்; அவர்களின்



படிப்பகம்

padippakam

சண்டைகளையும்; கோபங்களையும் அதனுள் இருக்கும் ஆற்றல்களையும், அதன் மன ஓசையைப் புரிந்து கொள்ள முடியாத வித்தகம் செய்யும் தத்துவ வாதிகளையும், சமூக அமைப்பின் கோரங்களையும், நாங்கள் இங்கே கண்டோம். தேநீர் ஏந்தி உணவைச் சுவைத்த படியும்; கன்னிமாராவிலும், தேவநேயப் பாவாணர் நூலகத்திலும், அதன் மகாநாட்டுக் கூடங்களிலும், கருத்தரங்குகளிலும், ஊர்வலங்களிலும், நாங்கள் கிளர்ச்சியுடன் சந்தித்துக் கொண்டோம். குற்றாலச் சாரலில் நனைந்தும்; தேக்கடியிலும், பெரியாறு அணைக்கட்டிலும், மேற்கு மலைத் தொடர்ச்சிக் காடுகளில் அலைந்தும்; ஊட்டிக் குளிரில் விறைத்தும்; கொடைக்கானல் குளிரில் படகு விட்டும்; கோவில்பட்டி, சிவகாசி, அருப்புக்கோட்டை கரிசல் நிலத்தில் வெயிலில் வாடியும்; சேலத்தில், ஆத்தூரில் செம்மண் பரப்பைக் கண்டு வியந்தும்; வண்டிப் பெரியாரில், கடலூரில் மலையகத்தின் சோகத்தை எண்ணியும்; சிவகாசியின் அச்சுத் தொழிலையும், தீப்பெட்டி உற்பத்தித் திறனையும் கண்டு ஆச்சரியம் கொண்டும்; சிறுவர்கள் உழைப்பினைச் சுரண்டும் கோரத்தைக் கண்டு துணுக்குற்றும்; கிராமத்து அகலவாய்க் கிணறுகளிலும், மடைகளிலும் நீந்தி நீராடியும்; கம்பங்காட்டிலும், சோளக் கொல்லைகளில் வயல் வரப்புக்களில் நடந்து திரிந்தும்; கிராமங்கள் தோறும் பண்டையக் கலைகளைக் காண்பதற்காய் இரவுகள் விழித்தும்; கும்மியும், குரவையும், கோலாட்டமும், தெருக்கூத்தும் கண்டு ரசித்தும்;

நண்பர்களே! உங்களோடிருந்த நினைவுகள் எம்மைக் கிளர்ந்தெழச் செய்கின்றன.

எந்த நினைவுகளை நாம் இந்நேரத்தில் உங்களுடன் பகிர்ந்து கொள்ள முடியும்!

ஈழம் பற்றி ஈழப் போராட்டம் பற்றி தமிழக மக்கள் கனவுக்குள், மாயைக்குள் ஆழ்த்தப்பட்டுள்ளனர். செய்திகள் முழுமையாக அவர்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. ஆரம்பத்தில் எங்களைச் சந்தித்தவர்கள், 'நீங்கள் மலையாளமா பேசுகிறீர்கள்?' என்றனர். நாம் தமிழ் பேசும் மக்கள் என்பதையும், தமிழ் பேசுகிறோம் என்பதையும் நம்ப வைப்பது என்பது பெரிய செயல் எங்களுக்கு; அப்புறம்' "பிழைக்கப் போனவன், அங்கு ஒத்து வாழ்வது தானே? என்ன தனி நாடு கேட்பது? கொழும்புச் சிங்களவர், யாழ்ப்பாணத் தமிழர்கள் இவர்களுக்கு சண்டை, அய்யோ பாவம் தமிழர்கள்; தமிழர்கள் கொல்லப்படுகின்றனரே, கற்பழிக்கப்படுகின்றனரே" என்ற ஓலம். அப்புறம், "நான்கு கோடித் தமிழர்கள் நாங்கள், நாங்கள் புறப்பட்டு வந்தோமானால் இலங்கை தாங்காது" என்ற வீரச் சொற்கள்; அப்புறம், உலகுக்கு அறிவித்து விட்டு பயணம் சென்றனர்; கருப்பு பாட்ஜ் அணிந்து துக்கம் கொண்டாடினர்; இராணுவத்தை அனுப்பு என்று கூச்சலிட்டனர் இராணுவம் தற்போது அனுப்பப்பட்டு விட்டது. போராட்டம் முடிந்து விட்டது



படிப்பகம்

padippakam

தமிழக மக்கள் பெருமூச்சு விட்டனர்; தங்களின் வழமைக்குத் திரும்பிவிட்டனர்.

மலையகத்தில் 10 இலட்சம் தமிழ் பேசும் மக்கள் கைவிடப்பட்டுள்ளனர். அவர்களின் துயரத்தை ஏன் தமிழக மக்கள் உணரவேயில்லை. இலங்கை நாட்டை வளப்படுத்தியவர்கள் இன்று 'நாடற்றவர்கள்'. மூன்று தலைமுறைக்கும் மேலாக சோகத்தையே சுமையாக்கி, கனவுகளையே உணவாக்கி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். 150 வருடங்களுக்கு முன்னால் தமிழக மண்ணில் இருந்துதான் உங்கள் சகோதரர்கள் மலேசியாவுக்கும், பிஜி தீவுக்கும், இலங்கைக்கும் கூலிகளாக அழைத்துச் செல்லப்பட்டனர். 150 வருடங்களின் பின்னால் - மூன்றாம் தலைமுறைக்குப் பின்னால் - அவர்கள் இங்கே திரும்பி வந்த போது, எந்தப் பாவமும் அறியாத அவர்களை, தமிழக மக்கள் ஊரின் புறத்தே ஒதுக்கி . வைத்திருக்கும் காட்சியையும் கண்ணீருடன் நோக்குகிறோம். வேற்று மொழி மாநிலங்களுக்குக் கொத்தடிமைகளாய் இவர்கள் விற்கப்பட்ட கதை எம் நெஞ்சத்தில் வலி ஏற்படுத்தியுள்ளது. இக் கொத்தடிமைகளை மீட்க அவர்களின் துயரங்களை அரங்கத்திற்குக் கொண்டு வந்த தமிழக நண்பர்கள் எங்கள் நினைவிற்கு வருகின்றனர். இவர்களை நண்பர்களாய் பெற்றதில் நாம் பெருமையடைகிறோம்.

தமிழக மக்கள் இன்று வெறும் வீர வழிபாட்டிற்குள் மூழ்கி உள்ளனர். துப்பாக்கி ஏந்திய ஈழப் போராளிகளின் படங்கள் தமிழக மக்கள் மத்தியில் பெரும் வரவேற்புப் பெற்றிருந்தது. ஏனைய சமுதாயக் குழுக்களை விடவும், தமிழக மக்கள் வீரக் கனவுகளில் ஆழ்வதிலும், வீர வழிபாட்டில் மூழ்கி விடுவதிலும், தங்கள் வீரத்தை துறந்துவிட்டனர். மதுரை வீரனும், கருப்பசாமியும், சில குல தெய்வங்களும் அவர்கள் வழிபாட்டிற்குரிய சிலை வடிவங்கள் அன்றைய குலம் காத்த வீரம் செறிந்தவர்களாக, தனிமனிதர்கள். உயர்த்திப்பிடிக்கப்பட்டதை வரலாற்றுப் பொருள் முதல்வாதம் தெரிந்த நாம் எப்படி மறந்து விட முடியும். அந்த மாயைக்குள் இருந்த அவர்களை வெளிக்கொணர்வதுதான் எவ்வளவு கடினம் என்பதில் நாம் பெற்ற அனுபவங்களை மறக்க முடியுமா? இந்த மாயைக்குள் சிக்காதவர்கள் ஆதலால் தானே நீங்கள் எங்களுக்கு நண்பர்களானீர்கள்!

வடமராட்சி துன்பத்தை விடவும், கிழக்கு மாகாண விவசாயிகள் பெற்ற துன்பங்கள் கொடுமையானது. அவர்களின் போராட்ட வாழ்வு மகத்தானது; அவர்கள் துயரங்கள் அளப்பரியது. மூதூரிலும், மட்டக்களப்பு கொக்கடிச் சோலையிலும், தங்கவேலாயுத புரத்திலும் அவர்கள் மரணத்துள் வாழ்ந்தார்கள். ஆனால் தமிழக மக்களும், அவர்களின் தளபதிகளும் இந்த மக்களின் துயரத்தின் போது மௌனமாக இருந்தனர்; எமது இதயத்தில் ரத்தம் கசிந்தது. யாழ்ப்பாண விளம்பரத்திற்குள், அந்த மக்கள் அடைந்த சோகம் மறைக்கப்



படிப்பகம்

padippakam

பட்டபோது, நண்பர்களே! நீங்கள் தாம் எங்கள் கவலைகளில் பங்கு கொண்டீர்கள்.

போராளிகள் வானத்தில் இருந்து குதித்த தேவர்கள் என்று தான் தமிழக மக்கள் எம்மை நம்பியிருந்தனர். வீர வழிபாட்டில் மூழ்கி இருக்கும் சமுதாயத்தில் இது தவிர்க்க முடியாதது ஆகும். தமிழக ஆட்சி மாற்றங்களைக் கவனிப்போர், இவ் ஆட்சி மாற்றங்கள் வீர வழிபாட்டு மனப்பான்மையின் பங்காகியிருப்பதை உணரலாம். இக் கருத்தை நாம் உடைக்க முயற்சித்தோம். நாங்கள் போராளிகள், இரத்தமும் சதையுமான மனிதர்கள்; இந்தச் சமூக அமைப்பின் விளைபொருட்கள், இந்தச் சமூக அமைப்பின் எச்சங்கள், எங்களையும் ஒட்டியுள்ளன. போராளிகளை, போராட்டத்தை இவ்வகையிலேயே நோக்குங்கள் என்று அடித்துச் சொன்னோம். ஆனால் நண்பர்களே! உங்களால் தான் அந்த உண்மையை உணர்ந்து கொள்ளமுடியும். தமிழக மக்களும், போராளிகளின் சமூக விரோதச் செயல்களையும், சட்ட ஒழுங்கு மீறலையும் 'கண்டு முகத்தைச் சுழித்தனர்; ஏளனமாய் நோக்கினர். நாங்கள் அனிச்ச மலராய் சுருங்கிப் போனோம். இச்சமூக அமைப்பை, அதன் குணாம்சத்தை, அதன் வெளிப்பாடுகளைப் புரிந்து கொண்ட நண்பர்கள் எங்களை அரவணைத்தனர். ஆதரவு காட்டினர்.

ஈழத்தின் உள்ளக முரண்பாடுகள் உங்களுக்கு இங்கே மறைக்கப்பட்டுள்ளது; நாங்கள் அவற்றை வெளிப்படையாகவே உங்கள் முன் வைத்தோம். தேசிய இனப்பிரச்சனையின் கூர்மைக்குள் உள்ளக முரண்பாடுகள் மறைக்கப்பட்டிருந்தன. இவற்றைக் கேள்விப்பட்ட வேளையில் உங்களுக்குக் கசப்பாகத் தான் இருந்தது. ஏனெனில் இங்கிருந்த உள்ளக முரண்பாட்டின் கோரங்கள் உங்களை மிகவும் பாதித்திருந்தது. தேசிய இனப் போராட்டத்தின் உச்சத்தில் உள்ளக முரண்பாடுகளின் கோரங்கள் நீங்கிய ஒரு சமுதாயம் ஈழத்தில் அமைய வேண்டுமென நீங்கள் விரும்பினீர்கள். அதற்காகவே ஈழப் போராட்டத்தை திரிகரண சுத்தியுடன் ஆதரித்தீர்கள். ஏற்றத்தாழ்வும், சாதிய வேறுபாடும், சரண்டலும், பிற்போக்குத்தனங்களும் நீங்கிய ஒரு ஈழத்தை உருவாக்க நாங்களும், நீங்களும் கனவு கண்டோம். ஆனால் இந்திய சுதந்திரப்போராட்ட வேளையில் ஒரு கட்டத்தில் பாரதி பாடிய பாடல் ஒன்று ஏனோ இவ்வேளையில் எங்களுக்கு நினைவிற்கு வருகிறது.

"தண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா இப்பயிரை,

கண்ணீரால் வளர்த்தோம் கருகத்திருவுளமோ" என்ற இவ்வரிகள் எங்களுக்கு மிகச் சரியாகப் பொருந்துமா என்பது தெரியவில்லை. தற்போதைய சூழ்நிலைமைகளை 'பாலம் இதழின் இன்னொரு பக்கத்தில் தோழர் பாலகுமாரன் விளக்கியிருக்கிறார்.

வாடிய பயிரைக் கண்டு வாடும் தார்மீக சிந்தனையை முற்றாக நிராகரித்தவர்கள் நாங்கள்



படிப்பகம்

வாடும் பயிருக்கு எவ்வகையில் தண்ணீர் பாய்ச்சுவது என்பது இதுவரையான எமது போராட்ட வரலாற்றின் அடிப்படைக் கொள்கையாகும். இந்த அடிப்படையை எவ்வேளையிலும் நாம் கைவிடத் தயாராயில்லை. நண்பர்களே! இது விடைபெறும் நேரம் தானா என்பதும் தீர்மானமாகவில்லை. ஆனாலும் எங்கள் நினைவுகள் உங்களின் அன்பு, நட்பு, தோழமை இவற்றையே தாங்கியுள்ளன. உங்களிடமும் இவற்றையே கையளித்துள்ளோம்.

என்றென்றும் அன்புடனும், நட்புடனும், தோழமையுடனும்

**சுந்தர்.**

**நன்றி: பாலம்**

padippakam

# இலங்கையில் இன்னொரு போரை நாங்கள் விரும்பவில்லை ஈழத்துக் கவிஞர் கி.பி.அரவிந்தன்

## நேர்காணல்: மணா

குழந்தை தோளில் சரிகின்றது
நெஞ்சுக்குள் ஏதோ குமைகின்றது
நீங்கள் அகதியானது உங்களுக்குச் சரி
என்னை ஏன் அகதியாக்கி அலைச்சலாக்கி..
மடிபற்றி எழுகின்றது கேள்வி

**- கனவின் மீதி தொகுப்பில் கி.பி.அரவிந்தன்**

இனி ஒரு வைகறை, முகம்கொள் என்கிற கவிதைத் தொகுப்புகளைத் தொடர்ந்து கனவின் மீதி மூலம் ஈழத்துக் கவிதையுலகில் தனியிடத்தை உருவாக்கிக் கொண்ட கி.பி. அரவிந்தனுக்குப் பல முகங்கள். பதினேழு வயதிலேயே வீட்டை விட்டு. போராட்டத்தில் இறங்கிய இவருடைய சொந்தப் பெயர் கிறிஸ்டோபர் ஃபிரான்ஸிஸ். இனப்பிரச்சினையினால் சொந்த நாட்டை விட்டுப் புலம்பெயர்ந்து பதினைந்து ஆண்டுகளாக பாரீசில் குடும்பத்துடன் வசிக்கிறார். பல பத்திரிகைகளுடன் இணைந்து தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கிற இவர் பி.பி.சி. தமிழோசையின் பாரீஸ் நகர ஃப்ரீலான்ஸ் செய்தியாளராகப் பணியாற்றி வருகிறவர். ஐரோப்பிய தமிழ்த் தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகளிலும் பங்கெடுத்துக்



படிப்பகம்

padippakam

கொண்டிருக்கிற 53 வயதான அரவிந்தன், பல வருட இடைவெளிக்குப் பிறகு சென்னைக்கு வந்திருந்தார். ஹோட்டல் அறை ஒன்றில் இந்த நேர்காணலுக்காகச் சந்தித்தபோது தயக்கங்கள் இல்லாமல் ரொம்ப காலமாகப் பழகிய நண்பரைப்போல பல விஷயங்களைப் பகிர்ந்துகொண்டார். புலம்பெயர்வின் இடையறாத வலி தொற்றிய அவருடைய பேச்சு அவர் தங்கியிருந்த அறையைக் கதகதப்பு மிக்கதாக உணரச் செய்திருந்தது. இனி அவருடன் நிகழ்த்திய நேர்காணலில் இருந்து சில பகுதிகள்:

கிபி அரவிந்தன் (கி.பி. அன்:) 1953ஆம் வருடம் நான் பிறந்தது யாழ்ப்பாணத்தில். என் தாய் தந்தையரின் சொந்த ஊர் நெடுந்தீவு. என் பள்ளிப்படிப்பை ஆரம்ப காலத்தில் நெடுந்தீவிலும் பிறகு மட்டக்களப்பிலும் அதன்பின் தொடர்ந்தும் நான் படித்தது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில். எழுபதுகளுக்குப் பின்னால் தீவிரமான இயக்கச் செயல்பாடுகளில் ஈடுபடத் தொடங்கினேன். என் அப்பா அரசு ஊழியர். உணவுக்கட்டுப்பாட்டு திணைக்களத்தில் வேலை செய்தார். அம்மா மருத்துவத் தாதியாக யாழ் மருத்துவமனையில் பணியாற்றினார். நாங்கள் ஏழு பேர். நான் மூத்த ஆள். எனக்குக் கீழ் ஆறு பேர்.

● **மணா: 1960களிலேயே இனப் பாகுபாட்டுப் பிரச்சினை தொடங்கிவிட்டதா?**

**கி.பி. அ-ன்:** அப்போது நான் சிறுவனாக இருந்தேன். 60களில் நடந்த முக்கியமான நிகழ்வு சாதி எதிர்ப்புப் போராட்டம். அது கம்யூனிஸ்ட் கட்சி தலைமையில்தான் நடந்தது. நான் சிறு பையனாக இருந்தேன். அதில் ஈடுபடவில்லை. இலங்கையில் தமிழர்கள் மத்தியில் இறுக்கமான சாதி அமைப்பு இருந்தது. சாதிய ஒடுக்குமுறை நீண்டகாலமாக இருந்து வந்தது. 1965க்குப் பிறகு கம்யூனிஸ்ட் கட்சியினால் சாதி எதிர்ப்பு ஓர் இயக்கமாக முன்னெடுக்கப்பட்டது. மிகப்பெரிய போராட்டமாக மாறி துப்பாக்கிச் சூடுவரை சென்றது. தேநீர்க் கடைகளில் இரட்டைக் குவளை முறையை ஒழித்தல், சமபந்தி போஜனம் போன்றவை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன.

● **மணா: தமிழ்நாட்டில் திராவிட இயக்கங்கள் எடுத்துக்கொண்ட விஷயத்தை அங்கே பொதுவுடைமை இயக்கம் செய்ததா?**

**கி.பி. அ-ன்:** ஆமாம். சாதிய அடக்குமுறையை முக்கியமான பிரச்சினையாகப் பொதுவுடைமை இயக்கம்தான் எடுத்துப் போராடியது. சாதி எதிர்ப்பால் சமூகத்தில் சின்னதொரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. அதனால் சரிவு என்று சொல்ல முடியாது. சமூகக் குலுக்கம் என்று சொல்லலாம். சாதியப் படிநிலைகள் குலுங்கின. அப்போது ஏற்பட்ட சின்ன அதிர்வு, மனோ நிலைகளில் சின்னதொரு மாற்றத்தைக்



படிப்பகம்

padippakam

கொடுத்தது. இந்தச் சாதி எதிர்ப்புப் போராட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட உத்திகள், பயிற்சி முறைகள் பின்னாளில் ஈழப் போராட்டத்தில் உதவியாக இருந்தன. ஈழத்தின் ஆயுதப் போராட்டத்தின் வளர்ச்சியில் இந்தச் சாதி எதிர்ப்புப் போராட்டம் முன்னோடியாக இருந்தது.

● **மணா: இந்தப் போராட்டம் இலங்கையின் எந்தப் பகுதியை முன்னிறுத்தி நடந்தது.**

**கி.பி. அ–ன்:** சாதிய அடக்குமுறையின் தீவிரம் வெளிப்படையாக தெரிய வந்தது குடா நாட்டில்தான். இங்குதான் மக்கள் செறிவாக வாழ்ந்தார்கள். அதனால் சாதிய ரீதியான பிரச்சினை துலாம்பாரமாக தெரிய வந்தது. அதற்கான போராட்டம் கட்டாயத் தேவையாகவும் இருந்தது. அந்தப் போராளிகள் பயன்படுத்திய ஆயுதங்கள் பற்றிய அறிவுதான் பிறகு ஏற்பட்ட போராட்டத்திற்குக் கைமாற்றப்பட்டது.

● **மணா: தமிழகத்தில் 1960களில் மாணவர்கள் மத்தியில் இயல்பான மொழி உணர்வு, இன உணர்வு பரவலாக ஏற்பட்டிருந்தது. அந்தக் காலகட்டத்தில் திராவிட இயக்கங்கள் ஆட்சிக்கு வருவதற்கு அதுதான் பின்னணியாக அமைந்தது. அதுமாதிரியான ஓர் உணர்வு இலங்கையில் இருந்ததா?**

**கி.பி. அ–ன்:** 1950, 60களில் தீவிரமான செயல்பாடு கொண்டதாக கம்யூனிஸ்ட் கட்சி இருந்தது. இலங்கை அளவில் அரசியல் ரீதியாக செல்வாக்குப் படைத்தவர்களாக இருந்தார்கள். தமிழ் மக்கள் மத்தியில் எழுந்த தேசிய உணர்வு, தேசியம் பற்றியதான சிந்தனை தொடர்பாக கம்யூனிஸ்ட் கட்சிகள் அப்போது எந்தக் கருத்தையும் முன்வைக்கவில்லை. அதனால்தான் அது மக்களிடம் சரிவைச் சந்தித்தது. மக்களின் உணர்வை அவர்கள் முழுமையாகப் புறக்கணித்தார்கள். இலங்கை என்கிற தேசிய அளவிலான பார்வையுடன் எதையும் பார்க்க வேண்டும் என்பதான உணர்வில் கம்யூனிஸ்ட் கட்சியினர் இருந்தார்கள். ஆனால் இவர்கள் தொடக்க நிலையில் தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்று பேசியவர்கள்தான். பிறகு மாறிவிட்டார்கள்.

● **மணா: அந்தக் காலகட்டத்தில் அரசியல் உணர்வென்பது தவிர்க்க முடியாத விஷயமாக மாணவர்களிடம் இருந்ததா?**

**கி.பி. அ–ன்:** பொதுவாக இலங்கைத் தமிழர்களிடம் தமிழரசுக் கட்சியின் செல்வாக்குதான் அதிகம் இருந்தது. அக்கட்சியின் கருத்தோட்டம், எண்ணப்போக்கு என்பது இங்கிருந்த (தமிழகம்) திராவிட இயக்கத்தின் மொழி பற்றியதான கருத்துக்கள் எல்லாம் கிட்டத்தட்ட இணைவாக்கம் கொண்டதாக இருந்தன. தமிழ்



படிப்பகம்

padippakam

உணர்ச்சியை ஊட்டி ஊட்டி, மேன்மைப்படுத்தி அதைத்தான் தமிழரசுக் கட்சியினர் அரசியலாக்கினார்கள். ஆனால் அதற்கேற்ற வகையில் செயல்திட்டங்களோ, அதை வழிநடத்தும் முறைகளோ அவர்களிடம் சரியாக அமையவில்லை. இலங்கை அரசியலில் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வதில்தான் அவர்களுக்குக் கவனம் இருந்தது. அதை வைத்துக்கொண்டு தமிழ்பேசும் மக்களுக்குத் தீர்வைப்பெற்றுத் தர முயற்சித்தாலும் தோல்விதான் ஏற்பட்டது. 1965இல் தமிழரசுக் கட்சியும், ஐக்கிய தேசிய கட்சியும் சேர்ந்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கிறார்கள். அதில் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர் அமைச்சராகிறார். ஆனால் பாராளுமன்றத்தில் அடையாள அட்டை மசோதா போன்று மிக மோசமான சட்டங்களைக் கொண்டு வருகிறபோது தமிழரசுக் கட்சிக்குள் இருந்த தீவிரமான கருத்துக் கொண்டவர்களுக்கு இடையில் பெரிய முரண்பாடு தோன்றியது. தேசிய ரீதியிலான தீவிரநிலை எட்டும் அதே வேளையில்தான், சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தை முனைப்பாக முன்னெடுக்கிறது கம்யூனிஸ்ட் கட்சி. 1968 ஆம் ஆண்டு முக்கியமான காலகட்டம். மாணவர்கள் உலகில் எழுச்சிகளும், போராட்டங்களும் நிகழ்ந்தன. 65-70 காலகட்டத்தில் பார்த்தீர்கள் என்றால் வியட்நாம் போர், சேகுவாராவின் கொலை என உலகம் முழுவதும் வெவ்வேறான நிலைமை. 1970இல் இலங்கையில் புதிய ஆட்சி. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும் எல்எஸ்பியும் கம்யூனிஸ்ட் கட்சி எனச் சிறு சிறு கட்சிகள் சேர்ந்து ஆட்சிக்கு வருகிறார்கள். உடனடியாக அவர்கள் வந்து கல்வி பற்றியதான ஒரு கொள்கையை வெளியிடுகிறார்கள். அது தமிழ் மாணவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் விஷயம். தரப்படுத்துதல் என்ற முறையில் சொல்லப்பட்டது. இதை எதிர்த்து மாணவர்கள் அணிதிரண்டு வீதிக்கு வருகிறார்கள். அது கல்வி அடிப்படையில் கொண்டு வரப்படவில்லை. இனரீதியான ஒடுக்குமுறை என்று சொல்லி போராட்டத்தில் ஈடுபட்டார்கள். இன்றைக்கு முக்கியமாக இருக்கிறவர்களின் அரசியல் பயிற்சிக்கான தொடக்கநிலையாக அதைச் சொல்லலாம். நானும் மாணவர்களின் அந்தப் பேரணியில் கலந்து கொண்டேன் என்று பலரும் சொல்லுமளவிற்கு அது ஒரு தொடக்கப்புள்ளியாக இருந்தது.

- **மணா: உங்கள் குடும்ப அளவில் ஏதும் பாதிப்பு நிகழ்ந்ததா?**

**கி.பி. அ-ன்:** என் தந்தைக்கு பெரியார் கருத்துகளின் மீது ஈடுபாடு உண்டு. வீட்டில் நிறையப் புத்தகங்கள் வைத்திருந்தார். என்னுடைய சிறுவயதில் அவர் திராவிட கருத்துக் கொண்டவராக இருந்தார். ஆசைத்தம்பி, மு.கருணாநிதி, மதியழகன், சி.பி.சிற்றரசு, இப்படி பலரின் புத்தகங்கள் அவரிடம் இருந்தன. ஒரு பெட்டிக்குள் வைத்திருந்தார். பதினைந்தாவது வயதில் புத்தக வாசிப்புத் தொடங்கும்போது பெரியார்



படிப்பகம்

padippakam

மீது எனக்கு விருப்பம் வந்தது. அன்றைக்குப் பெரியாரின் சிந்தனைகளைச் சரியாகப் புரிந்துகொண்டிருப்பேனா என்று தெரியவில்லை. ஆனாலும் வீட்டிற்குள் ஒரு கலகக்காரன் மாதிரி மாறினேன். கிறிஸ்துமஸ்க்கு எல்லோரும் புதுஉடுப்புப் போடுவார்கள். நான் போடமாட்டேன். இப்படி அந்த வயதுக்கேற்ற சின்னச்சின்ன கலகங்கள். அப்பா நூலகத்திற்குச் சென்று புத்தகங்கள் எடுத்து வந்து வாசிப்பார். கல்கி, அகிலன் என அந்தக் காலத்து எழுத்தாளர்களின் நாவல்களை வாசிப்பது பழக்கம். வீட்டில் எப்போதும் பேப்பர் வாங்குவார்கள். நெடுந்தீவில் என்னுடைய அம்மாவின் பெரிய அண்ணர் வீட்டில் தங்கிக்கொண்டு படித்தேன். அந்த ஊருக்கு வள்ளம்(படகு) வந்தால்தான் பேப்பர் வரும். அதை எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். அந்த பேப்பரை வாசித்தபிறகுதான் மற்ற வேலைகளைப் கவனிப்பார்கள். நான் மதத்தால் ஒரு கத்தோலிக்கன். கத்தோலிக்க மத வெளியீடுகள் நிறைய வந்தன. எப்படியோ பத்திரிகைகளை வாசிக்கும் பழக்கம் தொடர்ந்தது. அதேவேளையில் யாழ் மத்தியக் கல்லூரியில் இரண்டு பேராசிரியர்கள் முக்கியமானவர்கள். எனக்கு வரலாறு படிப்பித்தவர் தமிழ்நாட்டில் உள்ள பச்சையப்பன், கிறித்தவக் கல்லூரிகளில் படித்தவர். திராவிட இயக்கக் கொள்கைக்காரராக இருந்தார். அண்ணாவின் திராவிட நாடெல்லாம் படித்தவர். அவர் பிரெஞ்சுப் புரட்சி பற்றியெல்லாம் சொல்லித் தரும்போது வெகு ஆர்வத்துடன் சொல்வார். எங்களுக்கு நெப்போலியன் பற்றி நிறைய கற்பனைகள் வரும். யூசுப் மாஸ்டர் என்று ஒருவர். அவர் ஜனநாயகம், வாக்களிப்பது எல்லாம் பொய் என்பார். என்ன ஜனநாயகம் என்பார். நாங்கள் படிக்கும்போது இலங்கை கல்வி அமைச்சகம் சியவச என்ற பரிசுத் திட்டத்தை அறிவிக்கிறது. இதை எல்லா மாணவர்களும் வாங்க வேண்டும் என்கிறார்கள். அது சிங்களத்தில் இருந்தது. தமிழர்கள் வாங்கக்கூடாது என்று புறக்கணித்தோம். கல்லூரித் தேர்வுகளை ஒரு மண்டபத்தில் எழுதிக்கொண்டிருக்கும்போது ஒரு ஆள் வந்து ஒவ்வொரு டேபிளிலும் டிக்கெட் வைத்துவிட்டுப்போனார். பரீட்சை எழுத மாட்டோம்; டிக்கெட் வாங்க மாட்டோம் என்று மறுத்தோம். இப்படி எங்களை முடுக்கி விட்டது அந்த வாத்தியார்தான். நான் மாணவர் நிலையில் தமிழரசுக் கட்சியில் ஈடுபாடு கொண்டிருந்தேன். அவர்கள் புரட்சிகரமாக எதாவது செய்வார்கள் என்று நம்பினேன். பகத்சிங் பற்றியெல்லாம் படித்திருக்கிறேன். ர.சு.நல்லபெருமாளின் கல்லுக்குள் ஈரம், போராட்டம் நாவல்களைப் படித்த அனுபவம். இதெல்லாம் சேர்ந்து எண்ணங்களில் மாற்றங்களைக் கொண்டு வந்தன. எனக்கு இப்பவும் ஞாபகம் இருக்கிறது. அப்போது நாங்கள் அயர்லாந்துப் போராளி தான்பிரீன் பற்றிய புத்தகத்தை ரகசியமாக வைத்திருந்து வாசிப்போம். ஒவ்வொருவராக ரகசியமாகப் பரிமாறிக்கொள்வோம். எரிமலைத் தியாகிகள் என்ற புத்தகத்தை அப்படித்தான் படித்தோம். எல்லாம் தனிச்சுற்றுகளாகச்



படிப்பகம்

padippakam

சுற்றி வரும். கீழ் இயக்கம் ஒன்றைத் துவக்குவதற்கான மனோநிலை அப்போதே தொடங்கியது. இப்படி ஒரு சூழல் உருவாகத் தொடங்கியது. 1972இல் இலங்கை அரசாங்கம் புதிய அரசியலமைப்பை உருவாக்குகிறார்கள். இதுவரை பிரிட்டிஷாரால் வரையப்பட்ட அரசியலமைப்பை இவர்கள் தங்களுக்கானதாகச் செய்யவேண்டும் என்ற புதியஅரசு அறிவிக்கிறது. இந்தப் புதிய அரசியலமைப்பு எப்படி இருக்கப்போகிறது, அதில் இங்கே வாழும் தமிழ் பேசும் மக்களுக்கான நிலைமை என்ன, இவர்களுக்கான அதிகாரங்களை எப்படிப் பங்கிடப் போகிறார்கள்? என்பது போன்ற விவாதங்களை எல்லாக் கட்சியினரும் பேசத் தொடங்குகிறார்கள். இதை எதிர்கொள்வதற்காக ஒரே தலைமையாக ஐக்கிய முன்னணியாக இணைய வேண்டும் என்று கருத்தெல்லாம் தமிழ் பேசும் மக்களிடம் இருந்தது. 1972ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்புச் சட்டம் வரையப்படுவதற்கு முன்பு தமிழர் கட்சிகளெல்லாம் சேர்ந்து ஒரு கோரிக்கையை வைக்கிறார்கள். அது நிராகரிக்கப்படுகிறது. 1972, மே 22ஆம் தேதி இலங்கை குடியரசாக பிரகடனம் செய்யப்படுகிறது. இலங்கை சிலோன் என்ற பெயரில்லாமல் ஸ்ரீலங்கா என்ற புதிய பெயர் அறிவிக்கப்படுகிறது. அந்த நாளை தமிழர்களின் கரி நாள் (கறுப்பு நாள்) என்று தமிழர்களின் ஐக்கிய முன்னணி அறிவிக்கிறது. மக்கள் வேலைக்குச் செல்லக்கூடாது. கறுப்புக் கொடி ஏற்றி துக்க நாளாக கடைபிடிக்க வேண்டும் என்று 15ஆம் தேதியிலிருந்தே அதற்கான ஏற்பாடுகள் தொடங்கிவிட்டன. மாணவர்களே பள்ளிக்குச் செல்லாதீர்கள்! ஊழியர்களே அலுவலகங்களுக்குச் செல்லாதீர்கள்! என்று ஒரு துண்டுப்பிரசுரத்தை ஐக்கிய முன்னணி வெளியிட்டது. நாங்கள் மாணவர்களாக இருந்தபோது அந்தப் பிரசுரத்தை விநியோகித்தோம். அப்போது போலீஸ் என்னையும் சேர்த்து மூன்று பேரைக் கைது செய்கிறது. அதற்குப் பிறகு தலைவர்கள் எங்களையும் கைது செய்யுங்கள் என்றார்கள். அதெல்லாம் ஒரு துவக்கம்.

**● மணா: தமிழ்ப் பேரவை என்ற அமைப்பைப் பிறகு ஆரம்பித்தீர்களா?**

**கி.பி.அ-ன்:** சிறையால் வந்ததும் சில இளைஞர்கள் ஒன்று சேர்ந்து தமிழ் இளைஞர் பேரவை என்ற அமைப்பைத் தொடங்கினோம். அதன் தனி நடவடிக்கைகளாக உண்ணாவிரதங்கள், ஊர்வலங்கள் நடாத்தினோம். 1974ஆம் ஆண்டு நான்காவது தமிழாராய்ச்சி மாநாடு நடக்கின்றது. அதையொட்டி படுகொலை நடக்கின்றது. இது ஜனவரியில். ஜூனில் சிவகுமாரன் இறக்கிறார். ஜனவரிக்கும் ஜூனிற்கும் இடையில் சிவகுமாரன் குழுவினராகிய நாங்கள் பல்வேறு வன்முறையை பாவித்தோம். அதில் தோல்விகள் கிடைத்தன. ஆறேழு குற்றங்களுக்காக 1976ஆம் ஆண்டு நான் கைது செய்யப்பட்டேன். 77 வரைக்கும் ஒரு வருடம் சிறையில் இருந்தேன். பிறகு பெயிலில் வெளிவருகிறேன். அதேவருட பிற்பகுதியில் வழக்குகள் வரத்தொடங்குகின்றன. ஒவ்வொரு



படிப்பகம்

padippakam

வழக்கிற்கும் பெயில் எடுக்க வேண்டும். இல்லையென்றால் உள்ளுக்குள் போக வேண்டும். வீட்டில் வசதியில்லை. பிரச்சனை. 1978இல் பயங்கரவாத தடைச்சட்டம் வருகின்றது. பொலீசுக்கு அதிகாரம் கூடி முதற்தடவையாக தெருவில் இரண்டு இளைஞர்களைச் சுட்டுப் போடுகிறார்கள். அதுதான் முதல் சம்பவம். தொடர்ந்து வெகு வேகமாக நிகழ்ச்சிகள் நிகழத் தொடங்குகின்றன.

● **மணா: அந்தக்காலகட்டத்தில் உங்களுடைய செயல்பாடுகள் எப்படி இருந்தன?**

**கி.பி.அ–ன்:** ஈராஸ் அமைப்பில் இருந்தேன். 1978ஆம் ஆண்டு லெபனான் சென்றுவிட்டு சென்னைக்கு வந்தேன். இங்கு பத்திரிகை நடத்துவது, நண்பர்களை ஒருங்கிணைப்பது எனப் பல வேலைகள் செய்தேன். பத்தாண்டுகள் சென்னையில் இருந்தேன். அப்போது தமிழக ஈழ நட்புறவுக் கழகத்தை நாங்கள் கட்டி வளர்த்திருக்கிறோம். தமிழக அரசியலுக்கு அப்பாற்பட்ட தனிநபர்கள் கொண்ட அமைப்பாக அதை வளர்த்தெடுத்தோம். சின்னச் சின்ன புத்தகங்கள் கொண்டு வந்தோம். லங்காராணி நாவலை வெளியிட்டோம். இப்படி பல்வேறுபட்ட பணிகளில் ஈடுபட்டு வந்தோம்.

● **மணா: நீங்கள் படைப்பு ரீதியாக எந்தக் காலகட்டத்திலிருந்து இயங்க ஆரம்பித்தீர்கள்?**

**கி.பி.அ–ன்:** 1972இல் சிறைக்குச் சென்று வந்தபிறகு, வாசிப்பு அனுபவம் இலக்கிய ரீதியான ஆர்வத்தை ஏற்படுத்தியது. முதன்முறையாக ஒரு முக்கியமான நாடகத்தில் நடிக்கத் தொடங்கினேன். அதற்கு நாடகப்போட்டியில் முதற்பரிசு கிடைத்தது. அந்த நாடகாசிரியரிடமிருந்துதான் எழுத்து, கணையாழி, தாமரை இதுபோன்ற சிறு சஞ்சிகைகளைப் பார்க்கிறேன். அதில் ஒருவகையான ஈடுபாடு வருகின்றது. ஜெயகாந்தனை தீவிரமாக வாசித்திருக்கிறேன். எஸ்.பொ.வை படிக்கத் தொடங்குகிறேன். இரண்டு ஆண்டுகள் (1974ஜூன் தொடங்கம் 1976ஜூன் வரை) தலைமறைவாக வாழ்ந்தபோதுதான் நான் முதன் முறையாக எழுதத் தொடங்கினேன். இரண்டு பெரிய நோட்டுப் புத்தகங்களில் கதை, கவிதைகள் என எழுதியிருந்தேன். நான் கைதானபோது தங்கியிருந்த வீட்டுக்காரர் அவற்றையெல்லாம் கொளுத்தி விட்டார். அதற்குப் பின் தலைமறைவு வாழக்கையில் எரிமலை என்று ஒரு அரசியல் பத்திரிகை நடத்தினோம். நான்கு இதழ்கள் மட்டும் கொண்டு வந்தோம். ஈராஸ் அமைப்பிற்காக ஈழம், தர்க்கீகம், பொதுமை என்ற சில பத்திரிகைகள் வந்தன. நான் சென்னையில் இருந்தபோதுதான் கவிதைகள் எழுதத் தொடங்கினேன்.



படிப்பகம்

padippakam

**● மணா: கவிதை எழுதத் தொடங்கிய போது யாருடைய தாக்கம் உங்களிடம் இருந்தது?**

**கி.பி.அ-ன்:** அன்றைக்கு ஈழத்தில் எழுதிக் கொண்டிருந்த இளம் முன்னணிக் கவிஞர்களின் கவிதைகளால் ஈர்க்கப்பட்டேன். எங்களை உந்தித் தள்ளியதில் இந்தக் கவிதைகளுக்கு பெரும் பங்குண்டு. சமகாலத்தில் சேரன், ஜெயபாலன் போன்றவர்கள் கவிதை எழுதுகிறவர்களாக இருந்தார்கள். நாங்கள் வாசிப்பவர்களாக இருந்தோம். அலை, மல்லிகை, சமர் போன்ற பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருந்தன. கவிதைகளில் என்னைப் பாதித்தவர்களைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. கல்லூரியில் எனக்குத் தமிழ் இலக்கியப் பாடம் விருப்பமானதாக இருந்திருக்கின்றது. கவிதைகளில் அரசியல் கருத்தை வெளிப்படுத்த வேண்டுமென்பதுதான் எனது நோக்கமாக இருந்தது. புதுக்கவிதை எழுத இலகுவாக இருந்தது. வானம்பாடிக் கவிஞர்களின் கவிதைகளும் என்னைப் பாதித்திருக்கலாம். அப்போது புரட்சி வெல்லட்டும், கிழக்கு வெளுக்கின்றது என்பன போன்ற கவிக்குரல்கள் எழுந்தன. மு.மேத்தா, அக்னிபுத்திரன், சிற்பி, புவியரசு போன்றவர்களின் கவிதைகளைப் படித்திருக்கிறேன். அதுகூட காரணமாக இருந்திருக்கலாம்.

**● மணா: ஈழத்துப் படைப்பாளிகள் நேரடியான போராட்டக் களத்தைப் பார்த்தவர்கள். அப்படியான ஒரு நிர்ப்பந்தமான சூழல் அனுபவம் இங்குள்ளவர்களுக்குக் கிடையாது இல்லையா?**

**கி.பி.அ-ன்:** 1978ஆம் ஆண்டில் நான் எழுதிய கவிதைகளில் ஐந்து கூட தேறாது. நாங்கள் வெளியிட்ட பத்திரிகைகளின் அட்டையில் கவிதை எழுதுவேன். அந்த அளவில்தான் இருந்தேன். அதற்குமேல் கவிதை எழுதியதில்லை. உண்மையில் என்னுடைய நல்ல கவிதைகளை எழுதத் தொடங்கியது 90களில்தான். சென்னையில் இருந்தவரைக்கும் கூட பெரிதாக கவிதை எழுத முயற்சித்ததில்லை. 1988இல் இந்திய இலங்கை ஒப்பந்தம் வருகிறது. எல்லா இயக்கக்காரர்களும் விமானத்தில் திரும்பிச் சென்றுவிட்டார்கள். நான் மட்டும் ஒரு அகதியாக மண்டபம் முகாமுக்குச் சென்றுவிட்டேன். இராமேஸ்வரத்திலிருந்து அகதிக் கப்பலில் காங்கேசன்துறையில் போய் இறங்கிக் கொண்டேன். அகதியோடு அகதியாகப் போனேன். பிறகு எந்த இயக்கத்தோடும் தொடர்பு கொள்ளவில்லை. ஆனால் ஒன்றிரண்டு ஆண்டுகள் நண்பர்கள் இயக்கத்திற்கு வாருங்கள் என்று வலியுறுத்திக் கொண்டே இருந்தார்கள். நான் மறுத்துவிட்டேன். 1989இல் இலங்கையில் எனக்குத் திருமணம் நடந்தது. அதற்குப்பிறகு சென்னைக்குத் துணைவியுடன் ஒருதடவை வந்தேன். 1990ஆம் ஆண்டு பிரான்சுக்குச் சென்றேன்.



படிப்பகம்

padippakam

● **மணா: ஏன் பிரான்சைத் தேர்ந்தெடுத்தீர்கள்?**

**கி.பி. அ-ன்:** பிரான்சுக்குப் போக வேண்டுமென்று நான் வரவில்லை. 90ஆம் ஆண்டு கடுமையான காலகட்டம். எங்கள் வீட்டை விட்டு வெளியேறி வேறெங்கேயோ சென்றுதான் தஞ்சம் புகுந்தோம். அந்த நேரத்தில் என் தங்கைக்குத் திருமணம் நிச்சயம் செய்திருந்தோம். அதனால் தங்கையை யாழ்ப்பாணத்திலிருந்து அழைத்து வந்து கொழும்பில் விடவேண்டும். பயணம் செய்வது பெரும் கஷ்டம். தனியாக அனுப்ப இயலாது. நான்தான் கூட்டிக்கொண்டு வந்தேன். கொழும்புக்கு வந்த பிறகு என் தம்பி, நீ தங்கையை அழைத்துக் கொண்டு சிங்கப்பூருக்கு வந்துவிடு. நான் டிக்கெட் தருகிறேன். சிங்கப்பூரையும் பார்த்த மாதிரி இருக்கும் என்று சொன்னான். சிங்கப்பூருக்குச் சென்றேன். ஒரே சண்டையாக இருக்கிறது. நீ அங்கு போய் என்ன செய்யப்போகிறாய் என்று தம்பி கேட்டான். அரசியலிலேயே தொடர்ந்து ஈடுபட்டதால் புத்தகம், பேப்பர், பத்திரிகை இதுதான் எனக்குத் தெரியும். வேறு எந்த வேலையும் தெரியாது. தொழிலும் தெரியாது. அங்கு போய் பத்திரிகையும் நடத்த முடியாது. என்ன செய்யப்போகிறேன் என்பது கேள்விக்குறியாகத்தான் இருந்தது. யாழ்ப்பாணத்தில் மனைவி டீச்சராக இருக்கிறாள். ஒருவரின் வருமானத்தை வைத்து பிழைக்கவும் முடியாது. நாங்கள் இங்கேயே இருக்கிறோம் என்று மனைவி சொல்லிவிட்டாள். 'நீ தனியாக இருக்கிறாய். பாதுகாப்பில்லாத நிலைமை. அதெல்லாம் சரிப்பட்டு வராது. இலங்கை செல்ல வேண்டாம்' என்று சொன்னான் தம்பி. இரண்டாம் நாள் விமானத்தில் ஏற்றி விட்டான். சீனா போய் சுற்றிவந்து இறுதியில் ஜேர்மனியில் இறங்கினேன். சில விசாரணைகளுக்குப் பிறகு அங்குள்ள அகதி முகாமில் கொண்டு போய்விட்டார்கள்.

● **மணா: அங்கு மொழிச் சிக்கல் இருக்குமே?**

**கி.பி. அ-ன்:** மொழிபெயர்ப்பாளர் ஒருவர் வருவார். இல்லையென்றால் நமக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் கதைக்கலாம். பெரும்பாலும் ஜெர்மன் மொழியில்தான் பேசுவார்கள். யு.என்.ஓ. அதிகாரிகள் ஆங்கிலத்தில் பேசுவார்கள். எனக்கு முகாமில் இருக்கப் பிடிக்கவில்லை. உடனே ஜேர்மனியில் இருந்த தம்பியிடம் என்னை அழைத்துக் கொண்டு போய்விடு என்று போன் பண்ணி சொன்னேன். நான்கு நாட்கள் முகாமில் இருந்தேன். அகதிகள் முகாமிலிருந்து வெளியேறுவது மிகப்பெரிய கஷ்டம். கட்டுப்பாடுகள் அதிகம். ஏதோ முயற்சிகள் செய்து என்னை சில நண்பர்கள் காரில் அழைத்துக் கொண்டு சென்று இன்னொரு ஊரில் தங்க வைத்தார்கள். ஜெர்மனியிலிருந்து



படிப்பகம்

padippakam

பிரான்ஸ்க்குச் செல்வது களவுதான். கார் மூலம் பிரான்ஸ் சென்றேன். பிரான்சில் இறங்கியதும் ரொம்பக் கஷ்டம். என்ன வேலை செய்வது? ஒன்றும் விளங்கவில்லை. அங்குள்ள வாழ்க்கையையும் போன இரண்டு நாட்களிலேயே புரிந்துகொண்டேன்.

● **மணா: அந்த மக்களின் கலாசாரத்தோடு பொருந்திப் போக முடிந்ததா? அது உளவியல்ரீதியாக சிக்கலை ஏற்படுத்தியதா?**

**கி.பி. அ-ன்:** அந்த மண்ணில் இறங்கிய ஒரு நாளிலேயே உங்கள் பிரமிப்பெல்லாம் கொட்டிப் போகும். அப்போதே உணரத் தொடங்கி விடுவீர்கள். நான் எந்த இடத்தில் இருக்கிறேன்? எனது இடம் எது? நான் யார்? நம்மைச் சுற்றி எத்தனை பேர் இருந்தாலும் காட்டில் நிற்பதுபோல் தான் தோன்றும். வெளியே போக இயலாது. மற்றவர்களிடம் போய் கதைக்க இயலாது. சாமான்கள் வாங்க முடியாது. எனக்கு மொழி தெரியாது. மொழி தெரிந்த ஆளாகத் தேடித் திரிய வேண்டும். இதெல்லாம் புதிது புதிதான சிக்கல்களாகத்தான் தோற்றம் தரும். என் தங்கை வீட்டில் தங்கியிருந்தது கொஞ்சம் உதவியாக இருந்தது. 87லிலேயே அவர்கள் வந்துவிட்டார்கள். அவர்களுக்கு அங்குள்ள நடைமுறைகள் தெரியும். என் தங்கை குடும்பத்தினரும் நான்கு இளைஞர்களும் ஒரே வீட்டில் இருந்தார்கள். அப்படித்தான் அங்கு இருக்க முடியும். அதில் நானும் ஓர் ஆளாகப் போய் சேர்கிறேன். இதை விட மோசமான வாழ்க்கையும் அங்கு உண்டு. ஒரே அறையில் பதினைந்து பேர் தங்கியிருப்பார்கள். நீங்கள் நம்ப மாட்டீர்கள். டேர்ன் வைத்துப் படுப்பார்கள். அப்படியான வாழ்க்கையெல்லாம் உண்டு. அதுவொரு பெரிய நெருக்கடி. அதை எப்படிச் சொல்வதென்றே புரியவில்லை. பாரீஸ் ஒரு நெருக்கடியான நகரம். இங்குள்ள சிற்றூழியர்களின் பணியைத்தான் நாங்கள் பிரான்ஸில் செய்கிறோம். கூட்டுவது, துடைப்பது இப்படிப்பட்ட வேலைகள்தான் கிடைக்கும். க்ளீனிங் என்பது அங்கே பெரிய இண்டஸ்ட்ரி. அடுத்ததாக உணவகங்களில் வேலை. குசினிக்குள் கழுவுகிற வேலை. மற்றது ஒவ்வொரு வீட்டிற்கும் விளம்பர தாள்களைக் கொண்டு சேர்ப்பது. இந்தப் பணியை ஒரு கம்பெனி ஏற்றிருக்கும். ஒரு ஏரியாவில் ஆயிரம் வீடுகளுக்குக் கொண்டு போய் சேர்க்க வேண்டும். ஏழு மாடி, எட்டு மாடி ஏறி இறங்க வேண்டும். அடுத்ததாக கண்காட்சி மண்டபங்களில் வேலை. அங்கு வந்து நிகழ்ச்சி நடத்துகிறவர்களுக்கு ஏற்ற மாதிரி பொருட்களை, இயந்திரங்களை, துணிகளை மாற்றி அமைத்துத் தரவேண்டும். தொடர்ந்து வேலை இருந்துகொண்டே இருக்கும். நாங்கள் எவ்வகையான வேலைகள் செய்யக்கூடாது என்று நினைத்தோமோ அவ்வகையான வேலைகளைத்தான் செய்தோம். இது பிரான்ஸின் நிலைமை. தொடக்கக் காலத்தைவிட நிலைமை இப்போது கொஞ்சம் மேம்பட்டிருக்கிறது. இலங்கைத் தமிழர்கள் பிரான்சிற்கு வந்து கால் நூற்றாண்டாகி விட்டது.



படிப்பகம்

padippakam

● **மணா: நீங்கள் ஆரம்ப காலத்தில் என்ன வேலை செய்தீர்கள்?**

**கி.பி. அ-ன்:** கிளினீங் வேலைதான் செய்தேன். கார்பெட் சுத்தம் செய்ய வேண்டும். டாய்லெட் கழுவ வேண்டும். மேசை துடைப்பது, சிகரெட் ஆஸ்ட்ரே துடைக்க வேண்டும். காலையில் ஊழியர்கள் அலுவலகம் வருவதற்கு முன்பு மூன்று மணி நேரத்திற்கு முன்பு அங்கு போய் வேலை செய்ய வேண்டும். அலுவலகம் முடிந்ததற்குப் பின்பு இரவு ஏழு மணியிலிருந்து 10 மணி வரை சுத்தம் செய்யவேண்டும். அதிகாலை 5 மணிக்கு எழுந்து வெகு தூரம் பயணம் செய்ய வேண்டும். வீட்டுக்குக் கிட்ட வேலை இருக்குமென்று சொல்ல இயலாது. குளிர்காலமென்றால் பனி கொட்டிக் கிடக்கும். ஒவ்வொர் நிறுவனத்திற்கும் நேரம் மாறுபடும். இந்த வகையான வேலையைத்தான் செய்தேன். இது ஒரு வகையான மனிதப் போர். எதார்த்த நிலைமையை நான் சொல்கிறேன். இதுதான் உண்மை. இதை மறைக்கத் தேவையில்லை. இன்றைக்கு அதை யாரும் சொல்லவும் மாட்டார்கள். நிறைய நிலைமை மாறியிருக்கிறது. இன்றைக்கு எங்களுடைய பெரும்பாலான பெண்கள் க்ளினீங் வேலையைத்தான் செய்கிறார்கள். இந்த வேலைகளை எப்போதும் மறைத்து வாழ்வதுதான் புலம்பெயர் வாழ்வின் அவலம் என்று சொல்லலாம்.

● **மணா: இந்த வேலைக்குத் தகுந்த வருமானம் கிடைக்குமா?**

**கி.பி. அ-ன்:** அடிப்படைச் சம்பளம் ஒரு மணி நேரத்திற்கு 7 யூரோ. எட்டு மணி நேரம் வேலை செய்தால் 56யூரோ. அதை இந்தியப் பணத்தில் பெருக்கினீர்கள் என்றால் இங்கே ஐம்பது ரூபாய் வாங்குவது மாதிரிதான். அதற்குள்தான் வீட்டு வாடகை, மின்சாரக்கட்டணம், உடை மற்றும் பயணச் செலவுகள் எல்லாமும். இரண்டு வேலை செய்தால்தான் வசதியாக வாழலாம். இது ஒரு வகை வாழ்க்கை நிலை. எங்களுடைய சமூகம் போரால் பாதிக்கப்பட்ட சமூகம். ஒவ்வொருவரும் ஐந்து பேரைச் சுமந்து ஆகவேண்டும். எங்களுடைய உழைப்பில் மிச்சம் பிடித்து பொருளாதாரம் சிதைக்கப்பட்ட ஒரு தேசத்திற்கு நாங்கள் பணம் அனுப்பியாக வேண்டும். இதற்காக நாங்கள் கடினமாக உழைத்துத்தான் ஆகவேண்டி இருக்கிறது. அதே நேரத்தில் எங்கள் போராட்டத்திற்கும் பங்களிப்புச் செய்பவர்களாகத்தான் இருக்கிறோம். இப்படியான வாழ்க்கை எங்களுக்கு இருக்கிறது. இலங்கையர்களை இங்கே பார்க்கும்போது உங்களுக்கு பகட்டுத்தான் தெரியும். மறுக்கவில்லை. அதற்குக் காரணம் நான் மூன்று வருடங்கள் உழைப்பேன். பகல் இரவென்று உழைத்துவிட்டு இரண்டு மாதம் விடுமுறை எடுத்துக்கொண்டு வங்கியில் கடன் வாங்கி இந்தியாவிற்கு வருவேன். அந்த இரண்டு மாதங்களில் இங்கே வாழ்கிற வாழ்க்கைதான் வாழ்க்கை. ஆயிரம் இரண்டாயிரம் யூரோக்களைக் கொண்டு வந்து பெருக்கினால் ரூபாய் பல கட்டுகளாக இருக்கும். மீனைக்



படிப்பகம்

கொண்டு வா, தங்கத்தைக் கொண்டு வா, ஸாரியைக் கொண்டு வா, நண்பா வா, குடி எல்லாம் நடக்கும். இரண்டு மாதம் முடிந்ததும் கடன் கட்டவேண்டும். ஒரு கண்ணோட்டத்தில் பார்த்தால் பகட்டுதான். இங்கு வந்து நிற்கிற இரண்டு மாதம்தான் தான் ராஜா என்பதை நிரூபித்துக் கொள்கிறான்.

● **மணா: இதுபோன்ற நெருக்கடியான வாழ்நிலையில் கவிதை எழுதுவதற்கான மனநிலை எப்படிக் கூடி வந்தது?**

**கி.பி. அ-ன்:** இதை என்னுடைய தனிப்பட்ட பிரச்சினையாகப் பார்க்கக் கூடாது. புலப்பெயர்வு நிகழ்ந்ததற்குப் பின்னால், ஒரு சமூகத்திற்குத் தனது தாயகம், இழப்புகள் பற்றிய ஏக்கம் தானாகவே வந்து சேரும். அதிலும் பல அந்நியர்களுக்கு மத்தியில் இருக்கும்போது நான் யார்? என்ற முதலாவது கேள்வி எழும். ஒரு துருக்கி நிற்கிறான். ஒரு கறுப்பர், அராபியன், தென் அமெரிக்கன், வெள்ளையில் குறைந்த வெள்ளை, கூடிய வெள்ளை, மஞ்சள் வெள்ளை, சிவப்பு வெள்ளை எல்லாம் நிற்கிறார்கள். இப்போது நான் யார்? என்ற கேள்வி இயல்பிலேயே எழும். நீங்கள் நடமாடத் தொடங்கினால் உங்கள் நாடு என்ன? மொழி என்ன? உங்களுடைய பெரிய ஆட்களைச் சொல்லு? கேட்பார்கள். எனக்குத் தெரிந்திருக்காது. இந்தச் சூழல் என்னைப்பற்றி அறிய நிர்பந்திக்கும் வாசிக்காதவன்கூட ஏதாவது வாசித்தாக வேண்டும். ஊரில் இருக்கும்போது வாசித்ததைவிட வெளியே வந்த பிறகு வாசித்தது அதிகம். வாசிப்பைப் பழக்கப்படுத்திக் கொண்டவர்களின் விகிதம் அதிகம்.

● **மணா: நம்முடைய சார்புத் தன்மையை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயம் நிகழ்ந்து விடுகிறதா?**

**கி.பி.அ-ன்:** ஆமாம். கட்டாய நிலைமை வருகிறது. கவிதை எழுதாதவன் கவிதை எழுதுகிறான். கதை எழுதுகிறான். 1990இல் ஜெர்மனியில் 32 பத்திரிகைகள் வந்து கொண்டிருந்தன. ஒவ்வொரு கேம்ப்பிலும் ஒரு பத்திரிகை. ஏதாவது செய்ய வேண்டும். அறைக்குள் அகப்பட்டுக் கிடக்க முடியாது. புதிதாக வருகிறவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால் 'ஈழத்துக் கவிதையை நான்தான் படைக்கிறேன்' என்கிறார்கள். ஏனெனில் இதற்கு முன்பு நிகழ்ந்தவைப் பற்றி அவர்களுக்குத் தெரியாது. புலப்பெயர்வில் பெரும்பாலான இலக்கியவாதிகள் வரவில்லை. ஊரில்தான் இருக்கிறார்கள். இதனால் வெளியில் உள்ளவர்கள் தங்களுக்குத் தாங்களே முடிசூட்டிக் கொள்கிறார்கள். இங்கு நான் வரும்போது என்னிடம் இருந்தது வெறும் இயக்க அரசியல்தான். இரண்டாவது சமூகம் பற்றியதான அனுபவம். மூன்றாவது தமிழ்நாடு எனக்குக் கற்றுத்தந்த சில பாடங்கள். சென்னையில் செய்த பணி காரணமாக எனக்கு நண்பர்களாகக் கிடைத்தவர்கள் கவிஞர்களாகவும், பத்திரிகையாளர்களாகவும்

padippakam

இருந்தார்கள். நிறைய விவாதங்கள் நடக்கும். 1978ஆம் ஆண்டு கொந்தளிப்பான நேரம். ஒரு பிரஸ், ஒரு பத்திரிகை. இந்த அனுபவங்கள் எனக்குத் தெரியும். இன்றைக்கு இருக்கிற புகழ்பெற்ற ஆட்களோடு பழகிய அனுபவம் எனக்குண்டு. நான் பாரீஸ் சென்றபோது ஓசை என்றொரு காலாண்டிதழ் வந்துகொண்டிருந்தது. ஓசையின் பாணி பிடித்ததால் அதில் பங்களிப்பு செய்யத் தொடங்கினேன். எனக்குத் தெரிந்த விஷயங்களை அதில் புகுத்தினேன். நல்ல வரவேற்பு. பின்னர் மௌனம் என்னும் காலாண்டிதழை நண்பர்களுடன் இணைந்து வெளியிட்டேன். பிரான்ஸ்க்கு வருவதற்கு முன்பு 89-90களில் இடம்பெயர்ந்த என் அனுபவத்தை வைத்துச் சில கவிதைகள் எழுதினேன். அதுதான் உண்மையாக நான் எழுதிய கவிதை. போர்க்கால அனுபவத்தை இனியொரு வைகறை என்ற தலைப்பில் கவிதையாக எழுதினேன்.

● **மணா: வாழ்க்கையில் கனத்த அனுபவங்களிலிருந்து ஒருவகையான விடுபடுதல் உணர்வு படைப்பு மூலம் கிடைக்கிறதா?**

**கி.பி. அ-ன்:** இனியொரு வைகறை தொகுப்பு முழுக்கமுழுக்க ஈழத்து போர் அனுபவங்கள்தான். முகம் கொள் தொகுப்பு பாதி ஈழத்து அனுபவங்களும் கலந்தது. மூன்றாவது தொகுப்பு கனவின் மீதியைப் பார்த்தால் முழுவதும் புலம்பெயர் அனுபவங்கள். ஓசை மற்றும் அங்கு வருகிற பத்திரிகைகளில் தொடர்ந்து கவிதைகள் வெளிவரத் தொடங்குகின்றன. போராட்டத்தில் நீண்டகால அனுபவம் இருந்தபடியால் நண்பர்களை அணுகி கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டோம். அங்கு போகும்போது என்னுடைய வாசிப்பு அதிகம் இருந்தது என்பதை புரிந்து கொண்டேன். ஏற்கனவே எனக்குக் கிடைத்த வாசிப்பு அனுபவம், தமிழில் நவீன எழுத்தின் பரிச்சயம், பழைய எழுத்தாளர்கள் அறிமுகம் இப்படி மேலதிகமான தகுதியாக மாறுகிறது. அடுத்தது இயக்கத்தில் பொறுப்பாளனாக இருந்தபடியால் அதற்குரிய முதிர்ச்சி நிலை, பார்க்கிற முறையில், பிரச்சினையைச் சொல்கிற முறையில் தெரிந்தது. அரசியல் ரீதியில் ஏற்பட்ட அனுபவத்தை இலக்கியத்தில் பயன்படுத்தினேன். சமூகம் பற்றிய பார்வையும் தொடர்ச்சியாக இருந்துகொண்டு இருந்தது. மற்றது இடது பற்றியதான கருத்தோட்டங்கள்.

● **மணா: அங்கே என்ன நடக்கிறது என்று தொடர்ச்சியாக ஈழம் பற்றிய கவனம் இருந்துகொண்டே இருந்ததா?**

**கி.பி. அ-ன்:** அந்தக் கவனத்திலிருந்து என்னால் மீளவே முடியவில்லை. என்னிடம் ஒரு பழக்கம் உண்டு. இந்த அறைக்கு வந்துவிட்டேன் என்றால் அதன் பின்னணி விவரங்களைச் சூழலைக் கவனிக்கத் தொடங்கிவிடுகிறேன். இந்த மனநிலைக்கு இயக்க அரசியலும் காரணமாக இருக்கிறது. அது பாதுகாப்பு உணர்வாக இல்லை. சூழலைப் பற்றிய அறிவு. எப்போதும் அந்தக் கவனம் என்னிடம் உண்டு. பாரீசில்



படிப்பகம்

padippakam

வாழ்கிறவர்களைவிட பாரீஸ் பற்றிய அறிவைக் கூடுதலாக வைத்திருந்தேன். அந்தச் சமூகம், எவ்வகையான சிக்கலுக்குரியதாக அரசியல் இருக்கிறது? பிரெஞ்சு நண்பர்களிடம் இன்றைய செய்தி என்ன? அரசியல் செய்திகள் என்னாவதென்று பேசி தெரிந்துகொள்வேன். சமகால அரசியல் போக்குகள் பற்றிக் கேட்பேன். எப்போதும் எனக்கு சமகாலத்தோடு இணைந்திருப்பதில் விருப்பம் உண்டு.

● **மணா: நீங்கள் போர்ச் சூழலிருந்து மீண்டு நிம்மதி தேடிவந்த மண்ணில் நிகழும் கலவரங்கள் உங்கள் மனநிலையை எந்த அளவிற்குப் பாதித்திருக்கிறது?**

**கி.பி.அ-ன்:** எங்களுடைய சமூகம் பாரீசை சொர்க்கம் போலத்தான் நினைத்தது. ஒருவகையான அரசியல் அறிவும், இந்தப் போக்குகளை அறிந்தவன் என்ற முறையில் எனக்கு எப்போதும் அச்ச உணர்வாகவே இருந்தது. எங்கள் மேல் எதுவும் நடக்கலாம் என்றுதான் நினைத்தேன். நான் முதலில் சொல்லும்போது யாரும் நம்புவதாக இல்லை. எதிர்மறையாக கதைத்துக் கொண்டிருக்கிறேன் என்றார்கள். ஜெர்மனியில் நாசிஸம் என்பது கண்ணுக்கு முன் நடந்த ஒரு வரலாறு. பிரான்சிற்கு வந்தவுடன் நாங்கள் எப்படி நடத்தப்படுகிறோம் என்பது புரிந்துவிட்டது. பிரான்ஸ் மிகப்பெரிய காலனிகளைக் கொண்ட நாடு. அங்கு மக்கள் எப்படி நடத்தப்படுகிறார்கள் என்பதை கண் முன்னால் பார்க்க முடியும்.

● **மணா: கலவரச் சூழல் உருவானதற்கான காரணம் என்ன?**

**கி.பி.அ-ன்:** தங்களுடைய காலனிகளை விட்டுவிட்டு மக்கள் வருகிறார்கள். தவிர்க்கமுடியாமல் பாண்டிச்சேரியில் வழங்கிய மாதிரி பலருக்கு குடியுரிமை வழங்குகிறார்கள். அவர்களை ஏற்றுக் கொள்கிறார்கள். இதைவிட முக்கியமான நிலைமை, இரண்டாவது உலகப் போரில் ஐரோப்பா பாதிக்கப்படுகிறது. அதைப்போல பிரான்சும் பாதிக்கப்படுகிறது. இப்படி பாதிக்கப்பட்ட பிரான்சைக் கட்டி எழுப்புவதற்குத் தொழிலாளர்கள் தேவை. அந்தத் தொழிலாளர்களைத் தங்கள் காலனிய நாடுகளிலிருந்து வரவழைத்தார்கள். குடியிருக்க வீடு, குடியுரிமை இப்படிக் குடிப்பெயர்வுக்கு என்னென்ன வசதிகளோ அவற்றைச் சொல்லி அழைத்து வருகிறார்கள். கட்டுமான வேலைகளுக்குக் காலனி மக்களைப் பயன்படுத்தியதற்குப் பின்னால் அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதிலோ, அவர்களுடைய சமூகத்தோடு தங்களை இணைத்துக் கொள்வதிலோ இவர்கள் அக்கறை காட்டவில்லை. அதனால் தனித்துப் போனார்கள். இதற்குக் காலனி மக்களும், பிரான்ஸ் அரசும் காரணமாக இருக்கலாம். அவர்கள் பிரான்ஸிற்கு வந்து 50 ஆண்டுகள் ஆகின்றன. அந்த மக்களின் ஐந்தாவது தலைமுறை இங்கு வாழ்ந்துகொண்டிருக்கிறது. இன்னமும் வெளிநாட்டவர்களாகவும் இழிவான சொற்களில் அழைக்கப்படுகிறவர்களாகவும்தான் அவர்களை



படிப்பகம்

padippakam

வைத்திருக்கிறார்கள். இந்த காலனி மக்கள் வட ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள். இவற்றை பிரெஞ்சு மொழி வலைய நாடுகள் என்கிறார்கள். தங்களுடைய சுகாதாரம் கவனிக்கப்படுவதில்லை; கல்வி போதிக்கப்படவில்லை; வீட்டு வசதி சரியாக வழங்கப்படவில்லை என்ற குமுறல் அவர்களிடம் தொடர்ந்து இருந்துகொண்டே இருந்தது.

- **மணா: இதுதான் கலவரத்திற்குக் காரணமா?**

**கி.பி.அ-ன்:** இவை குமுறலாகவே இருந்துகொண்டிருந்தன. அவர்களுக்கு வேலைவாய்ப்புகள் சரியாகப் பகிர்ந்தளிக்கப்படவில்லை; உருவாக்கப்படவில்லை. அதையும்விட அதிகமாக திட்டமிட்டே ஒதுக்கப்பட்டார்கள். விண்ணப்பங்களில் பெயரைப் பார்த்தே வேலைக்கு அனுமதிக்காத நிலைமையெல்லாம் இருந்தது. இன்னும் நுணுக்கமாகப் பல்வேறு சம்பவங்களைச் சொல்ல முடியும். பிரான்ஸ் தனது கருத்தாக சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பதை அறிவித்தது. பிரெஞ்சுப் புரட்சி நடத்தப்பட்டது. இலக்கிய ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் உலக நாடுகளுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தது பிரான்ஸ். இலக்கியச் செழுமையும் நாகரீகம், பண்பாடு கொண்ட நாடாகவும்தான் நாங்கள் அதைப் பார்த்தோம். ஆனால் உள்முகமாக அவர்கள் நேர் எதிராக இருந்திருக்கிறார்கள் என்பது இந்தக் கலவரம் மூலம் தெரிய வருகிறது. இவ்வளவு காலம் தெரியவில்லை. சொன்னால் யாரும் நம்பவுமில்லை. இதுவரை இந்த பிரான்சில் மாபெரும் இலக்கியம் படைத்தவர்கள், மாபெரும் கருத்தாளர்கள், தத்துவவியலாளர்கள் ஏன் இந்தப் பிரச்சினையைப் பற்றி சொல்லவில்லை. அவர்கள் பேசிய இலக்கியம் என்ன? இந்தக் கலவரம் கொழுந்துவிட்டு எரிந்த பின்னர் சமூக நீதி மறுக்கப்பட்ட நிலை இருக்கிறது. அதைத் திருத்தி அமைக்க வேண்டும். புதிதாகத் திட்டங்கள் போட இருக்கிறோம் என்று அறிவிக்கிறார்கள். உலகம் இன்று வறுமை நிலையை அடைந்து கொண்டிருக்கிறது. வறுமையான நாட்டு மக்கள் வளர்ச்சியடைந்த நாடுகளை நோக்கி ஈசல்கள் போல குவிந்து வருகிறார்கள். பொருளாதார ரீதியான அகதிகளாக வந்துகொண்டிருக்கிறார்கள். இந்த நெருக்கடியை அவர்களால் சமாளிக்க முடியவில்லை. உலகில் அவர்களுடைய பிடிமானங்களும் தளர்ந்த நிலையில் போய்க்கொண்டு இருக்கிறது. சவாலாக கிழக்கு எழுந்து கொண்டிருக்கிறது. இன்று ஐரோப்பாவிற்கு அடுத்து இந்தியாவும், சீனாவும்தான் உலகத்திற்கு அச்சுறுத்தலாக இருக்கின்றன ஐரோப்பாவிற்கு அடுத்து. இந்நிலையில் மக்கள் குவிய குவிய அந்த நாடுகளில் பொருளாதாரம், நிறவாதம், இனவாதம் அதிகரிக்கிறது. தீவிரமாக



படிப்பகம்

padippakam

பேசுகிறவர்களுக்கு செல்வாக்கு அதிகம். அவர்களின் செல்வாக்கைத் தடுப்பதற்காக மரபுவழி அரசியல்வாதிகள் தீவிரவாதத்தைக் கையில் எடுத்தபோது விளைந்ததுதான் இந்தக் கலவரம். தீவிரவாத சக்திகள்போல இனவாத கருத்துக்களை முன்வைத்து தாங்களும் அவ்வாறானவர்கள்தான் என்று வாக்கு அரசியலுக்காக சில அரசியல்வாதிகள் நடந்துகொண்ட முறை மக்களை அவமதிப்பதாக இருந்தது.

● **மணா: இக்கலவரம் புலம்பெயர்ந்த தமிழர்களை ஏதும் பாதித்ததா?**

**கி.பி.அ-ன்:** புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு ஏதும் நடக்கவில்லை. பொது அரசியலில் அவர்கள் ஈடுபடவில்லை. ஆனால் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இன்றைக்குப் போலீசாரால் சுடப்பட்டதுபோல நாளைக்கு எங்களுக்கும் நடக்கலாம். எங்கள் இலங்கைத் தமிழர்கள் இரண்டு பகுதியினரால் அடிபடுவார்கள். ஒன்று ஐரோப்பியர்களிடம். இரண்டு எங்களைப் போல குடியேறியவர்களிடம் அடிவாங்குவார்கள். இந்த இருவரில் எவர் பக்கமும் தமிழர்கள் இல்லை. இப்பொழுதுதான் தமிழர்கள் கண்டுகொண்டிருப்பார்கள். அராபிய, ஆப்பிரிக்க இளைஞர்களின் கோபம் எவ்வளவு ஆபத்தானது என்று.

● **மணா: நீங்கள் 90-இல் புலம்பெயர்ந்து விட்டீர்கள். அதற்கிடையில் அமைதி பேச்சுவார்த்தை, நார்வே தலையீடு என பல நிகழ்வுகள் இலங்கையில் தொடர்ந்து நடந்திருக்கின்றது. இப்போது புதிய அதிபர் ராஜபக்சே மீண்டும் பேச்சுவார்த்தையைத் தொடங்கலாம் என்று சொல்லியிருக்கிறார். இந்நிலையில் திரும்பவும் ஈழத்திற்குப் போகவேண்டும் என்ற உந்துதல் புலம்பெயர்ந்த தமிழர்களிடம் ஏற்பட்டுள்ளதா?**

**கி.பி.அ-ன்:** புலம்பெயர்ந்த தமிழர்களுக்குத் தங்கள் தாயகம் மீதான ஒரு விருப்பம் இருக்கிறது. பலவற்றை இழந்துவிட்டோம். திரும்பப்போய் அதை அடைய வேண்டும் என்ற எண்ணம் உண்டு. அதே வேளையில் இவ்வளவு கடுமையாக உழைக்கவேண்டியதில்லை என்ற மனநிலையும் இருக்கிறது. உண்மையில் அங்கொரு அமைதியான சூழலொன்று தோன்றுவதை மனதார விரும்புகிறார்கள். அங்கு சென்று சம்பாதித்த பணத்தை வைத்துக்கொண்டு அமைதியாக வாழலாம் என்றும் நினைக்கிறார்கள். இன்னொரு போர் பற்றிய விருப்பமின்மைதான் அவர்களிடம் இருக்கிறது. ராஜபக்சே போரின் ஒரு குறியீடாகத்தான் பார்க்கப்படுகிறார். அவருடைய கூற்றும், பேச்சும், பின்னணியும் போரின் அறைகூவலாகத்தான் இருக்கின்றது. அவர் இன்னுமொரு பண்டார நாயக, ஜெயவர்த்தன போலவேதான் தனது முகத்தைக் காட்டுகிறார்.



படிப்பகம்

padippakam

இது ஒருவிதமான அச்சத்தைத் தோற்றுவித்திருக்கிறது. அதேசமயம், இவருடைய கடும்போக்கினால் ஏதோவொரு நிலையில் ஒரு முடிவுக்கு வரும். இனி நீண்டகாலத்திற்கு இழுபட்டுச் செல்கிற வாய்ப்பை இவருடைய வருகை குறைத்துள்ளது. நல்லதொரு தீர்வை நோக்கி நகரப்போகிறோம் என்பதான நம்பிக்கையும் புலம்பெயர்ந்த தமிழர்களிடம் ஏற்பட்டிருக்கிறது.

- **மணா: ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் குடியேறி வசதியாக வாழ்கிற தமிழர்களுக்கு இங்கேயே வாழ்ந்துவிடலாம்; இலங்கைக்குச் செல்ல வேண்டாம் என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறதே?**

**கி.பி.அ-ன்:** போருக்கு முன்பே சில புலம்பெயர்வுகள் நிகழ்ந்திருக்கின்றன. மலேசியாவிற்கு 1800களிலேயே சென்று அங்கு மலேசிய யாழ்ப்பாணத் தமிழர்களாக வாழ்கிறார்கள். தமிழ்நாட்டிலிருந்து புலம்பெயர்ந்து ஈழத்திற்கு வந்த கதைகளும் உண்டு. இப்படி புலம்பெயர்வுகள் தொடர்ந்து நிகழ்ந்துள்ளன. இலங்கை சுதந்திரமடைந்த காலகட்டத்திலும் இலண்டன் போன்ற நகரங்களுக்குச் சென்று குடியமர்ந்துள்ளார்கள். அப்போது குடியேறியவர்களும் சொத்துகளோடு இருக்கிறார்கள். நாங்கள் பழுத்த இலைகள். எங்களுடைய தீர்மானம் பெரிதாக எடுபடப்போவதில்லை. ஏனென்றால் புதிய குருத்துகளான தலைமுறை வந்துவிட்டது. அவர்கள் என்ன சொல்லப்போகிறார்கள் என்பதுதான் முக்கியமானது. அவர்களை விட்டுவிட்டு நாங்கள் என்ன செய்யமுடியும். இதில் நிறைய கேள்விகள் இருக்கின்றன. பிள்ளைகளுக்கு எவ்வகையான உணர்வுகளைக் கொடுத்து வளர்த்திருக்கிறோம் என்பதில்தான் எங்களுடைய எதிர்காலம் இருக்கிறது. 38 வருட காலம் ஊரில் வளர்ந்த எனக்கிருக்கிற பற்றிற்கும், நான் கொண்டிருக்கிற ஊர் பற்றியதான கனவிற்கும், ஊரே தெரியாமல் பிறந்து வளர்ந்து வருகிற பிள்ளைகளின் கனவிற்கும் மிகப்பெரிய வித்தியாசம் இருக்கிறது.

- **மணா: புலம்பெயர்ந்த தமிழர்களின் குழந்தைகள் அங்குள்ள சூழலோடு எளிதாக கலந்திருக்கிறார்களா?**

**கி.பி.அ-ன்:** அங்குதான் பிறந்து வளர்ந்திருக்கிறார்கள். அந்த மொழியில் கல்வியைக் கற்கிறார்கள். வீட்டில் எங்கள் மொழியை, சாப்பாட்டை உண்டு வளர்ந்தாலும் அவை அவர்கள் எடுக்கிற தீர்மானங்களுக்கு உதவியாக இருக்கும் என்று சொல்லமுடியாது. பாரீஸில் இருந்தாலும் இப்படி இருக்கலாம்தானே? வெள்ளிக்கிழமைகளில் சோறு சாப்பிடவேண்டும். முக்கியமான நாட்களில் சேலை கட்ட வேண்டும். சாமி கும்பிட வேண்டும். அம்மாவிற்கு வணக்கம் சொல்ல வேண்டும்; வீட்டில் ஒரு குத்துவிளக்கு இருக்க வேண்டும். அப்பவும் நான் தமிழன்தானே, ஆசியன்தானே என்றுகூட அவர்கள் கேட்கலாம். இந்த



படிப்பகம்

padippakam

தலைமுறையினர் ஈழத்திற்குப் புலம்பெயர்ந்து வருவார்களா? என்பது தெரியவில்லை. இன்னும் எத்தனை தலைமுறை போனாலும் நாங்கள் யாராக இருக்க வேண்டும் என்பதைச் சூழல்தான் தீர்மானிக்கும், நீ ஆசியன், நீ கறுப்பன், நீ பாகிஸ்தானி என்பதை ஒருபோதும் மறைக்க இயலாது. எத்தனை தலைமுறை கடந்தாலும் அடையாளங்கள் மறையாது. இதற்கு வரலாறு முழுக்கச் சான்றுள்ளது. 500 வருடங்களுக்குப் பிறகு கொலம்பஸ் பற்றி எழுதும்போது குறிப்பிடப்படுகிறான்; ஜெனோவாவில் பிறந்தவன். ஸ்பெயினில் அரசிக்காக கப்பல் கட்டிக்கொண்டு போன இடத்தில் அமெரிக்காவைக் கண்டுபிடித்தான் என்கிறான். இதைத் தவிர்க்க முடியாது.

● **மணா: இலங்கை மண்ணைப் பார்க்க வேண்டும் என்று ஆர்வமாக இருக்கிறார்களா?**

**கி.பி.அ–ன்:** இங்கு கிடைப்பதைவிட ஈழ மண்ணில் இணக்கமான உறவு கிடைக்கும். சுதந்திரம் கிடைக்கும். நீண்டகாலமாக அடைபட்டுக் கிடக்கிற வீட்டில் இருக்கிறோம். அங்கு திறந்த வீட்டில் எங்கேயும் நிற்கலாம்; எங்கேயும் போகலாம். காற்றுக்காக ஜன்னலைத் திறந்து வைக்கலாம். ஒரு திறந்தவெளி வாழ்க்கை. புலம்பெயர்ந்த நாடுகளில் அந்த வெளிகள் அடைபட்டுக் கிடக்கின்றன. இத்தனை மணிக்குள் வீட்டிற்குத் திரும்ப வேண்டும்; குளிர்காலமென்றால் ஜன்னலைத் திறக்கக்கூடாது. சில உடுப்புகள் போடவேண்டும். இதெல்லாம் இயல்பிலேயே பழகினால்கூட, சொந்த ஊருக்கு வந்தால் மிக மெல்லிய உடையில் நிற்கலாம். காற்று வாங்கலாம். எதிலும் படுத்து உறங்கலாம். காலாற நடக்கலாம். இதெல்லாம் முக்கிய விஷயங்களாகப் படுகின்றன. ஊர் பற்றிய ஆர்வம் உறுதியாக இருக்கிறது. தவிர்க்க முடியாமல் பல தேசத்தவர்களோடு பழக வேண்டிய கட்டாய நிலைமை இருக்கிறது. அவரவர்கள் தங்கள் தேசியத் தன்மையைக் கொண்டிருக்கும்போது இவர்களையும் தமிழ் தேசியத்தைப் பேண வேண்டிய நிலைமைக்குத் தள்ளுகிறது. எங்கள் புலம்பெயர்வின் சாதகமான அம்சங்களில் முக்கியமானது மொழி அறிவு. பொதுவாக தமிழ்ச் சமூகத்திற்கு பல மொழி அறிவு கிடையாது. இன்றைக்குப் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்திற்குப் பதினைந்து மொழிகள் தெரியும். 70.000 பேர் பிரான்சில். 40.000 பேர் யேர்மனியில், இரண்டரை இலட்சம்பேர் இலண்டனில். 15.000 பேர் டச்சில். 10.000பேர் நோர்வேயில் 15.000பேர் டென்மார்க்கில் என ஐரோப்பிய நாடுகளில் அண்ணளவாக ஐந்து இலட்சம்பேர் வாழ்கிறார்கள். அத்துடன் சுவீடன், சுவிஸ், பெல்ஜியம், இத்தாலி, ஸ்பெயின் நாடுகளில் எல்லாம் வாழ்கிறார்கள். அந்தக் குழந்தைகள் எல்லாம் அந்தஅந்த மொழியைப் பேசுகிறர்கள். தமிழ்ச் சமூகத்தின் அறிவு பல மொழி அறிவாக விரிவடைந்திருக்கிறது. இந்தியச் சமூகங்களில் எந்தச் சமூகத்திற்கும் இந்த வாய்ப்புக் கிடைக்காது. ஐரோப்பிய நாடுகளில்



படிப்பகம்

padippakam

உள்ள அனைத்து உயர் தொழிநுட்பங்களும் நம்மவர்கள் சிலருக்குக் கிடைத்திருக்கின்றன. இது ஒரு முக்கியமான அம்சம். யுத்தங்களும், கலவரங்களும் நிகழ்ந்த நிலையில் அதற்கு நேர் எதிராகக் கிடைத்த பலன்கள் இவை. சிங்கள அரசு, தமிழ் மக்கள் சின்னாபின்னப்பட்டு அழியட்டும் என்றுதான் எங்களை அனுப்பியது. அந்தச் சூழலை உருவாக்கியது. அதுதான் போராட்டத்திற்குப் பலமாகவும் மாறி, அதற்குப் பன்முகத் தன்மையை அளித்திருக்கிறது. இந்த நுண்ணிய மாற்றம் இன்றைக்கு அறியப்படாமல் இருக்கலாம். ஆனால் எதிர்காலத்தில் இது தமிழ்ச் சமூகத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்தும். நூல்கள், இணைய தளங்கள், ஊடகங்கள் என்று அனைத்தும் இப்போது பரவலாகியிருக்கின்றன. புலம்பெயர்ந்த தமிழர்கள் தங்களுடைய நினைவுகளை உறைந்த நிலையில்தான் வைத்திருக்கிறார்கள். தங்களுடைய தாயகத்தை எங்கிருந்தாலும் புனிதமாகக் கருதுகிறார்கள். புலம்பெயர்ந்து எங்கோ சென்ற நிலையில்தான் தங்களுடைய சொந்த நாட்டின் தாக்கத்தை அது மனதில் எழுப்பியிருக்கும் ஆதிக்கத்தை உணரமுடிகிறது. கலாசாரத் தேடல் இருக்கிறது. வெயிலில் நிழலைத் தேடுவது போல எங்களுடைய தேடல் நீடிக்கிறது. ஆனால் தமிழகத்தில் ஊடகங்களில் அந்தத் தேடல் இல்லை. அதன் வழியாக நஞ்சு வழிகிறது. ஊடகங்கள் வழியாக ஒரு வகையான கலாசாரம் திணிக்கப்படுகிறது. புலம்பெயர்ந்த தமிழர்களையும் இது பாதிக்கிறது. புலம்பெயர்ந்த நாட்டில் பலர் வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்கிறபோது ஊடகங்களின், குறிப்பாகத் தொலைக்காட்சிகளின் ஆதிக்கமும் அதிகம். இளைய தலைமுறையினருக்கு அதுதான் நம்முடைய தமிழர் கலாசாரம் என்று மயக்கத்துடன் புரிந்துகொள்ள வாய்ப்புகள் அதிகம். அதன் மோசமான விளைவைப் பல புலம்பெயர்ந்த தமிழர்கள் கடல் கடந்தாலும் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். எப்படிப்பட்ட இரட்டை நிலை இது?

(2006 சென்னையில் இருந்து வெளிவரும் புதியபார்வை டிசம்பர் 16-31, 2005 இதழில் இந்நேர்காணல் வெளிவந்தது. பின்னர் அதன் தெரிவு செய்யப்பட்ட பகுதிகள் மதி கந்தசாமியால் தட்டெழுத்துச் செய்யப்பட்டு அவரது வலைப்பதிவில் வெளியரங்கமாகியது. அவரது வலைப்பதிவில் வந்தவையும் விடுபட்ட மிகுதிப் பகுதியும் இணைக்கபட்டு மீள இங்கு பிரசுரமாகின்றது. அத்துடன் புதியபார்வையில் வெளிவந்தபோது இருந்த சில தகவல் சொற்பிழைகள் திருத்தப்பட்டுள்ளன. இதனைத் தட்டெழுதி தனது வலைப்பதிவில் உள்ளிட்டதுடன், அப்பால் தமிழில் வெளியிட தனது பிரதியை மனமுவந்து அனுப்பியமைக்கு மதி கந்தசாமிக்கு நன்றிகள்.)

தொகுப்பு: **சுந்தரபுத்தன்**



படிப்பகம்

padippakam

# சாத்வீகப் பாதையில் சந்தி பிரித்தவன்: பொன்.சிவகுமாரன்

**34** ஆண்டுகள் காலத்துள் கரைந்து சென்றாலும் சிவகுமாரனின் சுவடுகள் ஒளிர்ந்தவண்ணமே உள்ளன. அவனுடனான நினைவுகளும் என்னுள் கிளர்ந்தவண்ணமே உள்ளன.

1974 ஜனவரி 10ஆம் நாளில் இருந்து அவனது இறுதிநாளான 1974ஆம் ஆண்டு ஜூன் 5ஆம் நாள்வரையில் நான் அவன்கூடவே இருந்தேன். அந்த ஐந்து மாதங்களும் ஈழத்தமிழ்ச் சமூகத்தின் திருப்புமுனைக்கான ஒரு காலகட்டமெனவும் குறிப்பிடலாம்.

பொன்.சிவகுமாரன் தனது மரணத்தின் மூலம் ஈழப் போராட்டத்திற்குச் சயனைட்டை அறிமுகம் செய்து புதிய வரலாற்றைத் தொடக்கி வைத்தான். முதல் களப்போராளியாகி ஈழப்போராட்டத்தை முன் நகர்த்தினான். தன் சாவின் மூலம் அன்றைய இளந்தலைமுறையை, தமிழ்ச் சமூகத்தை ஒரு உலுக்கு உலுக்கினான்.

திரவியம் என வீட்டாராலும் நெருக்கமானவர்களாலும் அழைக்கப்பட்ட சிவகுமாரன் யாழ்ப்பாண மாவட்டத்தில்



படிப்பகம்

padippakam

உள்ள உரும்பிராய் கிராமத்தைச் சேர்ந்தவன். அவன் 26-08-1950ல் பொன்னுத்துரை - அன்னலட்சுமி தம்பதியினரின் நான்கு பிள்ளைகளில் மூன்றாவதாக பிறந்தான். (அண்மையில் காலமான சிவகுமாரனின் தாயார் அன்னலட்சுமி நாட்டுப்பற்றாளராய் மதிப்பளிக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.) யாழ் இந்துக் கல்லூரியிலும் பின்னர் கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியிலும் கல்வியை முடித்தான். யாழ்ப்பாண நகரில் இயங்கிய மீனாட்சி கணக்கியல் கல்லூரியிலும் கற்றிருக்கிறான். சிவகுமாரனைவிட மூன்று வயது இளையவனான நானும் வேறு பல அரசியல் சார்ந்த நண்பர்களும் சிவகுமாரனும் ஒன்றாக அந்த தனியார் கணக்கியல் கல்லூரியில் சிறிது காலம் கணக்கியல் கற்றோம்.

சிவகுமாரன் தனது 24வது வயதில் 1974இல் களப்பலியானபோது கலைஞானி ஒளிப்பட கலையகத்தால் வெளியிடப்பட்டு பரவலாக விநியோகிக்கபட்ட படங்களே தற்போது ஊடகங்களால் பயன்படுத்தப்படும் ஒளிப்படங்களாகும். அந்தப் பால்வடியும் முகம் கொண்ட சிவகுமாரனின் ஒளிப்படம் அவனது க பொ த பரிட்சைக்கு எடுக்கப்பட்ட அடையாள அட்டைக்கான படமாகும்.

அவன் தனது மாணவப்பருவத்தில் அதாவது 1968இல் ஒரு சமூகப்போராளியாகவே அரசியலுக்குள் நுழைந்தான். 1960களின் பிற்கூறு இலங்கைத்தீவின் இன்றைய நிலைமைக்கான பல முகிழ்ப்புகளைக் கொண்டிருந்தது என்றால் மிகையில்லை. யாழ்ப்பாணக் குடாநாட்டில் முன்னெடுக்கப்பட்ட சாதிய தீண்டாமைக்கு எதிரான வெகுஜன இயக்கப் போராட்டங்கள், உலக அளவில் நிகழ்ந்த சீனக் கலாச்சாரப் புரட்சி பிரான்சில் எழுந்து உலகெங்கும் பரவிய மாணவர் கிளர்ச்சிகள், தமிழரசுக் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட தமிழரசுக் கட்சியின் மூளையென வர்ணிக்கப்பட்ட நவரெத்தினம் அமைத்த சுயாட்சிக் கழகத்தின் தோற்றம், இரசியாவில் லுமும்பா பல்கலைக் கழகத்தில் இருந்து இடைநிறுத்தப்பட்ட ரோஹண விஜய வீரா இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியிலும் பின்னர் தனியான கட்சியை அமைத்தும் இளம் கிளர்ச்சிக்காராக தோற்றம் பெற்றமை போன்ற இன்னோரன்ன நிகழ்வுகளை உள்ளடக்கிய காலகட்டம் அது. இவை யாழ் இந்துக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த சிவகுமாரனைப் பாதித்தது ஆச்சரியம்தான். சிவகுமாரன் கம்யூனிசக் கருத்துக்கள் கொண்ட நண்பர்களுடன் உறவுகளைப் பேணுவதிலும் சமூக நீதிக்கான செயல் பாடுகளை முன்னெடுப்பதிலும் ஈடுபாடு கொண்டவனாக இருந்தான். யாழ்ப்பாண குடாநாட்டில் எழுச்சிபெற்ற சாதிய எதிர்ப்பு போராட்டத் தால் சிவகுமாரன் ஈர்க்கப்பட்டான். ஆர்வத்துடன் அதில் பங்கேற்றான்.

சாதிய எதிர்ப்புப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் வகையில் உரும்பிராய் வைரவர் கோயிலின் முன்னால் சமபந்தி போசனம்



படிப்பகம்

padippakam

நடத்தினான். அத்துடன் இறப்பு வீடுகளில் பறைமேளம் அடிப்பதைத் தடுக்கும் வகையில் பறையடிப்பவர்களோடு சேர்ந்து பறைமேளத்தை உரும்பிராய் சந்தியில் வைத்து உடைத்து எரித்தான். கோயில்களில் நடாத்தப்படும் வேள்விகளைத் தடுத்துக் குரல் கொடுத்தான். மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் நுழைவுப்போராட்டத்திலும் கலந்து கொண்டான். இவ்வேளையில்தான் 1970ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற்று ஐக்கிய முன்னணி அரசமைத்தது. சிறிலங்கா சுதந்தரக்கட்சியினை தலைமையாக கொண்ட ஐக்கிய முன்னணியில் இலங்கை கம்யூனிஸ்ட்கட்சியும் லங்கா சமசமாஜக்கட்சியும் இணைந்திருந்தன. ஐக்கிய முன்னணி அரசில் கல்வியமைச்சராக பதவியேற்ற பதியுதீன் முகமது அவர்கள் பல்கலைக்கழக நுழைவுத்தேர்வுக்குப் புள்ளிகள் அடிப்படையிலான தரப்படுத்தல் திட்டத்தை அறிமுகப்படுத்தனார். இதனை எதிர்க்கும் வகையில் மாணவர் பேரவை அமைக்கப்பட்டது. அந்த மாணவர் பேரவையை அமைப்பதிலும் அதனூடாக நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் திருசத்தியசீலனுடன் இணைந்து சிவகுமாரனும் முக்கிய பங்கெடுத்தான்.

இந்த ஐக்கிய முன்னணி அரசில் இணைந்திருந்த லங்கா சமசமாஜ கட்சியின் மூத்த தலைவரான கொல்வின் ஆர் டி சில்வாவினால் வரையப்பட்ட புதிய அரசியல் யாப்பின்படிதான் 1972 மே 22இல் இலங்கைத்தீவு சிறிலங்கா பௌத்த குடியரசாக பிரகடனம் செய்யப்பட்டது. இலங்கைத் தமிழர் வரலாற்றில் இந்த நாளும் மிக முக்கியமான நாளாகும்.

1970 ஆண்டு நவம்பர் மாதம் 23ஆம் நாள் மாணவர்பேரவை தரப்படுத்தலுக்கு எதிரான கண்டன ஊர்வலத்தை யாழ்ப்பாணத்தில் நடாத்தியது. பின்னர் திருகோணமலை மட்டக்களப்பு நகரங்களிலும் நடாத்தப்பட்டது. இந் நடவடிக்கைகளில் பங்கேற்ற சிவகுமாரன் சாத்வீக நடவடிக்கைகளில் திருப்தியுறாமல் வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபாடு காட்டத் தொடங்கினான். ஆதலால் பத்திரிகைச் செய்திகளில் அவனது பெயர் அடிபடத் தொடங்கி இருந்தது. யாழ்ப்பாண பிரதான வீதிக்கு அருகே அப்போதைய யாழ்ப்பாண மேயர் துரையப்பாவின் காருக்குக் குண்டு வைத்தது அப்போதைய ஐக்கிய முன்னணி அரசின் அமைச்சராக இருந்த சோமவீர சந்திரசிறியின் காருக்கு உரும்பிராயில் வைத்து குண்டெறிந்தது என்பன போன்ற சம்பவங்களில் அவனது பெயர் பரபரப்பாகப் பேசப்பட்டது. இவற்றிற்காக அவன் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாண விளக்க மறியலில் வைக்கப்பட்டான். இவையெல்லாம் 1970க்கும் 1972க்கும் இடைப்பட்ட கால நிகழ்வுகளாகும்.

சிறைக்குள்ளும் அவன் கலகக்காரனாகவே இருந்ததனால் அவன் அநுராதபுர சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருந்தான். அவனது வழக்குகளுக்கான ஒவ்வொரு தவணையின் போதும் யாழ்ப்பாணம் கொண்டுவரப்படுவான். அவனது வழக்குகள் விசாரணைக்கு



படிப்பகம்

padippakam

எடுக்கப்படாமல் தவணைகளாக இழுத்தடிக்கப்பட்டதால் யாழ்ப் பாணத்திற்கும் அநுராதபுரத்திற்கும் இடையே அலைக்கழிக்கப்பட்டான். அப்படியாக யாழ்ப்பாணச் சிறைக்கு கொண்டு வந்த ஒரு பொழுதினில் தான் 1972 மே மாதத்தில் நான் சிவகுமாரனை முதலில் சந்தித்தேன். நான் அப்போது மே 22ஆம் நாள் குடியரசுப் பிரகடனத்தை எதிர்த்து இடம்பெற்ற கிளர்ச்சியில் கைதானவர்களில் ஒருவனாக யாழ்ப்பாணம் சிறையில் இருந்தேன். 1972இன் இறுதிப்பகுதியில் நாங்களெல்லோரும் விடுவிக்கப்பட்டோம். பின்னர் சிவகுமாரனும் பிணையில் விடுதலை யானான். 1973இன் பிற்பகுதியில் மலையக மக்களுடன் உறவைப் பேணவேண்டும் என்ற வேலைத்திட்டம் இளைஞர் பேரவையால் முன்வைக்கப்பட்டபோது அதில் சிவகுமாரன் ஆர்வத்துடன் பங்கேற்று எங்களுடன் மலையகம் வந்திருந்தான். ஒரு மாதத்தின்பின் மலையகத்தில் இருந்து நாங்கள் யாழ்ப்பாணம் திரும்பியபோது நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டிற்கான தயாரிப்பு வேலைகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. (மாநாட்டை கொழும்பில்தான் நடத்த வேண்டும் என்ற அரசாங்கத்தின் நெருக்குதல்களை மீறி அமைப்பாளர்கள் யாழ்ப்பாணத்தில் நடத்த முடிவெடுத்திருந்தனர்) ஆனால் எங்களைப் போன்ற இளம் சமூக ஆர்வலர்கள் ஒதுக்கப்பட்டவர்களாகவே கணிக்கப் பட்டிருந்தோம். இது எங்களுக்குச் சினத்தை மூட்டியது. சிவகுமாரன் தலைமையில் யாழ்ப்பாண பிரதான வீதியில் அமைந்திருந்த நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டின் செயலகத்திற்குச் சென்றோம். மாநாட்டுப் பொறுப்பாளர்களைச் சந்தித்து நாங்களும் பங்களிக்கும் வகையில் செயல்திட்டத்தை வகுக்கும்படி கோரினோம். முதலில் அவர்கள் மறுத் தார்கள். அப்படியானால் எங்கள் பங்களிப்பு இல்லாமல் மாநாடு நடைபெற முடியாது என சிவகுமாரன் எச்சரித்தான். அதன் பின் தொண்டர் அமைப்பில் எங்களையும் இணைப்பதாக ஒப்புக்கொள்ளப் பட்டது. சிவகுமாரன் பொறுப்பாளர்களில் ஒருவனாக அறிவிக்கப் பட்டான். நானும் வேறு பல நண்பர்களும் தொண்டர்களாகப் பணி யேற்றோம்.

1974ஜனவரி 10இல் இறுதிநாள் நிகழ்வாக யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் மாநாட்டுப் பேராளர்கள் உரையாற்றும் பொதுக்கூட்டம் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது. இந்த மாநாடு திட்டமிடப்பட்டபோது இத்தனை எழுச்சியாக மக்கள் ஆதரவு இதற்குக் கிடைக்கும் என்று அமைப்பாளர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. ஆதலால் சில நூற்றுக்கணக்கானவர் கலந்து கொள்ளக் கூடிய வீரசிங்கம் மண்டபத்தைப் பொதுக்கூட்டத்திற்கு ஒழுங்குபடுத்தியிருந்தனர். ஆனால் மாநாடு நடைபெறுவது தொடர்பாக இலங்கை அரசு மேற்கொண்ட எதிர் நடவடிக்கைகள் தமிழ் பேசும் மக்களிடையே எழுச்சியைத் தோற்றுவித்துவிட்டது. ஆதலால் யாரும் எதிர்பாராத வகையில் இறுதிநாள் நிகழ்ச்சிக்குப் பல்லாயிரக்கணக்கணக்கில் மக்கள் வீரசிங்கம்



படிப்பகம்

padippakam

மண்டபத்தை முற்றுகையிடத் தொடங்கி விட்டனர். மண்டப ஒழுங்கைக் கவனித்துக் கொண்டிருந்த தொண்டர்களாகிய எங்களுக்கு நிலைமையின் தீவிரம் தெரியத் தொடங்கி விட்டது. உடனடியாக சிவகுமாரன் எங்களை அழைத்து மாற்று வழிகளை யோசிக்கும்படி கோரினான். அப்போதுதான் நாங்கள் கூட்டத்தை எல்லாப் பொதுமக்களும் பார்க்கவும் கேட்கவும் வசதியாக மண்டபத்திற்கு வெளியே நடத்தக் கோருவதென்று தீர்மானித்தோம். எங்கள் அழுத்தம் காரணமாக அமைப்பாளர்கள் வெளியே கூட்டம் நடாத்தச் சம்மதித்தனர். நாங்கள் வெளியே கட்டப்பட்டிருந்த சிகரத்திற்குக் கீழே வாங்குகளை அடுக்கி தற்காலிக மேடை அமைத்தோம். வீரசிங்க மண்டபக் கட்டிடத்தின் சிறு முற்றம் அதற்கும் எதிரே கோட்டைச் சுவரில் இருந்து சரிவாக அமைந்த புல்வெளி. இதனைப் பிரித்தபடி தார்ச்சாலை. நாங்கள் மேடைக்கு அருகே இருந்தோம். தார்ச்சாலை புல்வெளி எங்கும் மக்கள் தலைகளே தெரிந்தன. திருச்சி பேராசிரியர் நயினார் முகமது பேசத் தொடங்கினார். நாங்கள் பேச்சை இரசிக்க தொடங்கியிருந்தோம். அப்போதுதான் அந்த நாமெல்லாரும் அறிந்த துயரம் நிகழ்ந்தது. மேடையின் இடது பக்கத்தே அதாவது புல்லுக்குளம் பக்கத்தே சலசலப்பு ஏற்பட்டது. பொலிசார் அமர்ந்திருந்த மக்களைக் கலைக்க முயற்சித்துக் கொண்டிருந்தனர். சலசலப்பு உடனேயே அல்லோல கல்லோலமாக மாறத்தொடங்கியது. மக்கள் நெருக்கியடித்தபடி நகரத் தொடங்கினர். மேடையில் இருந்தவர்கள் மக்களை அமைதியாக இருக்கும்படியும் பொலிசாரை விலகிச் செல்லும்படியும் வேண்டுகோள் விடுத்தனர். அப்போது துப்பாக்கி வேட்டுச்சத்தம் கேட்டது. மக்கள் மிரண்டு ஓடத்தொடங்கினர். அவ்வேளையில்தான் அது நடந்தது. தொண்டர்கள் என்ற நிலையில் மேடையின் அருகே இருந்தோம் என்பதால் எல்லாவற்றையும் எங்களால் தெளிவாகவே பார்க்க முடிந்தது. அந்த மேடை அமைக்கப்பட்டிருந்த சிறு முற்றத்தையும் தார்த்தெருவையும் பிரித்த மறிப்புக் கம்பியைத் தாண்டுவதற்காக ஒருவர் தொட்டபோதே எங்களைப் பார்த்து அலறியபடி வீழ்ந்தார். பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டினால் அறுந்து விழுந்த மின்சார கம்பியில் இருந்து மின் ஒழுக்கு அந்த மறிப்பு கம்பியிலும் பரவியிருப்பதை அப்போதுதான் நாங்கள் உணர்ந்தோம். ஆதலால் அதனைத் தொடவேண்டாம் என்று நாங்கள் கத்தித் தடுத்துக் கொண்டிருந்த போதும் அதைத் தொட்டவர்கள் அலறியபடி செத்து வீழ்ந்தார்கள். எல்லாம் அடங்கிய இறுதி நேரம் வரையில் நானும் சிவகுமாரனும் அங்கிருந்தோம். இதற்குப் பழிக்குப் பழி வாங்குவதென்று நாங்கள் இருவரும் சபதம் செய்து கொண்டோம். காலையில் சந்திப்பதற்கான இடத்தையும் தீர்மானித்துக் கொண்டோம். ஆனால் விடிவதற்கு முன்பாகவே நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் வீட்டிற்குக் காவலாக நின்ற பொலிசார் மீது சிவகுமாரன் வெடிகுண்டை வீசி விட்டான். பொலிசார் காயமடைந்தார்கள். சிவகுமாரன் தேடப்படுபவனாக மாறிவிட்டான். இது அவனது குண இயல்பை விளக்க போதுமானதாக இருக்கும் என்று நினைக்கிறேன்.



படிப்பகம்

padippakam

தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் துயர நிகழ்வுகளுக்குப் பொறுப்பாக இருந்த உதவி பொலிஸ் அதிபர் சந்திரசேகராவைச் பழி வாங்குவதே எங்களின் நோக்கமாக இருந்தது. மிகச் சரியான அந்தத் திகதி எனக்கு நினைவில் இல்லை. கைலாசப் பிள்ளையார் கோவிலுக்கு முன்னால் சந்திரசேகராவை மறித்துக் கொலை செய்வது என்பது எங்கள் திட்டமாக ஏற்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த முயற்சி எங்களுக்குப் பாரிய தோல்வியையே தேடித்தந்தது. சந்திரசேகரா உயிர் தப்பி விட்டான் சிவகுமாரன் மிக உயர் தேடலுக்கு உரியவனாக அறிவிக்கப் பட்டான். அவனது தலைக்கு விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 1974ஆம் ஆண்டில் அவனது ஊரான உரும்பிராய் கிராமம் எழுநூறு பொலிசாரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் வேட்டைக்கு உள்ளானது. இன்றைக்குப் போராட்டம் முதிர்ந்த நிலையில் இவையெல்லாம் சாதாரணமாக இருக்ககூடும்.

இந்நிலையில் சிவகுமாரனை இந்தியாவுக்கு அனுப்ப முடிவெடுத்தோம். அவ்வேளையில் தரமான கருவிகள் வாங்குவதென்றும் எண்ணியிருந்தோம். இரகசிய கடல்வழி பயணத்திற்குத் தேவையான பணம் எம்மிடம் இருக்கவில்லை. பணம் தேடும் வேறு முயற்சிகளை ஆராயத் தொடங்கினோம். கோப்பாய் கிராமிய வங்கி எங்கள் கவனத்திற்கு வந்தது.

1974ஆம் ஆண்டு ஜூன் 5ஆம் திகதி காலை பத்து மணியளவில் மருதனார்மடத்தில் இருந்து அழைத்துவரப்பட்ட வாடகை வண்டியில் உரும்பிராயில் இருந்து நாங்கள் நால்வர் (சிவகுமாரன் மகேந்திரன் ஜீவராசா நான்) கோப்பாய் நோக்கி பயணித்தோம். எங்கள் திட்டம் சொல்லளவில் மிகச் சிறந்ததாகவே இருந்தது. ஆனால் நடைமுறையில் இறங்கியபோது கட்டுத் தோட்டாக்கள் கொண்ட எங்கள் ஆயுதங்கள் எதுவும் ஒத்துழைக்கவில்லை. ஒன்று பிழைக்க மற்றவையெல்லாம் குழப்பமாகிவிட்டன. எங்கள் கால்களை நம்பி குடிமனைகளுக்கு ஊடாக ஓடத்தொடங்கனோம். கொள்ளைக்காரர் என்றபடி ஊர்மக்கள் எங்களைத் துரத்தத் தொடங்கினர். கற்களால் எறியத் தொடங்கினர். ஊர்மனை தாண்டி தோட்டப்பகுதிக்கு வந்துவிட்டோம். வெடிக்காத கட்டுத் தோட்டாக்கள் கொண்ட துப்பாக்கயைக் காட்டி துரத்த வருபவர்களைத் தடுத்து நிறுத்தினோம். நாம் யார் எதற்கு வந்தோம் என்பதை விளங்கப்படுத்தினோம். சிவகுமாரன் தன்னை அறிமுகப்படுத்தியதும் சிலருக்கு அவனைத் தெரிந்திருந்தது. நாங்கள் மெதுவாக ஆசுவாசப் படுத்தியபடி நீர்வேலி நோக்கி தோட்ட வரப்புகள் வழியே நடக்கத் தொடங்கினோம். ஊர்மக்கள் பின்னே எங்களைப் பார்த்தபடி நின்றிருந்தனர். நேரம் நண்பகலை நெருங்கிக் கொண்டிருந்தது. சற்று நேரத்தில் எதிரே மண்பாதையில் விரைந்து வந்த பொலிஸ் வாகனங்கள் எங்களை வழிமறித்தன. பின்னால் திரும்பிய போது அங்கேயும் பொலிசார் எங்களை நோக்கி வருவது தெரிந்தது. நாங்கள் முற்றுகைக்குள்



படிப்பகம்

padippakam

மாட்டுப்பட்டோம். இப்போது எல்லோரது கைகளிலும் இருந்த குண்டு கள் இல்லாத ஆயுதங்கள் என்னிடம் ஒப்படைக்கப்பட்டன. நால்வரும் ஒன்றாகப் பிடிபடாமல் நான்கு திசைகளில் பிரிந்து செல்வதுபோல் போக்குக் காட்டுவதென்றும் தீர்மானித்துக் கொண்டோம். இதனால் சிவகுமாரன் உட்பட எல்லோரும் தப்ப முடியுமென்று நம்பினோம். ஆனால் நாங்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக சிவகுமாரனே பொலிசாரால் சுற்றி வளைக்கப்பட்டான்.

ஏறத்தாழ நண்பகல் நேரம். உச்சி வெயிலை உயர்த்திப் பிடித்தபடி சூரியன். மரவள்ளித் தோட்டத்து செம்மண்ணில் அவன் வீழ்ந்து கிடந் தான். அவனது குதிக்காலில் இருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. துப்பாக்கியால் குறிபார்த்தபடி காக்கிச் சட்டைக் காவலர்கள் சூழ்ந்து நின்றனர். இனித் தப்ப வழியில்லை என்னும் நிலையில் தன் சட்டைப் பையில் இருந்த சிறிய வெற்று வாசனைத் திரவிய குப்பிக்குள் பத்திரப் படுத்தியிருந்த சயனைட்டை அவன் அருந்தினான்.

ஈழப்போராட்டத்தின் முதல் வித்தாய் முன்னறிவித்தவனாய் மாணவர் எழுச்சியின் குறியீடாய் மாறிப்போனான் சிவகுமாரன்.

'சாத்வீகப் பாதையில்
சந்தி பிரித்தாய்
கால வெளியில்
சுவடுகள் பதித்தாய்
காலக் கரைவிலும்
உன்றன் சுவடுகள்..'

**(பொன் சிவகுமாரனின் 15வது ஆண்டு நினைவின்போது அதாவது 1989ஆம் ஆண்டில் என்னால் எழுதப்பட்ட கவிதையின் சில வரிகள் இவை.)**



படிப்பகம்

padippakam

# யாசர் அரபாத்: ஒரு முடிவுறாத வரலாறு

**ஞாயிறு, 14 நவம் 2004**

பிரான்சின் தலைநகரான பாரிசின் இராணுவ மருத்துவ மனையில் பாலஸ்தீன மக்களின் நேசத்திற்குரிய அந்தத் தலைவர் இறந்து விட்டதாக இன்று அதிகாலையில் (11-11-2004) அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாக யாசர் அரபாத் அவர்கள் வாழ்வுக்கும் இறப்புக்கும் இடையே ஊசலாடிக்கொண்டிருந்தார். அவருடைய நிலையை அறியத் துடிக்கும் கோடானுகோடி ஆர்வலர்களுடன், அகதியான நானும் பாரிசின் புறநகர்ப் பகுதியில் இருந்தபடி ஊடகங்களைத் துழாவிக் கொண்டிருந்தேன்.

1974ஆம் ஆண்டில் ஐநா மன்றத்தில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யாசர் அரபாத் அவர்கள் ஆற்றிய நீண்ட உரையின் இறுதி வரிகள் என் நினைவுகளில் அலை மோதிக்கொண்டிருந்தன.

இன்று நான் இந்த மன்றத்திற்கு ஒலிவ் கிளையினையும் விடுதலை வீரனின் சுடுகருவியையும் ஒருங்கே காவியபடி வந்திருக்கின்றேன். சமாதானத்தின் சின்னமான இந்த ஒலிவ்



படிப்பகம்

padippakam

கிளை என் கைகளில் இருந்து நழுவிவிடாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். மீளவும் வேண்டுகிறேன் இந்த ஒலிவ் கிளை என் கைகளில் இருந்து நழுவிவிடாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்...

இதனை முப்பது ஆண்டுகளின் முன்னால் பத்திரிகையில் படித்தபோது இருந்த உணர்வுகள்தான் தற்போதும் என்னுள் கிளர்ந்தெழுகின்றன. அன்று அந்த மாமன்றத்தில் இளமையான தோற்றத்துடன் தனக்கே உரியதான மரபான கெபியத் (keffieh) என்று சொல்லப்படும் வெள்ளையில் கறுத்த கட்டங்களிட்ட துணியைத் தலையுடன் இறுக இணைக்கும் இரண்டு கறுப்பு வளையங்களுடனான அந்த உலகப் புகழ்பெற்ற தலையணியுடன் காட்சியளிக்கும் அந்த நிழல் படத்தைப் பார்த்த உணர்வு இப்போதும் கிளர்ச்சி ஊட்டுவதாகவே உள்ளது.

1969ஆம் ஆண்டில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை யாசர் அரபாத் ஏற்றதன் பின்னால் பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் உலக அரங்கின் கவனத்திற்கு வந்தது. அதனூடாக யாசர் அரபாத் அவர்களும் உலகக்கண்ணை உறுத்துபவராக மாறத் தொடங்கினார். எழுபதுகள் தொடங்கி பாலஸ்தீன மக்களின் நேசத்திற் குரிய தலைவராக உயர்வு பெற்ற அவர், உலகெங்கும் தேசிய இன விடுதலைக்காய் போராடுவோரின் இலட்சிய வீரராகவும் கணிக்கப்பட்டார். அரசியல் ஆர்வலராய் போராட்ட கனவை வளர்த்துக் கொண்டிருந்த என்னொத்த தலைமுறை பொடியன்கள் அவர்பால் ஈர்ப்புக் கொண்டதில் ஆச்சரியமில்லை.

ஈழப்போராட்டம் முகிழத் தொடங்கிய எழுபதுகளின் தொடக்கத்தில் என்னொத்த தலைமுறையினரை பாதித்த சர்வதேச நிகழ்வுகளில் வங்கதேச விடுதலை போராட்டமும், ஐ.நா.மன்றத்தில் யாசர் அரபாத் அவர்கள் ஆற்றிய உரையும், ஐரிஷ் விடுதலைப் போராளியான பொபிசாண்டசின் மரணமும் முக்கியமானவை என்று கருதுகிறேன். அந்தத் தலைமுறையினர் தற்போது அவற்றை இரைமீட்டு அசைபோட்டுப் பார்ப்பார்கள் என்றும் நினைக்கின்றேன். இவை நாம் முன்னெடுக்க விரும்பிய தேசிய விடுதலைப் போராட்டத்தில் நம்பிக்கையையும் உறுதியையும் எமக்கு அளித்தன. எமது பாதை சரியென்பதையும் அவை உணர்த்தின.

ஈழப்போராட்டதிற்கும் வெளிநாட்டிற்குமான தொடர்பென பலரும் 1983க்குப் பின்னரான இந்தியத்தொடர்பையே அறிந்து வைத்திருக் கின்றனர். ஆம் 83 கலவரத்திற்குப் பின்னால் நம்மவர் இந்தியாவிற்கு அகதிகளாகச் சென்றதும், அல்லது அந்த வேளையில் போராளிகள் அங்கு தங்கியிருந்ததும், அப்போராளிகளுக்கு இந்தியா பயிற்சி வசதிகளை அளித் தது என்ற சிறிலங்கா அரசின் குற்றச்சாட்டும் போன்ற இன்னோரன்ன சம்பவங்கள் பலரறிந்தவை. பலருக்கும் இவையே நினைவிருக்ககூடும்.



படிப்பகம்

padippakam

ஈழப்போராட்டத்தின் வெளிநாட்டுடனான தொடர்பு 1976ஆம் ஆண்டில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் ஏற்பட்டதைப் பலரும் அறியார். தற்போது இதனை வாசித்துக் கொண்டிருக்கும் பலருக்கும் இவை ஆச்சரியத்தை அளிக்க கூடும். அது இரகசியமான விடயமுமல்ல. அப்போது இலண்டனில் வசித்துக்கொண்டிருந்த ஈழப்போராட்டத்தில் ஆர்வம் கொண்ட ஆய்வாளரான இ.இரத்தினசபாபதி அவர்களுக்கும் அப்போதைய பாலஸ்தீன விடுதலை இயக்க இலண்டன் பிரதிநிதியாக இருந்த சாயித் ஹமாம் (Said Hammami) அவர்களுக்கும் இடையே ஏற்பட்டதான நட்புறவு ஈழப்போராட்டத்தில் மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் சில அதிர்வுகளை ஏற்படுத்தியது என்பது மறுக்க முடியாதது. அந்த உறவின் விளைவாய் ஈழத்திற்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையேயான அரசியல் இராணுவ உறவுகள் இறுக்கம் பெற்றன என்பதும் வரலாற்றுக் குறிப்பு.

எனது போராட்டப் பயணத்தில் அதாவது எனது தலைமுறையைச் சார்ந்தவர்கள்பொடியன்கள் 70ஆம் ஆண்டுகளின் பின்னால் முனைப்புப் பெற்று தீவிர செயல்பாடுகளில் இறங்கி சிறைக்குச் சென்று மீண்டு பொலிசாரின் கண்காணிப்புக்கு உள்ளாகியிருந்த தலைமுறையினரில் ஒருவனாகிய நான் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தாரை அதன் புகழ்மிக்க தலைமையைச் சந்திக்க நேரும் எனக் கனவுகூடக் கண்டதில்லை. ஆனால் அது 1978இல் சாத்தியமானது. அந்தப் பொழுதுகள் இன்றும் நினைவுகளில் பசுமையாக இருக்கின்றன. 1978இல் பிற்பகுதியில் லெபானான் தலைநகரான பெய்ரூத்துக்குச் சென்ற குழுவில் ஒருவனாக இடம்பெற்றிருந்தேன். லங்காராணி நாவலின் ஆசிரியர் அருளர் (அப்போது அந்த நாவல் எழுதப்படவில்லை.) அந்தக் குழுவிற்குத் தலைமையேற்றிருந்தார். இது அருளரின் இரண்டாவது பயணமாகும். முதலில் அவர் இலண்டனில் இருந்தபோது இரத்தினசபாதியின் ஏற்பாட்டின் பேரில் 1976இல் லெபனான் சென்றிருக்கிறார். அதன்பின் பலரும் இலண்டனில் இருந்து அங்கு சென்று விட்டு இலங்கைக்கு வந்து சேர்ந்திருந்தனர். நாங்கள் லெபனான் சென்றபோது உள்நாட்டுக்கலவரம் ஏற்பட்டு அமைதிகாக்கும் படையின் கட்டுப்பாட்டில் நகரம் இருந்தது. நகரம் சிதைந்து கிடந்தது. இப்படியான காட்சிகளை நான் முன்னர் பார்த்திருந்ததில்லை. அதற்கான வாய்ப்பும் இல்லை. ஆனால் கடந்த வருடம் சாவகச்சேரியைப் பார்க்க வாய்ப்புக் கிடைத்தபோது அந்த 78ஆம் ஆண்டு பெய்ரூட் நகரம் நினைவுக்கு வந்தது. ஆனால் பெய்ரூட் இந்த அளவு சிதைவைக் கொண்டதாய் இருக்கவில்லை.

பெய்ரூத்தில் இருந்தபோது பாலஸ்தீன அகதிமுகாம்களைச் சென்று பார்த்தோம். பல்வேறு பணித்தலங்களுக்கும் சென்றோம். அவர்களின் தோழமைமிக்க வரவேற்புடன் பல பணிகளை நாம் மேற்கொண்டோம். அவர்களுக்கு நாங்கள் காவிச் சென்ற இலங்கைத் தேயிலைப் பொதிகளை



படிப்பகம்

அன்பளிப்புகளாக வழங்கினோம். அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டோம். எங்களைப்போல் உலகெங்கும் இருந்து பலரும் அங்கு வந்திருந்தனர். அவர் யார் எந்த நாட்டவரென்பதெல்லாம் இப்போது அவசியமில்லை. அப்போதுதான் பாலஸ்தீனர்களின் உரையாடலில் அடிக்கடி அபுஅம்மார் (Abou Ammar) என்னும் பெயர் மரியாதையுடன் உச்சரிக்கப்படுவதை அவதானித்தேன். ஆம் யாசர் அரபாத் மக்களாலும் போராளிகளாலும் அபுஅம்மார் என்னும் பெயராலேயே சுட்டப்பட்டார். அது அவருடைய போர்க்களப் பெயராக அறியப்பட்டிருந்தது. அபுஅம்மார் அவர்கள் பாலஸ்தீன விடுதலையில் அக்கறை கொண்டது போலவே உலகெங்குமான ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் தேசியங்கள் குறித்தும் அக்கறை கொண்டிருந்தார். அதனால்தான் ஈழத்தவரான என்போன்றோரெல்லாம் அங்கு செல்ல வாய்ப்பானது. அந்த பகழ்மிக்க போராளியின் பெயரின் ஈர்ப்பினால் பின்னர் சிறிது காலம் எனது பெயரின் முன்னால் அபு என்பதை இணைத்து பெயரை உச்சரித்து வந்தேன். இப்படி அபு என்பதை தங்கள் பெயரின் முன்னால் ஒட்டி அழகுபார்த்த என்னொத்தவர்- தோழர்கள் எனக் கூறிக்கொண்டோர் சிலரை இன்றைக்கு எண்ணிப்பார்கிறேன் கவலைதான் மிஞ்சுகின்றது. பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் பல போராளிகளின் போர்க்களப் பெயர்கள் அபு என்றே தொடங்கும். அவர்களின் இராணுவத் தளபதியான புகழ்பெற்ற அபுஜிகாத்தை நீங்கள் அறிந்திருக்கக் கூடும்.

இத்தனை நெருக்கமான தொடர்பும் உறவும் ஈழப்போராட்டத்திற்கும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும் இடையே நிலவி இருந்த போதும் இன்று நின்று நிதானித்து ஒரு கால்நூற்றாண்டின் முன்னரான அந்த நிகழ்வுகளை யோசிக்கையில் அவை விழலுக்கு இறைத்த நீராகிவிட்டதா? என்ற கேள்வி எழுவது தவிர்க்கமுடியாதுள்ளது. இதனை மிகுந்த கவலையுடனே தெரிவிக்க வேண்டி இருக்கின்றது. சிலவேளைகளில் இந்தத் தொடர்புகள் ஈழப்போராட்டத்தில் தேவையற்றதான சிக்கல்களுக்கு முரண்களுக்கு வழிவகுத்து விட்டனவோ என்ற எண்ணமும் என்னிடத்து உண்டு. போராட்டம் முதிரா நிலையில், போராளிகள் பதமாகாத நிலையில் இவ்வகை உறவுகள் எத்தகைய சீரழிவுகளை ஏற்படுத்தும் போலிகளை பதர்களை உருவாக்கும் என்பதற்கு கலைக்கப்பட்ட அந்த ஈரோஸ் இயக்கம் சிறந்த உதாரணமாகலாம். பாலஸ்தீன உறவு உள்ளது என்பதை மட்டுமே தனது பலமாக கொண்டு பரப்புரை செய்து கட்டியெழுப்பட்ட அந்த இயக்கத்தின் பயிற்சி பெற்ற உறுப்பினர்கள் எவரும் இன்றைக்கு இந்தபோராட்டதின் ஒத்ததிசைவில் இல்லையென்பது ஒரு மோசமான எடுத்துக்காட்டாக மாறி நிற்கின்றது. வரலாறு அவர்களை மன்னிக்குமா தெரியவில்லை. அவர்களுக்கான காலம் இன்னும் கடந்துவிடவில்லை என்பதே என்நிலைப்பாடு. இவர்களின் பரப்புரையினால்தான் இருநூறுக்கும் மேற்பட்டதான தோழர்கள் தம் இன்னுயிரை ஈந்தார்கள் என்பதை எப்படி மறப்பது.

padippakam

ஆனால் பாலஸ்தீன விடுதலை இயக்கப் போராட்டமும் யாசர் அரபாத் அவர்களின் வாழ்வும் உலகளாவிய தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கு வழங்கியுள்ள பாடங்கள் ஏராளம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஈழப்போராட்டததிற்கு இத்தனை நெருக்கமாக பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் இருந்தபோதும் அதன் போராட்ட அனுபவங்கள் பரிசோதித்து பார்க்கப்பட்டனவா எனக்குத் தெரியாது. Mohammed Yasser Abdul-Ra'ouf Qudwa Al-Husseini, என இயற்பெயர் கொண்ட யாசர் அரபாத் அவர்கள் 1929ஆம் ஆண்டில் கெய்ரோவில் பிறந்தார். கட்டிடக்கலை பொறியலில் இளங்கலைப் படிப்பை 1951இல் எகிப்தில் முடித்த அவர் குவைத்தில் பணியாற்றினார். 1955இல் எகிப்தில் கமால் அப்துல் நசாரின் (Gamal Abdel Nasser) ஆட்சியில் ஒருதடவை கைது செய்யப்பட்டிருக்கிறார். குவைத்தில் அபுஜிகாத் அவர்களைச் சந்தித்ததின் பின்னால் அவருடன் இணைந்து பத்தா அமைப்பை 1957இல் நிறுவினார். அதனூடாக அவர் பாலஸ்தீன அரசியலில் போராட்டத்தில் தீர்க்கமாக காலடி எடுத்து வைத்தார். அதன் பின்னால் முழுமையாக அவருடைய ஆளுமை தலைமைத்துவம் வழிகாட்டல் என்பவற்றினூடாக பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. பத்தா என்னும் சிறிய அமைப்பை நிறுவிய அபுஅம்மாரும் அபுஜிகாத்தும் அதற்கூடாக ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனத்திற்குள் இருந்த பல்வேறு கருத்துக்கள் கொண்ட அமைப்புகளை இணைத்து பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை அதாவது பிஎல்ஓ (கஃ)என்னும் ஐக்கிய முன்னணியை உருவாக்கினர். 1969இல் அதன் மூன்றாவது செயலதிபராய் தலைவராய்ப் பொறுப்பேற்ற யாசர் அரபாத் அவர்கள் உலக அரங்கின் முக்கிய விடுதலைப் போராளியாக அல்லது விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான இலட்சிய உருவாக மாறத்தொடங்குகிறார். இவருடைய போராட்ட வாழ்விற்கூடாக நாம் அறிந்து கொள்ளக்கூடியது பல. தேசிய விடுதலைப்போராட்டத்திற்குத் தேவையான அனுவங்கள் பல இந்த விடுதலைபோராட்டத்துள் அவரது தலைமைத்துவ வழிகாட்டுதலில் பொதிந்து கிடக்கின்றன.

பாலஸ்தீனத்தைச் சுற்றியதான அண்டைநாடுகளான யோர்தான், சிரியா, லெபனான், எகிப்து போன்ற நாடுகள் அரபு நாடுகளாக இருந்த போதும் இந்த அரபு நாடுகளை நம்பியமை எவ்வகைகளில் பாலஸ்தீன விடுதலையை முன்னெடுக்க உதவிபுரிந்தன அல்லது முன்னெடுப்பதற்குத் தடையாக இருந்தன என்பதைக் கற்றுக்கொள்வது உலங்கெங்குமான தேச விடுதலைப் போராளிகளுக்கு உதவக்கூடியதொன்றே. இது நமது ஈழப்போராட்டத்திலும் அனுபவமாக வழிமொழியப்பட்டுள்ளது என்பதை மறந்துவிடக்கூடாது. அதாவது அண்டைநாடான இந்தியா நமக்கு எந்தவகையில் துணையாக இருந்தது என்பதை 1987ஆம் ஆண்டின் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்னான அமைதி காக்கும் நிகழ்வுகள் உலகிற்கு எடுத்துக்காட்டின. இந்தப் பின்னணியில்



படிப்பகம்

padippakam

அண்டைநாடுகள் பாலஸ்தீன விடுதலையில் எவ்வகையான சிக்கல்களை உருவாக்கியிருக்கும் என்பது நாம் புரிந்து கொள்ளக்கூடியதே. யோர்தானில் இருந்தும் பின்னர் லெபனானில் இருந்தும் வெளியேற்றப்பட்ட பாலஸ்தீன விடுதலை அமைப்பின் வரலாற்றை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அந்த அண்டை நாடுகள் தங்கள் உள்ளக அரசியலுக்கேற்ப அல்லது தந்நலம் சார்ந்து பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தைப் பயன்படுத்த முனைந்ததும் அந்தச் சிக்கல்களுக்குள் பாலஸ்தீனம் சிக்கித் தவித்ததும் இந்நிலையிலும் அதிலிருந்து மீள யாசர் அரபாத் அவர்களின் சூழ்ச்சித் திறன் மிக்க நுண்ணரசியல் அறிவும் அவருடைய தலைமைத்துவ வழிகாட்டலும் உதவின என்பது முக்கியமான விடயங்களாகும். அதே போன்றுதான் பல்வேறு கருத்துக்களைக் கொண்ட இயக்கங்களை, குழுக்களை தான் நோய்வாய்பட்டு தலைமையகமான மொகாற்றாவில் இருந்து வெளியேறும் வரை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்து அரவணைத்துச் சென்ற முறைமை கூட தேசிய விடுதலை இயக்கங்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாகும். அவற்றில் பல தவறுகள் நிகழ்ந்ததாக இன்று ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்படும் போதும் அவர் பாலஸ்தீன விடுதலை இயக்கம் என்பதையே ஒரே பிரதிநிதித்துவமாக நிறுவி அதனை பேச்சுவார்த்தை மேசையில் அமர்த்தி தான் நினைத்தவைச் சிலவற்றைச் செவ்வனே நிறைவேற்றி விடைபெற்று சென்றுள்ளார். இதன் சாதக பாதகங்கள் பற்றி வரலாறுதான் சொல்லவேண்டும்.

அதேபோல் பாலஸ்தீன விடுதலை இயக்கமும், அதன் போராட்டமும், அதன் தலைவரும் எவ்வகையாக சர்வதேச ஆதரவு மற்றும் சர்வதேச சமூகத்தின் உறவுகளைக் கட்டி எழுப்பினார்கள் என்பதையும், அவற்றின் ஊடாக பெறப்பட்ட தீர்வின் பலாபலன்களையும் நாம் கண்கூடாக கண்டுவந்திருக்கின்றோம். அவற்றின் அணைப்பிற்கூடாக பெற்ற வெற்றி தோல்விகளை சர்வதேசம் திணித்த தீர்வுகளை ஆய்வு செய்வதன் மூலம் நாம் கண்டடைய வேண்டும். இன்றைய பாலஸ்தீன அரசின் இறையாண்மையின் எல்லை எதுவரையானது என்பதை அபுஅம்மார் அவர்கள் நோய்வாய்ப்பட்ட வேளையில் வெளிப்படையாக நாம் கண்டுகொண்டோமல்லவா?. சர்வதேச ஆதரவு எந்தஅளவுக்கு விடுதலைப் போராட்டங்களுக்கு உதவும், எந்தஅளவுக்கு நெருக்கடிகளைத் தரும், எந்தஅளவுக்குத் திணிக்கும் என்பவையெல்லாம் தன் மரணத்தின் ஊடாக அவர் விட்டுச் சென்ற பாடமாகத்தான் நாம் கொள்ள வேண்டும்.

பாலஸ்தீன விடுதலை இயக்கம் அமைக்கப்பட்டதன் முதல் பிரகடனத்தில் உலக வரைபடத்தில் இஸ்ரேல் என்ற நாடு என்பதை இல்லாதொழிப்பதே நோக்கமாக அறிவிக்கபட்டிருந்தது. ஆனால் 1987இல் பாலஸ்தீன தேசிய காங்கிரஸ் கூடிய போது முதல் பிரகடனத்தில் மாற்றங்களைக் கொணர்ந்தது. இஸ்ரேலை அங்கிகரித்துப்



படிப்பகம்

padippakam

போராட்ட தந்திரோபாயத்தை மாற்றி அமைத்தது. இது அவர்களைச் சர்வதேச சமூகத்துடன் இணைந்து செயலாற்ற வழிவகுத்தது என்பது குறிப்பிடத்தக்கது. இதனைத் திணிப்பு சார்ந்ததா அல்லது முதிர்ச்சி சார்ந்ததா அல்லது காலத்தின் மாற்றம் சார்ந்ததா என்பதை நாம் அனுபவங்களாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்றே கருதுகின்றேன்.

அதேபோல்தான் பாலஸ்தீன விடுதலை இயக்கம் தனது தலைமறைவு நிழல் அரசினை வெளிநாட்டில் நிறுவி நடாத்தியதையும் நாம் அறிவோம். பின்னர் 1994ஆம் ஆண்டு உடன்படிக்கைகளின் பின்னால் மட்டுப்படுத்தப்பட்டதான அதிகாரங்கள் கொண்ட துண்டாடப்பட்ட பாலஸ்தீன நிலப்பரப்பில் அதே தலைமறைவு நிழல் அரசை தாயகத்தில் மாற்று அரசாக நிறுவ முயன்றபோது ஏற்பட்ட சிக்கல்களை முரண்களை, எதிர்கொண்ட சவால்களைக்கூட நாம் பாடமாக எடுத்துக்கொள்ள முடியும் என்றே நம்புகின்றேன்.

யாசர் அரபாத் என்று அறியப்பட்ட அபுஅம்மார் அவர்கள் போராட்டத்தையே தன்னுடைய வாழ்க்கையாக மாற்றியிருந்தார். ஏறத்தாழ அரைநூற்றாண்டு கால வாழ்வினை இந்தப் போரட்டத்திற்கு அர்ப்பணித்தார். மக்களின் நேசத்திற்குரிய தலைவராக தேசியத் தலைவராக இருந்தார். ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டங்களுக்கு உந்து சக்தியாக இருந்தார். 70கள் 80களில் காவிய நாயகனாக போற்றப்பட்டிருக்கின்றார். தற்போது தனது 75வது வயதில் அவர் மரணமுற்றிருக்கும் இவ்வேளையில் அவரது கனவு அல்லது இலட்சியம் நிறைவேறியிருக்கின்றதா என்று பார்க்கும்போதும் கவலைதான் மிஞ்சுகின்றது. ஆம் யாசர் அரபாத் அவர்கள் ஒரு முடிவுறாத வரலாறு.. அடுத்த தலைமுறை தொடரவேண்டியதான முடிக்க வேண்டியதான வரலாற்றைக் கனவை விட்டுச் சென்றுள்ள தலைவர்.

இந்தத் தலைவரை போராளியைச் சந்திக்க வேண்டும் என்று நெஞ்சில் தவிப்புடன் பெய்ரூத் நகரில் இருபத்தைந்து ஆண்டுகளின் முன்னிருந்த நினைவுகளும் உணர்ச்சிகளும் தற்போது பீறிட்டெழுகின்றன. எங்கள் ஆவலை தணிக்கும் வகையில் அவர் உரையாற்றும் உள்ளக கருத்தரங்கொன்றில் அன்று அவரை தரிசிக்க கிடைத்த வாய்ப்பின்போது பெற்ற உளக்கிளர்ச்சியுடன் இப்போது நான் அவருக்கு புலம்பெயர்ந்து வாழும் ஈழத்து மக்கள் சார்பாக ஈழப்போராட்ட ஆர்வலர்கள், அப்பால் தமிழ் குழுமத்தினர் சார்பாக என் அஞ்சலியைச் செலுத்துகின்றேன். வெல்லட்டும் பாலஸ்தீனம்!

**(இலண்டனில் இருந்து ஒலிபரப்பாகும் ஐபிசி வானொலியிலும், பாரிசிலிருந்து ஒளிபரப்பாகும் ரிரிஎன் தொலைக்காட்சியிலும் ஆற்றிய அஞ்சலி உரைகளின் பிரதி இங்கே இடம்பெறுகின்றது. அந்த ஊடகங்குளுக்கு என் நன்றிகள்)**



படிப்பகம்

padippakam

# ஓர் அகதியின் தாயும் தாயகமும்

**செவ்வாய், 01 ஜூன்2004**

***18-05-2003*** - ஞாயிற்றுக்கிழமை இலங்கைத் தமிழர் புலம்பெயர்ந்து வதியும் மண்டலங்களில் ஒன்றான ஐரோப்பாவில் தொலைபேசிகள் அதிகாலையில் ஒலித்தாலே பதட்டத்துடனும் நடுக்கத்துடனும்தான் ஒலிவாங்கியை எடுக்க முடிகின்றது. அநேகமாக இந்த அதிகாலை அழைப்புகள் இலங்கையில் இருந்து அல்லது இந்தியாவில் இருந்தே வருகின்றன. இவை ஏதாவது சங்கடம் தருகின்ற செய்திகளைத்தான் அநேகமாகச் சொல்கின்றன. இப்படி அதிகாலையில் ஒலித்து எழுப்பிய தொலைபேசியில்தான் அம்மா இறந்து விட்டார் என்ற செய்தியும் எனக்கு வந்து சேர்ந்தது. எதிர்பார்த்ததா? எதிர் பாராததா? சொல்வது கடினம்தான். ஏனெனில் ஒருவாரத்திற்கு முன்னால் மாரடைப்புக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தேறியிருந்த அம்மாவுடன் முதல்நாளும் அதாவது சனிக்கிழமையும் தொலைபேசியில் நீண்ட நேரம் உரையாடியிருந்தேன். தான் நாளை மறுநாள் வீட்டுக்குச் சென்று விடுவேன் என்று நம்பிக்கை தெரிவித்திருந்தார். என்னைத் தான்



படிப்பகம்

padippakam

எதிர்பார்த்திருப்பதாயும் கட்டாயம் வந்து செல்லும்படியும் கூறியிருந்தார். அம்மா வைத்தியசாலைக்கு அவசரமாகக் கொண்டு செல்லப்படுகின்றார் என்று அறிந்த அன்றே அங்கு செல்வதற்கான ஆயத்தங்களில் இறங்கியிருந்தேன். அதன்படி வைத்தியசாலையில் இருந்து அம்மா தீவிர கண்காணிப்புப் பிரிவில் சிகிச்சை பெறுகின்றார் என்ற சான்றிதழை மருத்துவனை நிர்வாகத்திடம் நான் கேட்டிருந்தேன். அவர்கள் அம்மாவுக்கும் அந்தத் தகவலைத் தெரிவித்து விட்டனர். இதனால் நான் எப்படியும் வருவேன் என்ற நம்பிக்கையை அவருக்கு அளித்திருக்க வேண்டும். மகிழ்ச்சியாக இருந்தார். அந்த மகிழ்ச்சிதான் அவரை மரணத்திற்கும் வழிகாட்டியிருக்கலாம். என்னைக் காணவேண்டுமென்ற அவா அவரிடம் மேலோங்கி இருந்தது. நான் மூத்த மகனானதாலும் அதற்கும் மேலாக மந்தையில் இருந்து காணாமல் போன ஆடு என்பதாலும் என்னிடத்தே மிகுந்த வாஞ்சை கொண்டிருந்தார். நான் அவரைப் பிரிந்து பதின்மூன்று ஆண்டுகள் ஆகியிருந்தன. உண்மையில் அவர் எதிர்பார்த்த வாழ்க்கைப் பாதையில் இருந்து பிரிந்து முப்பது ஆண்டுகளுக்கு மேலாகியிருந்தன. 1972ஆம் ஆண்டுக்குப் பின்னால் எனது வாழ்க்கை சிறையும் தலைமறைவுமாகக் கழிந்தது. யாழ்ப்பாணம் கொழும்பு சிறைச்சாலைகளின் வாசல்களில் அவர் காத்திருக்க வேண்டியிருந்தது. இவை அவருக்கு மாளாத துன்பத்தைத் தந்தது என்பதை நான் அறிவேன்;. இருந்தும் பின்னாட்களில் அவரை நான் மூன்று தருணங்களில் மகிழ்ச்சிப்படுத்தினேன் என்பது எனக்கு ஆறுதலைத் தருகின்றது. ஒன்று 1989ஆம் ஆண்டில் நான் திருமணத்திற்குத் தயார் என அறிவித்தது. அதன் மூலம் பொறுப்பற்றவனாய் இருந்து விடுவானோ என்ற அவரின் அவநம்பிக்கையைப் போக்கியது. இரண்டாவது 1993இல் எனது முகம்கொள் கவிதைத் தொகுதிக்கு விருது கிடைத்ததும், அந்த விருதுப்பணம் முழுவதும் அம்மாவுக்குச் சேரும்படி நான் செய்ததும். இதன் மூலம் தனது மூத்த மகனிடம் இருந்து பண உதவி பெறவில்லையே என்ற குறையைப் போக்கியது. மூன்றாவது தான் விரும்பிக் கேட்கும் சர்வதேச வானொலி ஒன்றில் தனது மகனின் குரலைக் கேட்டது. இரவில் தலைமாட்டில் வைத்தபடி வானொலிச் செய்திகளைக் கேட்பதை அம்மா பழக்கமாக கொண்டிருந்தவர். 2001இல் பி.பி.சி. தமிழோசை, என்னிடம் தொடர் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ளும்படி கேட்டபோது பல தயக்கங்கள் இருந்தபோதும் அதனை ஏற்றுக்கொள்வதற்கு இருந்த பல காரணங்களில் எனது குரலை அம்மா கேட்பார் என்பதும் ஒன்றாக இருந்தது. உண்மையில் அது அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளித்திருந்தது. இவையாயினும் என்னால் செய்ய முடிந்திருக்கின்றதே. நான் இங்கு வந்து சேர்ந்ததன் பின்னால் எனது கடைசித் தங்கச்சியின் வேலைகாரணமாக திருகோணமலைக்கு வந்து வாழத்தொடங்கியதன் பின்னால் கடிதம்



படிப்பகம்

padippakam

எழுதுவது குறைந்து தொலைபேசி உரையாடல்கள் அதிகரித்திருந்தது. அந்தத் தொலைபேசி உரையாடல்களின்போது தனது இறுதிக்காலத்தை என்னுடன் கழிக்க வேண்டுமென அடிக்கடி கூறிவந்தார். மருத்துவ மனையில் இருந்து என்னுடனான அந்தக் கடைசித் தொலைபேசி உரையாடலிலும் ஒருமாதமாயினும் தன்னுடன் நிற்கும்படியும் திருகோணமலையில் இருந்து தன்னை யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் செல்லும்படியும் கேட்டிருந்தார். இன்னொரு நாட்டில் அகதித் தஞ்சம் பெற்ற ஒருவர் தனது சொந்த நாட்டில் அமைதி ஏற்படும்வரை அங்கு திரும்ப முடியாது. இந்த எச்சரிக்கை அகதிகளுக்கு வழங்கப்படும் நீலநிறக் கடவுச்சீட்டிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனாலும் தவிர்க்க முடியாத தருணத்தில் ஒரு தடவை செல்வதற்கு பிரான்சில் வாய்ப்பளிக்கிறார்கள். அந்த வாய்ப்பையே அம்மாவைக் காண்பதற்குப் பயன்படுத்த முயற்சித்திருந்தேன். அவர்கள் கேட்ட அனைத்து ஆவணங்களுடன் எனது விண்ணப்பத்தைச் சமர்ப்பித்திருந்தேன். எனது விண்ணபத்திற்கான முடிவினை ஒருவாரத்தின் பின் தெரிவிப்பதாக கூறியிருந்தார்கள். அவர்களின் பதிலில் நம்பிக்கை தொனிக்கவில்லை. எனக்கு ஏமாற்றமாகவும் கவலையாகவும் இருந்தது. இவ்வாவணங்கள் சமர்ப்பிப்பதற்கு திரு.திருமதி தொர தம்பதியினரும், திரு.அ.முருகையன் அவர்களும் துணைபுரிந்திருந்தனர். ஆனால் ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் வந்த செய்தி நிலமையை முற்றாக மாற்றிவிட்டது. நான் உடைந்து போனேன். பேச்சு வரமறுத்துவிட்டது. தொலைபேசிகளில் மாறி மாறி சகோதரர்கள் அறுவரும் எனக்கு ஆறுதல் கூறிக்கொண்டிருந்தார்கள். அவர்களின் கவலையை யார் ஆற்றினார்களோ? இடைக்கிடையே வந்த நண்பர்களின் தொலைபேசி அழைப்புகளுக்கு சுமதிதான் பதிலளித்தார். அம்மாவை நான் ஏமாற்றினேனா? என்னை அம்மா ஏமாற்றினாரா? என்னுள் கேள்விகள் குமிழிட குமிழிட கண்ணீர்க் கொப்பளித்த வண்ணம் இருந்தது.

**19-05-2003 திங்கள்**

ஞாயிறு இரவு தூங்காமல் விழித்திருந்த நான் காலையில் எங்கள் மாவட்டத்தின் நிர்வாக செயலகத்தின் வாயிலில் முதலாளாய் நின்றேன். ஒன்பது மணிக்குக் கதவு திறந்ததும் ஏற்கெனவே விண்ணப்பம் கொடுத்திருந்த குடிவரவுத் திணைக்கள அதிகாரியிடம் எனது கோப்பினைக் கவனித்து முடிவை விரைவாகத் தெரிவிப்பீர்களாவென கண்ணில் நீர்தளும்பக் கேட்டேன். அம்மா நேற்று இறந்துவிட்டார் என்ற ஆவணத்தையும் சமர்ப்பித்தேன். மனசின் அவசரம் போலும் எனது கைகளில் லேசான நடுக்கம் இருந்தது. அதிகாரியின் பேச்சில் கடுமை இருக்கவில்லை. பயண ஏற்பாடுகளைக் கவனிக்கும்படியும் புதன்கிழமை அனுமதி கிடைக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது. ஊருக்கு



படிப்பகம்

padippakam

போகலாம் என்பது உறுதியாகிவிட்டது. 22-05-2003 வியாழன் இலங்கை நேரப்படி காலை ஒன்பதரை மணிக்கு கொழும்பு விமானநிலையத்தை அடைந்தேன். என்னுடன் பிரான்சில் வதியும் தம்பியும் கூடவே வந்திருந்தான். அவனும் என்னைப்போல் அகதி நிலைதான் என்பதால் எனது வழிமுறையிலேயே பயணித்தான். புதன் காலையில்தான் எனக்கு பயண அனுமதி பத்திரத்தைத் தந்திருந்தார்கள். என்னுடைய அகதியட்டை, அகதிகளுக்கான கடவுச்சீட்டு மற்றும் ஏனைய ஆவணங்கள் என்பனவற்றைப் பிணையாக வாங்கி வைத்துக் கொண்டுதான் இந்தப் பத்திரத்தை என்னிடத்தே தந்தார்கள். அதில் பதினைந்து நாட்கள் மட்டுமே இலங்கையில் நான் தங்கியிருக்கலாம் என வரையறை செய்யப்பட்டிருந்தது. இது துயரத்துடன் ஏமாற்றத்தையும் எனக்கு அளித்தது. தம்பிக்கு ஒருமாதம் வழங்கப்பட்டிருந்தது. மாவட்டத்திற்கு மாவட்டம் நடைமுறைகள் வித்தியாசப்படுகின்றன. இரவுப் பயணம் முழுவதும் விமானத்திற்குள் தூக்கமின்றியே கழிந்தது. அம்மாவே கண்ணுக்குள் நின்று கொண்டிருந்தார். அம்மா தாதியாகக் கடமையாற்றி விருப்ப ஓய்வு பெற்றவர். அவரது வேலைச் சுமைக்குள் எனது வேண்டுகோளுக்கேற்ப மேலதிக சேவைகளையும் செய்தவர். எனது செயற்பாடுகள் காரணமாக அவரது வேலைக்கும் இடையூறுகள் ஏற்பட்டதுண்டு. நினைக்கையில் நெஞ்சுக்குள் குற்ற உணர்வே மேலோங்கியது. கொழும்பில் இறங்கியதும் அன்று மதியமே யாழ்ப்பாணம் செல்வதற்கான விமான ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. கடவுச்சீட்டின்றி பிரெஞ்சு மொழியில் வழங்கப்பட்டிருந்த எங்களின் பயணப்பத்திரத்துடன் குடிவரவு அதிகாரிகள் அல்லாடினர். கேள்விமேல் கேள்விகள் கேட்டு உயரதிகாரிகள் வந்து பார்த்து ஒருவழியாக கடைசியாட்களாக நானும் தம்பியும் வெளியே வந்தோம். அம்மாவின் முகத்தை நேரே தரிசிக்கலாம் என்பது உறுதியாயிற்று. எனது இளநண்பர் ஜெயமுருகன் பயண ஒழுங்குகளுடன் வெளியே காத்திருந்தார். நேராக உள்ளூர் விமான நிலையமான இரத்மலாவுக்குச் செல்வது ஏற்பாடாகி இருந்தது. நான் கொழும்பில் நிற்கிறேன் என்பதே நம்பமுடியாததாக இருந்தது. கட்டுநாயக்காவில் இருந்து கொழும்பு நகரூடாக இரத்மலா நோக்கி பயணித்தோம். கொழும்பு நகருக்குள் நுழைய நான் மயக்க நிலையை நோக்கி நகர்வது எனக்கு நன்றாகத் தெரிந்தது. நகரம் கலங்கலாகி புகாருக்குள் மறைந்து கொண்டிருந்தது. அம்மாவை தரிசிக்காமலேயே நான் கொழும்பில் தரித்துவிடுவேனோ என்னும் எண்ணமும் தலை நீட்டுகின்றது. என்னை நண்பர் கவனித்துக் கொள்வார் நீ திட்டமிட்டபடி யாழ்ப்பாணம் செல் என்று தம்பியிடம் கூறுகின்றேன். எனது கட்டுப்பாட்டை நான் மெல்ல இழந்துகொண்டிருந்தேன். அருகில் இருந்த தம்பியின் மேல் சரிந்து கொள்கின்றேன். நான் இன்னமும் நினைவிழக்கவில்லை. மருத்துவமனையைத் தேடி வண்டி அலைகின்றது.



படிப்பகம்

## 23-05-2003 வெள்ளிக்கிழமை

காலை பத்துமணியளவில் பலாலி ஓடுபாதையில் உள்ளூர் விமானம் தன் உருளும் கால்களைப் பதித்த வேளையில் மீண்டும் என்னுள் நடுக்கம் ஆரம்பித்தது. நண்பர் என்னருகில் இருந்தார். அவரிடம் ...என காட்டிக்கொள்ளவில்லை. கண்களை மூடிக்கொண்டேன். எனது ஊரில் எனது தாயகத்தில் என் தாயின் தரிசனம் எனக்கு கிட்டப்போகின்றது. என்னுள் நிகழ்ந்த குமுறலில் கொந்தளிப்பில் ஆழ்மனக் கதவங்கள் எல்லாம் படீரெனத் திறந்து கொள்கின்றன. மூளைப்பொறி உருகி கசிகின்றது. மண்ணாய், கல்லாய், மரம்செடி கொடியாய், பற்றைக்காடாய், பனங்கூடலாய் வெயிலை சுவைத்தபடி விரிந்துகிடக்கும் இவைதானே என்னை நாளும் பொழுதும் ஏங்க வைத்தவை. என்னை இயங்க வைத்தவை. சுற்றிலும் பார்க்கிறேன். என்றன் உயிர்தனை ஓம்பும் முலைப்பாலினை வழங்கிய தாயவளின் தரிசனம் கண்டு வியக்கின்றேன். மண்ணைத் தொட்டு கண்களில் ஒற்றுகிறேன். யாழ்ப்பாண நகரத்தை நோக்கி அந்த வான் புறப்பட்டு விட்டது. செம்மண் புழுதியை வாரியிறைத்தபடி அது குலுங்கி குலுங்கி விரைகின்றது. வெளியே பார்வையை ஓடவிட்டபடி இடங்களை அடையாளம்காண முயற்சிக்கின்றேன். முடியவில்லை. யாழ்ப்பாண நகரில் இருந்து 764ஆம் இலக்க பேருந்து செல்லும் இந்த வீதி, இடையிடையே வரும் சந்திகள், வீதி மருங்கே உள்ள ஊர்கள் அனைத்தும் நான் அலைந்து அலைந்து திரிந்த இடங்கள். ஊரெழு வரும்வரையில் எந்த அடையாளத்தையும் என்னால் காண முடியவில்லை. நான் படிக்கும் காலத்தில் இருந்து பழகிக் களித்த குப்பிளான் கிராமத்திற்கு வழிகாட்டும் வடக்கு புன்னாலைக் கட்டுவன் சந்தியையும் காண முடியவில்லை. எல்லாம் சிதைவும் சீரழிவும்தான். உரும்பிராய் சந்தியை நோக்கி பேருந்து விரைகின்றது. சிவகுமாரன் சிலையைக் கண்தேடுகின்றது. பெருக்கெடுத்துப் பாயும் நதியொன்றின் மூலமல்லவா அவன்! அக்கினிக் குஞ்சொன்றை ஆங்கோர் காட்டிடை பொந்தினுள் வைத்தவன் அல்லவா அவன்! ஆனால் அவன் சிலை கண்ணில் தென்படவில்லை. 1972இல் இருந்து 1974 ஜூன் 5ஆம் நாள் மாலைவரை அவனுடன் கூடவே இருந்த காலக்கரைவுகள் மேலெழும்புகின்றன. சிவகுமாரனின் அன்னைதான் முன்னெழுந்து வருகின்றார். என்றன் தலைதனை வருடி நலம் விசாரிக்கின்றார். எனக்கும் சிவகுமாரனுக்கும் சோறிடுகின்றார். எத்தனை அம்மாக்கள் இப்படி பரிவுடன் சோறிட்டனர். இந்தப் பிள்ளைகளின் நியாத்தை அவர்கள்தானே முதலில் உணர்ந்தார்கள். அந்த வீடிருந்த திசையில் வணக்கம் செலுத்துகிறேன். பண்ணைக்கு அருகே பயண ஊர்திகள் தரிப்பிடத்தில் வான் நிறுத்தப்பட்டுவிட்டது. இறங்கிக் கொள்கிறேன். அது புதியதாய் முளைத்த இடம். யாழ்ப்பாணக் கோட்டை இருந்த இடத்தில் புதர்மண்டிக் கிடக்கின்றது. வாடகைவண்டியில் ஏறி

padippakam

வீட்டின் முகவரியைச் சொல்கிறேன். வண்டி வீரசிங்கம் மண்டபத்தைத் தாண்டி யாழ்ப்பாண நூலகத்தின் பின்பகுதியால் சரிந்து விழுந்து உருள்கின்றது. யாழ்ப்பாணச் சிறைச்சாலையை வயிறாக கொண்டிருந்த ஒல்லாந்தர் கட்டிய கோட்டை, அதன் நுழைவாயில் காவலரண்போல் விளங்கிய யாழ்ப்பாண பொலிஸ் நிலையம் என்பன சுவடழிந்து வெளியாகிக் கிடந்தன. அந்த வெளியின் மேலால் பண்ணைக் கடலில் இருந்து கடற்காற்று வீசிக்கொண்டிருந்தது. இந்த வீரசிங்கம் மண்டபத்தின் முன்றிலில்தான் நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் துயரங்கள் நடந்தேறின. அந்தத் துயரத்தின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத் தூண்கள் சிதைந்து கிடக்கின்றன. 1974ஆம் ஆண்டு ஜனவரி 10ஆம் திகதி நிகழ்ந்த அந்தத் துயரம் எனது கண்முன்னாலுந்தான் நிகழ்ந்தது. நான் தொண்டராக பணியாற்றிக் கொண்டிருந்தேன். சிவகுமாரன் எங்கள் தொண்டரணிக்குப் பொறுப்பாக இருந்தான். நானும் சிவகுமாரனும் மேடைக்கு அருகிலேயே நின்று கொண்டிருந்தோம். எங்கள் அணிதான் உள்ளரங்க நிகழ்வை வெளியே நடாத்த வேண்டுமென்று மாநாட்டு ஒழுங்கமைப்பாளரை நிர்ப்பந்தித்திருந்தது. அந்தத் துயரச் சம்பவத்தினால் ஆவேசம் கொண்ட சிவகுமாரனும் நானும் ஒழுங்குபடுத்தல் வேலைகளை முடித்த அன்றிரவே இதற்குப் பழிவாங்குவதென்று முடிவெடுத்தோம். இந்த முடிவுடன் நள்ளிரவுக்குப் பின் வீடு திரும்பியபோது அம்மா என் வருகைக்காக காத்திருந்தார். எங்கள் தெருவில் பலரும் வீதிகளில் கூடியிருந்தனர். எங்கள் தெருவுக்கு அண்மையில் வசிக்கும் ஆசிரியர் ஒருவர் அந்தச் சம்பவத்தில் பலியாகி இருந்தார். என்னைக் கண்டதும் அம்மாவில் ஒளிர்ந்த மகிழ்வும், அயலவர்கள் காட்டிய பரிவும் விசாரிப்பும் இன்றைக்குப் போல் இருக்கின்றது. அந்த நிகழ்வில் அம்மா வாங்கித் தந்த கைக்கடிகாரம் தொலைந்திருந்தது. ஆனால் மோதிரம் பத்திரமாக இருந்தது. அம்மாவுக்குக் கடிகாரம் தொலைந்தது பற்றி கவலையிருக்கவில்லை. மோதிரம் இருந்தது திருப்தியாக இருந்தது. அந்த நீலக்கல் பதித்த மோதிரம் 72ஆம் ஆண்டில் சிறையால் வெளிவந்ததும் எனது துர்க்குணங்கள் மாறவும் ராசியாக அமையவும் அணிவித்திருந்தார். அவருடன் பணியாற்றிய சாத்திரத்தில் நம்பிக்கையுள்ள யாரோ அவருக்கு இந்த ஆலோசனை வழங்கியிருக்க வேண்டும். அந்த மோதிரம் அணிந்ததால் எனது துர்க்குணங்கள் விலகியதோ இல்லையோ எனது தேவைக்கு உதவியாக இருந்தது. கைத்துப்பாக்கி வாங்க காசு குறைந்தபோது எனது விரலில் இருந்து அம்மா தந்த மோதிரத்துடன் நண்பர் பத்மநாபாவின் கையில் அணிந்திருந்த மோதிரத்தையும் சேர்த்து விற்கவேண்டியதாயிற்று. பின்னர் ஒரு மங்கிய பொழுதில் நான் வீட்டிற்கு வந்திருந்தபோது அம்மா அந்த மோதிரம் எனது கையில் இல்லாதது கண்டு பதறிப்போனார். நான் அம்மாவுக்கு ஏதோ பொய் சொல்லி சமாளித்துக் கொண்டேன். இறைக்க



படிப்பகம்

padippakam

இறைக்க கிணற்றின் ஊற்றுக் கண்கள் திறந்து கொள்கின்றன. 1972ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் தேதி கைதுசெய்யப்பட்டபோது இந்தச் கோட்டைச் சிறைக்கு, அம்மா இரண்டு வயது கடைசித் தங்கையை தூக்கிக்கொண்டு பார்க்க வந்த முதல் நாள் காட்சி நிழலாய் கவிகின்றது. அம்மா ஏமாற்றத்தால் அல்லது அவமானத்தால் நொந்து போயிருப்பது முகத்தில் தெளிவாகத் தெரிகின்றது. அப்போது நான் அரசியல் கைதியாக இருக்கிறேன் பெருமைப்படாமல் ஏனிந்த அம்மா இப்படி உடைந்து போயிருக்கிறார் என யோசித்ததுண்டு. ஆனால் ஆறு மாதங்களின் பின் வெளியே வந்து வீடு சென்ற போதுதான் பொலிஸ், சிறை பற்றியதான சமூகக் கண்ணோட்டத்தின் யதார்த்தம் என்னைச் சுட்டது. அம்மா எப்படியெல்லாம் நோகடிக்கப்பட்டிருப்பார் என்பதை உணர முடிந்தது. ஆனால் அம்மா என்மீது அன்பை பரிவை குறைத்ததே இல்லை. ஏழு பிள்ளைகளைப் பெற்ற அவர் மூத்தவனான எனக்கு மனோகரன் எனப் பெயரிட்டது அவருக்குள் இருந்த ஒரு இலட்சியக் கனவினால் என்றுதான் நினைக்கின்றேன். எனது உறவினர்க்கு எனது பெயர் பிரான்சிஸ் என்பது தெரியாது. மனோகரன் என்றுதான் இன்றைக்கும் அழைக்கின்றார்கள். 1953ஆம் ஆண்டில் வெளிவந்த மனோகரா திரைப்படத்தின் தாக்கம் அம்மாவுக்கு இருந்திருக்கின்றது. ஆனால் அவரது கனவுக்குரிய அந்த இலட்சிய மகனாக நான் இருந்தேனா? தாயையும் தாயகத்தையும் கைவிட்ட மகனாகி விட்டேனா? காலம் உரைக்கட்டும். 1975ஆம் ஆண்டு நான் இரண்டாம் முறையாக கைது செய்யப்பட்டபோது மிகக் கொடிய வன்முறைவாதியாக சித்திரிக்கப்பட்டிருந்தேன். கைது செய்யப்பட்ட மறுநாள் நான் யாழ்ப்பாண பொலிசின் குற்றப் புலனாய்வுத் துறையின் விசாரணைக்கு உட்பட்டிருந்தேன். (இரண்டு வாரங்களின் பின்னர் கொழும்பு விசாரணைகளுக்காக வெலிக்கடைக்கு அனுப்பப்பட்டேன்.) மோசமான தாக்குதலுக்கு உள்ளாகி நிர்வாணமாக்கப்பட்ட நிலையில் கதிரையில் உட்கார வைக்கப்பட்டு கேள்விக் கணைகளுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தேன். இன்ஸ்பெக்டர் பத்மநாதனும் அவனது உதவியாளர்களான சண்முகநாதன், கருணாநிதி, றொட்டிகோ, இன்னும் சிலரும் கோபமும் மூர்க்கமுமாக என்னைச் சூழ்ந்து நின்று கொண்டிருக்கின்றனர். தட்டச்சாளர் எனது வாக்குமூலத்தைப் பதிவு செய்து கொண்டிருக்கின்றார். அம்மா வெயிலில் களைத்தபடி ஓடியோடி தெருவழியாக பொலிஸ் நிலையத்தின் அலுவலகப் பகுதிக்குச் சென்று கொண்டிருப்பதை என்னால் பார்க்க முடிகின்றது. ஆம் நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். இன்னும் கொஞ்ச நேரத்தில் அம்மாவை இங்கு அழைத்து வருவார்கள் என்பதை நான் அறிவேன். இந்தக் கோலத்தில் அம்மா என்னைப் பார்த்தால் ஏங்கிப் போவார் என்பது எனக்குத் தெரியும். என்னை மறைவான இடத்திற்கு அனுப்பமாட்டார்களா எனத் தவித்தேன். அம்மாவின் பார்வையில் நான் தெரியவேண்டும் என்பதே பொலிசாரின்



படிப்பகம்

padippakam

எண்ணம். வாசல் அத்தனை தூரம் இல்லை. அம்மா வாசலில் வந்து நிற்கிறார். நான் முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொள்கின்றேன். என்னோடு பேச அவர் அனுமதிக்கப்படவில்லை. அவரின் மனநிலை எவ்வாறாக இருந்திருக்கும்? அன்று மாலை அம்மா கொடுத்துவிட்டுக் போன பார்சலை என்னிடம் தந்து பொலிஸ் காவல் அறையில் அடைத்தனர். அம்மா சாப்பாடு கட்டி வந்த பேப்பர் எனது கைது பற்றிய செய்தி வெளிவந்த அன்றைய தினசரி. அம்மாவை வாழ்த்திக் கொள்கிறேன். இப்படி எத்தனையோ தடவைகள் தானாகவே யோசித்து காரியங்கள் ஆற்றியுள்ளார். அம்மாவின் நினைவுகள் ஒன்றொன்றாய் கிளர்ந்து எழுகின்றன. எல்லாவற்றையும் கொட்டிவிட முடியுமா? சுப்பிரமணிய பூங்கா நீதிமன்ற வளாகம் என்பவற்றைத் தாண்டி வாடகை வண்டி வீடு நோக்கி விரைகின்றது. இந்த நீதி மன்றத்தில் வைத்துதான் அடையாள அணிவகுப்பில் உதவிப் பொலிஸ் அதிபராக இருந்த சந்திரசேகரா என்னை அடையாளம் காட்டினான். இந்த வழக்கு உட்பட என் மீது தொடுக்கப்பட்ட ஏனைய வழக்குகளுக்கான பிடியாணைகள் 1977இன் இறுதியில் வீட்டிற்கு வந்தவண்ணம் இருந்தன. முதல் வழக்கிற்குச் சமூகமளித்தேன். அடுத்த தவணை வரை பிணை வழங்கப்பட்டது. காணி உறுதி அல்லது ரொக்கப் பணம் பிணையாக வைக்க வேண்டும். எங்களிடம் காணி உறுதி எதுவுமிருக்கவில்லை. நீதிமன்றம் கேட்ட தொகையையும் உடனடியாக புரட்டமுடியவில்லை. மீண்டும் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டேன். புரட்டிய பணம் போதாத நிலையில் அம்மா தனது தாலிக்கொடி உட்பட்டதான வீட்டில் இருந்த அனைத்து நகைகளையும் விற்று பிணை செலுத்த பத்து நாட்களாயிற்று. என்னை வீட்டிற்கு அழைத்துச் சென்று கொண்டிருக்கையில் தம்பி இன்னும் இரண்டு வழக்குகளுக்கான பிடியாணைகள் இருக்கின்றன. நமக்கு அந்தச் சக்தி இல்லை. என்ன செய்யிறதென்று நண்பர்களுடன் யோசி. இல்லாட்டி முன்னைப்போல் தலைமறைவாக இருந்து கொண்டு உன்ர காரியங்களைப் பார் என்கிறார். அதன்பின் நான் எந்த வழக்குக்கும் முகம் கொடுக்கவில்லை. அந்த வார்த்தைதான் என்னை வழிநடத்துகின்றது போலும். வெளிச்சத்தில் இருப்பதை இப்போதும் தவிர்த்து வருகின்றேன். அதனால் புதிது புதிதாய் பெயர்கள் புனைகின்றேன், தலைமறைவாய் இருட்டுக் குதிரையாய் இருப்பதே விருப்பமாய் இருக்கின்றது. தாயின் தரிசனம் தரும் பரவசம் என்னை ஆட்கொள்கின்றது. அம்மாவின் தலைமாட்டில் நிற்கின்றேன். உறவினர்கள் சுற்றிவர அமர்ந்திருக்கின்றனர். மெழுகுவர்த்திகள் சுடர்ந்து கொண்டிருக்கின்றன. மன்றாட்டங்களால் அறை நிரம்பி வழிகின்றது. ஐயா தம்பியர் எல்லாம் என்னருகில் என்னைப் பிடித்தபடி நிற்கின்றனர். எனக்குக் கண்ணீர் வரவில்லை. வாய்விட்டு அழு தம்பி என்கிறார் ஐயா. அம்மாவின் ஒளிரும் முகம் துப்பட்டியால் மூடப்பட்டிருக்கின்றது. துப்பட்டியை விலக்கி குனிந்து அம்மாவை கொஞ்சுகின்றேன். எதைநான் சொல்லியழ. யாருக்கு சொல்லியழ. நான் அழுவதைதான் அம்மா விரும்புவாரா?



படிப்பகம்

padippakam

**24-05-2003 சனிக்கிழமை**

இன்றைக்கு அம்மாவின் பிறந்தநாள். எழுபத்தைந்தாவது வயது தொடங்குகின்றது. மதியம் தாண்டியதும் அவர் இந்த வீட்டை விட்டுப் புறப்பட்டு விடுவார். அவரை வழியனுப்ப ஊரார் உறவினர்கள் எல்லாம் வந்து சேரத் தொடங்கி விட்டனர். அம்மாவின் இந்த நல்லடக்க நிகழ்வு அவருடைய பிறந்த நாளில் அமைந்தது திட்டமிடப்பட்டதொன்றல்ல. திருகோணமலையில் 18-05-2003 அன்று இறந்த உடனேயே ஐயா அம்மாவை மருத்துவமனையில் இருந்து யாழ்ப்பாணம் வீட்டிற்குக் கொண்டு வந்துவிட்டார். பிள்ளைகள் வந்து சேரும் வரையில் அம்மாவைப் பதனப்படுத்தி வைத்திருப்பது என்றே ஐயா திட்டமிட்டுச் செயலாற்றி இருந்தார். நோர்வேயில் வசிக்கும் தம்பி செவ்வாய்க் கிழமையும், யேர்மனியில் இருப்பவன் புதன்கிழமையும் சென்றிருந்தனர். நானும் மற்றத் தம்பியும் வியாழன் யாழ்ப்பாணம் செல்ல முயற்சித்தாலும் தம்பி வியாழன் செல்ல நான் வெள்ளிதான் செல்ல முடிந்தது. ஆதலால் நல்லடக்கம் சனிக்கிழமை என்று தீர்மானிக்கப்பட்டது. தனக்கு ஏதும் நிகழ்ந்தால் யாழ்ப்பாணம் கொண்டு செல்லும்படி ஐயாவிடமும் தனது கடைசி மருமகளான தேவவதானாவிடமும் அம்மா கூறி வைத்திருந்தார். அம்மா இறந்தவுடன் அவருக்கு அணிவதற்கான உடைகளைத் தேடி எடுக்கச் சென்ற சுமதியின் அண்ணன் தனஞ்சயன் ஆச்சரியப்பட்டுப் போனார். அம்மாவின் பெட்டி பயணத்திற்கு ஏற்ற வகையில் அடுக்கப் பட்டிருந்தது. அம்மா தான் நோய்வாய்ப்படுவதற்கு முன்பே யாழ்ப்பாணம் செல்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஒழுங்கு படுத்தியிருந்தார். மூன்று மாதங்களின் முன்னேயே எமது யாழ்ப்பாண வீட்டில் வாடகைக்கு இருந்தவர்களுக்குத் தாங்கள் மேமாதம் வரவிருப்பதாகவும் வரும் போது வீட்டைத் தமக்கு தரும்வகையில் ஆயத்தமாக இருக்கும் படியும் கடிதம் எழுதி அனுப்பியிருக்கிறார். திருகோணமலை வங்கிக் கணக்கை மூடி அதிலிருந்த பணத்தையும் எடுத்து சுமதியின் மற்றொரு அண்ணாவான கேசவனிடம் கொடுத்து வைத்திருக்கிறார். இப்படி பல முன்னேற்பாடுகள். நேரம் நெருங்கிவிட்டது. இறுதி அஞ்சலிகள் ஆரம்பமாகிவிட்டன. அம்மாவுக்கு ஐயா மாலை அணிவிக்கிறார். பிள்ளைகள் உறவினர்கள் தொடர்கின்றனர். அம்மா நேசித்த ஊரார் சுற்றத்தார் அம்மாவைச் சுற்றிவந்து அஞ்சலிக்கின்றனர். விம்மல் ஒலிகள் கேட்கின்றன. பிரியா விடை உரையை நான் ஆரம்பிக்கின்றேன். எங்கள் அன்புக்கும் நேசத் திற்கும் உரியவர்களே! உங்கள் நேசத்திற்குரியவராக எங்கள் அம்மா இருந்திருக்கிறார். அம்மா எங்களை எவ்வகையில் வளர்த்தார் என்பதை அயலவர்களாகிய நீங்கள் நன்கு அறிவீர்கள்;. அம்மா எங்கள் மீது நேசம் கொண்டிருந்ததுபோல நாங்களும் அம்மா மீது நேசம் கொண்டிருந்தோம். ஆனாலும் அம்மாவின் இறுதி வேளையில் அவரது ஏழு பிள்ளைகளில் ஒருவர் கூட அருகில் இல்லாமல் போனது வாழ்நாள் முழுவதும்



படிப்பகம்

padippakam

எங்களை உறுத்திக் கொண்டே இருக்கும். மற்றவர்கள் மீதான நேசத் தையும் கருணையையும், சேவையையும் அம்மா தன் வாழ்வில் கடைப் பிடித்தார். இதைத்தான் எமக்கும் அவர் கற்றுத் தந்தார். அதேபோல் நாங்களும் உங்களது நேசத்துக்குரியவர்களாகத் தொடர்ந்தும் இருப்போம். பிள்ளைகள் அருகில் இல்லை என்ற குறையைத் தவிர மற்றெவர்க்கும் தொல்லை தராமல் அம்மா மகிழ்ச்சியுடனேயே இறந்தார். எல்லாம் நல்லபடியே நடந்தேறியுள்ளன.

அம்மாவை வழியனுப்பி வைப்போம். அம்மா போய் வாருங்கள்.... அம்மாவை எல்லோரும் ஒரு தடவை கொஞ்சுகிறோம். அம்மாவைத் தாங்கிய வண்டி நகரத் தொடங்கியது. அம்மா எங்களுடனேயே தரித்து நிற்கிறார். இறுதிச் சடங்குகள் எல்லாம் முடிந்து உறவினர், அயலவர், நண்பர்களுடன் கூடி இருக்கையில் தான் இதுவோர் அரிய தருணம் என்பதை உணர முடிகின்றது. சமூகத்தின் குறுக்கு வெட்டான முகத்தை தரிசிக்க கிடைத்த வாய்ப்பல்லவா இது. தனது சாவிலும் அம்மா எனக் களித்த கொடையாகவே கருதிக்கொள்கிறேன். தாயக தரிசனத்தின் இரண்டாம் சுற்றுக்குத் தயாராகத் தொடங்குகிறேன்.9



படிப்பகம்

# ஒரு பயணமும் சில நினைவுகளும்...

**புதன், 25 ஜனவரி 2006**

**01.** நண்பர்களே! மழை வெள்ளத்தால் தமிழகம் தத்தளித்துக் கொண்டிருந்த வேளையில் உங்களை நான் மீளவும் சந்தித்தேன். ஏறத்தாழ பதினேழு ஆண்டுகளின் பின்னான சந்திப்பு அது. இதனையோர் அரிய தருணம் என்றே சொல்வேன். ஆம் 16-11-2005 முதல் 14-12-2005 வரையில் உங்களிடை நான் இருந்தேன். உங்களின் இயல்பு வாழ்க்கை வெள்ளத்தால் சீர்குலைந்திருந்தது. வானிலை அறிக்கைகள் நாள்தோறும் எச்சரித்த வண்ணம் இருந்தன. மழை தொடர்ந்து பெய்த வண்ணமே இருந்தது. இயற்கை மீதான கவனமும், அச்சமும் எல்லோரிடமும் மிகுந்திருந்தது. கடந்த ஆண்டு ஆழிப்பேரலையின் பின்னால் உலகில் யாருக்குத்தான் இந்த கவனமும் அச்சமும் இருக்கவில்லை. மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இருந்து அதிகாலை இரண்டு மணிக்கு சென்னை நகரை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த என்னை சில்லென்ற மென்காற்று தழுவிச் சென்றது. இது சென்னையின் இயல்பாய் எனக்கு படவில்லை. வரண்ட வெப்பக் காற்றை எதிர்பார்த்த எனக்கு இந்த குளிர்மை இன்ப அதிர்ச்சியை அளித்தது.

padippakam

உண்மையில் இதனை இரண்டாவது இன்ப அதிர்ச்சி என்றுதான் சொல்லவேண்டும். சென்னை விமான நிலையத்திற்கு வெளியே வரும்வரையில் மனதிற்குள் புழுக்கமாகவும் பரபரப்பாகவும் இருந்தது. ஆனால் எந்தச் சிக்கலும் இன்றி பத்து நிமிடத்தில் எல்லா வேலைகளையும் முடித்து வெளியே அனுப்பிவிட்டார்கள். முதல் இன்ப அதிர்ச்சி அது. ஏன் நான் புழுக்கமாக இருந்தேன் என்பதை நீங்கள் அறிவீர்கள் தானே. 1978ஆம் ஆண்டு முதல் 1988ஆம் ஆண்டுவரையான பத்து ஆண்டுகள் எவ்வகைப் பணிகளை ஆற்றுவதற்கு அங்கு நான் தங்கியிருந்தேன் என்பதும் அவ்வேளையில் என்னொத்தவர்களும் நானும் எவ்வகையான சங்கடங்களை எதிர்கொண்டோம் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். 1988இல் தமிழகம் விட்டு புறப்படும் நேரம் நட்புறவுப் பாலம் இதழில் நான் உங்களுக்கு எழுதிய மடலை மறந்திருக்க மாட்டீர்கள். எது எப்படியாயினும் அவ்வேளையில் நான் மகிழ்ச்சிப் பெருங்கடலில் மிதந்த வண்ணம் இருந்தேன். நெஞ்சுள் உறைந்து கிடக்கும் பிரிந்து சென்ற காதலியின் தோற்றத்தை அடையாளம் காண தவிப்பவன்போல், அந்த இரவிலும் சென்னையை நியான் ஒளி வெளிச்சத்தில் அடையாளம் காண முயற்சித்தேன். சற்று ஏமாற்றம்தான். என்னுள் உறைந்து கிடக்கும் சென்னையைத் தரிசிக்க இன்னும் அதிக தூரம் பயணிக்க வேண்டும் என்பது புரிந்தது. காலையில் எழுந்ததும் நான் தங்கியிருந்த ஜி.என். செட்டித் தெருவில் அமைந்திருந்த விடுதியின் 7ஆம் மாடி ஜன்னல் வழியாக வெளியே பார்த்தேன். மொட்டை மாடி வாழ்க்கை மாற்றமின்றி அழகுடன் இருந்தது. துணி துவைத்தல், காயப்போடுதல், பாத்திரம் தேய்த்தல், குடங்களில் தண்ணீர் கொணர்ந்து தொட்டிகளை நிரப்புதல் என பெண்கள் சேலையை இடுப்பில் சொருகியபடி சுறுசுறுப்புடன் இயங்கிக் கொண்டிருந்தனர். இடுப்பில் துண்டணிந்து பல் துலக்கியபடி ஆண்கள் உலாவந்தனர். தண்ணீர் நிரப்பும் எந்த ஆணையும் பார்க்க முடியவில்லை. சென்னையில் நமக்கும் மொட்டைமாடி வாழ்க்கைதானே வாய்த்தது. மொட்டைமாடி அறைகள்தான் நமக்கு வாடகைக்குக் கிடைத்தன. புறத்தியாருக்கு யார்தான் வீடு கொடுப்பார்கள். வீட்டு வாழ்க்கை கிடைத்தபோதும் அறை வெப்பம் தாங்காமல் மொட்டைமாடியில் வானம் பார்க்க உறங்குவதுதானே நமக்கு இயல்பாய் இருந்தது. இப்படி விட்டு விடுதலையாகி நிற்றல்தானே நம்மை இணைத்திருந்தது. அவ்வெண்ணம் உந்தித்தள்ள உடனேயே நாம் தங்கியிருந்த பணியாற்றிய மொட்டைமாடிகளை, வீடுகளைத் தரிசிக்கப் புறப்பட்டேன். அக்கால இனிமை நெஞ்செங்கும் பரவியிருந்தது. பரபரப்பு மிகாத அந்தக் காலை நேரத்தில் அண்ணா சாலை வழியாக பயணத்தைத் தொடங்கிய நான் கூவத்தைக் கடந்து புதுப்பேட்டை வழியாக எழும்பூருக்குள் நுழைந்தேன். அண்ணா சிலை அமைந்திருக்கும் அந்தச் சந்திப்பு பொதுவாகவே எல்லோருக்கும் பழக்கமானது. கைகாட்டி நிற்கும் அண்ணா சிலையின் இடது பக்கம் திருவல்லிக்கேணி வழியாக மெரினா கடற்கரைக்குச் செல்லும் தெரு இருக்கின்றது. அந்த தெருவின் இடது



படிப்பகம்

padippakam

பக்கத்தில் அரசினர் தோட்டம் இருக்கின்றது. கலைவாணர் அரங்கம் இருக்கின்றது. இந்த அரசினர் தோட்டத்துள்தான் சட்டசபை உறுப்பினர் விடுதி இருக்கின்றது. உங்களுக்குத் தெரியாததா. 77ஆம் ஆண்டில் முதல் தடவையாக கள்ளத்தோணியில் தமிழகம் வந்தபோது இவ்விடுதியில் தங்கிச் சென்றிருக்கிறேன். ஈழப்போராட்ட முன்னோடிகளில் ஒருவரான சத்தியசீலன் அவர்கள் இங்கு தங்கியிருந்ததால் அந்த வாய்ப்புக் கிடைத்தது. 78க்கு பின்னும் இந்தச் சட்டசபை உறுப்பினர் விடுதியில் இடைக்கிடை வந்து செல்வதும் தங்குவதும் உண்டு. இங்குள்ள கன்ரீனில் ஒரு ரூபாவுக்கு ஜனதா சாப்பாடு கிடைக்கும். எங்களின் பொருளாதார நிலை அப்படித்தான் இருந்தது. அதற்காகவே நானும் என்னொத்தவர்களும் அங்கு வந்து செல்வோம். இந்தக் கலைவாணர் அரங்கத்தில் துயரஇரவுகள் என்னும் கலைநிகழ்ச்சியை நடாத்தியிருக்கிறோம். அந்த நிகழ்ச்சித் தயாரிப்பாளனாய் ஒழுங்கமைப்பாளனாய் நான் இருந்தேன். இந்த அண்ணா சிலைக்கு எதிரே வலதுபக்கத்தில் 24 மணிநேர அஞ்சலகம் இருந்தது. இரவு 11 மணிக்குப் பின்னால் நாங்கள் முகாமிட்டிருக்கும் பகுதிகளில் இருந்து நடந்து வந்து பணம் அனுப்பும்படி இலண்டனுக்குத் தொலைபேசியில் கெஞ்சி விட்டு நள்ளிரவு கடந்த நிலையில் எழும்பூர் வழியாக பொடி நடையாய் சென்ற நாட்கள் நினைவில் அலைந்தன. கூவம் நாறியது. புதுப்பேட்டை மாற்றமில்லாமல் சேரியாக தெருவோர வாழ்வாக படிந்து கிடந்தது. மலக் கழிவுகளின் வரண்ட நாற்றம் மூக்கை சுழிக்கச் செய்தது. உறைந்து கிடந்த சென்னையை உசுப்பியது எழும்பூர். எழுபதுகளுக்கு முன்னர் இந்தியா என்பது எழும்பூர் எனத்தான் இலங்கையர் பலருக்குத் தெரியும். இங்கு வந்து தங்கிவிட்டு இந்தியா சென்று வந்ததாக பலரும் கூறுவர். எழும்பூரில் கண்ணை உறுத்தும் மாற்றம் எதுவும் தெரியவில்லை. எழும்பூர் வழியாக பூந்தமல்லி நெடுஞ்சாலையில் இறங்கி வேப்பேரியிலிருக்கும் பெரியார் திடலுக்குள் அமைந்திருக்கும் பெரியார் ஈவெராவின் நினைவிடத்தில் தனியாக நின்றிருந்தேன். பள்ளிப் பருவத்தில் இருந்து நான் பெரியாரை அறிந்தவனாக நேசிப்பவனாக இருந்தேன். எனது தந்தையார் வைத்திருந்த நூல்கள் மூலம் பெரியார் எனக்கு அறிமுகமாகி இருந்தார். இன்றைக்கும் விமர்சனங்கள் தாண்டிய எனது நேசிப்புக்கு உரியவராக பெரியார் இருக்கின்றார். தமிழகம் அவரைத் தவறவிட்டுவிட்டதோ என்ற சந்தேகம் எனக்குள் இருக்கின்றது. இந்தப் பெரியார் திடல்தான் தமிழகத்தின் ஏராளமான நண்பர்கள் அறிமுகமாகவும் நட்பை வளர்க்கவும் களனாக இருந்தது. இங்கு நடைபெறும் எந்தக்கூட்டத்தையும் மாநாட்டையும் நான் தவறவிட்டதில்லை. சேலம் பாவரசுவுடன் முதல்தடவையாக இங்கு வந்ததும் அங்கு விடுதலையில் பணியாற்றிக்கொண்டிருந்த பல பத்திரிகை நண்பர்களைச் சந்திதித்ததும் நினைவில் அலைபுரண்டது. இந்தப் பயணத்தில் சேலம் பாவரசைச் சந்திக்க முடியாமலே போனது



படிப்பகம்

padippakam

உறுத்திக்கொண்டே இருக்கின்றது. தமிழகத்தின் முக்கிய நண்பரான சேலம்பாவரசு பற்றிய தகவல்கள் உங்களிடமிருந்து தெளிவாக கிடைக்கவில்லை. 79ஆம் ஆண்டில் சென்னை வந்த ஜேஆருக்கு தன்னந்தனியாக கறுப்புக்கொடி காட்டி பொலிசாரிடம் அடிவாங்கிய உணர்வுமிக்க, தோழமைமிக்க நண்பன் அவன். ஈழத்துத் தமிழரின் நிலையை 78இலிருந்து தமிழக மக்களிடையே கொண்டு சென்றதில் அவனது பங்களிப்பு பாரியது. இந்தப் பயணத்தில் அவனைச் சந்திக்க முடியாமல் போனது மிகுந்த ஏமாற்றம்தான். நண்பர்கள் உறவில் இருந்து அவன் விலகிச் சென்றானா? விலக்கப்பட்டானா? இனியும் அவனைச் சந்திக்க முடியுமா? அதேபோல்தான் அரணமுறுவலையும் சந்திக்க முடியாமல் போனது. மழையின் தொடர்ச்சியினால் அவரது சந்திப்பு சாத்தியமற்று போனது. அவர் திருநெல்வேலியில் இருந்தார். 78ஆம் ஆண்டு காலகட்டத்தில் ஆழ்வார்ப்பேட்டையில் ஒண்டுக்குடித்தனத்தில் எங்களுக்காக தனது வீட்டின்கதவைத் தயங்காமல் திறந்து அரணமுறுவல் வரவேற்றமை அன்றைக்கு இயல்பானதொன்றல்ல. நான் வாழ்ந்த பத்தாண்டின் போது அவருடனான உறவின் விலகலுக்கு காரணங்கள் பல இருந்தபோதும் அந்த நட்பின் ஆழம் பழுதுபடவில்லை. அரணமுறுவலிடம் இருந்து நான் ஓயாத உழைப்பைக் கற்றுக்கொண்டேன். தனது ஈருருளியில் ஏற்றிக்கொண்டு சென்னை நகரின் ஒவ்வொரு மூலைக்கும் என்னை அழைத்துச் சென்றதை எப்படி மறப்பது? அவருடைய உழைப்பும் மலர்ந்த சிரிப்பும் எவரையும் கவரக்கூடியது. முனைவர் இரா.இளவரசு அவர்கள் வயதில் மூத்தவர் தமிழறிஞர். சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர். ஈழத்தின் நேசமிக்க நண்பர். பணி ஓய்வு பெற்றிருந்தார். அவரது உடல் நலம் குன்றியிருந்தது. அவரைச் சந்திக்க கிடைத்தது மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் தந்தது. அந்தத் தளர்ந்த நிலையிலும் அவர் மிகுந்த ஆர்வத்துடன் வரவேற்றார். மேடையை ஆளுமைப்படுத்தும் அவரது குரல்வளம் தளதளத்தது. அந்த நாட்களை நினைவுகூர்ந்ததும், வரும் நாட்கள் பற்றிய செய்திகளை அறிய ஆர்வம்கொண்டதும் என்னை நெகிழச் செய்தது. அவருடைய வீட்டில்தான் லங்காராணி நாவல் நூல் வெளியீடு நண்பர்களுடன் நடந்தது. இப்போதும் ஈழத்து எழுத்துக்களைப் படித்துக் கொண்டிருப்பதும் அவைபற்றி அறியவிரும்புவதும் அவரது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தியது. அரசியல் கட்சிகள் சாராத ஈழத்தமிழருக்கான ஆதரவு அமைப்பான தமிழக ஈழ நட்புறவுக் கழகத்தின் தூண்கள் இந்த மூவரும். 1978இல் ஆரம்பிக்கப்பட்ட அந்த நட்புறவுக் கழகத்தின் ஆதாரமாக இவர்கள் விளங்கினர். இந்தப் பெரியார் திடலுக்கும் இந்தத் தமிழக ஈழ நட்புறவுக் கழகத்திற்கும் ஈழப்பிரச்சனையை முன்னெடுத்ததில் உயரிய பங்களிப்பு உண்டு. அவ்வகையானதுதான் பெரியார் அன்பர்களினதும், தனித்தமிழ் அன்பர்களினதும் பங்களிப்புகள். பெரியாரின் சந்திப்பை முடித்துக்



படிப்பகம்

padippakam

கொண்டு டவுட்டன் சந்திக்கு வந்து புரசைவாக்கம் கெல்லீஸ் வழியாக அண்ணா நகர் செல்ல புறப்பட்டேன்புரசைவாக்கம் சாலையின் அமைப்பு அடையாளம் புதியதாய் இருந்தது. சட்டக்கல்லூரி மாணவர் விடுதியைத் தாண்டுகையில் 1983க்கும் முன்னைய நினைவுகள் எழுந்தன. இந்த விடுதியில் தங்கியிருந்த பல மாணவர்கள் எனக்கு நண்பர்களாய் இருந்தனர். தோள்கொடுத்தனர். பெரும்பாலான மாலைப் பொழுதுகள் இவர்களுடனான விவாதங்களாக உரையாடல்களாகவே கழிந்திருந்தன. 1983ஆம் ஆண்டில் தமிழகத்தில் கிளர்ந்த ஈழத்தமிழர் ஆதரவுக்கு இச்சட்டக்கல்லூரி மாணவர்களின் முன்னெடுப்பு முக்கியமானது. அபிராமி தியேட்டர் தொகுதி முக அமைப்பையே களியாட்ட வளாகமாய் மாற்றி நின்றது. என்னுள் உறைந்த நினைவுகளுடனான அந்தப்பகுதி சென்னை முக மாற்றத்தின் அடையாளமாய் இருந்தது. கெல்லீஸ் முனையில் இடது பக்கமாக கீழ்ப்பாக்கம் கார்டன் வழியாக அண்ணாநகர் நோக்கிய வண்ணம் வண்டி விரைகின்றது. கெல்லீசில் முகாமிட்டிருந்த 1978ஆம் ஆண்டில்தான் இலங்கையில் ஈழம் என்னும் சிறுநூலை நான் எழுதினேன். தமிழக ஈழ நட்புறவுக்கழகம் தனது முதல் வெளியீடாக அதனைக் கொணர்ந்தது. அன்றைக்கு நமது பரப்புரைக்குக் கையிலிருந்த நூல் அதுதான். இரண்டாவது வெளியீடாக யார் இந்த ஜெயவர்தனா என்ற சிறு நூல் வெளியிடப்பட்டது. கெல்லீசுக்கு அருகே இருக்கும் இந்தக் கீழ்பாக்கம் கார்டனில்தான் பத்திரிகையாளர் சோலை ஆசிரியராக இருந்த மக்கள் செய்தி மாலை நாளிதழின் பணியகம் இருந்தது. குசேலர் தலைமை தாங்கிய உழைக்கும் மக்கள் மாமன்றத்தின் ஆதரவில்தான் மக்கள் செய்தி வெளிவந்து கொண்டிருந்தது. அங்கு பணியாற்றியவர்களில் எங்கள் நண்பர்களான நீங்களும் இருந்தீர்கள். அண்ணாநகருக்குள் நுழைந்துவிட்டேன். என்னால் நம்பவே முடியவில்லை. சிந்தாமணியில் இருந்து திருமங்கலம் வரையான அந்த நெடுந்தெரு வணிக வளாகத்தால் நிறைந்து காண்பியக்கூடங்களால் நுகர்வோரை வசீகரித்த வண்ணம் விரிந்து கிடந்தது. நாங்கள் வசித்த இடங்கள் காணாமல் போய்விட்டன. உறைந்து கிடக்கும் அடையாளங்கள் எதையும் அங்கே காணமுடியவில்லை. சென்னையின் முகமாற்றம் இங்கே அப்பட்டமாகத் தெரிந்தது. கொஞ்ச நேரம் சுற்றிவிட்டு ஏமாற்றத்துடன் திரும்பினேன். இந்த அண்ணா நகரில் ஒரு வீட்டின் மொட்டைமாடியில் நாங்கள் தங்கியிருந்த அறையில்தான் அருளர் அவர்களால் லங்காராணி நாவல் எழுதி முடிக்கப்பட்டது. அந்நாவல் 1978 டிசம்பரில் நூலாக வெளியிடப்பட்டது. அமிஞ்சகரையில் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் ஏறி நெல்சன் மாணிக்கம் தெருவழியாக சூளை மேட்டுக்குள் நுழைந்து ஒரு சுற்று சுற்றி கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் ஏறாமல் உள்ளாலேயே கோடம்பாக்கம் கங்கை அம்மன் கோயில் தெருவுக்கு வந்தேன். இந்த கோடம்பாக்கமும் சுற்றுப்புறமும் எங்கள் சென்னை வாழ்க்கையுடன் பிணைந்தது. எங்கள் வாழ்வின் வரலாற்றின் சில முக்கிய நிகழ்வுகள் இங்கேயும் நிகழ்ந்தன.



படிப்பகம்

கோடம்பாக்கம் ஆண்டவர் நகரில் வசித்துவந்த தமிழறிஞர் த.கோவேந்தன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு பொதுமை என்னும் இதழை வெளிக்கொணர்ந்தோம். இங்கு பல இடங்களில் எங்கள் குடியிருப்புகள் இருந்தன. பணிமனைகள் இருந்தன. இவற்றில் ஒரு பணிமனைதான் இயக்கங்களின் கூட்டமைப்பான ஈழத் தேசிய விடுதலை முன்னணியின் பணிமனையாகவும், பத்திரிகையாளர் மொய்க்கும் இடமாகவும் இருந்தது. நண்பர்களே உங்களுடனான சந்திப்பு மையங்களும் இந்தப் பணிமனைகள்தானே. அந்தத் தெருக்கள் சந்துகளில் எல்லாம் நினைவுகள் நிழலாட காலாற நடந்தேன். அந்தப் பகுதியில் குடியிருந்த நண்பர் எழில் இளங்கோவனும் வீடு மாற்றி தொலைவுக்குச் சென்றுவிட்டார். தற்போது அவரும் நீண்ட நாளின் பின் என்னுடன் கூடவே அந்தப் பகுதியில் இருந்தார். ஒவ்வொரு இடமாக ஒவ்வொரு தெருவாக அடையாளம் சொல்லி நடந்து கொண்டிருந்தோம். பக்கத்தில்தான் அதாவது தெற்கு சிவன் கோவில் தெருவில் அலைகள் பதிப்பகம் இருந்தது. அலைகள் பதிப்பக நிறுவனர் பெ.நா. சிவம் எங்களை ஆரத்தழுவி வரவேற்றார். இவருடைய அச்சகத்தில்தான் இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம் என்னும் நூலை அச்சிட்டோம். எழுத்துக் கோர்க்கும் அச்சகமாக தொடங்கி அதனை இன்று பெரிய பதிப்பகமாக வளர்த்தெடுத்துள்ளார் பெ.நா.சிவம். இப்படியே தாயைத் தவறவிட்ட கன்றுக்குட்டியைப்போல் நண்பர்களை பழகிய இடங்களைத் தேடி அலைந்து கொண்டிருந்தேன்.

**வெள்ளி 12 அக்டோபர் 2007**

**02.** 'நான் எதையெல்லாம்
உங்களில் தொற்ற வைத்தேன்?
நீங்கள் எவற்றையெல்லாம்
எடுத்துக் கொண்டீர்?
நான் அறியேன்.
ஆனால் நான் கனிந்தேன்
உங்கள் தோளணைவால்
வெம்பலாகாமல்.'

எனது 'முகம் கொள்' கவிதைத் தொகுப்பில் இப்படி எழுதியிருந்தேன். இன்றைய எனது ஆளுமையும், முதிர்ச்சியும் தமிழக நண்பர்ளே நீங்கள் எனக்களித்த கொடைகள்தான். கோடம்பாக்கத்தில் நின்று கொண்டிருக்கையில் உங்கள் ஒவ்வொருவரையும் சந்தித்தாக வேண்டும் என்னும் வெறி மேலோங்கிய வண்ணமே இருந்தது. எனக்கு

வழங்கப்பட்டிருக்கும் ஒருமாத விசாவில் இது சாத்தியமாகுமா என்னும் கேள்வியும் அலைக்கழித்தவண்ணம் இருந்தது. இயற்கைவேறு திட்டமிடவும் நடமாடவும் தடைவிதித்த வண்ணமே இருந்தது. இறக்கை கட்டி பறப்பது ஒன்றுதான் வழி. இறக்கை முளைக்க வேண்டுமே.

கோடம்பாக்கத்தில் இருந்து திரும்பும் வழியில் மித்ர பதிப்பகம் சென்றேன். அது கோடம்பாக்க மேம்பாலத்தின் கீழே முரசொலி நிறுவனம் இருக்கும் கரையில் இருந்தது. மேம்பாலத்தின் இருகரையிலும் தற்போது கொண்டாட்ட அழைப்பிதழ்கள், வாழ்த்துமடல்கள் தயாரிக்கும், அச்சிடும் நிறுவனங்கள் நிறைந்திருந்தன. மித்ர பதிப்பகம் ஈழத்தின் முக்கிய மூத்த படைப்பாளிகளில் ஒருவரான எஸ்.பொ. அவர்களால் நடாத்தப்படுவது. நான் மிக ஆர்வத்துடன் வாசித்த ஈழத்து எழுத்தாளர்களில் எஸ்.பொவும் ஒருவர். அப்போது அவரை ஈழத்து ஜெயகாந்தன் என்று அழைத்தனர். அவ்வேளையில் ஜெயகாந்தனின் தீவிர வாசகனாகவும் இருந்தேன்.(நான் சொல்வது 1970ஆம் ஆண்டுக் காலகட்டத்தை) அதுவும் எஸ்.பொ அவர்கள் மீதான ஈர்ப்புக்குக் காரணமாக இருந்திருக்கலாம். நான் முதலில் வாசித்த எஸ்பொவின் படைப்பு தீ என்னும் நாவலாகும். தீ நாவல் எனக்குள் ஏற்படுத்திய அதிர்வுகள் பல பரிமாணம் கெண்டவை. அதேபோல் யாழ்ப்பாண சமூகத்தின் அதாவது யாழ்ப்பாணத்தானின் மனோநிலை எழுத்தில் வடித்து காட்டியதில் அவரது சடங்கு நாவல் முதன்மையானது என்பது என் கருத்து. அவ்வேளையில் கொழும்பு வாரப்பத்திரிகை வெளியிட்டிருந்த அவரது பேட்டி ஒன்றும் இன்றைக்கும் என் நினைவில் இருக்கின்றது. அந்தப் பேட்டியில் 'கார்காத்த குலத்தில் பிறந்து நாவலர் தமிழ் காத்தார் என்றால் பனைகாத்த குலத்தில் பிறந்து தமிழ் காத்தவன் எஸ்.பொ எனத் தெரிவித்திருந்தார். அப்போதைய அவரது வித்துவ கர்வம் என்னைக் கவர்ந்திருந்தது. தனது தந்தையார் இறந்த பின்னான கல்வெட்டு நூலுக்கு அப்பையா காவியம் எனப் பெயரிட்டிருந்ததும், அதுவொரு புதிய முயற்சியாக இருந்ததும் நினைவில் உண்டு. இதுவரை அவரை நான் நேரில் சந்தித்தில்லை. அவர் ஐரோப்பாவிற்கு வந்து சென்ற போதிலும் அவரைச் சந்திக்க முடியவில்லை. வட்டங்களுக்குள் அவர் அடைபட்டிருக்க கூடும். அவருடைய 'பனியும் பனையும்' தொகுப்பு ஒரு சாதனை முயற்சி. புலம்பெயர்ந்தோரின் படைப்பிலக்கியம் தமிழிலக்கியத்திற்குத் தலைமைதாங்கும் என்னும் அவரது கனவு என்னுள்ளும் இருந்தது. ஆதலால் அவரைச் சந்தித்து வணக்கத்தைத் தெரிவிப்பது நோக்கமாக இருந்தது. பக்கத்தில்தான் எம்.ஏ.ரஹ்மானுடைய இருப்பிடமும் இருந்தது. கொழும்பில் இருந்து சென்னைவரை எஸ்.பொவும், எம்.ஏ.ரஹ்மானும், இணைந்தே செயல்பட்டவர்கள். தற்போது தனித்தனியாக பிரிந்திருந்தார்கள். கொழும்பில் இருந்த எம்.ஏ.ரஹ்மானுடைய அரசு பதிப்பகத்திற்கு முன்பு சென்றிருக்கின்றேன். ஈழத்துப் பதிப்புதுறையில் அரசு பதிப்பகம் முக்கிய பாத்திரம் வகித்தது.

padippakam

எஸ்பொவின் பல நூல்கள் எம்.ஏ.ரஹ்மானுடைய அரசு பதிப்பகத்தால் வெளியிடப்பட்டவை. நானும் எழில் இளங்கோவனும் மித்ர பதிப்பகத்துள் நுழைந்தோம். எஸ்.பொ படங்களில் பார்த்ததுபோல் மாறாமல் இருந்தார். அண்மையில் அவர் வெளியிட்ட சாந்தனின் சிறுகதை தெகுப்பை அன்பளிப்பாகத் தந்தார். அவரை ஒளிப்படமாக பதிவு செய்தேன். சிறிது நேர உரையாடலின் பின் அங்கிருந்து புறப்பட்டேன். மித்திரவைத் தாண்டி நடந்தால் சூளைமேடு நெடுஞ்சாலை தொடங்குகிறது. அந்தத் தெரு அப்படியே தொடர்ந்து பச்சையப்பன் கல்லூரிக்கு அருகே பூந்தமல்லி நெடுஞ்சாலையில் ஏறுகின்றது. அவ்வேளையில் இந்தப் பகுதியில் எல்லாம் ஈழத்து நண்பர்கள் குறிப்பாக ஈரோஸ் அமைப்பில் இருந்து பிரிந்த ஈபிஆர்எல்எப் அமைப்பினரின் குடியிருப்புகள் பணிமனைகள் இருந்தன. தமிழக ஈழ நட்புறவுக் கழகச் செயலாளர் அரணமுறுவலின் வீடு இங்கிருந்தது. பச்சையப்பா கல்லூரி தத்துவப் பேராசிரியர், மேடைப் பேச்சாளர் பெரியார்தாசனின் வீடு பச்சையப்பா கல்லூரிக்கு அருகில் இருந்தது. இப்போது அவர்கள் வீடுமாறி இடம்மாறி சென்றுவிட்டனர். வேறு நண்பர்கள் யாரும் அங்கு குடியிருப்பதான தகவல்கள் கிடைக்கவில்லை. அவர்களை நினைத்த வண்ணம் லிபர்ட்டி தியேட்டர் பக்கம் நடந்தேன்.

இந்த மேம்பாலத்தில் வைத்துத்தான் ஒரு மாலைப்பொழுதில் (1980 1981 ஆக இருக்கலாம்) வீட்டிற்குக் கால்நடையாக சென்றுகொண்டிருந்த கவிஞர் வைரமுத்துவைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தேன். அன்றைய காலைத் தினசரி ஒன்றில் அவர் எழுதிய கவிதையைப் படித்திருந்தேன். பாலத்தின் கீழிருந்த சிறுசந்து வழியாக மறுகரைக்கு வந்து டிரஸ்ட் புரத்துக்குள் நுழைந்தேன். இங்குதான் கவிஞர் வைரமுத்து வாடகை வீட்டில் வசித்து வந்தார். 1983இல் கலவரத்தின்போது சுவரொட்டி தயாரிப்பதற்கு அவர் நிதியுதவி அளித்தது நினைவில் வருகின்றது. கலவரத்தை ஒட்டி சுவரொட்டி தயாரித்து ஒட்டுவதற்கு நிதி கேட்டு சென்றிருந்தேன். பெரியார்தாசன்தான் அழைத்துச் சென்றிருந்தார். சில அலைக்கழிவுகளின் பின்தான் வைரமுத்துவைச் சந்திக்க முடிந்தாலும். நிதி தந்துதவினார். சுவரொட்டி பலருடைய கவனத்தையும் கவர்ந்திருந்தது. அதில் எழுதியிருந்த கவித்துவமான வாசகங்கள் தன்னால் எழுதப்பட்டதாய் எங்கோ வைரமுத்து சென்னதாய் தகவல்கள் வந்தன. ஆனால் பின்னர் பெரியார்தாசனால் மறுப்பு கூறப்பட்டது.

***நண்பர்களே!***

நாம் இரவோடிரவாக அச்சுவரொட்டியை ஒருவர் முதுகில் ஒருவர் ஏறி நின்றபடி சென்னை நகரம் முழுவதும் ஒட்டிய நினைவுகளில் ஒரு கணம் மூழ்கினேன். இரவு சுவரொட்டியை ஒட்டிவிட்டு காலையில் எழுந்து ஒட்டியவற்றை மக்கள் பார்க்கிறார்களா படிக்கிறார்களா என அறிய நகர்வலம் வந்த அந்த உற்சாகம் இப்போதும் நெஞ்சில் எழுகின்றது.



படிப்பகம்

padippakam

1987இல் பூமாலை நடவடிக்கை என்ற குறியீட்டு பெயருடன் இந்திய விமானங்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் உணவுப்பொட்டலங்களைப் போட்ட அன்று மாலையில் நானும் கலைஞர் லடீஸ் வீரமணியுமாக புண்பட்ட நெஞ்சைப் போதையால் ஆற்றியதும் இந்த தெருக்களில்தான். எனது முகம்கொள் கவிதைத் தொகுப்பில் உள்ள மாலை விழுந்தபின் முன்னிராப் பொழுதொன்றில்.. கவிதை ஊற்றெடுத்ததும் அந்தப்பொழுதில்தான். கோடம்பாக்கம் இன்னும் இன்னும் அதிக நினைவுகளைக் கிளறியவண்ணமே இருந்தது. கோடம்பாக்க மேம்பாலத்தால் ஏறி இறங்கி வள்ளுவர் கோட்டத்தால் திரும்பியது வண்டி. வள்ளுவர் கோட்டத்தின் அருகேயான குளம் நிரப்பட்டு கட்டிடங்கள் எழுந்து விட்டதால் வள்ளுவர்கோட்டத்தின் கம்பீரம் தொலைந்துபோய் இருந்தது. வள்ளுவர் கோட்டத்தின் நிர்வாக பணிமனையில் தமிழறிஞர் த.கோவேந்தன் அவர்களின் மூத்தமகன் பணியாற்றினார். அவர் இந்தியப் பொதுவுடமை இயக்கத்தின் உறுப்பினராகவும் இருந்தார். இம்முறை பயணத்தில் அவரைச் சந்திக்க முடியவில்லை. கோடம்பாக்கம் பகுதியில் இருந்து வீடுமாறிச் சென்றுவிட்டனர். அவரது தந்தையார் த.கோவேந்தன் அவர்களும் இறந்துவிட்டார். ஓய்வு நேரங்களில் வள்ளுவர் கோட்டத்திற்குச் செல்லும் வேளைகளில் அவருடன் அரசியல் கலந்துரையாடல்களில் ஈடுபடுவதுண்டு. சிலவேளைகளில் இரகசிய நண்பர்களின் சந்திப்புக்காகவும் செல்வதுண்டு. வள்ளுவர் கோட்டத்தை இப்போது மீளச் சென்று பார்க்க ஆர்வமாக இருக்கவில்லை. நான் தற்போது அண்ணாசாலையில் அண்ணா சிலைக்கு அருகே உள்ள வணிக வளாகத்தின் முதல் மாடியில் ஏறிக்கொண்டிருந்தேன்.



படிப்பகம்

padippakam

# அகதியாகவே வாழ்ந்துவிட்டு போகிறேன் - கி.பி.அரவிந்தன்

## நேர்காணல்: பொ.ஐங்கரநேசன்

"ஒவ்வொரு தலைமுறையும் முந்தைய தலைமுறையின் வேர்களை அறிந்தே கிளைக்க வேண்டும். ஆனால் எங்கள் சமூகம் இங்கு கிளைக்கும் தலைமுறையிடம் இவற்றைத் தெரிவிப்பதில்லை. சாதி என்னவென தெரிவிக்கும், சொல்லிவைக்கும் துடிப்பு தங்கள் புலப்பெயர்வின் வலி நிறைந்த கதைகளைச் சொல்லி வைப்பதில் இருப்பதில்லை. இங்கு கிளைக்கும் தலைமுறை பன்மொழி, பல்தேசிய, பல்பண்பாட்டு அறிவுடனேயே வளர்கின்றனர். தென்கிழக்காசியாவிலேயே பன்மொழி அறிவுகொண்ட சமூகமாக மாறும் வாய்ப்பு வாராது வந்த மாமணிபோல் எமக்கு வாய்த்திருக்கின்றது. இந்த வாய்ப்பைச் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஈழத்து இலக்கியத்தின் நீட்சியாக போரிலக்கியம் வடிவெடுத்து வருகின்றது. ஆனால் அந்த இலக்கியங்கள் தமிழ்ப்பரப்பில் அறிமுகமாகவில்லை. அந்தப்பணி முன்னெடுக்கப்படவேண்டும். போராட்டத்தை இரத்தமும் சதையுமாக அறிவதற்கு இலக்கிய படைப்புகளே வழியாகும். போராட்டம் என்பதே இரத்த வரலாறுதான். தவறுகளில் இருந்து படிப்பினை பெற்று முன்னேறுவதுதான் போராட்டம். போராட்டத்தை இரத்தமும் சதையுமாக



படிப்பகம்

padippakam

புரிந்தவர்களாலேயே அதன் நியாயப்பாடுகளின் பக்கம் நிற்கமுடியும்.

புவியியலில் தூரமாக நான் வாழ்ந்தாலும் ஈழப் போராட்டத்துடன் நினைவுகளால் நெருங்கியே இருக்கின்றேன். சர்வதேசக்கடலுக்குள் நமது படகு பயணிக்கின்றது. மிகச்சிறப்பான இராஜதந்திர மதியூகமே தற்போதைய தேவையாகும். நமது தேசியத் தலைமை அந்தத் தகைமையைக் கொண்டிருக்கின்றது. தேசம் ஒன்று நெய்யப்படுவது கண்முன்னே தெரிகின்றது. போராட்டம் வெற்றிபெற வேண்டுமென்ற பொறுப்புணர்வு எனக்கும் உண்டு."

- என்று சொல்லும் கி.பி. அரவிந்தன் தமிழ் இலக்கிய உலகு நன்கு தெரிந்து வைத்திருக்கும் கவிஞர்களில் ஒருவர். தமிழ்த்தேசிய விடுதலைப்போராட்ட வரலாறு பதிவு செய்து வைத்திருக்கும் ஆரம்ப காலகட்டப் போராளிகளில் ஒருவர். அவரது,

...அக்காற்றில்
அள்ளுண்டு வருகின்றன
மரத்தில் செத்ததும்
வாடி உதிர்ந்ததுமான
சருகுகள்.
கூடவே
ஒத்திப் பறிபட்ட
பச்சை இலைகள்
தளிர்கள்
கொழுந்துகள்...
எது எந்த மரத்தினது...?
அள்ளுண்டவை அறியுமோ
எற்றுண்ட தம்நிலை பற்றி...!

என்ற கவிதை வரிகளைப் போன்றே பேரினவாதப் புயலால் அள்ளுண்ட வலிகளுடன் பிரான்சில் வாழ்ந்து வருகிறார். 53 வயது நிரம்பப்பெற்ற அவருடன் மின்னஞ்சல் மூலம் நிகழ்த்திய நீண்ட நேர்காணலில் இருந்து சில பகுதிகள் இங்கே தொகுத்து தரப்படுகின்றன.

**– பொ. ஐங்கரநேசன்**

**● உங்களைப் பற்றிய அறிமுகத்துடன் நேர்காணலை ஆரம்பிக் கலாமே?**

கி.பி.அரவிந்தன் என்பது எனது புனைபெயர். கி. பிரான்சிஸ் என்பதே எனது இயற்பெயராகும். எனது தந்தையின் பெயர் கிறிஸ்தோபர். நான் பிறந்ததும் வளர்ந்ததும் யாழ்ப்பாணமானாலும் எனது தாய் தந்தையர் நெடுந்தீவைச் சேர்ந்தவர்கள். இருவரும் உறவினர்களானாலும் காதலித்தே திருமணம் செய்து கொண்டார்கள். எனது தந்தையார் ஆனையிறவு



படிப்பகம்

padippakam

சுங்க இலாகாவிலும் பின்னர் உணவுக்கட்டுப்பாட்டு இலாகாவிலும் பணியாற்றி ஓய்வு பெற்றவர். அம்மா மருத்துவ தாதியாக யாழ்ப்பாணம் பொதுமருத்துவமனையில் பணியாற்றியவர். தற்போது இருவரும் காலமாகிவிட்டார்கள். அவர்களுக்கு நாங்கள் ஏழு குழந்தைகள். எழு வரும் புலம்பெயர் நாடுகளில் உள்ளோம். அவர்களில் நான் மூத்தவன். நான் ஆறாம் வகுப்புவரை நெடுந்தீவு புனித யுவானியார் ஆண்கள் பாடசாலையிலும், ஏழாம் வகுப்பை மட்டக்களப்பு வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்திலும், அதற்குப் பின்னாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் கல்வியைத் தொடர்ந்தேன். 1989இல் சுமத்திரியுடன் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொண்ட எனக்கு அங்கதன், மானினி என்ற இரண்டு குழந்தைகள். குடும்பமாக பிரான்சில் வசித்து வருகின்றோம். நான் இன்னமும் அகதி நிலையை மாற்றிக் கொள்ளவில்லை. புலம்பெயர் நாடுகளில் பெரும்பாலான குடியேறிகள் என்ன தொழிலைச் செய்கிறார்களோ அப்படித்தான் நானும்.

**● கிறிஸ்தோபர் பிரான்சிஸ், கி.பி.அரவிந்தனாகப் படைப்புலகில் அறியப்படுவதற்கு இடையில் உங்களுக்கு 'சுந்தர்' என்று இன்னுமொரு முகம் இருந்திருக்கிறதே?**

நான் கி.பி.அரவிந்தனாக பரவலாக அறியப்பட்டது 1990க்குப் பின்னால்தான். அதாவது புலம்பெயர்ந்ததன் பின்னால். 1974 ஜூன் 5ஆம் திகதி சிவகுமாரன் இறப்பிற்குப் பின்னால் நான் சிறிலங்கா காவல்துறையின் தீவிரமான தேடுதல் வேட்டைக்கு ஆளானேன். 1976ஆம் ஆண்டு ஜூலையில் நான் கைதாகும் வரையான இரண்டு வருடங்கள் ஊர் ஊராக அலைந்து திரிந்தேன். அப்போதுதான் சுந்தர் என்ற பெயரை பயன்படுத்தத் தொடங்கினேன். பிரான்சிஸ் என்னும் பெயர் பத்திரிகைகளில் அடிபட்டதால் அந்தப் பெயரைப் பயன்படுத்துவதை நிறுத்திக் கொண்டேன். நான் தலைமறைவு வாழ்க்கை தொடங்கிய 1974 முதல் 1990வரை சுந்தர் என்றே அறியப்பட்டேன். அதிலும் ஒரு பத்தாண்டு கால தமிழ்நாட்டு வாழ்க்கையில் முழுமையாக தோழர் சுந்தர் என்றே அழைக்கப்பட்டேன். ஒருவகையில் சுந்தர் என்பதனை ஒரு ஈழப்போராளியின் முகமெனவும் கொள்ளலாம்.

**● தலைமறைவு வாழ்க்கைக்குச் செல்லுமளவுக்கு அரசியலுடன் தீவிர ஈடுபாடு எப்படி ஏற்பட்டது?**

1967ஆம் ஆண்டில் பண்டதரிப்பிலிருந்து யாழ்ப்பாண நகரத்தில் குடியேறினோம். நாங்கள் குடியிருந்த பகுதிக்கு அண்மித்ததாக செ்ன். பற்றிக்ஸ் கல்லூரியும் அதேபோன்ற கத்தோலிக்க செல்வாக்குமிக்க வேறு பள்ளிகளும் இருந்தபோதும் என்னை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் பெற்றோர் சேர்த்துவிட்டனர். இதனால் எனக்கு வீட்டுச் சுற்றாடலில் வகுப்புத் தோழர்களோ, நண்பர்களோ இருக்கவில்லை. உறவினர்களும்



படிப்பகம்

padippakam

யாரும் இல்லை. இதனால் ஓய்வு நேரங்களைப் புத்தக வாசிப்பிலும் நூலகங்களிலும் கழித்தேன். மாலை நேரங்களில் சுப்பிரமணிய பூங்காவில் ஒலிபரப்பப்படும் வானொலியில் செய்திகள் கேட்பேன். இதனால் அரசியல் பேசும் நட்புகள் கிடைத்தன. சுதந்திரன் பத்திரிகை வாங்கி படிக்கும் ஆர்வம் இருந்தது. இரண்டாம் குறுக்குத் தெருவில் இருந்த தமிழரசுக்கட்சிப் பணியகத்திற்குப் பத்திரிகை படிக்கச் செல்வேன். தமிழர் சுயாட்சிக்கழகத்தின் கருத்துக்களிலும் ஈடுபாடு கொண்டிருந்தேன். அவர்கள் வெளியிட்ட விடுதலை பத்திரிகையும் வாசிப்பேன். அதற்கு முன்னரே எனது தந்தையாரிடமிருந்த திராவிட இயக்க நூல்களைப் படித்து வந்ததனால் எனக்குள் சில கருத்துகள் உருவாகி இருந்தன. அத்துடன் எனது 9ஆம் 10ஆம் வகுப்புகளில் குடியியலும் அரசியலும் படிப்பித்த திரு. யூசுப், வரலாறு படிப்பித்த திரு. சின்னத்தம்பி போன்ற ஆசிரியர்கள் சில பொறிகளை என்னுள் எறிந்தார்கள். எனது வகுப்புத் தோழர்கள் குறிப்பாக லைலாக்குமார், சேது இரவீந்திரன், இரத்தினபாலன் ஆகியோரும் இன்னும் சிலரும் வாசிப்பு பழக்கமும் அரசியல் ஆர்வமும் கொண்டிருந்ததனால் ஒருவகையான தீவிரத்தன்மை கொண்ட சூழல் எனக்கு கிடைத்திருந்தது.

1970ஆம் ஆண்டு தரப்படுத்தலுக்கு எதிரான மாணவர் பேரவை ஊர்வலத்திற்கு ஆதரவு திரட்டும் வகையில் திரு. சத்தியசீலன் மத்திய கல்லூரி மைதானத்தில் பேசியதை நானும் கேட்டேன். எங்கள் வகுப்பு முழுவதும் ஊர்வலத்தில் கலந்து கொண்டது. மாணவர் பேரவையில் முன்னணியில் செயல்பட்டவர்களுடன் அறிமுகத்தை வளர்த்துக் கொண்டேன். அவர்களின் சில இரகசிய சந்திப்புகளுக்குச் சென்றேன். உங்களுக்குத் தெரியும் இலங்கைத் தீவின் வரலாற்றில் 1972 மே 22 மிக முக்கிய நாட்களில் ஒன்று. அதுவரை நடைமுறையில் இருந்துவந்த சோல்பரி அரசியலமைப்பு நீக்கப்பட்டு, கொல்வின் ஆர்டி சில்வாவினால் எழுதப்பட்ட புதிய குடியரசு அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த நாளது. சிறிலங்கா சோசலிச குடியரசு எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்ட நாள். இந்த அரசியலமைப்பு இலங்கைத் தமிழர்களின் கருத்துக்களை உள்வாங்க மறுத்தது. இது தொடர்பான கருத்தாடல்கள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டிருந்தன. அவற்றின்பால் நானும் ஈர்க்கப்பட்டேன். மே 22 கரிநாள், துக்கநாள், பணிப்புறக்கணிப்பு நாளென அறிவிக்கப்பட்டது. அதன் பரப்புரைகளில் நானும் இணைந்து கொண்டேன். அதுதொடர்பான துண்டுப்பிரசுரம் விநியோகித்தபோது மே 19ஆம் நாள் நான் கைது செய்யப்பட்டேன்.

என்னைப்போல் மேலும் இருவர் வேறு பகுதிகளில் கைதானார்கள். இவர்கள் ஏற்கெனவே எனக்கு நண்பர்கள். ஒருவர் முத்துக்குமாரசாமி; மாணவர் பேரவையின் முன்னணிச் செயற்பாட்டாளர்களில் ஒருவர். மற்றவர் மனோகரன் தமிழரசுக்கட்சியின் வாலிப முன்னணியில்



படிப்பகம்

padippakam

உறுப்பினர். அந்தக் குடியரசு நாள் எதிர்ப்பு நடவடிக்கையில் முதல் கைதான மூவர்கள் நாங்கள்தான். அதன்பின் 23ஆம் திகதியளவில்தான் பெரும்பாலானவர்கள் கைதாகி சிறைக்கு வந்தனர். ஏறத்தாழ 70பேர் வரையில் சிறையில் இருந்தோம். முதல்நாள் எங்கள் மூவரையும் யாழ்ப்பாணம் கோட்டைச் சிறைக்குள் அழைத்துச் சென்றபோது எங்களை வரவேற்றவர் யார் தெரியுமா? 1971ஆம் ஆண்டு ஏப்ரல் கிளர்ச்சியின் தலைவரான றோகணவிஜயவீர. அப்போது அவரது சகாக்கள் நாற்பது பேர் வரையில் அங்கு இருந்தார்கள். அவர் எங்களைக் கண்டதும், "என்ன மூன்று பேர் மட்டுந்தான் வந்தீர்களா?" என ஒருவகை எள்ளலுடன் மழலைத் தமிழில் கேட்டார். "இல்லை... ஆயிரம்பேர் பின்னால் வருகிறார்கள்" என்று நம்பிக்கையுடன் பதில் சொன்னார் குமார். ஆனால் 22ஆம் திகதி முடிய உள்வந்தோர் 70பேர் மட்டுமே. அதன்பின்னான சிறைக்கதைகள் ஏராளம் உண்டு. சொன்னால் பதில் நீண்டுவிடும்.

**● தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்ற ஒவ்வொருவரின் பின்னால் உள்ள பக்கங்களும் வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்பட வேண்டும். பரவாயில்லை, சொல்லுங்கள்?**

இச்சிறை வாழ்க்கையின் போதுதான் சிவகுமாரனுடன் நெருங்கிப்பழகும் வாய்ப்புக் கிட்டியது. அவர் ஏற்கெனவே சில துணிகரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர். அக்குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு அனுராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அவருடைய வழக்கு விசாரணைகளுக்காக யாழ்ப்பாணம் நீதிமன்றத்திற்குக் கொண்டுவரும் காலங்களில் யாழ்ப்பாண சிறைக்குக் கொண்டுவருவார்கள். அந்தச் சந்தர்ப்பங்களில் அவரிடமிருந்த போராட்ட குணாம்சம் என்னை மிகவும் கவர்ந்தது. அதேபோல் என் மீதும் அவருக்கு நம்பிக்கை இருந்தது. அவர் இறக்கும் வரையில் அந்நம்பிக்கை தொடர்ந்தது. அவருடனான தொடர்பும் செயல்பாடுகளும் தனித்துப் பேசப்படவேண்டியவை.

இந்தச் சிறையில்தான் நான் வரதனைச் (வரதராஜப் பெருமாள்)சந்தித்தேன். எங்களிடையே நெருக்கம் அதிகமானது. இவ்வேளையில்தான் சிறையை விட்டு வெளியே வந்ததும் இளைஞர் இயக்கம் ஒன்றைத் தொடங்க வேண்டும் என்ற சிந்தனை எங்கள் இருவருக்கும் தோன்றியது. வரதனிடம் சில ஆற்றல்களும் ஆளுமைகளும் இருந்தன. ஒரு இளைஞர் இயக்கத்திற்கான ஒழுங்குவிதிகள் நடைமுறைகள் கொள்கைகள் எல்லாம் ஒரு குறிப்பேட்டில் எழுதி கொண்டோம். ஏற்கெனவே தமிழரசுக்கட்சிக்கு வாலிபமுன்னணி இருந்தது. அடுத்து மாணவர் பேரவை இருக்கின்றது. இருந்தும் இளைஞர் அமைப்பு ஒன்று தேவை என்பதை நாங்கள் உணர்ந்தோம். அது அன்றைய



படிப்பகம்

padippakam

பாராளுமன்ற அரசியல் தலைமைக்கு வெளியே இருக்க வேண்டுமெனவும் விரும்பினோம். இச்சிந்தனையே சிறைமீண்ட பின்னர் இளைஞர் பேரவை என வடிவம் பெற்றது. ஆனால் அதனைப் பாராளுமன்றத் தலைமையிடம் அடகுவைப்பதில் சிலர் முயற்சித்தார்கள். இரு ஆண்டுகள் கடுமையான எமது உழைப்பு வீணானதைக் கண்டதனால் நாங்கள் அதிலிருந்து வெளியேறினோம். எங்களுடன் ஆர்வமிக்க பல இளைஞர்கள் இருந்தார்கள். அதனால் நாங்கள் தமிழீழ விடுதலை இயக்கம் என ஒன்றை ஆரம்பித்தோம். அது இன்னமும் தீவிர அரசியல் தன்மை கொண்டதாக இருந்தது. இளைஞர் பேரவை அனுபவங்களினால் அரசியல் தத்துவங்களிலும் எமக்கு பரிச்சயம் கிடைத்தது. குறிப்பாக மார்க்சியம் குறித்து அறிமுகமும் கிடைத்தது. நான் இளைஞர் பேரவையில் முன்னணிச் செயல்பாட்டாளனாக இருந்த அதேவேளையில் சிவகுமாரனுடனான எனது தொடர்பும் இருந்து வந்தது. ஒருவகையில் இருமுக செயற்பாட்டாளனாக நான் இருந்தேன்.

1974ஆம் ஆண்டில் நடைபெற்ற நான்காம் உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டில் தொண்டர் சேவை பிரிவில் பணியாற்றினேன். அதற்கு மறவன்புலவு சச்சிதானந்தன் பொறுப்பாளராக இருந்தார். சிவகுமாரனும் நானும் அதில் பணியாற்றினோம். வேறு சில நண்பர்களையும் இணைத்தோம். இவ்வேளையில்தான் இறுதிநாள் துயரச் சம்பவம் நிகழ்ந்தது. மண்டபத்தினுள் நடக்க இருந்த நிகழ்ச்சியை வெளியரங்கிற்குக் கொண்டுவந்ததற்கு எங்கள் நிர்ப்பந்தமே காரணம். ஒருவகையில் அந்தத் துயர நிகழ்விற்கு நாங்களும் தார்மீகப் பொறுப்பாளிகள். அன்று இரவே சிவகுமாரனும் நானும் இந்த நிகழ்விற்குப் பொறுப்பானவர்களுக்குத் தண்டனை வழங்க வேண்டுமென உறுதி எடுத்துக்கொண்டோம். அன்றிலிருந்து சிவகுமாரன் இறக்கும் வரையான 1974 ஜூன் 5ஆம் திகதி வரையில் சிவகுமாரனின் செயலாளனாக செயல்பட்டேன். இக்கட்டத்தில் நான் இளைஞர்பேரவை பணிகளில் அக்கறையைக் குறைத்துக்கொண்டேன். சிவகுமாரனின் இறப்பிற்குப் பின்னால் தலைமறைவு வாழ்க்கை ஆரம்பமானது. அவ்வேளையில் மீண்டும் இளைஞர் பேரவை மற்றும் தமிழீழ விடுதலை இயக்கப் பணிகளில் மும்முரமாக இருந்தேன். இருட்டுக் குதிரைபோல் எனது செயல்பாடுகள் அமைந்தன. தமிழீழ விடுதலை இயக்கத்தின் வெளியீடாக எரிமலை என்னும் பத்திரிகையை வெளியிட்டோம். நான் ஆசிரியராக இருந்தேன்.

இந்நிலையில்தான் 1976ஆம் ஆண்டில் ஜூலை 4இல் யாழ் பேருந்து நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டேன். மீண்டும் இரண்டாவது சிறைவாழ்க்கை ஆரம்பமானது. இது வெலிக்கடைச் சிறையில் அமைந்தது. அப்போது எனது கண்காணிப்பில் தமிழீழ விடுதலை இயக்கம் தீவிரமான செயல்பாட்டில் இருந்தது.



படிப்பகம்

padippakam

● **எப்போது ஈரோஸில் இணைந்து கொண்டீர்கள்?**

1977ஆம் ஆண்டின் பிற்பகுதியாக இருக்கலாம். சிறையால் வெளிவந்ததும் தமிழீழ விடுதலை இயக்கத்தைக் கலைத்து விடுவதாக அறிவித்தோம். ஏனெனில் நான் சிறைக்கு வந்த சில மாதங்களில் அந்த இயக்கத்தைச் சேர்ந்த அனைவரும் கூண்டோடு சிறைக்குள் வந்து சேர்ந்தனர். அவர்களது முதிர்ச்சியற்ற நடவடிக்கையே அதற்குக் காரணம். இது எனக்கு ஏமாற்றமளித்தது. அவர்கள் சிறைக்குள் நடந்து கொண்ட முறைகள் சினத்தைத் தந்தன. வரலாற்றில் முக்கியபாத்திரத்தை வகிக்கக்கூடியதான செயல்பாடு அவர்களால் நாசமானது. அவர்களுடன் மீண்டும் இணக்கம் கண்டு செயல்பட நான் தயாராக இருக்கவில்லை. ஆதலால்தான் சிறையால் வெளிவந்ததும் இந்த முடிவை அறிவிக்க பொதுக்குழுவை நிர்ப்பந்தித்து கலைப்பது என அறிவித்தோம். இந்த இயக்கப் பெயர்தான் பின்னர் குட்டிமணியால் இரவல் பெறப்பட்டு அவர்களுக்கானதாக பயன்படுத்தப்பட்டது. கலைப்பதென்ற முடிவு அறிவிக்கப்பட்டதும் எங்களுடன் நெருக்கமாக இருந்தவர்கள் தேர்தல் மேடைகளில் தங்கள் விலாசங்களைக் காட்டத் தொடங்கி இருந்தனர். நாங்கள் சிலர் தனித்துப்போனோம். அப்போது நான், வரதன், குமரன் ஆகியோர் 'வழிகாட்டி' என்ற பத்திரிகையைத் தொடங்கி அச்சகத்திற்குக் கொடுத்திருந்தோம். எல்லாம் அச்சாகி சில பிரதிகளைக் கையிலும் எடுத்திருந்தோம். ஆனால் 1977ஆம் ஆண்டு கலவரத்திற்கான பொறிகள் யாழ்ப்பாணத்தில் தெறித்தபோது சிறிலங்கா காவல்துறையால் யாழ்ப்பாண நகரம் எரியூட்டப்பட்டது. அதில் வழிகாட்டி பத்திரிகை அச்சிட்ட அச்சகமும் எரியூட்டப்பட்டது. இவ்வேளையிலேயே இளைஞர் பேரவையிலும், தமிழீழ விடுதலை இயக்கத்திலும் நெருக்கமாக செயல்பட்டு வந்த பத்மநாபா இலண்டனிலிருந்து எழுதிய கடிதங்களில் ஈரோஸ் பற்றி தெரிவித்தார். அப்போது எனக்கு நீதிமன்ற ஆணைகள் வரத்தொடங்கியிருந்தன. முதல் வழக்கிற்குச் சமூகமளித்தேன். அடுத்த தவணைக்குப் பிணை வழங்கப்பட்டது. காணி உறுதி அல்லது ரொக்கப் பணம் பிணையாக வைக்க வேண்டும். எங்களிடம் காணி உறுதி எதுவுமிருக்கவில்லை. வாடகை வீட்டில்தான் குடியிருந்தோம். நீதிமன்றம் கேட்ட தொகையையும் உடனடியாக புரட்டமுடியவில்லை. மீண்டும் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டேன். அம்மா தனது தாலிக்கொடி உட்பட வீட்டில் இருந்த எல்லா நகைகளையும் விற்று பிணை செலுத்த பத்து நாட்களாயிற்று. என்னை பிணையால் எடுத்துக்கொண்டு வீட்டிற்கு வந்து கொண்டிருக்கையில் 'தம்பி இன்னும் இரண்டு வழக்குகளுக்கான பிடியாணைகள் இருக்கின்றன. நமக்கு அந்தச் சக்தி இல்லை. என்ன செய்யிறதென்று நண்பர்களுடன் யோசி. இல்லாட்டி முன்னைப்போல் தலைமறைவாக இருந்து கொண்டு உனது காரியங்களைப் பார்" என்றார். அதன்பின் நான் எந்த வழக்குக்கும் முகம் கொடுக்கவில்லை. தலைமறைவு



படிப்பகம்

padippakam

வாழ்க்கைக்கு மீண்டும் தள்ளப்பட்டேன். இந்த தலைமறைவின் போதுதான் 77இன் இறுதிப்பகுதியில் ஈரோசுடன் பணியாற்றத் தொடங்கினேன்.

**● ஈரோஸில் உங்களின் பணி என்னவாக இருந்தது?**

ஈரோசின் பயிற்சித்திட்டத்தின் கீழ் 1978ஆம் ஆண்டில் ஈழத்திலிருந்து லெபனானுக்குப் பயிற்சிக்குச் சென்ற முதற்குழுவில் நானும் ஒருவனாக இருந்தேன். அப்பயிற்சியை முடித்துக்கொண்டு திரும்பும் வழியில் சென்னையில் தங்கியிருந்தேன். அங்கு ஈரோசின் சென்னைப் பிரதிநிதியாகவும், வெளியீட்டுத்துறை பொறுப்பாளராகவும், ஈரோசின் பொதுஆணைக்குழு உறுப்பினராகவும் செயல்பட்டேன். இதற்காக ஒரு பத்தாண்டுகாலம் தமிழ்நாட்டில் தங்கியிருந்தேன். சுருக்கமாகச் சொல்வதாயிருந்தால் சென்னைப் பணியகத்தின் ஊடாக வெளிநாடுகளில் அமைந்த கிளைகளுடனான தொடர்புகள், பரப்புரைகளுக்குத் தேவையான பிரசுரங்களைத்தயாரித்தல் போன்ற பணிகள், தமிழக - ஈழ நட்புறவுக்கழகத்துடனான பணிகள், இந்நட்புறவுக் கழகத்திற்காக நான் எழுதிய 'இலங்கையில் ஈழம்' என்னும் பிரசுரம் மற்றும் அருளர் எழுதிய 'லங்காராணி' நாவல் தயாரிப்பு விநியோகப் பணிகள், ஈழம்குடிபெயர்ந்தோர் அமைப்புச் சங்கத்துடனான பணிகள், தமிழ்நாட்டில் இருந்து வெளியிடப்பட்ட 'பொதுமை', 'பாலம்' இதழ்களுடனான பணிகள், ஈரோசின் கருத்துரை இதழாக வந்த 'ஈழம்' இதழ்ப் பணிகள், 1983ஆம் ஆண்டின் பின்னால் இந்திய அரசு வழங்கிய பயிற்சிக்கு தமிழ்நாட்டிற்கு வந்துசேர்ந்த ஈரோஸ் உறுப்பினர்களைப் பராமரிக்கும் பணிகள்... இப்படி இன்னும் அடுக்கிக்கொண்டே போகலாம்.

ஈரோசின் பொதுஆணைக்குழு உறுப்பினராக நான் மேற்கொண்ட பணிகளும் ஈரோஸ் பற்றிய எனது மதிப்பீடும் தனிப்பகுதியாக சொல்ல வேண்டியவை. ஆனால் அதற்கு இதில் இடமில்லை என்று நினைக்கிறேன்.

**● தீவிர அரசியலில் இருந்து பின்னர் ஏன் ஒதுங்கிக் கொண்டீர்கள்?**

1983க்கு பின்னால் ஈழப்போராளிகளுக்கான இந்திய அரசின் பயிற்சித் திட்டத்தைப் பெற்றுக்கொள்வதில் ஈரோசின் பொதுஆணைக்குழு இரண்டாக பிரிந்திருந்தது. பெரும்பான்மையினர் பயிற்சியை ஏற்கக்கூடாது என்ற கருத்துக் கொண்டிருந்தனர். நான் இந்தப் பயிற்சியை ஏற்கக்கூடாது என்ற அணியில் இருந்தேன். ஆனால் பாலஸ்தீனம் என்ற துருப்புச் சீட்டைப் பயன்படுத்தி பயிற்சியை ஏற்கலாம் என்ற பிரிவு தம்மை தக்கவைத்துக் கொண்டது. இந்தத் துருப்புச் சீட்டை பயன்படுத்தியவர் சங்கர்ராஜி. நாங்களும் பாலஸ்தீனம் என்னும் மயக்கத்தில் இருந்தோம். பின்னால்தான் தெரியும் இந்தத் துருப்புச்சீட்டை சங்கர்ராஜிக்கு வழங்கியது றோ என்பது. இந்த முரண்நிலை எதிரெதிர் ஆழ்நீரோட்டம்போல் ஈரோசுக்குள் இருந்து கொண்டே வந்தது.



படிப்பகம்

padippakam

இலங்கை -I இந்திய ஒப்பந்தம் வந்து ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்றபோது மீண்டும் அது கூர்மையடைந்தது. இதில் நான் ஒப்படைக்ககூடாது என்ற அணியில் இருந்தேன். ஆனால் இராணு வப்பிரிவு - சங்கர்ராஜி ஆதரவுப்பிரிவு - ஒப்படைப்பது என்பதில் உறுதியாக இருந்தது. ஏனெனில் றோ என்னும் புற்றுநோய் சங்கர்ராஜி மூலம் பரவி நாளாகிவிட்டது.

தமிழகப் பணியகங்களை மூடிவிட்டு எல்லோரும் இந்திய இராணுவ விமானத்தில் தாயகம் திரும்புதல் என்ற முடிவுக்கு வந்தபோது நான் மறுத்துவிட்டேன். சென்னையில் நடந்த இறுதி பொதுஆணைக்குழுக் கூட்டத்தில் எனது விலகல் கடிதத்தைக் கொடுத்து விட்டு விலகிக் கொண்டேன். அன்றைக்கு அநேகமாக எல்லாரும் விமானத்திலேயே ஊருக்குத் திரும்பினர். நான் மண்டபம் முகாம் சென்று அகதியாக பதிவு செய்து கப்பலுக்கும் பதிந்துவிட்டு அங்கேயே தங்கிவிட்டேன். பின்னர் கப்பலிலேயே காங்கேசன் துறை வழியாக வீடு திரும்பினேன். ஏறத்தாழ 1974 முதல் 1988 வரை போராட்டத்திற்குள் இணைந்திருந்த நான் "வீரமும் களத்தே விட்டு வெறுங்கையோடு இலங்கை புக்கான்" என்னும் கம்பனின் வரிகள் போன்று வீடு திரும்பினேன். வீட்டில் எந்த எதிர்வினையும் காட்டாமல் என்னை ஏற்றுக் கொண்டனர்.

அப்போது என்ன செய்வது என்ற எந்தத் திட்டமும் என்னிடம் இருக்கவில்லை. பதிப்பகம், இதழ் வெளியீடு, அச்சகம் என்பவை மட்டும் கைவந்த கலையாக என்னிடம் இருந்தன. ஆனால் அதனைத் தொடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தேன். ஏனெனில் நான் தமிழ்நாட்டில் சந்திக்க நேர்ந்த பலரும் புரட்சி, இலட்சியம் பேசி அவசரகால நிலைச் சட்டத்தால் கைதாகி சிறை மீண்டபின்னர் அச்சகம், பதிப்பகம், சிற்றிதழ் என்பவற்றை நடத்திக் கொண்டிருந்தனர். இது ஒரு தோல்வியின் குறியீடாக எனக்குப் பட்டது. அப்போதே எனக்கு இப்படி ஒரு நிலை தோன்றும்போது இந்த துறைகளுக்குச் செல்லக்கூடாது என நினைத்திருந்தேன். ஆனால் புலம்பெயர்ந்த பின்னால் அதற்குள்தான் என்னால் இயங்க முடிகின்றது. இப்போது என்னுள் எழும் கேள்வி நான் தோற்றுவிட்டேனா என்பதுதான். ஆனால் இன்னமும் விலகிச் செல்லாமல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறேன் என்றே நம்புகிறேன்.

● **இந்த இடத்தில் சி. புஷ்பராஜா அவர்களின் "ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம்" நினைவுக்கு வருகிறது. இந்நூல் குறித்து ஈழப்போராட்ட வரலாற்றில் அவரது சமகாலத்தவரான உங்களின் பார்வை என்ன?**

ஈழப்போராட்டம் பற்றிய ஒரு தனிமனித சாட்சியத்தை இத்தனை பக்கங்களில் எழுதி வெளிவந்த முதல்நூல் என்ற வகையில் அது முக்கியமானதுதான். புஷ்பராஜாவை நான் சிறையால் வெளிவந்ததன் பின் 73ஆம் ஆண்டில் சந்தித்தேன். நான்தான் வரதனுக்குப்



படிப்பகம்

padippakam

புஷ்பராஜாவை அறிமுகப்படுத்தி வைத்தேன். சிறையில் நானும் வரதனும் மேற்கொண்ட திட்டத்தின்படி ஒரு கருவியாக செயல்பட புஷ்பராஜா பொருத்துமானவராக இருந்தார். மேடைகளில் பேசுதல், ஒளிப்படங்களுக்கு முகம் காட்டுதல், நடப்பவை எல்லாம் தனக்குத் தெரிந்ததுபோல் பாவனைசெய்தல் என்பவற்றில் அவருக்கு விருப்பம் அதிகம். இந்த குணாம்சம் அவருடைய சாவு வரையில் நீடித்தது என்பதும் அவரெழுதிய புத்தகத்திலும் அதுவே வெளிப்பட்டது என்பதும் அவரது சமகாலத்தவர்கள் அனைவருக்கும் தெரியும். 73 முதல் 77 வரையிலேயே அவருடன் எங்களுக்கு, குறிப்பாக எனக்கு உறவு இருந்தது. 77தேர்தல் வெற்றியின் பின் அவரது தேர்தல் உழைப்புக்காக ஏதோ அரச பணி கிடைத்தது என்று நினைக்கிறேன். அதன்பின் புஷ்பராஜாவின் பாதை வேறு, எனது பாதை வேறு என்றாகிவிட்டது. உண்மையில் இந்த நான்கு வருட செயல்பாடுதான் அவருடையது. தன்வரலாற்றை யாரும் எழுதலாம். அவரும் எழுதியுள்ளார். வரலாற்றுணர்வுடன் அவர் சாட்சியம் சொல்ல வந்ததாக நான் நினைக்கவில்லை.

● **சிவகுமாரன் மேற்கொண்ட முயற்சிகள் எல்லாம் தோல்வியில் முடிந்ததற்கு அவருடன் கூட இருந்த தளபதிகளின் விவேகமின்மையே காரணம் என புஷ்பராஜா தனது நூலில் குற்றம் சாட்டியுள்ளார். அவருடன் மிகவும் நெருக்கமாக இருந்தவர் என்ற வகையில் இந்த விமர்சனம் உங்களை நோக்கியும் நீளுகின்றது. இது தொடர்பாக என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

சிவகுமாரன் நடவடிக்கை மட்டுமல்ல அன்றைக்கு வேறுபல நடவடிக்கைகளும் தோல்வியிலேயே முடிவடைந்திருக்கின்றன. சிவகுமாரன் எங்களுடன் சேர்வதற்கு முன் செய்த பலதும்கூட தோல்வியில் முடிந்திருக்கின்றன. வரலாற்று இயங்கியல் கண்ணோட்டம் உள்ளவர்களுக்கு இது புரியும். எந்த நாட்டு போராட்டமும் வெற்றிகளுடன் தொடங்கப்பட்டதல்ல. சிவகுமாரனுடன் சம்பந்தப்படாத ஒருவர் இவ்வகையான கூற்றுக்களை உதிர்ப்பது வேடிக்கையானதுதான்.

நான் இங்கு ஒரு பட்டியல் சொல்லுகிறேன். 1970இல் சோமசந்திரசிறி எனும் அமைச்சரின் கார் வெடிவைத்துத் தகர்க்கப்படுகிறது. 1971இல் யாழ்ப்பாண மேயர் அல்பிரட் துரையப்பாவின் கார் வெடிவைத்துத் தகர்க்கப்படுகிறது. 1972இல் புதிய அரசியல் சட்டத்தை ஆதரித்த வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் தியாகராசாவுக்குச் சூடு. நல்லூர் கிராமத்தலைவர் குமாரகுலசிங்கம் சுட்டுக்கொலை. 1972 மே 22 எதிர்ப்பு நாள் நடவடிக்கை காரணமாக 72 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். 1973இல் சிங்கள அமைச்சர் கலந்து கொண்ட கூட்டத்துக்கு நேரக்குண்டு வைக்கப்பட்டது. 1974இல் தமிழாராய்ச்சி மாநாட்டில் 9பேர் மாண்டதற்குக் காரணமாகவிருந்த காவல்துறை அதிகாரி சந்திரசேகரா மீது மூன்று முறை கைக்குண்டு வீசப்பட்டது. 1974 கோப்பாய் எனுமிடத்தில் அரசு வங்கி கொள்ளையிட முயற்சி. 1975 சென்னையில் இலங்கைத் தூதரகத்திலும், மகாபோதிக் கட்டிடத்திலும் வெடிவைக்கப்பட்டது.



படிப்பகம்

padippakam

1976இல் மேயர் துரையப்பா சுட்டுக் கொல்லப்பட்டார். புத்தூர் அரசு வங்கியில் ரூ6லட்சம் கொள்ளை. புலோலி அரசு வங்கியில் ரூ9 லட்சம் கொள்ளை. 1977இல் மூன்று இரகசியக் காவல்துறையினர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். 1978இல் 6 இரகசியக் காவல்துறையினர் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். இலங்கை விமானம் ஒன்று எரிக்கப்படுகிறது.

இந்தக் காலகட்டத்தில் நடைபெற்ற இன்னும் பலவற்றை என்னால் குறிப்பிடமுடியும். இவற்றில் ஏதாவது ஒன்றில் சம்பந்தப்பட்டவர் ஒருவர் இதனைச் சொல்லியிருந்தால் விளக்கம் அளிக்க விவாதிக்க பொருத்தமாக இருக்கும். அதல்லாத ஒருவரின் கூற்றுக்கு நான் என்ன பதில் சொல்ல முடியும். பகிரங்க இயக்கம்என்பது வேறு. இரகசிய இயக்க செயல்பாடு என்பதுவேறு. என்னென்ன துண்டுப்பிரசுரம் அச்சடித்தாய், எங்கெங்கு உண்ணாவிரதம் நடத்தினாய், என்னென்ன அரசியல் கோரிக்கை வைத்தாய், இளைஞர்களை எப்படி திரட்டினாய், கிளைகளை எப்படி நிறுவினாய், என்பவற்றைச் சொல்லியிருந்தால் அதுவே புஷ்பராஜாவுக்குப் பொருத்தமானதாய் இருந்திருக்கும்.

**● பொதுவாக புரட்சிகரமான வாழ்க்கைச் சூழல் நல்ல நூல்களை, நல்ல வாசிப்பை அறிமுகப்படுத்தும் என்பார்கள். இதில் உங்களின் வாசிப்பு அனுபவம் எப்படி?**

சில விடுதலை இயக்க வீரர்களின் நூல்கள் இரகசியமாக சுற்றுக்கு விடப்பட்டபோது எனக்கும் வந்தது. அயர்லாந்து விடுதலைப்போராளி தான்பிரீன் பற்றிய, இந்திய சுதந்திரப்போராட்ட வீரர்கள் பற்றிய எரிமலைத் தியாகிகள் போன்ற நூல்களைப் படித்தது, கிளர்ச்சியுற்றது இன்றைக்கும் நினைவில் உள்ளது. ஆனால் வாசிப்பு என்பது சிறுவயதில் இருந்தே எனக்கு மிகவும் பிடித்தமான ஒன்றாக இருந்து வந்துள்ளது. எனது இளவயதில் பண்டத்தரிப்பில் வாழ்ந்தாலும் பெற்றோர் இருவரும் அரசுபணியாளராக இருந்ததால் எனது ஆரம்பக்கல்வியை நெடுந்தீவில் எனது பெரியமாமாவின் வீட்டில் தங்கி பெற்றேன். அங்கு மாமா வாசிப்பவராக இருந்தார். வீட்டுக்குக் கத்தோலிக்க மத இதழ்களான சத்திய வேத பாதுகாவலன், திரு இருதய தூதன் என்பன தபாலில் வந்து கொண்டிருந்தன. அத்துடன் அவர் தினசரி வீரகேசரிக்கும் சந்தாதாரராக இருந்தார். நெடுந்தீவின் மாவிலித்துறைக்கு வந்து சேரும் முதல் படகில் வரும் பத்திரிகைக்காக அவர் தெரு முனையில் காத்திருந்து பெற்று வந்து சாய்மானைக் கதிரையில் அமர்ந்து ஒரெழுத்து விடாமல் வாசித்த பின்னரே மதியம் சாப்பிடுவார். இவை எனக்குள் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. வயதுக்கு வந்ததன் பின்னால் வீட்டில் ஆராய்ச்சியில் ஈடுபட்டபோது ஐயாவின் பெட்டியில் உறையிடப்பட்டு பாதுகாக்கப்பட்ட திராவிட இயக்க வெளியீடுகள் வாசிக்க கிடைத்தன. ஈ.வெ.ரா. பெரியார் மற்றும் அவரது தளபதிகளான சி.என். அண்ணாதுரை, சி.பி. சிற்றரசு, ஏ.வி.பி. ஆசைத்தம்பி, கே.ஏ. மதியழகன், இராதா மணாளன், மு. கருணாநிதி இப்படி பலரது எழுத்துக்கள் படிக்க



படிப்பகம்

padippakam

கிடைத்தன. இன்னும் பல பெயர்கள் நினைவில் இல்லை. அப்போது எனக்கு 14 அல்லது 15 வயதாக இருக்கலாம். அந்த அழகு தமிழும், அடுக்கு மொழியும், என்னுள் கிளர்ச்சியை ஏற்படுத்தி இருந்தன. பின்னர் மு. வரதராசன், காண்டேகர், சரத்சந்திரர், சாண்டில்யன், அகிலன், கல்கி என வளர்ந்து ஜெயகாந்தனை வந்தடைந்தேன்.

ஜெயகாந்தன் நீண்ட காலத்திற்கு விருப்பத்திற்குரிய எழுத்தாளராக இருந்தார். இப்போது ஈழத்து எழுத்துப்பக்கமும் எனது கவனம் திரும்பியது. யாழ்ப்பாணத்திற்கு வந்து குடியேறியதன் பின்னால் அறிமுகமானவர்களில் ஜே.எம்.இராசு என்பவர் முக்கியமானவர். இவர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வட பிரதேசக் கிளையின் கலைஇலக்கிய பிரிவில் பணியாற்றினார். இவர்தான் எனக்கு தீவிர இலக்கியத்தை அறிமுகப்படுத்தியவர். இவரிடமிருந்தே தமிழக தீவிர இலக்கிய இதழ்கள் மற்றும் ஈழத்து இலக்கிய வெளியீடுகள் என்பன அறிமுகமாயின. மல்லிகை, எஸ்பொ.வின் எழுத்துக்கள் என்பவற்றை இவர்தான் அறிமுகப்படுத்தினார்.

**● வாசகன் என்ற நிலையில் இருந்து எப்படிப் படைப்பாளி ஆனீர்கள்?**

எனது பள்ளித்தோழன் லைலாக்குமார் பள்ளிவரும்போது பாடப் புத்தகங்கள் கொண்டுவருகிறானோ இல்லையோ தனது நாட்குறிப்பைக் கொண்டுவர மறப்பதில்லை. அதில் அவன் ஏதாவது எழுதி வைத் திருப்பான். அதனை எங்களுக்கு வாசித்துக்காட்டுவான். ஏதாவது பொன்மொழி ஒன்றைச் சொல்லிவிட்டு எழுதியவர் ஒரு அறிஞர் என்பான். யார் அந்த அறிஞர் என்று கேட்டால் லைலாக்குமார் என்பான். அப்போதே அவனுக்கு காதல் இருந்தது. காதல் கவிதைகள் எழுதுவான். பின்னர் லேகா என்னும் தனது காதலியுடன் சேர்ந்து தற்கொலை செய்து கொண்டான். அதுவும் வியாங்கொடைக்கு அருகில் ரயில் முன்பாய்ந்து தற்கொலை செய்துகொண்டனர். அப்போது அவனது நாட்குறிப்பு என்னிடத்தில் இருந்தது. வீட்டிற்குத் துக்கம் விசாரிக்க சென்றபோது அதனை அவர்கள் வீட்டாரிடத்தில் கொடுத்துவிட்டேன். இப்போது நினைக்கையில் அதனை அவனது வீட்டாரிடம் கொடுக்காமல் நானே வைத்திருந்து நூலாக்கி இருந்தால் அவனும் ஒரு எழுத்தாளனாக வாழ்ந்திருப்பான்.

அவனே என்னுள் எழுதும் உணர்வைத் தட்டி எழுப்பியவன். அவனது பாதிப்பினால் நானும் நாட்குறிப்பு வைத்திருக்க தொடங் கினேன். அவற்றில் ஏதும் எழுதி இருக்கின்றேனா எனக்கு நினைவில் இல்லை. ஆனால் தலைமறைவு வாழ்க்கையில் நிறைய நேரம் இருந்தது. அதனால் எழுத்தின் பக்கம் எனது கவனத்தைத் திருப்பினேன். தலைமறைவு வாழ்க்கையின்போது காதலும் வந்து சேர்ந்தது. அதனால் எழுத்தில் என்னை வெளிப்படுத்துவதில் ஆர்வம் கொண்டேன். நிறையவே எழுதினேன். அப்போது எழுதிய விடிவை நோக்கி- என்னும் ஒரு சிறுகதை



படிப்பகம்

padippakam

சுதந்திரன் பத்திரிகையில் பிரசுரமானது. நூற்றுக் கணக்கான பக்கங்கள் கொண்ட சிஆர் கொப்பி ஒன்று நிறைய எழுதி யிருக்கிறேன். ஆனால் நான் கைது செய்யப்பட்டபோது நான் தங்கியிருந்த வீட்டார் எனது தடயங்கள் அனைத்தையும் தீயிடம் தின்னக் கொடுத்து விட்டார்கள். இப்படியாக முதல் படைப்புகள் அனைத்தயைும் இழந்தேன். சுதந்திரனில் வெளிவந்த கதைக்கும் என்ன நடந்தது என்று தெரியவில்லை. செங்கை ஆழியான் தொகுத்த சுதந்திரன் கதைகள் என்னும் தொகுதியில் அந்தக் கதையைக் காணவில்லை. நல்லா இல்லை என்று விட்டுவிட்டாரா அல்லது தொகுப்பு முறையில் தவறு நேர்ந்ததா தெரியவில்லை.

**● கவிதையை உங்களுடைய அடையாளமாகத் தேர்ந்தெடுத்ததற்கு ஏதாவது காரணம் இருக்கிறதா?**

சிறப்பான காரணங்கள் ஏதுமில்லை. நான் சம்பந்தப்பட்ட எரிமலை, வழிகாட்டி, தர்க்கீகம், ஈழம், பொதுமை, பாலம் என்று எல்லாமே அரசியல் பரப்புரை இதழ்கள் என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். பாலம் அதற்கு விதிவிலக்கு. இவற்றில் நான் பெரும்பாலும் அரசியல் விளக்க, இயக்கத்தின் கொள்கை விளக்க கட்டுரைகள்தான் அதிகம் எழுதினேன். ஆனால் அவற்றைச் சுவையாக எழுதவேண்டுமென்பதில் கவனம் கொண்டிருப்பேன். குறிப்பாக கடித வடிவிலான இயக்க அறிக்கைகள் ஈரோஸ் தோழரிடையே வரவேற்பைப் பெற்றிருந்தன. அப்படித்தான் கவிதை என்னும் வடிவத்தை நோக்கி நகரத் தொடங்கினேன். தமிழ்நாட்டில் வானம்பாடி கவிதை இயக்கத்தினரின் படைப்புகளில் ஆர்வம் கொண்டிருந்தேன். அவர்களுடன் தொடர்பும் இருந்தது. தலைமறைவுக்காலத்தில் எழுதியவைகளில் கவிதைகளும் இருந்தன. அவைதான் அழிந்துபோய் விட்டனவே.

**● கவிதை எழுத ஆரம்பிக்கும்போது யாருடைய தாக்கம் உங்களிடம் இருந்தது. யாரையாவது ஆதர்சமாக ஏற்றுக் கொண்டிருந்தீர்களா?**

மரபுக் கவிதைகளில்தான் நான் ஈடுபாடு கொண்டிருந்தேன். பாடசாலைக் காலத்தில் 'பெண்களைக் காதலெல்லாம் பேசு முயற்கொம்பே' என்னும் விபுலானந்தரின் கங்கையில் விடுத்த ஓலையில் உள்ள கவிதை வரி, பாரதிதாசனின் 'கண்ணின் கடைவிழியை காதலியர் காட்டிவிட்டால் மண்ணில் குமரர்க்கு மாமலையும் ஓர் கடுகாம்' என்னும் கவிதைவரி, பாரதியின் 'காதற்பெண்டிர் கடைக்கண் வீச்சினால் காற்றிலேறியவ் விண்ணையும் சாடுவோம்' எனும் கவிதை வரி, 'தூமகேது புவிக்கெனத் தோன்றிய வாமமேகலை மங்கையரால் வரும் காமமில்லையேல் நரகமுமில்லை' என்ற கம்பனின் கவிதை வரியும் எனது கொப்பியின் பின்பக்கத்தில் எழுதி வைத்திருந்தது இன்றும் நினைவில் உண்டு. இவையென்ன ஒன்றுக்கொன்று முரணான வரிகளாக இருக்கின்றனவே என நீங்கள் யோசிக்கக்கூடும். ஏன் இப்படியொரு மனநிலை இருந்தது என்பது எனக்கும் புரியவில்லை.



படிப்பகம்

padippakam

பின்னர் அரசியல் உணர்வு தீவிரம் பெற்றிருந்த காலத்தில் 'ஆற்றல் மிகு கரங்களில் ஆயுதங்கள் ஏந்தி மாற்றம் ஒன்று வருகையில் வருமெந்தன் மரணம்' என்பதை நான் அடிக்கடி உச்சரிப்பதுண்டு எழுதுவதுமுண்டு. அதேபோல் 'பாடையிலே என் சடலம் போகும்போதும் பைந்தமிழால் அழும் ஓசை கேட்க வேண்டும், ஓடையிலே என் சாம்பர் கரையும் போதும் ஒண்தமிழே சலசலத்து ஓடவேண்டும்' என்ற கவிதை வரியும் எனக்குப் பிடித்திருந்தது. இந்த உந்துதலில் 'ஆற்றல்மிகு இளைஞனே' என ஒரு கடிதத்தொடர் எரிமலையில் எழுதியது நினைவில் உண்டு. ஆரம்ப காலத்தில் பெரும்பாலும் சுதந்திரன் பத்திரிகை கவிஞர்களால் தான் நான் பெரிதும் கவரப்பட்டிருந்தேன். காசி ஆனந்தன், தாமரைத்தீ வான், திருக்கோணமலை கவிராயர், நீலாவணன், மகாகவி, இப்படிப் பலர். பின்னர் மல்லிகை, குமரன், அலை சஞ்சிகை கவிஞர்களில் சாருமதி, வரதபாக்கியான், சுபத்திரன், மருதூர் கனி, திக்ககுவல்லை கமால், மேமன்கவி, ராஜ்கபூர் ஆகியோரை விரும்பிப் படித்திருக்கிறேன்.

நான் தமிழகத்தில் இருந்து எழுத ஆரம்பித்தபோது, சேரன், வ.ஐ.ச. ஜெயபாலன், மு. புஸ்பராஜன், ஹம்சத்வனி, நுஃமான், இளவாலை விஜயேந்திரன், அ.யேசுராசா ஆகியோரின் கவிதைகள்பால் ஈர்ப்புடையவனாக இருந்தேன். சமகாலத்தில் இவர்கள்தான் என்னைப் பாதித்திருந்தார்கள். நான்இவர்களின் கவிதைகளைத் தொகுத்து 'இந்த மண்ணும் எங்கள் நாட்களும்' என்னும் ஈழத்துக் கவிதைகளின் தொகுப்பு ஒன்றை ஈரோஸ் வெளியீடாக கொண்டுவந்துள்ளேன். சரியான ஆண்டு நினைவில் இல்லை.

**● உங்களுடைய கவிதை மொழியை நீங்கள் கண்டடைந்த விதம்பற்றிச் சொல்லுங்கள்?**

புலம்பெயர்ந்து ஐரோப்பாவில் எழுதத் தொடங்கியபோதுதான் எனக்கான கவிதை மொழி ஒன்று உருவாகியது என்று நினைக்கிறேன். புலம்பெயர்ந்த வாழ்தலில், வாழ்வியலில் நான் தோய்ந்தபோதுதான் கவிதையின் வீச்சும் கூர்மையாகியது. இங்கு வந்தபோது எனது கடந்த கால இலக்குகள், செயல்பாடுகளுக்கு நேரெதிராக மாறிச் செல்கிறோனோ என்ற எண்ணமே மேலோங்கி இருந்தது. ஒருவகையான உளவியல் தாக்கத்துக்குள் சிக்கித் தவித்தேன். அவ்வேளையில்தான் எனது முதல் கவிதைத் தொகுதி 'இனி ஒரு வைகறை' வெளிவந்தது. அதில் உள்ள பெரும்பாலான கவிதைகள் தாயகத்தில் இருந்து கிளம்புவதற்கு முன்னால், சரியாகச் சொன்னால் 1990ஆம் ஆண்டு அனுபவங்களை வைத்து எழுதப்பட்டது. ஒருவகையில் என்னை 90ஆம் ஆண்டுக் கவிஞன் என்றே சொல்லவேண்டும். ஆனால் அந்தத் தொகுப்பு பரவலான வாசிப்புக்குச் செல்லாவிட்டாலும் கவனிப்புக்கு உள்ளானது. அத்துடன் என்னையும் ஈழத்துக் கவிஞர்கள் வரிசையில் சேர்த்து. அதில் உள்ள 'இனி' என்னும் கவிதை பலராலும் பலதடவைகள் மீள எடுத்து கையாளப்பட்டது.



படிப்பகம்

padippakam

எனது இரண்டாவது தொகுப்பான 'முகம்கொள்' தான் என்னை அடையாளம் காட்டியதும், எனது கவிதை மொழியைத் துலக்கியதும் என்று சொல்லலாம். பலரும் கருத்துரைக்கும் படியாகவும் அத்தொகுப்பு அமைந்தது. 1994ஆம் ஆண்டிற்கான விபவி விருதினையும் இத்தொகுப்பு பெற்றது. அத்துடன் புலம்பெயர் தமிழ் இலக்கியம் என்னும் வகைமைப்பாட்டுக்கான மாதிரியாகவும் அத்தொகுப்பு அமைந்திருந்தது.

**● கவிஞனின் அதே அனுபவத்தை அவனது கவிதை மொழியால் அப்படியே வாசகனில் தொற்றவைப்பது சாத்தியமா?**

கவிதையால் அது சாத்தியம் என்றே நம்புகிறேன். கவிதை என்பதே உணர்வை, உணர்ச்சியை, பிரதி எடுக்கும் கலைதான். கலை என்பதே ஒரு கடத்திதான். கவிதையும் ஓவியமும் நெருக்கமானவை. அதேநேரத்தில் ஓவியம் நெருங்க முடியாத தளத்திலும் கவிதை இயங்கும் தன்மை கொண்டது. அக்கவிதைகள் நிச்சயம் வாசகரில் இலகுவில் தொற்றக் கூடியது. அவர்களை அலைக்கழிக்கக்கூடியது.

'சந்தியில் நிற்கிறேன்
பகல் சாய்கிறது'

என்னும் சண்முகம் சிவலிங்கத்தின் இந்தக் கவிதை வரி இன்றைக்கும் என்னை அலைக்கழித்த வண்ணமே உள்ளது. இந்த வரிகள் எழுப்பும் பன்முகப் பரிமாணம் அசாதாரணமானது. இதேபோல் சு.வில்வரெத்தினத்தின் காற்றுவழிக் கிராமம் கவிதையையும் சொல்வேன். நல்ல கவிதை என்பது வாசகரை மிரளச் செய்யாமல் கைபிடித்து அழைத்துச் செல்லக்கூடியதாய் இருக்க வேண்டும். கற்கள் பலவகைகளில் சிதறிக்கிடக்கின்றன. ஆனால் கட்டிடம் கட்டுவதற்கு அவற்றிலிருந்து தேவையான வகையான கற்களைத்தான் பயன்படுத்த முடியும். அப்படித்தான் சொற்களும். கவிதை மொழி என்பது சொற்களாலானது அல்ல. அது சொல்லல் முறையால் அமைவது. சொல்லல் முறைதான் சொற்களுக்கும் கனதியை வழங்குகின்றன.

**● உங்களுடைய 'கனவின்மீதி' தொகுப்பில் இடம் பெற்றுள்ள அழகியல் என்ற கவிதையில்**

**'என்னிடத்தே நாருண்டு**
**எப்பூவையும்நான் தொடுப்பேன்**
**ஆனால் அது பூக்களை விற்பதற்கல்ல'**

**என்று குறிப்பிட்டுள்ளீர்கள். இதையே கவிதையின் அல்லது படைப்பின் அழகியல் குறித்த உங்களின் பார்வையாகக் கொள்ளலாமா?**

ஆமாம்! நான் விற்க விரும்புவது பூக்களை அல்ல நார்களைத்தான். நான் அந்தக் கவிதையை அந்த நோக்கில்தான் எழுதினேன். ஒருவகையில் அதனை எனது கலைக்கொள்கை பற்றிய வெளிப்பாடாகவும் நீங்கள் கொள்ளலாம். ஒரு கவிதையைப் பூமாலை எனக் கொண்டால் வெளியே



படிப்பகம்

padippakam

தெரியும் பூக்களையும்விட அந்த பூக்களைத் தொடுக்கும் நாரே முக்கியம் என்று நம்புகிறேன். எல்லோரும் அவரவர்க்கான நார்களிலேயே பூக்களைத் தொடுக்கிறார்கள். ஒரு மாலைக்குள் பூக்கள் வாடிவிடும்; நார் வாடாது. அழகுக்குத்தான் பூக்கள். வடிவ அளவு நாரினாலேயே தீர்மானிக்கப் படுக்கின்றது. கவிதை என்பது பூக்களல்ல நார் என்பதே எனது எண்ணம். ஏனெனில் நார் என்பதே நான். அதன் சிந்தனை என்பதுதான்.

**● "பிறமொழி இலக்கியங்களை அவற்றின் மூலமொழியிலேயே வாசிப்பதற்கான வாய்ப்பு புலம்பெயர்ந்த படைப்பாளிகளின் உலக நோக்கையும் படைப்பாற்றலையும் வளர்த்து வருகிறதாக கலை இலக்கிய விமர்சகர் கலாநிதி நா. சுப்பிரமணியன் குறிப்பிட்டுவருகிறார். உங்கள் அனுபவம் இதில் எப்படி இருக்கிறது.**

வேற்று மொழிப்புலங்களை வந்தடைந்த முதல் தலைமுறையினர் மொழிப்புலமை பெறுவது சாதாரணமான ஒன்றல்ல. முதலில் அவர்கள் தங்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கே மிகுந்த சிரமங்களை எதிர்கொள்கிறார்கள். வெளிநாடென்று வந்தவுடனேயே பெரும் சுமைகளைச் சுமக்க வேண்டியிருக்கிறது. ஆதலால் கவனம் முழுவதும் தேவைகளைச் சமாளிப்பதிலேயே உள்ளது. இங்குவந்து சேரும் பெரும்பாலானவர்களால் வேலை மொழியை மட்டுமே கைக்கொள்ள முடிகிறது. எனது நிலையும் இதுதான். மிகவும் இளம் வயதில் பொறுப்புகள் குறைந்தவர்களாக வந்து சேர்பவர்களுக்குத்தான் மொழிப்புலமையைப் பெறுவது சாத்தியமாகின்றது. அந்த மொழிப் புலமைதான் அவர்களுடைய மூலதனமும். ஆனால், அவர்களிலும் எல்லோருமே வாசிப்புப் பழக்கம் கொண்டவர்களாக மாறிவிடுவதில்லை.

நான் நினைக்கிறேன், மூலமொழிவாசிப்பு என்பது உலகநோக்கையும், படைப்பாற்றலையும் மேம்படுத்தக்கூடிய ஒரு துணைக்காரணியாக அமையலாம். ஆனால் படைப்புக்கு நுண்ணுணர்வும் நுண்ணிய நோக்குமே அவசியமானது. அத்தோடு, நடைமுறை அனுபவங்களில் இருந்து தத்துவத்தையும், தத்துவத்தில் இருந்து உலக நடப்பையும் புரிந்து கொள்ளும் ஒருவரால் தான் உலக நோக்கையும், படைப்பாற்றலையும் பெறமுடியும்.

**● தேசிய இனப்பிரச்சினையும், அதன் விளைவுகளில் ஒன்றான புலம் பெயர் வாழ்க்கையுமே உங்கள் கவிதைகளின் வெளிப்பாடுகளாக உள்ளன. இனப்பிரச்சினையின் தாக்கத்தால் உருவான கவிஞனாக உங்களை மதிப்பிடலாமா?**

தேசிய இனப்போராட்டத்தின் திருப்புமுனைப் புள்ளியான 1970இல் இருந்து புறப்பட்ட பயணிகளில் ஒருவனாக நானும் நடந்து கொண்டிருக் கிறேன். சமூக ஆர்வத்தின் நீட்சியால்தானே ஒருவர் தேசிய இனப்



படிப்பகம்

padippakam

போராளியாக முடியும். ஆதலால் என்படைப்புகளில் அவைதான் அனுபவத்தளங்களாக இருக்க முடியும். எனது பதின்ம வயதுக் கனவுகளாக, இலட்சியங்களாக இவையே இருந்துள்ளன. நான் கவிதை எழுத வந்ததே போராட்ட முனைப்புகளினால்தான், போராளியான தால்தான். அப்படி இருக்கும்போது எப்படி அதிலிருந்து எனது படைப்பு கள் விலகமுடியும். உங்களுக்குத் தெரியும் அனுபவத்தளம் என்பது செயல் சார்ந்தது. இயங்குநிலை சார்ந்தது. இந்த இயங்குநிலையும், செயலும் சமூகம் சார்ந்ததாக அமையும்போது தனிமனித உணர்வுகளும் சமூகம் சார்ந்ததாகவே அமைந்துவிடுகின்றது. எனது படைப்புகளில் நான் என் பதை நாங்கள் என்றே கொள்கிறேன். படைப்பின் வகைமைப்பாடொன்றைக் கண்டடைந்ததன் பின்னால் அதிலிருந்து மீள முடிவதில்லை.

**● உங்களுக்குப் பிடித்த ஈழக் கவிஞர்கள் பற்றி...**

ஈழத்து நவீன தமிழ்க்கவிதை என்பது செழுமையான பாரம்பரியம் கொண்டது. மகாகவி உருத்திரமூர்த்தி, நீலாவாணனில் இருந்து அது வெள்ளமென பாயத்தொடங்குகின்றது. ஒவ்வொரு கவிஞரும் தமக்கென தனித்துவ அடையாளத்தை, மொழியைக் கொண்டவர்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் எனக்குப் பிடித்திருக்கிறார்கள். அவர்களில் இன்றைக்கும் என்னை கவர்ந்து வியப்புறச் செய்வதுடன் மீண்டும் மீண்டும் படிக்க தூண்டுபவர் சண்முகம் சிவலிங்கம். மட்டக்களப்பு கல்முனையைச் சேர்ந்தவர். அவரது ஒரே தொகுப்பான நீர்வளையங்கள் பரவலான வாசிப்புக்குச் செல்லவில்லை என்றே நினைக்கிறேன். பலதள விரிவும், தத்துவச் செறிப்பும், கவித்துவமும் கொண்டவை அவரது கவிதைகள். நீண்டகால அறிமுகமும் ஓரளவு நெருக்கமும் கொண்டவர்கள் கவிஞர்கள் சேரன், ஜெயபாலன், இளவாலை விஜயேந்திரன், ஹம்சத்வனி ஆகியோர். இவர்கள் எனது சமகால வாசிப்புக்கு உரியவர்களாக இருந்ததால் இவர்கள் படைப்புகள் என்னுள் கிளர்ச்சியை ஏற்படுத்தின. நுஃமான் மொழிபெயர்த்து தொகுத்த பாலஸ்தீனக் கவிதைகள் பெருத்த அதிர்வை எனக்குள் ஏற்படுத்தியது. சு. வில்வரெத்தினத்தின் கவிதைகள் தொன்மங்கள் குழைந்து சோக சுகம்தரும் பாடல்கள். சமச்சீரான சரிவில் கற்கள் உருள்வது போன்றவை அவரது கவிச்சொற்கள். அலை கவிஞர்களில் இவரும் மு. புஷ்பராஜனும், நுஃமானும் எழுதியவை எனது நெஞ்சுக்கு நெருக்கமாக இருந்தன. புதுவை இரத்தினதுரையின் கவிதைகள் போர்க்குணாம்சமும், வேகமும் கொண்டவை. 1975இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 'சோறா - சுதந்திரமா' என்ற தலைப்பிலான கவியரங் கில் சோறு எனக் கவிபடித்த புதுவையின் மீதான வியப்பு இன்றுவரை நீங்கவில்லை. நிலாந்தன், கருணாகரன், சோலைக்கிளி ஆகியோரின் கவிதை மொழி இன்னொரு வகையானது. போரின் சிதைவுகளுக்குள் கவிதைகளைக் கட்டமைத்தவர்கள். கவிஞைகளில் சிவரமணியும், அனாரும் சிறப்பாக என்னைக் கவர்ந்தவர்கள். புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து எழுதும் கவிஞர்களில் மிகப்பிந்திய வரவான இளங்கோ,



படிப்பகம்

padippakam

மெலிஞ்சி முத்தன் ஆகியோர் நம்பிக்கை தரும் வகையில் எழுது கின்றார்கள். இப்படியே நான் பல கவிஞர்களை அடுக்கிக் கொண்டு போகலாம். உடன் நினைவுக்கு வந்தவர்களையே குறிப்பிட்டுள்ளேன். அத்துடன் தற்போதைய கவிஞர்கள் படைப்பாளிகளை மதிப்பிடும்போது அவர்களது படைப்பின் உள்நோக்கத்தை முன்னிறுத்தி மதிப்பிட வேண்டியது தவிர்க்க முடியாததாகிவிட்டது. ஏனெனில் சிலர் தங்களது படைப்பாளுமைக்குள் விமர்சனங்களுக்குப் பதில் விசமத்தனங்களையே உள்நுழைக்கின்றார்கள். அமுத்துலிங்கமாக இருக்கலாம் ஷோபாசக்தியாக இருக்கலாம் நிலைமை அதுதான்.

**● சமீப காலமாக பெண்கவிஞர்கள் பரவலான கவனத்தைப் பெற்றபோதிலும், ஈழத்திலும் சரி, புகலிடத்திலும் சரி அவர்களின் எண்ணிக்கை குறைவாகத்தானே இருக்கிறது?**

எழுதுவதில் இந்தச் சமநிலை எட்டப்படுமா என்பது சந்தேகமே. ஏனெனில் பாலினச் சமத்துவம் பற்றிய பார்வை எமது சமூகத்தில் விரிவாக்கம் பெற நாளாகும். ஈழப்போராட்டம் அதற்கான முன்னடிகளை எடுத்து வைத்துள்ளது. அதனைக் கருத்தியலாகவும் கருத்தாடலாகவும் நாம் வளர்த்தெடுக்க வேண்டும். தமிழ்நாட்டுடன் ஒப்பிடும்போது ஈழத்தில் அதிக பெண்கள் எழுதுகிறார்கள் என்றே நம்புகிறேன். அண்மையில் அ. மங்கை தொகுத்து வெளியிட்டிருந்த ஈழத்துப் பெண் கவிஞர்களின் 'பெயல் மணக்கும் பொழுது' என்ற தொகுப்பில் 90க்கும் மேற்பட்ட கவிஞைகள் இடம் பெற்றிருப்பதை உதாரணமாகக் கொள்ளலாம்.

இன்னும் நிறைய பெண் எழுத்தாளர்கள் வருவார்கள், சமூகப் பார்வையில் மாற்றத்தைக் கொண்டு வருவார்கள் என்றே நம்புகிறேன். ஆணுக்குள்ளே பெண்ணும், பெண்ணுக்குள்ளே ஆணும் உண்டு என்பதையாவது சமூகம் ஏற்கும் என்று நம்புகிறேன். சமூக வரலாற்றில் பெண்களின் பாத்திரம் பற்றிய அறிவை பெரியார் வழியாகவும், மார்க்சிய ஆசான்கள் வழியாகவும் பெற்றுள்ளதுடன் அதன் பின்னான சிந்தனைகளையும் கவனித்து வருகிறேன். ஆணும் பெண்ணும் இணையாத எதுவுமே அழகாயிருக்காது.

**● 'பெயல் மணக்கும் பொழுது' தொகுப்பின் வரவு ஆண்கள் பெண்களின் பெயரில் எழுதுவது தொடர்பான விவாதம் ஒன்றை உருவாக்கி விட்டிருப்பதைக் கவனித்தீர்களா? ஆண்கள் பெண் அடையாளத்துடன் கூடிய புனைபெயரில் எழுதுவது தொடர்பாக உங்களின் பார்வை என்னவாக உள்ளது?**

பெயல் மணக்கும் பொழுது தொகுப்பு எனக்கும் வந்து சேர்ந்தது. அதில் சேர்ப்பதற்காக தெரிவு செய்த மாலிகாவின் 'உதட்டோரம்



படிப்பகம்

padippakam

சுழித்தோடும் புன்னகை கிளப்பும் கவிதைகள்' என்ற கவிதை பெண் கவிஞருடையது இல்லை என்று தெரியவந்தபோது தனது ஏமாற்றத்தை எப்படி ஆற்றுவது என்று தெரியாமல் போனதாக முன்னுரையில் மங்கை குறிப்பிட்டுள்ளார். கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களுக்கு இப்படி ஒரு குரல் உண்டு எனத் தெரிந்தபோது, அவற்றை வெளியிடப் பெண் பெயரைத் தெரிவு செய்தமையைக் கட்டுடைக்கவேண்டியுள்ளது அவசியம் என்றும் குறிப்பிடுகின்றார். பெண்களின் பெயரில் ஆண்கள் எழுதுவது பற்றிய சர்ச்சை முன்னரும் எழுந்ததுதான். படைப்பாளிகள் புனைபெயரை ஏன் தெரிவுசெய்கிறார்கள் என்பது வேறு விளக்கங்களுக்கு உரியது. ஆனால் புனைபெயராக பெண்பெயரை ஆண்கள் தெரிவுசெய்வதற்குப் பல காரணங்கள் முன்வைக்கப்பட்டாலும், அதில் உள்ள நியாயங்கள் விவாதத்திற்குரியதாகவே எனக்குப்படுகின்றது. ஆண்-பெண் சிந்தனைத்தளங்கள், உணர்திறன்கள் ஒன்றுபோல் இருக்குமா என்பது சந்தேகமே. ஆதலால் பெண் பெயரில் ஆண் எழுதுவதும் ஆண்பெயரில் பெண் எழுதுவதும் வாசகருக்குத் தடுமாற்றத்தை ஏற்படுத்தக்கூடியவையே. போரிலக்கியம் படைத்துவருபவர்களில் ஒருவரான பிரதீபகுமரன் பெண் என்றே சொல்லப்படுகின்றது. பாலினச்சமத்துவம் பற்றி பேசுபவர்களாலும் பெண் ஆளுமையை சிந்தனையை அபகரிக்க இந்த பெண் புனைபெயர்கள் பயன்படுத்தப்படுகிறதோ என்ற சந்தேகத்தையும் தோற்றுவிக்கின்றது. நிறையவே பெண்கள் எழுதத் தொடங்கிவிட்ட நிலையில் புனைபெயராக பெண்பெயரைக் கொள்வது பொருத்தமற்றதாகவே படுகின்றது.

● **உங்களுடைய கவிதைகள், நீங்கள் படித்த பிறகவிஞர்களின் அடிப்படையில் இது வரையில் கவிதை என்றால் என்ன என்ற வரையறைக்கு உங்களால் வரமுடிந்திருக்கிறதா?**

உண்மையில் இதுதான் கவிதை, இது கவிதையல்ல என்று அடையாளம் காண மட்டும் முடிகின்றது. சில கவிதைகளில் சொல்லழகு ஈர்க்கும். சிலவற்றில் ஓசை நயம் மயக்கும். இன்னும் சிலவற்றில் நுண்ணுணர்வு வியப்பைத்தரும். இன்னும் சிலவற்றில் அனுபவத்தளம் நெருக்கமாக ஊடாடும். ஆனால் கவிதையைப் பொது வரையறை செய்வதில் இடர்ப்பாடுகள் உண்டு. இதுதான் கவிதையென கோட்பாட்டு விளக்கமளிக்கும் ஆற்றல் என்னிடம் இல்லை.

● **புகலிட இலக்கியங்கள் பற்றிய உங்களின் மதிப்பீடு எப்படி இருக்கிறது?**

ஈழத்து இலக்கியத்தின் நீட்சியாகத்தான் புலம்பெயர் இலக்கியத்தை நோக்குகிறேன். புகலிட படைப்பாளிகள் என்னும்போது காஞ்சனா தாமோதரனையும், நா. கண்ணனையும் தவிர்த்துப்பார்த்தால் ஈழத்தவர்



படிப்பகம்

padippakam

கள்தான் அந்தப் பெயரால் சுட்டப்படக் கூடியவர்கள். இந்த ஈழத்துப் படைப்பாளிகளிடமிருந்து சிறந்த இலக்கியப் படைப்புகள் வெளிவருவதற்கான வாய்ப்புகள் உண்டு என்பது உண்மைதான். ஆனால் தற்போது எழுதும் தலைமுறையால் அது சாத்தியமா என்பதுதான் இப்போதைய கேள்வி. எதிர்காலத்தில் அடுத்த தலைமுறையொன்றால் தமிழில் இல்லாமல் ஐரோப்பிய மொழியொன்றில் எங்கள் வாழ்க்கையைப் பேசும் சிறந்த படைப்பொன்று எழுதப்படக்கூடும். அது கவிதை, புதினம் என்றில்லாமல் வேறு வடிவங்களிலும் வெளிப்படலாம். உதாரணமாக மாயா அருட்பிரகாசம் போல. அது சர்வதேச அளவில் பிரபலமாகவும் கூடும். தமிழில் சிந்தித்து தமிழில் எழுதக்கூடிய தலைமுறையின் உதிர்வு புகலிடத்தில் ஆரம்பமாகிவிட்டது. தற்போதைய நிலையில் புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழில் எழுதக்கூடியவர்கள், ஆளுமை உள்ளவர்கள் என்றால் நான் படித்தவற்றில் புதினமாக பொ. கருணாகரமூர்த்தியும், க. கலாமோகனும், கவிதையாக க. வாசுதேவனும் நிமிர்ந்து நிற்கிறார்கள். புகலிட இலக்கியம் என்று சுட்டக்கூடிய வகைமாதிரியான படைப்புகள் போதுமான அளவில் வெளிவரவில்லை என்பதே எனது கருத்து.

● **ஷோபாசக்தியின் படைப்பாளுமை மீது புலம்பெயர்ந்த ஒரு படைப்பாளியாக உங்களின் விமர்சனம் என்ன?**

புகலிடத்தில் இருக்கும் படைப்பாளிக்குத் தாயகத்தை விலகி நின்று பார்க்கும், அல்லது மேலிருந்து பார்க்கும் பறவைப் பார்வைக்கான வாய்ப்பு கிடைக்கின்றது இது படைப்பில் விமர்சனத்தைக் கூர்மையாக முன்வைக்க உதவுகின்றது. உள்ளிருந்து பார்க்கையில் புலப்படாத நுண்காட்சிகள், நிகழ்வுகள் புலம்பெயர்வில் கிடைக்கின்றன. இது சமூகம், அரசியல், போராட்டம் எல்லாவற்றையும் விமர்சனமாக காணவும் வழி செய்கின்றது. இதன்வழியான எழுத்தாளுமை ஒன்றையே ஷோபாசக்தியிடம் காண்கிறேன். அதற்கான எனது சான்றிதழ் அவருக்குத் தேவைப்படாது. ஏனெனில் அதையெல்லாம் கடந்தவர், அவற்றைக் கலைத்துப் போடுபவர், கலகக்காரர் அவர். ஏன் சிரிப்பு வருகின்றதா உங்களுக்கு? ஆனால் இந்த எழுத்தாளுமைக்குள் விமர்சனம் கட்டியமைக்கப்படுவதைவிட கயமையும், துரோகமும், விஷமத்தனமும் கட்டியமைக்கப்படுவதே இங்கு கவனத்திற்குரியது. இதுவே அ. முத்துலிங்கத்திடமும் காணப்படுகின்றது. இந்த அம்சங்கள்தான் தமிழ்நாட்டில் உள்நோக்கம் கொண்டோரால் தூக்கிப்பிடிக்கப்படுகின்றன. இதில் இன்னும் ஆச்சரியம் என்னவென்றால் "ஈழத்து எழுத்தை ஒருபக்கத்திற்குமேல் வாசிக்க முடிவதில்லை" என்று சொன்னவர்கள்தான் ஷோபாசக்தியையும், முத்துலிங்கத்தையும் பிரதானமாக தூக்கிப்பிடிக்கிறார்கள். இதேவேளையில் ஷோபாசக்தியின் எழுத்தாளுமைக்கு எந்தவிதத்திலும் குறைவில்லாத இலக்கிய அம்சத்தில் சற்று மேம்பட்டதான விமல் குழந்தைவேலின் வெள்ளாவி நாவல் இந்த ஈழத்து எழுத்துக்களைத் தூக்கிப்பிடிக்கும்



படிப்பகம்

உள்நோக்கம் உள்ளவர்களால் கவனிக்கப்படவில்லை என்பதையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். குறிப்பாக தலித்திய வகைமாதிரிக்குள் அடங்கக்கூடியதான இந்த வெள்ளாவி நாவல் அங்குள்ள தலித்திய கோட்பாட்டாளர்களாலேயே ஏற்றெடுத்தும் பார்க்கப் படவில்லை. இவர்களுக்கு இலக்கியமல்ல, உள்நோக்க அரசியலே, தங்களுக்கு விருப்பமான விஷமத்தனங்களே முக்கியமானது. இந்த அம்சத் தில் முத்துலிங்கமும் ஷோபாசக்தியும் ஒரே புள்ளியில் சந்திக்கிறார்கள். இருவருமே மேலாதிக்க சாதிமான்கள். ஏனெனில் முத்துலிங்கம் தனது சாதிய உள்ளோட்டத்தை நன்னீர் கால்வாய் பொறியியலாளருக்கும் கழிவு நீர்க்கால்வாய் பொறியியலாளருக்கும் ஏற்றத்தாழ்வு உள்ளதாக வெளிப்படுத்திய கதைசொல்லி. கழிவுநீர்கால்வாய் பொறியியலாளனுக்கு இராமாயணம் எங்கு புரியப்போகின்றது. இது முத்துலிங்கத்தின் முத்தான கூற்று. அத்துடன் தனது ஊரான அல்லைப்பிட்டி பற்றியும் அங்கு வாழும் சாதிய ரீதியிலான மக்கள்வாழும் வீடுகளின் தொகை பற்றி விபரிக்கும் ஷோபாசக்தி அதில் தனது வீடு எந்தச்சாதியின் வீட்டுப் பக்கத்தில் உள்ளது என்பதை சொல்வதில்லை. ஏனெனில் அதைச் சொன்னால் அவரது கற்பிதமான தலித்தியம் உடைந்துவிடும். தலித்தியத்தின் முன்னான அவரது முகமூடி கழன்றுவிடும். இதுபற்றியெல்லாம் தமிழக உள்நோக்க இலக்கிய விசிறிகளுக்கு அக்கறையில்லை. முத்துலிங்கத்தின் படைப்பிலும், ஷோபாசக்தியின் படைப்பிலும் உள்ளோட்டமாக ஒரு நகைச்சுவை அல்லது எள்ளல் ஓடிக்கொண்டிருக்கும். அவர்களது படைப்பாளுமையின் அழகுகளில் அதுவும் ஒன்று. இந்த எள்ளலும் நயவஞ்சகமும் மயிரிழையில் வேறு படக்கூடியது. அது சாதிமான்களுக்குஉரிய பண்பு. சிரித்தபடி கத்தியை முதுகில் சொருகும் பண்பு. அதேபோல் பேனா முனையால் தேசியத்தின் முதுகில் குத்தும் இவர்கள் அவர்களின் கற்பிதமான தலித்தியத்தின் முதுகிலும் குத்தப்போகின்றார்கள். பாவம் தமிழ்நாட்டு தலித்திய கோட்பாட்டாளர்கள்.

● **புகலிட நாடுகளில் ஈழத் தமிழர்களிடையே சாதியக் கட்டுமானங்கள் இறுக்கமாக நிலவி வருவதாக ஒரு விமர்சனம் வைக்கப்படுகிறதே?**

ஆயுதப் போராட்டத்தின் நிழலில் சாதியம் உறங்கிக் கொண்டிருக்கின்றது என்கின்ற பலரது ஆதங்கம் சரியானதே. புலம் பெயர்ந்ததனால் நம்மவர் மாற்றம் பெற்று விட்டனர் என்று நான் நம்பவில்லை. மிகக் கச்சிதமாக அதனைப் பேணுவதிலேயே கவனமாக இருக்கிறார்கள். இங்குள்ள சமூக அமைப்புகள் குறிப்பாக கோயில்கள், சங்கங்கள் சாதியத்தைக் கட்டிக்காக்கவே அமைக்கப்பட்டுள்ளன. இன்னார் யார் என்று அறிவதில் கோயில் ஐயர் முக்கிய தகவல் மையமாக விளங்குகிறார். அமைக்கப்பட்டுள்ள ஊர்ச்சங்கங்கள் ஊர்களின் பன்மைத்தன்மையைக் கொண்டு விளங்குவதாக நான் கூறமாட்டேன்.

padippakam

எனது தாய் ஊரான நெடுந்தீவை மையமிட்டு பலநாடுகளில் இயங்கும் சங்கங்களில் பிரதிநிதித்துவம் எப்படி உள்ளது. ஆளுமை யார் செலுத்துகிறார்கள் என்பதை நான் அறிவேன்.

முதல் தலைமுறை என்றில்லை இங்கு பிறந்த அடுத்த தலைமுறையினரிடமே சாதியத்தைக் கேட்டு நட்புக்கொள்ளென பெற்றோர் தம்சிந்தனையைக் கைமாற்றி உள்ளதற்கான சான்று என்னிடம் உண்டு. தாயகத்தைவிடவும் புலம்பெயர் சமூகம் சாதிய வக்கிரங் களை நுண்ணியதாக கட்டமைத்து கொள்வதாகவே உணர்கிறேன். பண்பாட்டுக் கட்டமைப்பு என்பதும் அந்தத் திசை நோக்கியே நகர்கின்றது. புலம்பெயர்வு மனங்களை விரிவுபடுத்தவில்லை என்பதே இங்கு கவனத்தில் கொள்ளவேண்டிய அம்சமாகும்.

● **தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றி சாதியம் போன்ற சமூகப்பிரச்சனைகளுக்கான தீர்வைத்தரும் என்று நம்புகிறீர்களா?**

ஈழத்தில் நடைபெற்ற சாதியொழிப்புப் போராட்டத்தின் தொடர்ச் சியாக தேசிய விடுதலைப் போராட்டத்தையும் நோக்குதலில் எனக்கு உடன்பாடுண்டு. சிலவிடயங்களை என்னால் சொல்லமுடியும். வெடி குண்டு தயாரிப்பதற்கான மூலப்பொருட்கள் பெற சாதியப்போராட்டம் முனைப்பு பெற்ற ஊர்களுக்குச் சிவகுமாரன் என்னையும் அழைத்துச் சென்றிருக்கிறார். அவர்களிடத்தே அவருக்கு தொடர்புகள் இருந்தன. அவரது தலைமறைவுக்காலங்களில் அந்தக் கிராமங்களிலேயே தங்கியிருந்தார். தொடக்கத்தில் சீன கம்யூனிஸ்ட் இயக்க தொடர்புகள் இருந்ததை சிவகுமாரன் என்னிடத்தில் தெரிவித்ததுண்டு. அக்கட்சி சார்பாக உரும்பிராயில் சில நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டுள்ளார்.

சாதியம் தேசிய விடுதலைப் போராட்ட கூர்மையால் அல்லது விடுதலையால் உடனடியாக மாற்றம் பெற்றுவிடும் என்று நான் நம்பவில்லை. தேசிய விடுதலைப் போராட்டம் சமூகத்தில் முதல் உழவை நடத்தியிருக்கின்றது என்றே கருதுகிறேன். "உழு... மறுத்துழு... மீளவும் மீளவும்" என எனது கவிதை ஒன்றில் குறிப்பிட்டுள்ளேன். உடனேயே மாற்றம் பெறும் என நம்புவது வரலாற்று இயங்கியலுக்கு முரணான தாகும். அதற்கு நீண்ட நெடிய தொடர் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும். விடுதலையின் பின்னால் பல சட்டவாக்கங்கள் மேற்கொள்ளவேண்டும்.

இங்கு இன்னுமொன்றையும் குறிப்பிட்டாக வேண்டும். தேசியம் என்னும் கருத்தாக்கம், செயலாக்கம் நமக்குப் போதாது. அதிலும் புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழ் ஊடகங்களின் பணிப்பாளர்களிடம் ஊடகர்களிடம் இந்த கருத்தாக்கம், சிந்தனை போதாதுள்ளது. மக்களின் கலை, மக்களின் இசை, மக்களின் பண்பாடு, மக்களின் தொழில், மக்களின் வாழ்வியல், மக்களின் தோற்றம், நில அமைப்புகள் என்பனவற்றின்



படிப்பகம்

padippakam

மீதான எமது கவனங்கள் குவிக்கப்படவேண்டும். தமிழீழ தேசியத் தொலைக்காட்சி, மக்கள் தொலைக்காட்சி என்பன கொண்டுள்ள அக்கறையை இங்குள்ள ஊடக நடத்துநர்கள் கைக்கொள்வதில்லை. அவற்றில் இருந்தாவது இவர்கள் பாடங்களைக் கற்றுக்கொள்ளவில்லை. ஏனெனில் இத்தேசிய மீட்டுருவாக்கத்தில் சாதியத்தைக் கடப்பதற்கான வழிகள் உண்டு. இவையெல்லாம் சொல்லி வருவதில்லை. தேசியத்தில் அக்கறை கொள்ளும்போதே இயல்பாக வரவேண்டியவை.

**● உங்கள் இயக்க வரலாற்றை நீங்கள் இப்போ திரும்பிப் பார்க்கும்போது இப்படி இருந்திருந்தால் அல்ல இப்படி நடக்காதிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும் என்ற ஆதங்கம் ஒன்று உங்களுக்குள்ளும் இருக்குமல்லவா?**

வரலாற்றில் எப்போதும் ஆல்போட்டு பார்க்கக்கூடாது என்பார்கள். கடந்து சென்றுவிட்ட நடந்தவற்றைப் பற்றித்தான் நாம் மதிப்பீடு செய்யமுடியும். விமர்சனத்தில் எனக்கு நம்பிக்கை உண்டு. என்மீதான ஒரு விமர்சனம் என்னிடம் உண்டு. உங்கள் கேள்விக்கு கட்டாயமாக பதிலளிக்க வேண்டுமானால் என்வாழ்வில் மாற்றத்திற்குரிய காலமான தெரிவின்போது ஈரோசில் இணையாமல் போராட்ட ஓர்மம் உள்ளவர்களுடன் இணைந்திருக்கலாம், கி.பி.அரவிந்தன் என்னும் இலக்கிய முகம் தரிக்காமல் தவிர்த்திருக்கலாம், சுந்தராகவே வாழ்ந்து களத்தில் மடிந்திருக்கலாம் என்பதே .இப்போது சுந்தரை குற்றுயிருடன் புதைத்துவிட்டு போராளியாகவும் இல்லாமல், இலக்கியவாதியாகவும் இல்லாமல் வதைபடவேண்டி உள்ளது. இனிக் கவலைப்பட்டு பயனில்லை.

**● புகலிடச் சூழலில் தமிழ் அடையாளத்தைத் தக்க வைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுவரும் முன்னோடிகளில் ஒருவராக நீங்கள் அறியப் பட்டுள்ளீர்கள். அம்முயற்சிகள் குறித்தும் பகிர்ந்து கொள்ளுங்கள்?**

பிரான்சில் தமிழ்மொழி கற்பிப்பதற்காக அமைக்கப்பட்ட பள்ளிகளை ஒருங்கிணைத்து தமிழ்ச்சோலை என்ற நிறுவனமாக ஒழுங்கமைப்பதில் பங்காற்றினேன். அவர்களுக்கு ஒரே பாடத்திட்டத்தில் கற்பிக்க வேண்டுமென்பதில் அவர்களுக்கான தமிழ்ச்சுவடி - 1 என்னும் பாடநூலை தயாரித்து நூலாக்குவதில் உதவினேன். பின்னர் உலகளவியதான நூல்கள் வந்தபோது அந்நூல் பயன்பாட்டில் இல்லாமல் போய்விட்டது. இன்றைக்கும் தமிழ்ச்சோலையின் பள்ளிகீதமாக இருப்பது எனது பாடல்தான். ஆனால் அதையெழுதிய ஆசிரியரின் பெயர் இல்லாமல் பயன்பாட்டில் இருந்து வருகின்றது. ஆனால் தமிழ் மொழி கற்பித்தலில் இன்னும் மேம்பட்ட முறைமை ஒன்றை கண்டடைய வேண்டுமென நினைக்கின்றேன். தற்போது பொங்கலை தமிழர் திருநாளென பரவலாக்குவதில் எனது பங்கையும் வழங்கி வருகின்றேன். 2007ஆம் ஆண்டு பொங்கலை தமிழர் திருநாளாகக் கொண்டாடினோம்.



படிப்பகம்

padippakam

மரபுக்கலைகள் மற்றும் மக்கள் கலைகளையே அதில் முதன்மைப்படுத்தினோம். பலதேசியத் தமிழர்களையும் இணைத்தோம். 2008ஆம் ஆண்டில் அதனை இன்னும் மேம்பட்டதாக்க உழைத்து வருகிறோம். எதிர்காலம் என்பது உலக அளவினதான தமிழ் அடையாளம் கொண்டதாய் மாற்றப்படவில்லையானால் பல சமூக நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டி வரும் என நினைக்கிறேன். பிரான்ஸ் போன்ற பல்தேசியத்தார் வாழும் இடங்களில், தமிழ்நாடு, புதுச்சேரி, தமிழீழம், மலேசியா, மொறிசியஸ், ரியூனியன், குவாதுலூப் என பலதேசிய தமிழர்கள் குழுமி வாழ்கிறார்கள். இவர்கள் தமிழடையாளத்தால் ஒன்றுபட வேண்டியது அவசியமாகின்றது. இன்னும் எங்கள் முயற்சிகளைத் தொடர்ந்த வண்ணமே உள்ளோம்.

**● அப்பால் தமிழ் குழுமத்தின் முயற்சிகள் குறித்தும் சொல்லலாம் அல்லவா?**

அப்பால் தமிழ் குழுமத்திற்கான அப்பால் தமிழ் என்னும் இணையத்தளத்தை நடத்தி வருகிறோம். அதன் இன்னொரு பகுதியாக நூல் வெளியீட்டை மேற்கொண்டு வருகிறோம். இணையத்தளத்தின் தளநெறியாளராகவும், பதிப்பகத்தின் மேலாளராகவும் செயல்பட்டு வருகிறேன். இதுவரை ஐந்து நூல்கள் வெளிவந்துள்ளன. 'சுயம் - நிர்ணயம் - உரிமை', 'சர்வதேச, தேசிய இயக்கங்கள் வழங்கும் படிப்பினைகள்', ஆகிய இரண்டு அரசியல் நூல்களை வெளியிட்டோம். உள்ளக சுயநிர்ணயம் வெளியக சுயநிர்ணயம் என்ற கருத்தாடல் மேலெழுந்தபோதே மேலதிக புரிதலுக்காக அவற்றை வெளிக்கொணர்ந்தோம். அவை இரண்டையும் பி.ஏ.காதர் எழுதியிருந்தார். அத்துடன் 'உள்முகம்' என்னும் ஆழிப்பேரலை பற்றிய பதிவுகளைக் கொண்ட நூலையும் வெளிக்கொணர்ந்தோம். பாரிஸ்கதைகள் என்னும் சிறுகதை தொகுப்பையும், பரதேசிகளின் பாடல்கள் என்னும் கவிதைத் தொகுப்பையும் வெளியிட்டோம். இரண்டையும் நான் தொகுத்திருந்தேன்.

எனது தாயாரின் இறுதிச்சடங்குகளில் கலந்து கொள்வதற்காக 2003ஆம் ஆண்டு இலங்கை சென்றிருந்தேன். யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, கொழும்பு ஆகிய இடங்களில் நண்பர்களான சமூக ஆர்வலர் பலரையும் சந்திக்க வாய்ப்புக் கிட்டியது. அவர்களுடனான உரையாடல்களில் புலம்பெயர்ந்தோர் இலக்கியம் பற்றியதான பரிச்சயம் போதாதிருந்ததை உணர முடிந்தது. அதுவே பாரிஸ் கதைகள் வெளியிடுவதற்கான ஊக்கியாகும். அதன் தொடர்ச்சியாக அவ்வகையான புலம்பெயர்ந்தோர் படைப்புகளை இலங்கையில் இருந்து கொண்டு வரவேண்டும் என்று விரும்பினோம். ஆனால் இலங்கை நிலைமைகள் அதனைப் பின்தள்ளிவிட்டது.

அப்பால் தமிழ் குழுமத்தின் இன்னொரு பிரிவாக சலனம் என்னும் அமைப்பும் உள்ளது. குறும்பட முயற்சிகளை ஊக்குவித்தல் என்பதே



படிப்பகம்

padippakam

அதன் முக்கியப்பணி. தயாரித்து போட்டிகளில் பங்கேற்கும் குறும்படங் களை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லுதல், நம்மவர்கள் சினிமா முயற்சிகளுக்குப் பரவலான அறிமுகத்தை ஏற்படுத்துதல் என்னும் பணி களில் சலனம் ஈடுபட்டு வருகின்றது. புலம்பெயர் இலக்கியத்தில் குறும் படங்கள் காத்திரமான பங்கேற்கும் என்று நம்பியிருந்தேன். ஆனால் அது தற்போது சோர்வு நிலைக்கு சென்றுள்ளது. கவலை தருகின்றது. மீண்டும் அதற்கு உற்சாகம் கொடுக்க வேண்டுமென முயற்சித்து வருகின் றோம். இவ்வாறு பல்வேறு பணிகளில் தேறிய விளைவுகளைக் கணக்கெடுக்கும் நேரம் இன்னும் வரவில்லை என்றே நினைக்கிறேன்.

● **கடைசிக் கேள்வியாக நேர்காணலின் ஆரம்பத்தில் நீங்கள் குறிப்பிட்ட ஒருவிடயத்தையே கேட்க விரும்புகிறேன். பிரான்சில் 1991இல் இருந்து வாழ்வதாக கூறும் நீங்கள் இன்னுமேன் பிரான்ஸ் குடியுரிமை பெறாமல் அகதியாக வாழ்கிறீர்கள்?**

பலரும் பலதடவைகள் இந்தக் கேள்வியைக் கேட்டுள்ளனர். நண்பர் களும் நெருக்குதல் தந்துள்ளனர். ஆனால் நான் அகதி நிலையை மாற்றிக் கொள்வதில்லை என்றே உள்ளேன். ஈழத்தமிழ்ச் சமூகத்தின் அகதி நிலைக்கு ஒரு முக்கிய காரணம் போராட்டம் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கையில் எப்படி எனது அகதிநிலையில் மாற்றம் ஏற்படும். குடியுரிமை என்பது அந்த நாடுகள் தாங்களாக தருபவை அல்ல. நாம் விண்ணப்பிக்க வேண்டும். நான் விண்ணப்பிக்கவில்லை. அவ்வளவுதான். குடியுரிமையை ஏற்கும் போது இந்த போராட்டம் முடிவடைந்து விட்டதாகவும் கொள்ளலா மல்லவா? இரண்டாவது குடியுரிமை பெறும்போது இந்த நாட்டு வரலாற்றினை இரத்தமும் சதையுமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த நாட்டுக் கொடியின் மீதான இரத்தக்கறைகளுக்கும் நான் சாட்சியமாக வேண்டும். இவற்றைவிட ஈழக்குடியுரிமைக்கு விண்ணப்பிக்கும்போதே எனது அகதி நிலையை மாற்ற விரும்புகிறேன். அப்படி நிலை தோன்றும் என்றே நம்புகிறேன். அதுவரை சில சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி உள்ளதுதான் பரவாயில்லை, அகதியாகவே வாழ்ந்து விட்டு போகிறேன். அல்லது அகதியாகவே செத்துப்போகிறேன்.

**நன்றி: வெளிச்சம், நூறாவது இதழ்**

**(பக்கங்களின் வரையறை காரணமாக வெளிச்சம் சஞ்சிகையில் கி.பி.அரவிந்தன் அவர்களது நேர்காணலின் சிலபகுதிகள் தவிர்க்கப்பட்டிருந்தன. இத்தொகுப்பில் அவை முழுமையாக உள்ளடக்கப்பட்டுள்ளன.)**



படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam



முதலிலேயே சொன்னதைப் போல இது அணிந்துரை அல்ல நண்பர்களே. எப்படி எழுத முடியும் என்னால்? ஈழத்தின் முதல் தற்கொடைப் போராளி சிவகுமாரனோடு எழுபதுகளில் களமாடிய தோழனின் நூலுக்கு.....

ஈழத்தின் விடிவுக்காய் பாலஸ்தீனப் பயிற்சி பெற்று போராளி யாய்ப் படைக்கருவிகளைப் பாவித்தவன் படைப்புக்கு.....

"விண்ணப்பித்தால் ஈழக் குடியுரிமைக்கே விண்ணப்பிப்பேன். அதுவரை அகதியாகவே வாழ்ந்துவிட்டுப் போகிறேன். அல்லது அகதியாகவே செத்துப் போகிறேன்....." என்று பிரான்ஸ் குடியுரிமைக்கு விண்ணப்பிக்காது நிற்கும் ஒரு சுயமரி யாதைக்காரனின் நினைவலைகளுக்கு.....

எப்படி எழுத முடியும் என்னால்.

இதில் இருப்பவையெல்லாம் வெறும் எழுத்துக்கள்..... வார்த்தைகள்..... வாக்கியங்களாகப்படவில்லையே எனக்கு. வலிகளாக இருக்கிறதே. என்ன செய்வேன் நான்?

– பாமரன்

படிப்பகம்